# மின்தமிழ் மேடை




## "வேளாண்மையும் நீர்வள மேலாண்மையும்"

தமிழ் மரபு அறக்கட்டளை (www.tamilheritage.org)

வெளியிடும் காலாண்டு மின்னிதழ்

மின்தமிழ்மேடை - காட்சி: 4

ஜனவரி - 2016

# மின்தமிழ்மேடை

**காட்சி: 4**

---

ஜனவரி - 2016

# “வேளாண்மையும் நீர்வள மேலாண்மையும்”




முன்அட்டைப் படம்: ஜனவரி 12, 2016 அன்று உழவர் திருநாளாம் பொங்கல் விழா கொண்டாட்டம் தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நடந்தபொழுது, விழாவில் இடம்பெற்ற பாரம்பரிய தாரைத் தப்பட்டை கலைநிகழ்ச்சி.

THF

தமிழ் மரபு அறக்கட்டளை

**தமிழ் மரபு அறக்கட்டளை வெளியீடு**

http://www.tamilheritage.org/

இதழ் தொகுப்பு:

**தேமொழி**

• • •

# தலையங்கம்: இயற்கை வேளாண்மை

மனித குலத்தின் நாகரிகம் என்பதை நிர்ணயிக்கும் அளவுகோளாக விவசாயத்தின் தோற்றம் அமைகின்றது. தங்கள் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான உணவை உற்பத்தி செய்யும் திறனை வளர்த்துக் கொண்ட பின்னர் ஓரிடத்தில் மனித இனக்குழு தங்கி அங்கேயே குடில்களை அமைத்து குடும்பங்களை உருவாக்கும் வழக்கம் உருவாகியது என்பர் மானுடவியல் ஆய்வாளர்கள். உலகின் மிகத் தொன்மையான நாகரிகங்களாகக் கருதக்கூடிய மெஸபொட்டாமியன் நாகரிகம், சிந்து வெளி நாகரிகம், எகிப்திய பண்டைய நாகரிகம் ஆகியவற்றை நோக்கும் போது அவை நீர்நிலைகளுக்கு அருகாமையில் அமைந்திருந்தமையும் அங்கெல்லாம் விவசாயம் தொடர்பான நடவடிக்கைகள் நிகழ்ந்தன என்பதையும் கிடைத்திருக்கின்ற அகழ்வாராய்ச்சிக் குறிப்புக்களிலிருந்து அறிகின்றோம்.

உலக நாடுகள் எல்லாவற்றிலும் அதன் நிலப்பகுதி, பருவகால சூழ்நிலைக்கேற்ப பயிரிடப்படும் தாவர வகைகளும் பயிர்களும் மரங்களும் வித்தியாசப்படுகின்றன. இயற்கை ஒரு பேரதிசயம். பற்பல தாவர வகைகளை நமக்களித்து மனித இனமும் விலங்கினங்களும் உயிர் வாழ வழி அமைத்துக் கொடுத்துள்ளது இவ்வுலகின் இயற்கை.

விவசாயம் எனும் போது அதில் அடங்கக்கூடிய முக்கிய நடவடிக்கைகளான, நீர்ப்பாசன தயாரிப்பு, பயிர் சுழற்சி, பயிர்கள் செழித்து வளரத் தேவைப்படும் உரம், பயிர்கள் பூச்சிகளினாலும் சிறு விலங்குகளினாலும் சேதப்படாமல் பாதுகாக்கத் தேவைப்படும் பூச்சுக் கொல்லி மருந்துகள், பயிர்கள் அறுவடை, தானியங்கள் பாதுகாப்பு, விற்பனை எனப் பல அம்சங்கள் அடங்கியுள்ளன. தற்கால விவசாய போக்கினை உற்று நோக்கும் போது அதிக விளைச்சல், துரித விளைச்சல் என்ற ஒரு காரணத்தை முன் வைத்துப் பல ரசாயனப் பொருட்களை விவசாயத்தில் பயன்படுத்தும் போக்கு இருப்பதைக் காண்கின்றோம். பெரிய அளவில் நடக்கின்ற விவசாயங்கள் என்று மட்டுமல்லாது வீட்டிலே பயிர்களையும் பூச்செடிகளையும் வளர்ப்பவர்களும் கூட மிக எளிதில் பல ரசாயனப் பொருட்களைப் பயிர்கள் செழித்து வளர வேண்டும், நிறையப் பூக்களும் காய்களும் பழங்களும் கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் எவ்வித தயக்கமுமின்றி பயன்படுத்துகின்றனர்.



ரசாயன உரங்களைத் தவிர்த்து இயற்கை உரம் தயாரித்தல் என்பதில் பொதுமக்கள் நாம் எல்லோருமே கவனம் செலுத்த வேண்டியது மிக மிக அவசியமான ஒன்றான தாகின்றது. அதே போல, பூச்சிக் கொல்லிகளைத் தவிர்த்து இயற்கை வழியில் தாவரங்களைப் பாதுகாக்கும் முயற்சியில் விவசாயத்தில் ஈடுபடுவோர் கவனம் செலுத்த வேண்டியதும் மிக அவசியம். ரசாயனப் பொருட்கள் விவசாய நிலங்களில் சேரும் போது, அந்நிலத்திலிருந்து உற்பத்தி செய்யப்படும் விளைச்சல் பொருட்களை உணவாக ஏற்று உண்ணும் நமக்கு, அவை உடலுக்கு பல்வேறு நோய்களை ஏற்படுத்தும் நிலை ஏற்படுகின்றது என்பது புரிவதில்லை.

மண் வளத்தைப் பாதுகாக்க இயற்கை உரம் தயாரித்தல் எனும் கலையை வீட்டில் பயிர்கள் வளர்ப்பவர்களும் சரி, பெரிய அளவில் விளைச்சல்களைச் செய்வோரும் சரி, நடைமுறையில் சாத்தியப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். வீட்டில் அன்றாடம் சமையலுக்குப் பயன்படுத்தும் காய்கறிகளின் கழிவுகளையும் வேளாண் கழிவுகளையும் முறையாகப் பதப்படுத்தி இயற்கைக்கு நன்மை சேர்க்கும் வகையில் அவற்றை உரமாக்கிப் பயன்படுத்தலாம். 'அவசர உலகத்தில் இதெல்லாம் சாத்தியமா.. பணம் கொடுத்தால் உரம் கிடைக்கின்றதே' என நினைத்துச் செயல்படும் போது அதிகப்படியான இரசாயனப் பொருட்களின் பயன்பாட்டை ஊக்குவிப்பவர்களில் ஒருவராகவே நாம் மாறிவிடுகின்றோம். நாம் வாழ்கின்ற இந்தப் பூமியில் விவசாய பூமி நமக்குத் தாய் போன்றது. அதன் உடலைக் காயப்படுத்தும் ரசாயனப் பயன்பாட்டை முற்றிலும் தவிர்க்க ஒவ்வொருவரும் முயற்சி எடுப்போம்!




**முனைவர். சுபாஷிணி**
ksubashini@gmail.com

# ஏர் முனைக்கு நேர் இங்கே எதுவுமே இல்லே....


## -- தேமொழி.

*A journey from Madras என்ற நூலில் வெளியான, 18 மற்றும் 19 ஆம் நூற்றாண்டுகளின் துவக்கத்தில் பயன்பட்ட உழவுக் கருவிகளின் படங்களின் தொகுப்பு:


பக்கம் 38:




பக்கம் 47:




பக்கம் 51:




பக்கம் 53:



பக்கம் 45:



ஏற்றம்:



MYSORE, CANARA, AND MALABAR. 183

CHAPTER XVI.

March 3.

To the heavy end is annexed a *Yatam* wrought by two men, who allow this extremity of the trough to sink into the water, and to be thus filled. They then raise it by the *Yatam*, and the water runs out upon the field by the light end. Two men with a basket and ropes would throw out four times as much water, but it would be hard work.

*A journey from Madras

through the countries of Mysore, Canara, and Malabar, performed under the orders of the most noble the Marquis Wellesley, governor general of India, for the express purpose of investigating the state of agriculture, arts, and commerce; the religion, manners, and customs; the history natural and civil, and antiquities, in the dominions of the rajah of Mysore, and the countries acquired by the Honourable East India company

by Hamilton, Francis, 1762-1829. 1n; East India Company cn

Published 1807

https://archive.org/details/journeyfrommadra03hami



**தேமொழி**

themozhi@yahoo.com

# இந்த இதழில் .....

## மின்தமிழ்மேடை வலைத்தளத்தில்

## அக்டோபர் 16, 2015 முதல் ஜனவரி 15, 2016 வரை பதிவான படைப்புகளின் தொகுப்பு


| | | | |
|---|---|---|---|
| | தலையங்கம்: இயற்கை வேளாண்மை | சுபாஷிணி | ii |
| | ஏர் முனைக்கு நேர் இங்கே எதுவுமே இல்லே.... | தேமொழி | iv |
| 1 | இனிய தமிழ்ப்புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்! | ருத்ரா இ.பரமசிவன் | 1 |
| 2 | நகரத்தார் பொங்கல் பண்டிகையில் விளக்கு எடுத்தல் | முனைவர் கி. காளைராசன் | 2 |
| 3 | விளையாட்டிலும் வெளிப்பட்ட வீரம்! | மேகலா ராமமூர்த்தி | 7 |
| 4 | கலித்தொகை முல்லைக்கலியில் ஏறுதழுவுதல் (மாடு பிடித்தல்) | முனைவர் கி. காளைராசன் | 13 |
| 5 | பட்டி நோம்பி | பழமைபேசி | 15 |
| 6 | பொங்கலோ பொங்கல் !!! | தமிழ்த்தேனீ | 25 |
| 7 | கட்டாக் காலிகளின் கொக்கரிப்பு மேய்ச்சல் | மறவன்புலவு க. சச்சிதானந்தன் | 31 |
| 8 | ஆறுகள் எழுதிய ஆற்றுப்படை | ருத்ரா இ.பரமசிவன் | 35 |
| 9 | மாமழையும் மாந்தர் பிழையும்! | மேகலா ராமமூர்த்தி | 38 |
| 10 | நீர் நிலைகளை மீட்டெடுக்கும் முயற்சியில் பயங்கர வன்முறையில் மழை! | கீழை ஜஹாங்கீர் அரூஸி | 42 |
| 11 | எல்லீஸ் சத்திரம் அணை | கோ.செங்குட்டுவன் | 44 |
| 12 | மறைந்துப் போன மயிலாப்பூர் ஏரி... | கோ.செங்குட்டுவன் | 47 |
| 13 | பல்லவர் வெட்டிய பனைமலை ஏரி | கோ.செங்குட்டுவன் | 51 |
| 14 | கூவம் | கோ.செங்குட்டுவன் | 56 |

| | | | |
|---|---|---|---|
| 15 | வேதக்கல்லூரி இயங்கிய "எண்ணாயிரம்" | கோ.செங்குட்டுவன் | 60 |
| 16 | கல்வெட்டுகள் உதிர்க்கும் செய்திகள் | து.சுந்தரம் | 63 |
| 17 | வட்டெழுத்துகளுடன் 1200 ஆண்டுகள் பழைமையான ஐயனார் சிற்பம் கண்டுபிடிப்பு | தென்கொங்கு சதாசிவம் | 65 |
| 18 | குருவித்துறைக் கோயில் கல்வெட்டுகள் | து.சுந்தரம் | 68 |
| 19 | ஏரிகளில் கல் ஆவணங்கள் | சேசாத்திரி சிறீதரன் | 73 |
| 20 | பட்டணத்தில் தாய்த்தெய்வச்சிற்பம் | து.சுந்தரம் | 75 |
| 21 | 2.9.1953இல் திறக்கப்பட்ட கல்கி கூடம் | கோ.செங்குட்டுவன் | 82 |
| 22 | விழுப்புரத்தில் தொடங்கப்பட்ட ஆங்கிலோ இந்தியன் பள்ளி (1938) | கோ.செங்குட்டுவன் | 85 |
| 23 | பள்ளிக்கட்டிட நிதிக்காக நடைபெற்ற பரத நாட்டியம் (6.12.1953) | கோ.செங்குட்டுவன் | 87 |
| 24 | குறளுக்காக வாழ்ந்த திருக்குறளார் வீ.முனிசாமி (1913 - 1994) | கோ.செங்குட்டுவன் | 89 |
| 25 | வள்ளுவத்தில் காப்பீடுக்கொள்கை | சொ. வினைதீர்த்தான் | 97 |
| 26 | தமிழ்மணம் பரப்பிய குளிர்தென்றல்! | மேகலா ராமமூர்த்தி | 103 |
| 27 | பாரதி காட்டும் ஒலி அலைகள்! | ஷைலஜா | 109 |
| 28 | சேலம் கவிச்சிங்கம் இராஜரிஷி அர்த்தநாரீச வர்மா | கோ.செங்குட்டுவன் | 112 |
| 29 | தமிழ்நாட்டை தனி நாடாக்க குரல் கொடுத்த "விழுப்புரம் கோவிந்தராஜுலு நாயுடு காரு" | கோ.செங்குட்டுவன் | 115 |
| 30 | முனைவர் ந. அரணமுறுவலுக்கு அஞ்சலி | ந. தெய்வ சுந்தரம் | 119 |
| 31 | ஜப்பானியத் தமிழறிஞர் நொபுரு கரஷிமாவுக்குப் புகழஞ்சலி | து.சுந்தரம் | 122 |
| 32 | ஈழத் தமிழர் மறைந்த அறப்போராளி டேவிட் ஐயாவிற்கான அஞ்சலி | இ. பு. ஞானப்பிரகாசன் | 129 |
| 33 | தமிழண்ணலின் தமிழ் வாழ்வு (12.08.1928 – 29.12.2015) | கி. சிவா | 135 |

| | | | |
|---|---|---|---|
| 34 | தமிழர் உரிமை மீட்பரின் எழுத்துப் பயணம் | தேமொழி | 142 |
| 35 | பெரியாரைத் தோற்கடிக்க முடியாது: தொ.பரமசிவன் நேர்காணல் | என். கௌரி | 152 |
| 36 | கவுதம் சன்னாவுடன் ஓர் நேர்காணல் | செல்வன் | 157 |
| 37 | வீணை | ருத்ரா இ.பரமசிவன் | 172 |
| 38 | தீபாவளி வாழ்த்து | ருத்ரா இ.பரமசிவன் | 174 |
| 39 | அப்பாவின் பட்டுவேஷ்டி | ஷைலஜா | 177 |
| 40 | தேன் மின்னல் | ருத்ரா இ.பரமசிவன் | 180 |
| 41 | மண்டிக்கிடக்கும் நினைவுப்புதர்கள் | மின்தமிழ் குழுவினர் | 183 |
| 42 | சேவலும் ஒரு துறவியும் | செல்வன் | 195 |
| 43 | நாளும் கோயிலும் | நிர்மலா ராகவன் | 199 |
| 44 | தாம்பத்யம் | ஜெயகாந்தன் | 205 |
| | தமிழ் மரபு அறக்கட்டளையின் வெளியீடுகள் | | 217 |



(cc) BY-SA

THE TEXT IN THIS ISSUE BY Tamil Heritage Foundation IS LICENSED UNDER A CREATIVE COMMONS ATTRIBUTION-SHAREALIKE 4.0 INTERNATIONAL LICENSE.

1.

# இனிய தமிழ்ப்புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்!

-- கவிஞர் ருத்ரா.



உழவன் என்றொரு
உயர்ந்ததோர் தமிழன்
கிழக்கில் உதித்த கதிரையும்
ஒளி பாய்ச்சி நாற்று நட்டு
வழி காட்டி நன்று வைத்தான்.
விசும்பின் துளி கண்டு
பசும்பயிர் வளங்கள் கண்டான்.
இஞ்சியும் மஞ்சளும் கரும்பும்
சங்கத்தமிழ்ச் சுவைகள் ஆகி
தமிழ்ப் புத்தாண்டு  மலரும் இன்று.
பொங்கல் பொலிக!
பொங்கலோ பொங்கல்!
வள்ளுவனை உலகினுக்கே தந்து
வான் புகழ் கொண்ட
தமிழ் நாட்டின்
இனிய தமிழ் புத்தாண்டு இன்று.
எல்லோருக்கும் என்
இதயம் கனிந்த
இனிய தமிழ்ப்புத்தாண்டு வாழ்த்துக்கள்!



**கவிஞர் ருத்ரா இ. பரமசிவன்**
ruthraasivan@gmail.com

2.

# நகரத்தார் பொங்கல் பண்டிகையில் விளக்கு எடுத்தல்

-- முனைவர் கி. காளைராசன்.




படம் உதவி: http://nnagarathars.blogspot.com/

காப்புரிமை: நாட்டுகோட்டை நகரத்தார் தனவணிகன்

நகரத்தார் பொங்கல் பண்டிகையின் போது மிக முக்கியமான வழிபாடாக முன்னோர்களைக் கும்பிடுகின்றனர். தமிழர் திருநாள், உழவர் திருநாள், மாட்டுப் பொங்கல், காணும் பொங்கல் எனத் திருவிழாக்கள் வந்திருக்க வேண்டும். மகர சங்காராந்தி தினத்தன்று ஆற்றில் தீர்த்தமாடி அந்தணர்களுத் தானம் கொடுத்தல் என்பது உண்டு, கல்வெட்டுகளில் மகர சங்காராந்திப் புண்ணிய காலத்தில் தீர்த்தமாடித் தானங்கள் கொடுத்ததாக விஜயநகரம் கிருஷ்ணதேவராயர் கல்வெட்டு குறிப்பிடுகிறது. தீர்த்தமாடித் தானம் கொடுப்பது என்பதே முன்னோர் வழிபாட்டையே குறிக்கும். கோவிலூர் புராணத்திலும் இதுபற்றிய குறிப்பு உள்ளது. அமாவாசை மற்றும் பிதுர் பூசை நாட்களில் கோவில் அருகில் உள்ள தீர்த்தக்குளத்தில் மூழ்கித் தானம் கொடுத்தோனால் காயாவில் தானம் கொடுப்பதைவிடக் கூடுதலான பலன் என்று மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் எழுதியுள்ளார்.

நகரத்தார்கள் தைப் பொங்கல் அன்று விளக்குச் சட்டி எடுத்தல் என்பதை முக்கியமாகச் செய்து வருகின்றனர். தமிழகத்தைப் பொறுத்தவரை, இந்தியாவைப் பொறுத்தவரை, ஏன் உலகத்தைப் பொறுத்தவரை இதுபோன்றதொரு மரபு வேறு எந்த ஒரு சமூகத்திலும் காணப்படவில்லை. விளக்குச் சட்டி விளக்கு எடுத்தல் என்பது நகரத்தார் சமூகத்தில் மட்டுமே இப்பொது காணப்படுகிறது. விளக்கு வைக்க ஒரு சட்டியும் ஒரு மூடியும் இருக்கும். பெண்ணுக்கு வைக்கும் சீர்வரிசையில் கட்டாயம் ஒரு விளக்குச் சட்டி விளக்கு இருக்கும். முன்பு மண்சட்டியாக இருந்துள்ளது. பின்னர் எவர்சில்வர், பித்தளை, வெள்ளி என்று சீர் வைத்தனர். வசதி இருக்கும் வீடுகளில் தங்கத்தினால் விளக்குச்சட்டி விளக்கு வைக்கின்றனர்.

விளக்குச் சட்டி விளக்கின் அடிப்பாகம் சமமாக இருக்காது. அடிப்பாகம் வளைவாக கூம்பாக, முதுமக்கள்தாழி போன்று இருக்கும். இக் காரணத்தினால் விளக்குச் சட்டியைத் தரையில் அப்படியே வைக்க முடியாது. கலவடையை வைத்து அதன்மீதுதான் வைக்க முடியும். சீர்வரிசையில் இந்தச் சலவடையையும் சேர்த்து வைத்திருப்பார்கள். வீட்டிற்கு வந்த மருமகள் முதல் பொங்கல் நாளிலிருந்து தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் நாளன்று இந்த விளக்குச் சட்டி விளக்கை ஏற்றிவைத்துக் கும்பிடுகின்றனர். தை முதல் நாள் பொங்கல் அன்று, நடுவீட்டில் கோலம் போடுகின்றனர். பொங்கல் வைக்கும் இடத்தில் கோலம் போடுகின்றனர். இதேபோல் விளக்குச் சட்டி வைக்கும் இடத்திலும் கோலம் போடுகின்றனர். இந்த விளக்குச் சட்டி வைக்கும் கோலத்திற்குள் சமையலுக்குப் பயன்படுத்தும் அனைத்துக் காய்கறிகளையும், கருனைக் கிழங்கு,வாழைப்பழம், வெற்றிலை பாக்கு, பனங்கிழங்கு, கரும்பு, கண்ணுப்பிள்ளை, ஆவாரம்பூ,சக்கரை வள்ளிக் கிழங்கு,அச்சு வெல்லம், தேங்காய் இவையெல்லாம் வைப்பர்.

நடுவில் ஒரு சின்னப் பிள்ளையாரை வைத்திருப்பர். இந்த வழிபாட்டிற்கு என்றே சிறிய வடிவிலான பிள்ளையார் வைத்திருப்பர். விளக்குச்சட்டி விளக்குப் பிள்ளையார் என்றே இந்தப் பிள்ளையாருக்குப் பெயர். இரண்டு விளக்கு இருக்கும். அதில் ஒன்று மிகச் சிறிய விளக்கா இருக்கும். இந்தச் சிறிய விளக்கில் நெய் ஊற்றித் தீபம் ஏற்றி வைப்பார்கள். மற்றொரு விளக்கையும் ஏற்றி வைப்பார்கள். பொங்கல் வைத்து சாமிக்கு எல்லாம் படைத்து வைத்துக் கும்பிட்டதற்குப் பிறகு, விளக்கு சட்டி விளக்கிற்கு என்றே ஒரு இலைபோட்டு வைத்திருப்பார்கள். அதைச் சொளகு (முறம்) கவிழ்த்து வைத்து, கவிழ்த்த முறத்தின் மீது இந்த இலைஉள்ள சாதம், அப்பளம், பொங்கலுடன் படைக்கப்பட்ட அனைத்து படையல் களுடனும்

அப்படியே எடுத்து வைப்பார்கள். பின்னர் மனைவியும் கணவனும் ஒன்றாகச் சேர்ந்த அந்த முரத்தை அப்படியே எடுத்து மெதுவாகச் சென்று விளக்குச்சட்டி விளக்கு வைக்கும் இடத்திற்கு எடுத்துச் செல்வார்கள். பெண்கள் முதலில் செல்வார்கள். பின்னர் ஆண்கள் செல்வார்கள்.

முன்பு வளவுகளில்தான் பொங்கல் வைப்பார்கள். அங்கிருந்து மெதுவாக எடுத்து வருவார்கள். சாமிவீட்டு வாசலுக்கு முன்னாள் வரும்போது, அந்த இரண்டு விளக்குகளையும் ஏற்றி, ஒன்றிற்கு ஒன்று எதிராக இருக்கும்படி அந்த இலைமீது வைப்பார்கள். மெதுவாக வலதுகாலை முதலில் உள்ளே வைத்து நுழைய வேண்டும். சாமி வீட்டில் உள்ள விளக்கிற்கு நேராக இதை வைத்துக் கும்பிடுவார்கள், பின்னர் அந்தச் சிறிய விளக்கை எடுத்து மெதுவாக அந்த விளக்குச் சட்டி விளக்கிற்குள் வைக்க வேண்டும். அதற்குள் பிள்ளையாரைச் சுற்றி எல்லாமும் ஏற்கனவே இருக்கும். இருக்கும் அந்தச் சிறிதளவு இடத்திற்குள்ளாக பிள்ளையாருக்கு எதிரே இந்த விளக்கையும் மெதுவாக வைக்க வேண்டும். மருமகள்தான் இதைச் செய்வார். விளக்குச்சட்டி விளக்கு வைக்கும் போதும் எடுக்கும் போதும் சங்கு ஊதுவார்கள். கரும்பும் (இரண்டு மொழி) பனங்கிழங்கும் வெளியே நீட்டிக் கொண்டிருக்கும், அதை அப்படியே (கிழங்கை அவிக்கவோ, சுடவோ கூடாது. பச்சைக் கிழங்கைத்தான் பயன்படுத்துவார்கள்) வைத்தாற்போல் மூடி வைப்பார்கள். அந்த விளக்கில் நெய் இருக்கும் வரை தீபம் எறிந்து கொண்டிருக்கும்.

கணவனும் மனைவியுமாகத்தான் இதைச் செய்வார்கள். ஆடி, புராட்டாசி, தை மாதங்களில் பிதுர்கள் வழிபாடு. திருக்குறள் ஒன்று வழிபாட்டு முறை பற்றிக் குறிப்பிடுகிறது. ஒருவனுக்கு ஐந்துபேர்களைக் காக்க வேண்டிய கடமை உள்ளதாகத் தெரிவிக்கிறார்.

“தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல்
தான் என்றாங்கு ஐம்புலத்தார் ஓம்புதல் தலை“

என்று திருவள்ளுவர் வழிபாட்டில் முதல்முதலில் தென்புலத்தாரேயே தெய்வவழிபாட்டிற்கும் முன்னதாகக் குறிப்பிடுகிறார். தென்புலத்தார் என்பது முன்னோர்களையே குறிக்கிறது. கண்ணகி கோவலன் உடன் இல்லாததால் வழிபாடு செய்யமுடியாமல் இருந்ததாகக் குறிப்பிடுவாள்.

ஏன் விளக்கை உள்ளே வைக்கிறார்கள்? என ஆராய்ந்து பார்த்தால், முதுமக்கள் தாழியுடன் இது ஒத்துப் போவதை அறிய முடியகிறது. முதுமக்கள் தாழியின் அடிப்பாகமும் சமமாக இல்லாமல் கூர்மையாக இருக்கும். எனவே முதுமக்கள் தாழியை அப்படியே தரையில் வைக்க முடியாது. கீழே கலவடை(பிரிமனை)போன்று ஒன்றை வைத்தே அதன்மீது முதுமக்கள் தாழியை வைத்து மூடியிருப்பார்கள்.

காரைக்குடி செஞ்சையிலும், செட்டிநாட்டிலும் நாங்கள் கண்டுபிடித்த முதுமக்கள் தாழிகளின் அடிப்பகுதியில் கலவடை இருப்பதைக் கண்டுபிடித்துள்ளோம். முதுமக்கள் தாழியின் உள்ளே, அவர்கள் பயன்படுத்திய பொருட்கள், விளக்கு,(ஒருகாலத்தில் அவர்கள் விளக்கை ஏற்றி தாழியின் உள்ளே வைத்திருந்திருக்க வேண்டும்) அகல் விளக்கு,தானியங்கள், உணவுகள், பயன்படுத்திய ஆயுதங்கள் எல்லாம் உள்ளே கிடக்கின்றன. எனவே ஒரு மனிதனின் இறப்பிற்குப் பின்னால் அவனை இதுபோன்று முதுமக்கள் தாழியின் உள்ளே வைத்து எல்லாப் பொருட்களையும் வைத்து விளக்கு ஏற்றி வைத்து மூடி வைத்துள்ளதை அறிய முடிகிறது. விளக்குச்சட்டி விளக்கைப் பார்த்தோமானால் முதுமக்கள்தாழி போன்றே உள்ளது. முதுமக்கள் தாழியின் காலம் சங்ககாலத்திற்கும் முன்னாடி, சங்ககாலத்தை ஒட்டி எனக் கணித்துள்ளனர். எனவே விளக்குச்சட்டி விளக்கு எடுக்கும் இந்த விழாவும் சங்ககாலம் முதற்கொண்டு தொன்று தொட்டு நகரத்தார்களால் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது என்றே எண்ணத் தோன்றுகிறது.

விளக்குச்சட்டி விளக்கைக் கொண்டுபோய் வைப்பதற்கு முன்னாடியே, விளக்கை வைக்கும் இடத்தில் நூலினால் கோலம் போடுவார்கள். இதற்காக ஏடுகளில் கட்டியிருக்கும் நூலை எடுத்து அரிசிமாவில் நனைத்து எடுத்து சுற்றில் ஒரு செவ்வகம் அதன்மேல் ஒரு முக்கோணம் வீடுபோல் கோலம் போடுவார்கள். கணவனும் மனைவியும் சேர்ந்துதான் இதையும் செய்வார்கள். நூலின் ஒரு நுனியைக் கணவனும்,மறு நுனியை மனைவியும் பிடித்துக் கொள்ள, அப்படியே அந்த நூலைப் பிடித்து சுண்டிவிடுவார்கள். நூலில் உள்ள மாவு சுவற்றில் ஒட்டிக் கொள்ளும். இதைத் தும்பு (தும்பு என்றால் கயிறு) பிடித்தல் என்கின்றனர்.

நடுகல் பற்றி, தொல்காப்பியத்தில், காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல் என வருகிறது. பெரும்படை வாழ்த்தல் வழிபடுதல். வீட்டிற்குள்ளேயே முன்னோர்களை வரவழைத்துக் கும்பிடுவதைக் குறிப்பிடுகிறது. விளக்கை விளக்குச்சட்டியின் உள்ளே வைக்கும் போது சங்கு ஊதுகின்றனர். பின்னர் சாமியைக் கும்பிட்டுச் சாப்பிடுகின்றனர். முதுமக்கள் தாழியை முழுமையாகப் பார்த்தவர்களுக்கும்,

விளக்குச்சட்டி விளக்கு எடுத்தல் நிகழ்ச்சியை முழுமையாகப் பார்த்தவர்களுக்கும்தான் இவற்றின் ஒற்றுமை முழுமையாக விளங்கும். வீட்டில் உள்ள வளவில்தான் பொங்கல் வைப்பார்கள். பொங்கல் வைத்த முடித்தவுடன் பொங்கல்பானைக்கு எதிரில் வைத்துப் படைத்துவிட்டு பின்னர் விளக்குச்சட்டி விளக்கை எடுத்து உள்ளே வைத்த பின்னர், சாமியைக் கும்பிட்டு விட்டே, பொங்கல் சாப்பிடுகின்றனர்.

எனவே பொங்கல் விழாவில் முன்னோர் வழிபாடே பிரதானமாக உள்ளது. நகரத்தார்கள் தொன்று தொட்டு இதனைச் சிறப்பாகச் செய்து வருகின்றனர். இந்த வழிபாட்டின் வழியாக நகரத்தார்கள் பொங்கல் அன்று முன்னோர்களை (நீத்தார்களை)யே முதலில் வணங்குகின்றனர். பின்னரே அவர்கள் தெய்வத்தை வணங்குகின்றனர். அதன் பின்னரே அவர்கள் பொங்கல் உண்கின்றனர். விளக்குச்சட்டி விளக்கிற்கும், முதுமக்கள் தாழிக்கும் உள்ள தொடர்பை கோவையில் நடைபெற்ற ஆவணம் கூட்டத்தில் விளக்கிக் கூறினேன். வளவில் பொங்கல் வைத்து பால்பொங்கியவுடனேயே சூரியனை வழிபாடு செய்கின்றனர்.

குறிப்பு:

காரைக்குடி இராமசாமி தமிழ்க்கல்லூரியின் மேனாள் முதல்வர் முனைவர் நா.வள்ளி அவர்கள் சொன்னபடி, கி.காளைராசன் எழுதியது.



**முனைவர் கி.காளைராசன்**

kalairajan26@gmail.com

3.

# விளையாட்டிலும் வெளிப்பட்ட வீரம்!

- மேகலா இராமமூர்த்தி

வீரமும் காதலும் தமிழர்வாழ்வின் இருகண்கள் என்பது நாம் அடிக்கடிக் கேட்கும் வாசம்தான்! ஆம்! அன்றையமக்களின் வாழ்வில் வீரமும் காதலும் இணையில்லா இருபெரும் உணர்வுகளாகவே காட்சியளித்திருக்கின்றன என்பதற்கு நம்இலக்கியங்கள் சாட்சிகூறுகின்றன. காதலைப் பாடும் அகத்திணைப்பாடல்கள் எண்ணிக்கையில் மிகுதி; எனினும், வீரத்தை விதந்தோதிய பாடல்களுக்கும் பஞ்சமில்லை. முடிமன்னர் கோலோச்சிய அன்றைய தமிழகத்தில், '(போர்செய்து) விழுப்புண்படாத நாளெல்லாம் வீண்நாளே!' என்பதே தமிழக வீரர்களின் எண்ணமாயிருந்திருப்பதை வான்புகழ் வள்ளுவரும் திருக்குறளில் தெளிவுபடுத்தியிருக்கின்றார்.

விழுப்புண் படாத நாளெல்லாம் வழுக்கினுள்
வைக்கும்தன் நாளை எடுத்து. (776)

போரற்ற காலங்களில் 'போரடிக்காமல்' (not to get bored) பொழுதுபோக்குவதற்குக்கூட வீரவிளையாட்டுக்களையே நாடியிருக்கின்றனர் நம்மவர்! அவ்வாறு அவர்கள் விளையாடிய வீரவிளையாட்டுக்கள் சிலவற்றை இங்கே நாம் நினைவுகூர்வோம்!

ஏறுதழுவுதல்:
ஏற்றினைத் தழுவி அதன் திமிலைப்பிடித்து வீரஆடவர் அடக்குதலே ஏறுதழுவுதல் அல்லது ஏறுகோளாகும் (it is a bull-taming sport). இவ்விளையாட்டு ஆநிரைகளைத் தம் செல்வமாய்க்கொண்டிருந்த முல்லைநிலத்து மக்களிடையே அன்று மிகச்சாதாரணமாய் நடந்த ஓர் நிகழ்வு என்பதைச் சங்க இலக்கியம் நமக்கு அறியத்தருகின்றது. காளைகளின் கொம்பைப்பிடித்தல் ஆண்மை, வாலைப்பிடித்தல் தாழ்மை என்பது தமிழர்கொள்கை.

முல்லைநிலத்துக் காரிகையரின் கைத்தலம்பற்ற அப்பகுதியைச்சார்ந்த ஆடவர் ஏறுதழுவுதல் எனும் வீரவிளையாட்டில் வென்றேயாகவேண்டும் என்பது நியதி. வளமான புல்லையுண்டுத் தளதளவெனக் கொழுத்துநின்ற ஏறுகள்,

கொடும்புலிகளையும் குத்திக்கொல்லும் வீரமும் ஆற்றலும் மிக்கவை. ஆதலால், அவற்றைக் 'கொல்லேறு' என்று குறிப்பிட்டனர் மக்கள். அந்தக்கொல்லேற்றின் கொம்பைக்கண்டு அஞ்சாத வீரமறவரையே அந்நிலத்துமகளிர் மணப்பர். அவ்வாறில்லாது, ஏற்றைக்கண்டஞ்சித் தோற்றோடுவோனின் தோள்களை இம்மை மட்டுமின்றி மறுமையிலும் தழுவ மாட்டார்கள் அப்பெண்டிர்!

இதைத்தான்,

கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும்
புல்லாளே ஆயமகள் என்கின்றது முல்லைக்கலி.



அற்றைநாளைய ஏறுதழுவுதலே இற்றைநாளைய 'சல்லிக்கட்டாகும்.' மதுரை மாவட்டத்தைச்சார்ந்த அலங்காநல்லூர் எனும் ஊர் தமிழ்மரபின் எச்சமான இவ்வீரவிளையாட்டை அழிந்துவிடாமல் காக்கும் ஊராய்த் திகழ்ந்துவருகின்றது. சில்லாண்டுகளாக, இவ்விளையாட்டில் விதிமீறல்கள், அரசியல் போன்றவை (விரும்பத்தகாதவகையில்) உள்நுழைந்ததால் உச்சநீதிமன்றம் இவ்விளையாட்டுக்குப் 'பிராணிவதை' என்று முத்திரைகுத்தித் தடைவிதித்துவிட்டது. அத்தடையைவென்று, நம்மறவரின் மாண்பைக்காட்டும் இவ்வீரவிளையாட்டு தமிழ்மண்ணில் மீண்டும் உயிர்த்தெழும் என்று நம்புகின்றனர் சல்லிக்காட்டு ஆர்வலர்கள்!

மல்லாடல்:

மற்போர் (wrestling) என்ற பெயரில் அன்று நடைபெற்றுவந்த மல்லாடலும் ஓர் வீரவிளையாட்டே! தமிழகத்தில் வீரமல்லர்கள் பலர் அன்றிருந்தனர். அவர்களில் குறிப்பிடத்தக்க ஒருவன் உறந்தையிலிருந்த (உறையூர்) வேளிர்தலைவனான தித்தனின் மகனான பெருநற்கிள்ளி. அழகும் ஆற்றலும் ஒருங்கே பொருந்திய வீரஇளைஞனான பெருநற்கிள்ளி, 'போரவை' என்று அழைக்கப்பட்ட மற்போர் பயிற்சிக்கூடமொன்றை நடாத்திவந்தமையால் 'போரவைக் கோப்பெருநற்கிள்ளி' என்றே இவனை அழைத்தனர் புலவோர். யாது காரணத்தாலோ, 'நொச்சிவேலித் தித்தன்' என்று பரணரால் புகழந்துபோற்றப்பட்ட (அகம்.122) தித்தனுக்கும், அவனுடைய வீரமைந்தனான பெருநற்கிள்ளிக்கும் மனவேறுபாடு வந்துவிட்டது. அதனால், மகனென்றும் பாராது கிள்ளியை ஊரைவிட்டு வெளியேற்றிவிடுகின்றான் தித்தன்.

அத்தனால் (தந்தை) வெளியேற்றப்பட்ட பெருநற்கிள்ளி பலவிடங்களில் சுற்றிவிட்டு ஆமூர் எனும் ஊரில்வந்து தங்கியிருந்தான். அவ்வூரில் புகழ்பெற்ற மல்லன் ஒருவன் இருந்தான். அவன் பெருநற்கிள்ளி மல்லாடலில் வல்லவன் என்றறிந்து அவனை மல்யுத்தத்துக்கு அறைகூவியழைத்தான். சிலிர்த்தெழுந்த கிள்ளி, அந்த மல்லனின் மார்பின்மீது ஒருகாலும், முதுகின்மீது மற்றொருகாலும் வைத்து அவன் மதவலியை முருக்கி, பசித்த யானை மூங்கிலைத் தின்பதுபோல், அவன் தலையையும் காலையும் முறியமோதி அவனை வென்றான். இந்தக் காட்சியைக்கண்டு வியப்பும் பெருமிதமும் அடைந்த புலவர் சாத்தந்தையார், "மகன்புரிந்த இந்த அற்புதப்போரினை தித்தன் (விரும்பினாலும் விரும்பாவிட்டாலும்) கண்டிருக்கவேண்டுமே!" என்று மெய்புளகித்துப் பேசுகின்றார்.

.... ஆமூர் ஆங்கண்
மைந்துடை மல்லன் மதவலி முருக்கி
ஒருகால் மார்பொதுங்கின்றே; ஒருகால்
வருதார் தாங்கிப் பின்னொதுங்கின்றே
நல்கினும் நல்கான் ஆயினும் வெல்போர்
போர் அருந்தித்தன் காண்கதில் அம்ம
பசித்துப் பணைமுயலும் யானை போல
இருதலை ஒசிய எற்றிக்
களம்புகு மல்லர் கடந்தடு நிலையே. (புறம் - 80)

வேட்டையாடல்:

வேட்டையாடுதல் அன்று சிலருக்குத் தொழிலாகவும் சிலருக்குப் பொழுதுபோக்கான வீரவிளையாட்டாகவும் விளங்கிற்று. வேட்டையைத் தொழிலாகக்கொண்டோர் 'வேடர்' என்றும் 'வேட்டுவர்' என்றும் அழைக்கப்பட்டனர். குறுநிலமன்னர்களான வேளிரும், பெருநிலமாண்ட வேந்தரும் இதனைப் பொழுதுபோக்காய்க் கொண்ருந்தனர். கொல்லிமலைத் தலைவனான 'வல்வில்' ஓரி, ஓர் அம்பிலேயே யானை, புலி, மான், முள்ளம்பன்றி, உடும்பு என ஐந்து விலங்குகளை வீழ்த்தும் வில்லாளனாய்த் திகழ்ந்தான். அதன்காரணமாய், வில்லிலே வல்லவன் எனும்பொருள்பட 'வல்வில்' ஓரி என்று விளிக்கப்பட்டான்.

விலங்குகளுக்கு வீடுபேறளிக்கும் கொலைத்தொழிலாக வேட்டம் விளங்கியபோதினும், அதிலும் ஓர் அறநெறியைப் பேணினர் வேட்டுவர் என்பதைக் கண்ணப்பநாயனார் புராணம் கவினுறக் கழறுகின்றது. ஆம்! விலங்குகளின் குட்டிகளையும், கருவுற்று வயிறலைத்து ஓடும் பெட்டை விலங்குகளையும் கொல்லாது விடுத்து, வலிய விலங்குகளை வேட்டையாடுவதையே வேட்டுவர் தம் வழக்கமாய்க்கொண்டிருந்தனர் என்றறியும்போது, வீரத்திலும் வெளிப்படும் அவர்தம் ஈரம் நம்மை நெகிழ்ச்சியுறச்செய்கின்றது.

இச்செய்தியைப் பெரியபுராணம் மிடுக்கான சொற்களில் எடுத்தியம்புவதைக் காணுங்கள்.

துடியடியன மடிசெவியன
    துறுகயமுனி தொடரார்
வெடிபடவிரி சிறுகுருளைகள்
    மிகைபடுகொலை விரவார்
அடிதளர்வுறு கருவுடையன
    அணைவுறுபிணை அலையார்
கொடியனஎதிர் முடுகியும்உறு
    கொலைபுரிசிலை மறவோர் (பெ.புராணம் - கண்ணப்பநாயனார் புராணம்)

இவ்வேட்டைக்கலை சங்ககாலத்தோடு மங்கிவிடவில்லை. 18-ஆம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்து, வெள்ளையரை எதிர்த்து வீரமரணடைந்த மருதுசகோதரர்களில் மூத்தவரான பெரியமருது மிகச்சிறந்த வேட்டைக்காரராய்த் திகழ்ந்திருக்கின்றார்.

இச்செய்தியை, அவர்களோடு நெருங்கிப்பழகிய ஆங்கிலஅதிகாரி ஒருவர் தன்நூலில் பதிவுசெய்திருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனைப்போர்:

மனிதரும் மனிதரும் புரிந்துவந்த போர் போதாதென்று விலங்கினங்களையும் மோதவிட்டு வேடிக்கைப்பார்த்து மகிழ்ந்திருக்கின்றனர் பண்டைத்தமிழர். அவற்றில் ஒன்று ஆனைப்போர். கருமலை போன்ற ஆனைகளை ஒன்றோடொன்று பொருதச்செய்து கண்டுகளித்திருக்கின்றனர் சீமான்களும் கோமான்களும். இப்போரைப் பாதுகாப்பாய்க் காண்பதற்கென்றே அரசர்களின் தலைநகரங்களில் அன்று தனிமாடங்கள் இருந்தனவாம்.

வள்ளுவரும், செல்வத்தைத் தன்னிடமுடைய ஒருவன் ஒருசெயலைத் தொடங்குவது, குன்றிலே ஏறிநின்று (கீழேநிகழும்) யானைப்போரைப் பார்ப்பதுபோல் பாதுகாப்பானது என்று கூறுவதை இங்கே நாம் நினையலாம்.

குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்று
உண்டாகச் செய்வான் வினை. (758)

ஆட்டுப்போர்:

ஆனைப்போரைப்போலவே ஆட்டுக்கடாக்களை மோதவிட்டுக் களித்திருக்கின்றனர் தமிழ்க்குடியினர். அதற்கென்றே ஆட்டுக்கடாக்களைச் சிலர் வளர்க்கவும் செய்திருக்கின்றனர். இவற்றைப் 'பொருதகர்' என்கின்றார் தெய்வப்புலவர்.

ஊக்க முடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேருந் தகைத்து. (486)

(ஊக்கமுடையவன் (காலம்பார்த்து) ஒடுங்கியிருப்பது, ஆட்டுக்கடா தாக்குவதற்குக் காலம்பார்த்து எவ்வாறு பின்வாங்குமோ அதனை ஒக்கும்.)

சேவற்போர்:

பறவையினங்களையும் போரின்றி இருக்கவிடவில்லைcock fight நம்மனோர். கோழிச்சேவல்கள், காடைகள் போன்றவற்றையும் போரில் ஈடுபடுத்தி அவற்றை ஆர்வத்தோடு கண்டுகளித்திருக்கின்றனர். சேவல்களின் கால்களில் முள்ளையோ

கத்தியையோ கட்டிச் சற்றுக்கோரமாய்ப் போரிடச்செய்திருக்கின்றனர் என்று அறிகின்றோம்.

கறுப்புறு மனமும் கண்ணில் சிவப்புறு சூட்டும் காட்டி
உறுப்புறு படையின் தாக்கி உறுபகை இன்றிச் சீறி
வெறுப்புஇல களிப்பின் வெம்போர் மதுகைய வீரவாழ்க்கை
மறுப்பட ஆவி பேணா வாரணம் பொருத்துவாரும்;

என்று சேவற்போரின் தன்மையைக் கம்பகாவியம் பேசும்.

அந்நாளில், சோழரின் பழையதலைநகரான உறையூரில் வீரக்கோழிகள் மிகுந்திருந்தமையால் அதற்குக் 'கோழியூர்' என்ற பெயரும், அதனையாண்ட சோழருக்குக் 'கோழிச்சோழர்' என்றபெயரும் ஏற்பட்டன.

இவ்வாறு, பொருதலில்லா வாழ்க்கை பொருளற்ற வாழ்க்கை எனும் கொள்கையுடையோராய் வாழ்ந்து, வீரவரலாற்றை வடித்துச்சென்றிருக்கும் தமிழரின் மறம் - அவர்தம் போர்த்திறம் நம்மை மலைக்கவைக்கின்றது அல்லவா?

நன்றி வல்லமை: http://www.vallamai.com/?p=65476




**மேகலா இராமமூர்த்தி**
megala.ramamourty@gmail.com

4.

# கலித்தொகை முல்லைக்கலியில் ஏறுதழுவுதல் (மாடு பிடித்தல்)

-- முனைவர் கி. காளைராசன்

முல்லைக்கலியில் முதல் ஏழு பாடல்களில் ஏறுதழுவுதல் (மாடு பிடித்தல்) பற்றிய குறிப்புகள் எல்லாம் வருகின்றன.




இப்பாடலைச் சோழஅரசன் பாடியுள்ளான். ஆனால் பாண்டிய நாட்டில் நடைபெற்ற மஞ்சுவிரட்டு ஏறுதழுவுதல் பற்றிப் பாடுகிறான். ஐவகை நிலங்களில் ஒன்றான முல்லைநிலத்தில் ஏறுதழுவுதல் என்பது ஒரு ஒழுக்கம். ஆனால் இதுபற்றிய குறிப்பு, சங்க இலக்கியத்தில் முல்லைக்கலியில் மட்டுமே உள்ளது.

பின்னாளில் இது பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன. ஆனால் கலித்தொகையில் முல்லைக்கலியில் உள்ள ஏழு பாடல்களிலும் இதுபற்றிய குறிப்பு மிகவும் நன்றாக இருக்கும். விறுவிறுப்பாக ஒரு நாடகம் போன்று,

அதோ அந்தக் காளை வருகிறது.
வெள்ளைக்காளை வருகிறது.
கருப்புக் காளை வருகிறது.
காளை பாய்கிறது.
வீரன் அதை அடக்குகிறான் என்பன பற்றியெல்லாம் சோழமன்னன் பாடியுள்ளான்.

இந்த விளையாட்டு போல் இந்தப் பாடலும் விறுவிறுப்பாக இருக்கும், பாடலில் உள்ள வார்த்தைகளும் சிறுசிறு வார்த்தைகளாகவே இருக்கும்,.

மிகப்பெரிய விளையாட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது வளவளவென்று பேசிக் கொண்டிருக்க முடியாது. எனவே சிறுசிறு வார்த்தைகளாகவே இந்த வர்ணனை அமைந்திருக்கும்.

சல்லிக்கட்டு, மஞ்சுவிரட்டு, ஏறுதழுவுதல் என்பது பாண்டிய நாட்டில்தான் சிறப்பாக நடைபெற்றுள்ளது.

குறிப்பு:
காரைக்குடி இராமசாமி தமிழ்க்கல்லூரியின் மேனாள் முதல்வர் முனைவர் நா.வள்ளி அவர்கள் சொன்னபடி, கி.காளைராசன் எழுதியது.



**முனைவர் கி.காளைராசன்**
kalairajan26@gmail.com

5.

# பட்டி நோம்பி

-- பழமைபேசி.

"அட, என்ன பாக்கறீங்க? ஊர்ல மழைங்ளா? ஒரு ஒழவு மழை இருக்குமுங்ளா? பொங்கலூருக்கு வடக்கமின்னா நல்ல மழையின்னு பெரிய பாப்பாத்தியவிங்க ஊட்டுக்காரர், வந்திருந்தவரு சொன்னாரு. இங்க வாசத் தொளிக்குறதுக்கு மூத்த புள்ளியா ரெண்டு அடி அடிச்சிப் போட்டு, தாந்து போச்சுங்க. எதுக்குமு, இந்த தை பொறந்தா ஒரு வழி பொறந்துதானுங்க ஆகோணும்?"

"ஆமாங்க மச்சான். எங்களுக்குமு ஒழவு மழையல்லாம் பேயிலீங்கோ. காட்டுத்தண்ணியே காட்டைவுட்டுப் போகுலீன்னா பார்த்துகுங்க நீங்களே?"

"அது செரீங். தை பொறந்தாச்சின்னா, பட்டி பெருகோணும்; வெள்ளாமை வெளையோணும்; பொங்கல் பொங்கோணும்!! அது மாறாது பாருங்க. அல்லாம் நல்லாத்தான் ஓடி அடையும். என்ன நாஞ்சொல்றது சரித்தானுங்ளே?"

"ஆமாமாங். இப்பெல்லாம் ஆருங் முன்ன மாதர தை நோம்பியெல்லாங் கும்புடுறாங்க? அல்லாம் மாறிப் போச்சு பாருங்!"

"நெம்ப நல்லாவே. இங்க, நாங்க ஒரு நாலஞ்சி பண்ணையத்துக்காரங்க மட்டும் இன்னுமு பழைய மொறைக்கி அல்லாத்தையும் செஞ்சிட்டுதான் வாறம். நம்ம இருக்குற காலத்துக்கும் செஞ்சி போடலாம். அதுக்கப்பொறம் என்னமோ ஆயிட்டுப் போகுது போங்க!"

"பெரிய அமுச்சி இருக்கமுட்டும் நாங்களும் தொட்டி கட்டி, பட்டி மெரட்டிட்டுதா இருந்தமுங்க. அமுச்சி போய்ச் சேந்தவுட்டு, பெரியம்மணிய பெங்களூருக்கு கண்ணாலங்கட்டி தாட்டியுட்டதாச்சிங்? அதுக்குப் பொறகு அல்லாமே நெதானமாய்ப் போச்சுங்!"

"நாம சின்ன வயசுல இருக்கறப்பெல்லாம் ஒரு வாரம் பத்து நாளத்து நோம்பியா இருந்துச்சு. இப்பெல்லாம் ஆரும் மூனு நாள் நோம்பியாக்கோடக் கும்புடுறது இல்லை?!"

"கொஞ்சம் வெவரமாத்தான் சொல்லுங்க பழமைய. ஏன் நிக்கிறீங்க? குக்கீட்டுச் சொல்லுங்க மச்சே! வேலை கெடக்கட்டும்; எப்பூஞ்செய்யுற வேலைதான?!"

"அது செரி. கார்த்திகை மாசம் சோதி வெச்ச நாள்ல இருந்தே பட்டி நோம்பிக்கான வேலைகளும் தெரக்கா ஆரமிச்சிரும். சோதியன்னைக்கு சூந்து விளையாடுவோம். வெடிய வெடிய ஆடுவோம். கருது அறுத்து குச்சுக வெச்சிருக்கும். அந்தக் குச்சுகள்ல இருந்து தட்டுக் கத்தைகளை ஒன்னு ஒன்னா எடுத்தாந்து, அதோட மொனையில தீயைப் பத்த வெச்சி வளைச்சி வளைச்சி சுத்துவோம்.

நாலுபேரு அஞ்சு பேருன்னு கூட்டாச் சேந்துட்டு போயி களவாடுவோம். மாங்கா திருடுவோம். தேங்கா திருடுவோம்; ஆகாதவன் கெணத்துக்குள்ள எறங்கி மோட்டாரைக் கழட்டித் தண்ணிக்குள்ள போட்டுட்டு வருவோம். ஊர் வெடலைக காயடிக்காத காளைகளுக்கு எணை ஆச்சுதே? ஆனாலும் அதுல ஒரு நேர்மை இருக்கும். பொண்டு புள்ளைக மேல கை வெக்க மாட்டம். ஏழைபாழைகளுக்கு சகாயமா நடந்துக்குவம்.

சூந்து ஆடி முடிஞ்சு ஊட்டுக்குப் போகும் போது கெழக்க வெளுத்துரும். அந்த நேரத்துக்கும், ஊட்டுக்குப் போயி நாலு அச்சு, அஞ்சு அச்சுன்னு இராகிக் களியோட சுண்டைக்கா வத்தக்கொழம்பு, தூதுவளைச் சாறுன்னு கலந்து கட்டி ஒரு எடுப்பு எடுத்துட்டுதா தூங்கப் போவம்.

அன்னிக்கி பொழுது பம்பலா அப்படி முடியும். அது முடிஞ்ச கொஞ்ச நாள்லயே மார்கழி மாசம் பொறந்திரும். மார்கழி மொதநாள் அன்னிக்கே வடக்க தங்காத்தா கோயலு, ஊருக்குள்ள விநாயகங்கோயல்னு எல்லாக் கோயல்லயும் அன்னாடப்பூசை ஆரமிச்சிரும். ஒவ்வொரு கோயல்லயும் காலையில அஞ்சரையிலிருந்து ஏழு மணி வரைக்குமு, சாயங்காலம் ஆறுல இருந்து ஒம்பது மணி வரைக்குமு பாட்டுப் போட்டியில சாமி பாட்டுக போடுவாங்க. பண்டாரத்தார் ஊட்டு சம்முகம் ரெண்டு வேளையும் பூசை செய்வான்.

ஊர்ல இருக்குற நாய்க்கமாருங்க எல்லாம் பசனை கோயல்ல காலையில அஞ்சு மணியிலிருந்து பசனை பாடுவாங்க. ஆறு மணிக்கு சங்கு சேகண்டி ஊதிட்டு பாடிட்டே ஊர் சுத்தி வருவாங்க. பெரிய சிங்கார் நாய்க்கர் ஆர்மோனியப் பொட்டி, சுப்புராயலு நாய்க்கன் மிருதங்கம், நம்ம பாட்டையன் கஞ்சிரா, நரசிம்ம நாய்க்கரும் காவேட்டி நாய்க்கரும் சால்ரா போடுவாங்க. மித்தவிங்க எல்லாரும் கை தட்டிட்டே பசனைக்கு பின்பாட்டு பாடுவாங்க. கோபால்சாமி நாய்க்கனும் குழித்தோட்டத்து பட்டீசுவரக் கவுண்டனும் நல்லாப் பாடுவாங்க. அந்த ஆதிசேசா, அனந்த சயனாங்ற பாட்டுப் பாடும் போது ஊரே முழிச்சுக்கும். அவிங்க மொத்தம் நுப்பது பேரு. இப்பெல்லாம் எங்க அந்த மாதர பசனை கோசுடியே இல்லை போ. எங்கியோ கோயமுத்தூருகிட்ட வடவள்ளியில இருக்குதுன்னு சொல்லிச் சொல்றாங்க. பீளமேடு இரங்கம்மா கோயல் கோசுடின்னு சொல்லிக்கிறாங்க.

கடைசி நாளன்னக்கி திருப்பாவை முச்சூடும் பாடி, பசனை கோயல்காரங்க ஊருக்குள்ள மெரவனை வருவாங்க. தங்காத்தா கோயல்லயும், புள்ளார்கோயல்லயும் பூசை செய்து அவிசாயங் குடுப்பாங்க. பசனை கோயல்ல மாசம் முப்பது நாளும் சக்கரைத் தளிகையுமு, கடைசி நாளன்னிக்கு கூடா தட்டவடையுங் குடுப்பாங்க.

அந்த முப்பது நாளும் ஊருக்குள்ள அல்லாரும் சாமி கும்புடுறதும், அறுவடைப் பம்பலைப் பாக்கறதும், பட்டி நோம்பிக்கான வேலைகளைப் பார்க்கறதுமா ஒரே தடபுடலா இருக்கும். அல்லாரும் மனசு நெறஞ்சி தாய் புள்ளையா பந்த பாசமா இருக்குறது எப்பன்னு கேட்டா, இந்த மார்கழி ஆரமிச்சி தை நோம்பி முடியுற காலத்தைத்தான் சொல்லோணும்.

பட்டி நோம்பி வாறதுக்கு பத்து நாளைக்கு முன்னாடியே சந்தைகளுக்குப் போயி வேணுங்றதை வாங்கிப் போட்ருவாங்க. அல்லாமே நெல்லு குத்தி அரிசி பொடச்சி, பொங்கலுக்குன்னு தனி அரிசி, படைப்புக்குன்னு தனி அரிசி கட்டி வெச்சிருவாங்க. ஊருக்குள்ள அரசாணிக் காய் ஊரெங்கும் பொழங்கும். அங்கங்க ஊட்டு வாசல்ல பூசணிப் பூ வெச்சிக் கோலம் போடுவாங்க. மார்கழி முப்பதும் பொம்பளைப் புள்ளைகளுக்குக் கோலம் போடுறதும் கோயல்களுக்கு மாலை கட்டுறதுதான் வேலை.

பொம்பளைப் புள்ளைகளுக்கு அந்த வேலைன்னா, ஆம்பளைப் பசங்களுக்கு வண்டியப் பழுது பார்த்து வெக்கிறது. கீல் போட்டு இருசுகளைப் பதனம் பன்றது. ஏர்க்கால், பார்ச்சட்டம், மூக்காணி அல்லாத்தையும் மராமத்து செய்யுறதுன்னு வேலை முசுவா

இருக்கும். எருதுகளுக்கு இலாடம் போட்டு பருத்திக் கொட்டைப் புண்ணாக்கும் நல்ல அரிசித் தவிடுமாப் போட்டு பாங்காக்குவாங்க.

திமில் இருக்குற காயடிக்காத காளைக் கன்னுகளுக்கு கொம்புக் கவுறு பூட்டுறதும், கழுத்து மணி பூட்டுறதும், கொம்புச்சலங்கை கொழுவுறதும் நடக்கும். இந்த மாதரக் காளைகளை வெச்சிருக்கிற நாங்கெல்லாம் ஒரு மொறப்பாத்தான் ஊருக்குள்ள திரிவோம். எங்களைக் கண்ணு வெக்காத பொம்பளைப் புள்ளைக ஊர்ல கெடையாது.

மார்கழி கடைசி நாள் அன்னிக்கி, பசனை கோயல் சப்பரம் தூக்கிட்டு வந்து ஊருக்குள்ள பசனை பாடி முடிஞ்சதும் காப்புக்கட்டு ஆரமிச்சிரும். ஊட்டுல, தோட்டத்துச் சாளையில இருக்குற பழசு பரட்டை எல்லாத்தையும் கழிச்சிக் கட்டிட்டு செய்யுறதுதான் காப்புக்கட்டு. காப்புக்கட்டுக்கு ஒரு வாரத்துக்கு முன்னாடியே ஊடு ஒட்டடை அடிச்சி பூசி வழிக்கிற வேலை ஆரமிச்சிருவாங்க. மொகுடு ஏறிப் பூசுறது, அட்டாலியில ஏறி சுத்தம் செய்யுறதுக்குன்னு நாங்க கொஞ்சப் பேர்தான் இருப்போம். எங்களை எல்லாரும் வந்து கூப்புடுவாங்க. ஒரே கிராக்கிதான் எங்களுக்கு. தெனை மாவும், அரிசி மாவும், கைமுறுக்கும், ஓலைமுறுக்கும், உப்பட்டும்னு எங்களை நெம்ப நல்லாக் கவனிப்பாங்க.

காப்புக்கட்டு அன்னிக்கு மத்தியானத்துல இருந்தே ஊட்டு வாசல் வழிக்கிறதும், களத்து மேட்டுல வழிக்கிறதும்னு பொம்பளைக முசுவா இருப்பாங்க. எளவட்டப் பொடுசுகெல்லாம் ஓடி ஓடிக் கோலம் போட்டு ஊரே ஜாகோன்னு இருக்கும். அந்த தாவணிட் தலப்புல மூஞ்சியத் தொடச்சிக்கிறதும், பாவாடைய கணுக்கால் தெரியுறா மாதர ஏத்தியுட்டுச் சொருகிக்கிறதும், எங்களையெல்லாம் அல்லைல பார்த்துட்டே கோலம் போடுறதும் விட்டேத்தியா வக்கணை பேசுறதும்னு அவிக செய்யுற லொல்லு கொஞ்ச நஞ்சமல்ல போங்க.

தெகோட்டுல இருக்குற பையான் வீட்டு ஆளுக ஒவ்வொரு வீட்டுக்கும் காப்புக்கட்டுக்கு வேண்டியதை எல்லாம் கொண்டாந்து குடுப்பாங்க. காலையில நேரத்துல அவங்க கொண்டார்ற மக்கிரியில, கோலப்பொடியும், அரப்புமு இருக்கும். அவங்கவங்க பண்ணையத்துல இருந்து மாட்டுச்சாணம் முந்துன நாளே வந்திடும் வாசல் வழிச்சுடுறதுக்கு. வழிச்சுட்ட ஈரம் காயம் போறதுக்குள்ளயே அம்மணிகளும் பாப்பாத்திகளும் கோலம் போட்டு உட்றுவாங்க. ஊட்டு கார வாசல், திண்ணையில எல்லாம் அரிசி மாவுக் கோலம் போட்டு உட்றுவாங்க.

மஞ்ச வெயில் வர்றதுக்கும் சித்தங்கூரத்துக்கு முன்னாடி, பையான் ஊட்டு ஆளுக மறுக்காவும் பூளைப்பூவு, புங்கங்கொழுந்து, வேப்பங்கொப்பு, மாவிலை, ஆவரம்பூக் கொத்துன்னு ஊட்டு ஊட்டுக்கும் கொண்டாந்து குடுத்துட்டு போவாங்க. தோட்டங்காட்டுல இருக்கிறவங்க, அவங்கவங்களுக்கு வேண்டியதை அவிங்களே பொறிச்சிக் கொண்டாந்துருவாங்க.

எல்லா தழைகளையுமு வேணுங்ற அளவுக்கு ஒன்னு கூட்டி, மொதல் கொப்பைக் கொண்டு போயி புள்ளார் கோயல்ல வெச்சிக் கட்டிட்டு வருவோம். கூடவே பக்கத்துல இருக்குற ஒன்னு ரெண்டு கோயல்லயும் கட்டிட்டு வந்திருவோம். ஊட்டு எறவாரம், மதில்சுவரு, தோட்டங்காட்டுல இருக்குற பொழிக்கல்லுன்னு எல்லா எடத்துலயும் பூளைப்பூக் கொப்புகளை வெச்சி காப்பு கட்டிட்டு வர இராத்திரி மணி ஏழெட்டு ஆயிரும்.

ஒவ்வொரு ஊட்டுலயும் பெத்து, பொறப்பு, ஒறம்பரைகன்னு ஒரே பம்பலா இருக்கும். ஊட்டுக்கூடு பலகாரம் பணடம் மாத்திக்கிறதும், அங்கங்க உக்காந்து பழமை பேசுறதும் நடக்கும். புள்ளார்கோயல் மைதானத்துல கோலாட்டம், ஒயிலாட்டம், கொட்டுமொழக்கு எல்லாமும் நடக்கும்.

அடுத்த நாள் பெரிய நோம்பி. காலையில வெடியிறதுக்கு முன்னாடியே எழுந்து தலைக்கு வாத்துட்டு, கார வாசலுக்கு அல்லாரும் வந்துருவோம். கார வாசல் நடுப்புல பெரிய அய்யன் கல்லு வெச்சு அடுப்புக் கூட்டுவாரு. உன்ற அக்கா வழிச்சி உட்டு மஞ்சத்தூவி கோலம் போட்டு உடுவா. நானும் உன்ற அக்காளும் கரும்பு, காப்பு கட்டுனதுல மிச்சமான வேப்பந்தழை, ஆவரம்பூவு, மஞ்சக்கொப்பு, துளசிச்செடி, துண்ணூர்ப்பத்திரி எல்லாமும் வெச்சி சோடனை செய்வோம். ஆத்தாவும் அய்யனும் சேந்து பொங்கல் வெப்பாங்க. உன்ற அக்கா பள்ளையம் போடுவா. பொங்கல் பொங்குனவுட்டு, கெழக்க வெளுத்து வர்ற கதிரவனுக்குப் பொங்கல் வணக்கமும் நாட்ராயனுக்கு பள்ளையமும் படைச்சி சாமி கும்புடுவோம். காலையில பொங்கச் சோத்தை உண்டு போட்டு, அல்லாரும் பொறப்புட்டு ஆண்டியூர் காளியம்மன் கோயலுக்கு போயிட்டு வருவோம். கொஞ்ச பேரு திலுமூர்த்தி மலைக்குப் போயிட்டு வருவாங்க. பெரியூட்டு ஆளுக எல்லாம் கெழக்க பழநிக்குப் போயிட்டு வருவாங்க.

பெரிய நோம்பி அன்னிக்கு இராத்திரி முச்சூடும் ஊர்த்தலைவாசல்ல, ஊர்த்தலைவருக்கு மொறை செஞ்சி ஆட்டபாட்டம் நடக்கும். ஒரு பக்கம் கொட்டுமொழக்கு நடக்கும். ஆம்பளை ஆளுகெல்லாம் ஒயிலாட்டம், கோயில்மாடு

மிரட்டுறது, சலங்கையாட்டம்னு பல வேடிக்கைகளும் செஞ்சி பராக்கு பார்க்க வெப்பாங்க. பொம்பளையாளுக கும்மியடிச்சி கந்தபுராணம் சொல்லுவாங்க.

வெடிஞ்சி எந்திரிச்சா, பட்டி நோம்பி! பண்ணையம் வெக்கிறவங்களுக்கெல்லாம் இதான் நோம்பி நாளு. ஊர்க்குளத்துல அங்கங்க நின்னு பண்டங்கன்னுகளைக் கழுவியுடுவாங்க. நான் பெரிய வாய்க்கால்ல போயி மாடு கன்னுகளைக் குளிப்பாட்டியுட்டு ஓட்டிட்டு வருவன். கொம்பு சீவி பெயிண்ட் அடிச்சுடுவேன். மொட்டை வண்டிக்கும் பெயிண்டி அடிச்சுடுவேன். சவாரி வண்டிக்கு மழத்தண்ணி ஒழுகாதபடிக்குத் தார் பூசியுடுவோம். போனகிழமைச் சந்தையில வாங்கிட்டு வந்த மொகரைக்கவுறு, மூக்கணாங்கவுறு, கைக்கவுறு, கொம்புச்சூடி, கம்பளிக்கவுறு, கழுத்துச்சங்கு அல்லார்த்தையும் கொண்டாந்து பண்டங்கன்னுகளுக்குப் பூட்டியுடுவோம். காளைகளுக்கு கழுத்து மணியும் கொம்புச்சூடியும் பொருத்தியுடுவோம். இந்த வேலைக ஒரு பக்கம் நடந்திட்டு இருக்கும் போது, அய்யனும் ஆத்தாவும் களத்து மேட்டுல எல்லா வேலைகளையும் பார்த்துகிட்டு இருப்பாங்க.

சாய்ங்காலம் அஞ்சு மணிக்கெல்லாம், களத்து மேட்டுக்கு மேவறத்தல்லையில இருக்குற வில்வமரத்துக்கடியில அய்யன் பட்டி கட்டியுடுவாரு. ஆத்தாவும் அக்காவும் பாம்புப் புத்துக்கு விளக்கு வெச்சிக் கும்பிட்டுட்டு வருவாங்க. களத்து மேட்டுல இருக்குற கருப்பராயனுக்கு கலயத்துல பொங்கல் வெச்சிக் கும்பிடுவாங்க. கருப்பராயனுக்கும் தாத்தைய்யன் கோயிலுக்கும் பள்ளையம் வெச்சி படப்பும் போட்டுக் கும்பிடுவோம். அதுக்குள்ள இருட்டாயிருந்திருக்கும்.

ஒரு எட்டு மணி வாக்குல அல்லாரும் வில்வமரத்தடிக்கு வந்திருவோம். பண்ணையத்துல வேலை பாக்குற சித்தாள் சின்னமுத்தி, பார்வதி, மாட்டுக்காரன் சின்னான், வேலையாளுக வேலன், கந்தன் அல்லாரும் அவங்கவங்க ஊட்டு ஆளுகளோட வந்திருவாங்க. குருவனும் அமுசாவும் தீப்பந்தம் கொண்டாந்திருவாங்க. ரெண்டு தீப்பந்தம் எரியுற வெளிச்சத்துல வில்வமரமே எரியுற மாதிரி இருக்கும். அல்லையில தேங்கா மட்டைகளை எரிச்சுட்டு தப்பட்டைப் பலகைகளை காய்ச்சிட்டே குளிர் காஞ்சிட்டும் இருப்பாங்க.

அய்யன் கைவாகுல பட்டி தயாரா இருக்கும். களிமண்ணும் மாட்டுச் சாணியும் கலந்து தெப்பக்குளம் கட்டியுட்டு இருப்பாரு. அதுல நெம்ப அழகா ஆவரம்பூவு, மொடக்கத்தான் பூவு, மாவிலை எல்லாத்தையும் குத்தியுட்டு, கார்த்திகை

விளக்குகளை அங்கங்க வெச்சிப் பத்த வெச்சிருப்பாரு. கட்டுன தெப்பக்குளம் பூராவும் செஞ்சேரிமலையிலயோ, திருமூர்த்தி மலையிலிருந்தோ கொண்டு வந்த தீர்த்தத்தை வுட்டு நெப்பியிருப்பாரு. குளத்துச் செவுத்துல கார்த்திகை விளக்கு எரியொ, குளத்துக்குள்ள இருக்குற வெங்கச்சாங்கல் சாமிக அப்படியே மின்னும்.

தெப்பக்குளத்தை ஒட்டி முன்னாடியே வெங்கச்சாங்கல்லுல சாமி வெச்சி, அதுக்கு சந்தனம், துண்ணூரு, குங்குமம் எல்லாம் வெச்சி உட்டிருப்பாரு அய்யன். அந்த சாமிக்கு முன்னாடிதா படையல் படைப்பாங்க.

அந்த படையல்ல, பண்ணையத்து ஆளுக அல்லார்த்துக்கும் மனசு நிறைஞ்சு, மனம் போல துணிமணிக வெச்சிருப்போம். ஒவ்வொரு துணிமணிகளுக்கும் மேல பொங்கப்பணம் ஆயிரம், ஐநூறுன்னு வெச்சிருப்போம். அந்த வருசம் வெளைஞ்ச வெளைச்சலைப் பொறுத்து, மூணு பொங்கல், ஆறு பொங்கல், பன்னென்டு பொங்கல்னு வெள்ளாமையப் பொறுத்து அது மாறும். கறந்த பாலைக் கொண்டாந்து பட்டிக்கு முன்னால வெச்சிறுவோம்.

அய்யன் செரின்னு சொன்னவுடனே, பண்ணையத்துல இருக்குற ஆளுக எல்லாரும் தப்பட்டை பலகை, கொட்டு மொழக்குன்னு வாத்தியம் போடுவாங்க. நாங்களும் ஒறம்பரைகளுமா சேந்து களத்து மேட்டுல கும்பிட்டு வந்து, பொங்கல் பொங்கி, தேங்கா பழம் உடைச்சி, பொரி கடலை எல்லாம் வெச்சி சாமி கும்புடுவோம்.

அய்யன் நாலு பேர்த்தை மின்னாடி வரச் சொல்லுவாரு. ஒருத்தர் கையில ஒரு தூக்குப் போசி நிறைய தண்ணி. ரெண்டாவது ஆளு கையிலயும் ஒரு தூக்குப் போசி நிறைய தண்ணி. மூனாவது ஆள் கையிலயும் ஒரு தூக்குப் போசி நிறைய தண்ணி. நாலாவது ஆள் கையில வாணாச்சட்டி நெறைய பொங்கலும் குடுத்துருவாரு.

இப்ப மூனு பேரும், பண்டங்கன்னுக கட்டி இருக்குற கட்டுத்தாறையச் சுத்தியும் போகோணும். மொத ஆள் கையிலிருக்குற மாவிலைய தூக்குப் போசியில உட்டு எடுத்து, “கை கழுவு பட்டியார் கை கழுவு”ன்னு சொல்லிட்டே போவாரு. அடுத்த ஆள் அதே மாதர, மாவிலைய போசிக்குள்ள உட்டு எடுத்து, “வாய் கழுவு பட்டியார் வாய் கழுவு”ன்னு சொல்லிட்டே போவாரு. அடுத்து வர்ற ஆளு, ”அரசன்னம் பட்டியார் அரசன்னம்”னு சொல்லுவாரு. நாலாவதா வர்ற ஆளு, ஒவ்வொரு பண்டங்கன்னுக்கும் ஒவ்வொரு கவளம் பொங்கச் சோத்தை ஊட்டியுடுவாரு. இப்படி ஒரு விசுக்காவோ,

மூனு விசுக்காவோ, இருக்குற பொங்கச் சோத்துக்கு ஏத்தா மாதர மாடு கன்னுகளுக்கு பொங்கச் சோத்தை ஊட்டியுடுவோம்.

கை, கால் மூஞ்சியெல்லாங் கழுவிட்டு வந்து அல்லாரும் கட்டியுட்டு இருக்குற பட்டி மின்னாடி, தீப்பந்தத்து வெளிச்சத்துல உக்காந்துக்குவோம். பண்ணையத்து ஆளுகெல்லாம் தண்ணி வாத்து எடுத்துக் குடுத்த புதுத்துணிகளை உடுத்திட்டு வருவாங்க. அவங்களும் எங்களுக்கு எதுத்தாப்பல உக்காந்துக்குவாங்க. அறுவடை எல்லாம் எப்படிப் போச்சு, அடுத்த வருசம் பண்ணையத்துக்கு ஆரெல்லாம் இருக்கப் போறாங்க, அவங்களுக்கு வருசம் அளக்குறது எவ்வளவு, கூலி எவ்வளவுன்னு பேசுவாங்க. நோம்பி கழிச்சிப் பேசிக்கலாமுங்கன்னும் சொல்லீருவாங்க. ஆனா, மாடு கன்னு பாத்துகுறவங்களை முன்னாடி வரச் சொல்லி குத்தம் குறையிருந்தா மன்னிச்சுக்கப்பா; நீ மனசு நிறைஞ்சாத்தான் பட்டி நெறையும்; எதுனாலும் சொல்லிப் போடுன்னு சொல்லிக் கேட்டு மனசு நிறையப் பண்ணுவாங்க.

அது முடிஞ்சதீமு, கொட்டு மொழக்கு ஆரம்பமாயிரும். முடக்கத்தான் கொடியில பெரிய வடம் செஞ்சி, தண்ணி நெறஞ்சி இருக்குற பட்டிக்கு முன்னாடி ரெண்டு அல்லையிலயும் ரெண்டு பேர் அந்த வடத்தை குறுக்க புடிச்சிட்டு நின்னுக்குவாங்க. இதை கன்னுமெரட்டுன்னு சொல்லிச் சொல்றது. கொட்டு மொழக்கோட, இருக்குற தூக்குப்போசி, இரும்புச்சட்டின்னு கையிக்கு கெடைக்குறதை எல்லாத்தையும் கையில வெச்சிட்டு அடீஅடீன்னு அடிச்சி கொட்டு மொழக்குவாங்க. அந்த கொட்டுமொழக்குக்கு நடுப்புல, பொம்பளையாளுக குலுவை போட, ஆம்பளை ஆளுக "கலகலகலகல"ன்னு மாட்டுக்கன்னை புடிச்சாந்து மிரட்டியுட்டு பட்டிய மிதிக்க வெச்சி அழிச்சுடுவாங்க. மாட்டுக்கன்னும் அந்த வாத்தியம் குலுவை சத்தத்துக்கு மிரண்டு போயி சங்குசங்குன்னு குதி போட்டுட்டு ஓடிப் போகும். ஒரே கொண்டாட்டமா இருக்கும்.

சித்த நேரங்கழிச்சு, வந்திருக்கவங்க அல்லார்த்துக்கும் பந்தி உடுவாங்க. மொதல் மரியாதை பண்ணையத்துல வேலை செய்யுற ஆளுகளுக்குத்தா. அவிகளை உக்கார வெச்சி, இலையில அரிசி மாவு, தினை மாவுப் பலகாரமெல்லாம் வெச்சிப் பந்தியுடுவாங்க. அப்புறம் ஒறம்பரைகெல்லாம் சேர்ந்து விருந்து உண்டு போட்டு ஊட்டுக்குப் போக மணி காலையில ரெண்டு மூனுன்னு ஆயிரும்.

வெடிஞ்சா, மூக்கரசு நோம்பி. பூநோம்பின்னும் சொல்லுவாங்க. வயசுப் பொண்ணுங்க பையங்கெல்லாம், ஊட்டுப் பலகாரத்தை கட்டுச்சோறா கட்டிகிட்டு ஆண்டியூர்

கரட்டுல இருக்குற வழுக்காம் பாறைக்குப் போவாங்க. அங்க இருக்குற வழுக்காம் பாறையில வழுக்கி விளையாடுறது, பன்னாங்கல் விளையாடுறது, கூட்டாஞ்சோறு திங்கறது, ஆலமரத்துல தூரி கட்டி விளையாடுறதுன்னு விதவிதமா பொழுதா வரைக்கும் விளையாடிட்டு வருவாங்க.

நாங்கெல்லாம் சோமவாரப்பட்டியில இருக்குற மாலகோயிலுக்குப் போவம். அங்க, ஆல் கொண்ட மால் திருக்கோயில்னு ஒன்னு இருக்கு. சுத்துபத்து நூத்திப்பத்து கிராமங்கள்ல இருந்தும் பண்ணையத்துக்காரங்க அங்க வருவாங்க. கூட்டம்னா கூட்டம், அப்படியொரு கூட்டமா இருக்கும். அல்லாரும் அவங்கவங்க மாட்டுப் பாலைக் கொண்டாந்து, ஆல் கொண்ட திருமாலுக்கு ஊத்திட்டுப் போவாங்க. அவங்கவங்க காளை மாட்டுக்கு மணி கட்டி, கொட்டுமொழக்கோட ஆட்டம் போட்டுட்டே கோயலுக்கு வந்து கோயல் திருவமுது ஊட்டு விட்டுக் கூட்டிட்டுப் போவாங்க. வண்டி கட்டிட்டு நெறைய சனம் வந்து போகும். கோயல் மைதானத்துல ஆட்டம் பாட்டம்னு வேடிக்கைக நெம்ப இருக்கும். அதுகளைப் பாக்குறதுக்கும் நெறைய சனம் வந்து போகும்.

அன்னக்கி சாயங்காலம், ஊர்க்கிணத்துல வெச்சி பூநோம்பி. ஊர்ப் பொம்பளைங்க எல்லாம் வந்து ஒன்னு கூடி கும்மியடிச்சிப் பாடுவாங்க. பாட்டுப் பாடிட்டே ஊர்வழியில, இட்டேரியில, கோயல் தோட்டம் துறவுன்னு நாலாபக்கமும் பாட்டுப் பாடி, கும்மியடிச்சி, முளைப்பாரி எடுத்திட்டு போவாங்க. ஊர்முச்சூடும் போயி ஆவரம்பூவு, துளசிச்செடி, பொன்னரளி, பூவரளின்னு எல்லாம் பொறிச்சிட்டு வந்து சாமிக்கு சாத்திட்டு இராவு முச்சூடும் பாட்டுப் படிச்சி, கும்மியடிச்சி, விளக்குமாவு எடுத்து திருவிழாவை விழாவாக் கொண்டாடுவாங்க. கொட்டு மொழக்கு, உரிமி மேளம், பம்பை மேளம், சிலம்பாட்டம், இறகாட்டம்னு அதுகளும் ஊருக்குள்ள நடக்கும்.

இப்படியான பூ நோம்பியில மனசு மசிஞ்சு காதல் மலர்றதும் உண்டு. அப்படியான காதல்ல மனசு மசிஞ்ச காத்தவராயன், அவங்க அம்மாவுக்குப் பாடுற பாட்டோட இந்த பொங்கல் பத்தின நம்ப பழமைய முடிச்சிக்கலாமுங்க மச்சே, சரியா? இந்த சொல்றன் கேட்டுகுங்க.

அங்கே கண்டேன் மெய்மறந்தேன்
அழகான மாலையவளை
கண்டு வந்த பூநோம்பிதொட்டு

கண்ணுறக்கம் இல்லையம்மா
படுத்தா உறக்கமில்ல
பாய் போட்டாத் தூக்கம் வருகுதில்லே
பாத்துவந்த வங்கணத்தியவளை
சேத்துக்கூட்டியார விடை கொடம்மா
வாழ்த்தி வரங்குடம்மா
நானும் போயவர்றேனம்மா
பாவை வந்தாப் போதுமம்மா!!”

மாமனும் மச்சானும் விடை பெற்றுக் கொள்கிற வேளையில் ஒரு சேரச் சொல்லிக் கொண்டார்கள், “பொங்கல் பொங்கோணும்! வெள்ளாமை வெளையோணும்! பட்டி பெருகோணும்!!”



**பழமைபேசி**
pazamaipesi@gmail.com

6.

# பொங்கலோ பொங்கல் !!!

--தமிழ்த்தேனீ.

போகித் திருநாள்:-

பழையன கழிதலும் புதியன புகுதலும் எனும் சொற்றொடருக்கு ஆதாரமான நன் நாள் பொங்கல் திருநாள் எனக்கு ஒவ்வொரு வருடமும் போகி பொங்கல் திருநாட்களில் நினைவுக்கு வருபவை நாம் உண்ணும் உணவில் பிரதான அங்கம் வகிக்கும் அரிசி, அதை விளைவிக்கும் உழவன், ஆகவேதான் பொங்கல் திருநாளை உழவர் திருநாளாக கொண்டாடுகிறோம். இதன் தொடர்ச்சியாக இங்கே ஒரு படத்தை இணைக்கிறேன். அதன் விளக்கமும் கூறுகிறேன்.



இந்த வாழை இலையில் தங்கமும் வைரமும் கலந்த நகைகள் பரிமாறப்பட்டு இருக்கின்றன. இந்தப் படத்தைப் பார்த்ததும் ஒருகதை ஞாபகத்துக்கு வருகிறது. ஒரு மன்னர் இருந்தார் அவர் உணவு அருந்திக் கொண்டிருக்கும் போது ஒரு மரியாதைக்குரிய புலவர் அங்கு வந்தார். அந்தப் புலவருக்கு எப்போது வேண்டுமானலும் அரசரிடம் வருவதற்கு உரிமை கொடுக்கப்பட்டு இருந்தது. அந்தப் புலவர் மன்னர் சாப்பிடும் வரை காத்திருந்தார், தன் இலையில் பறிமாறப்பட்ட அரிசி உணவை ருசித்து உண்ட மன்னர் தன் இலையிலிருந்து அரிசி உணவிலிருந்து கீழே

விழுந்த ஒரு பருக்கையை எடுத்து தன் இலையில் போட்டுக்கொண்டு சாப்பிடுவதைக் கவனித்த புலவர் மன்னா இந்த ராஜ்ஜியமே உன்னுடையது கீழே விழுந்த ஒரு பருக்கை உணவை மீண்டும் எடுத்துப் போட்டு சாப்பிடுகிறாயே ஏன் இவ்வளவு கஞ்சத்தனம் என்று கேட்டார்.

அதற்கு புன்னகைத்த மன்னர், அது இருக்கட்டும் நீரும் பசியாய் இருப்பீர் கைகால்களை சுத்தம் செய்து கொண்டு வாருங்கள் என்று கூறிவிட்டு, உணவு பறிமாறுபவனிடம் புலவருக்குஒரு தலைவாழை இலைபோட்டு அதில் என்னென்னெ பறிமாற வேண்டும் என்று கூறிவிட்டு வந்தார். அதேபோல் புலவருக்கு தலை வாழை இலைபோடப்பட்டது. புலவரும் ஆசையோடு பசியாற இலையின் முன் உட்கார்ந்தார். வரிசையாக தங்கப் பாத்திரங்களில் எடுத்துக் கொண்டு வந்து பறிமாறுபவர்கள் புலவருடைய இலையில் தங்கம், வைரம், கோமேதகம் , முத்து, பவழம், வைடூரியம் போன்ற நவரத்தினங்களைக் கொண்டு வந்து பரிமாறினர். மன்னர் இப்போது புலவரைப் பார்த்து சாப்பிடுங்கள் பசியாயிருப்பீர்கள் என்றார். கோபமுற்ற புலவர் "மன்னா என்ன என்னை கேலி செய்கிறாயா...? இதையெல்லாம் எப்படி உண்பது." என்றார். அதற்கு மன்னர் இப்போது புரிகிறதா? இவையெல்லாம் இருந்தாலும் அரிசியாக, அல்லது தானியமாக, மாற்றினால்தான் உண்ணமுடியும். அதனால்தான் ஒரு பருக்கையையும் வீணடிக்காமல் எடுத்துப் போட்டுக் கொண்டு தான் சாப்பிட்டதையும் உரைத்தார் மன்னர். புலவர் வெட்கித் தலை குனிந்தார்.

சிறு வயதில் என்னுடைய அக்கா திரு மாலதி அவர்கள் ஒரு பாட்டு எனக்கு சொல்லிக் கொடுத்தார்கள். அந்தப் பாட்டில் எத்துணை கருத்து இருக்கிறது அதை பாடிப் பார்த்தேன் மனதுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

குருவி குருவீ கொஞ்ஜம் நில்
கொத்திய நெல்லைக் கீழே வை
காட்டைத்திருத்தி அமைத்தாயோ
கழனி கட்டி வைத்தாயோ
மண்ணைக் கிளரிப் போட்டாயோ
மாட்டைக் கட்டி உழுதாயோ
விதையை நீதான் விதைத்தாயோ
நீரை நீதான் இறைத்தாயோ
ஏரைக் கட்டி உழுதாயோ
களையும் நீதான் எடுத்தாயோ

அறிவாள் கொண்டு அறுத்தாயோ
அறுத்துக் களத்தில் போட்டாயோ
அடித்துத் தூத்தி எடுத்தாயோ
அயோ பாவம் பசிக்கிறதா
இந்தா தருவேன் புசித்துடுவாய்

இந்தப் பாட்டில் "உழைக்காமல் எந்தப் பொருளும் கிடைக்காது ", உரிமைகொண்டாட முடியாது," " ஆனால் பசி என்று சொல்லுபவர்களுக்கு இரக்கம் காட்டவேண்டும்,"அதே போல் ஒரு நெல் மணியை உருவாக்க எத்துணை வேலைகள் செய்யவேண்டும் போன்ற மிக நல்ல கருத்துக்கள் மிக எளிய வார்த்தைகளில் விளக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு உழவரும் இத்துணை வேலைகளையும் செய்து தங்களுடைய உழைப்பை இட்டு வியர்வையை சிந்தி வேலை செய்து பருவ காலங்களுக்கு ஏற்ப பயிர் செய்து, இயற்கை சீற்றங்களை சமாளித்து பயிரை காத்து, அதன் மூலமாக வரும் தானியங்களை உணவுப் பொருட்களை நாம் எந்த உதவியும் செய்யாவிடினும் கருணையோடு நமக்களிக்கிறார்கள்.

நாம் உண்ணும் உணவை வீணடிக்காமல் உண்ணவேண்டும் என்று புரிகிறதா....? ஒவ்வொரு பருக்கை உணவும் பலருடைய உழைப்பினால் வரும் நெல்மணியிலிருந்து வருவதே அந்த உழவர்களுக்கு நாம் கைம்மாறாக என்ன கொடுக்கிறோம்? ஒரு நன்றியாவது சொல்ல வேண்டுமல்லவா? அதற்காகவும் அந்த உழவர்கள் தங்களுக்கு விவசாயம் செய்ய உதவும் , கலப்பை, ஏர், மாடுகள், இன்னும் பல துணைக்கருவிகளுக்கு நன்றி சொல்லும் திருவிழாவே பொங்கல் திருநாள். ஆகவே பொங்கல் திருநாளை உழவர் திருநாள் என்று சொல்லுதலே சாலச் சிறந்தது.

முதல் நாள் போகித்திருநாள், விடியற்காலையில் தூக்கம் கலையாத போதிலும் எழுந்து அந்தக் குளிரில் பழைய பொருட்களை போட்டு கொளுத்தி அந்த சூட்டில் குளிர் காய்ந்து, கையில் ஒரு மண்ணாலான மேலே தோல் போர்த்தப்பட்டு, ஒரு வட்ட வடிவ நிலா போன்ற அமைப்புள்ள தப்பட்டை என்னும் வாத்தியத்தில் சங்கீதம் தெரிந்தோ, தெரியாமலோ நம் இஷ்டத்துக்கு அதை அடித்து தாளம் போட்டு அதை எரியும் நெருப்பின் சூட்டின் வெப்பம் சற்றே படுமாறு செய்து, பிறகு அடித்தால் சத்தம் இன்னும் நன்றாக வரும் என்று சொல்லும் பெரிய வயதினர் சொல்லுவதைக் கேட்டு அவ்வாறே செய்து தட்டும் தாளமும், விடியற்காலை நேரத்துக்கே உண்டான மணமும், இனிமையும், சிறுவர்கள் கும்பலாக கூடி நின்று போடும் கும்மாளமும் நினைவிற்கு வருகிறது.

அப்படியே இந்த சூழலை ரசித்துக் கொண்டிருக்கும் போதே மெல்லமாக பொழுது விடிந்து கொண்டே வந்து சூரியனின் கதிர்கள் பட்டு பூமியின் இருட்டு கொஞ்சம் கொஞ்சமாக விலகும் அழகை ரசித்துக் கொண்டே சூரியன் அழகாக எழுந்து வரும் காட்சியை கண்ணாரக் கண்டு வியந்து, ஹும்ம்ம்ம்.. சொல்லிக்கொண்டே போகலாம். இயற்கையின் வர்ணஜாலம் இறைவனின் மாயக் கோலம் வியந்து ரசிக்கலாம். மறுநாள்தான் பொங்கல் திருநாள் பொங்கல் திருநாள், தமிழர் திருநாள் என்று நினைக்கும் பொழுதே, கரும்பின் சுவையும் நெய் மணக்கும் சர்க்கரைப் (வெல்லப்)பொங்கலின் மணமும், இனிய தின்பண்டங்களின் நினைவும், புத்தாடைகளும் மனதுக்கு இதமான புத்தாண்டு நினைவுகளும் நம்மைச் சந்தோஷப் படுத்தும்.

சூரியனுடைய சுற்று வட்டப் பாதையை இரண்டு விதமாக பிரித்திருக்கிறார்கள், ஒன்று ஆடி மாதம் முதற்கொண்டு ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி மாதங்கள் சூரியனுடைய சுற்று தெற்கு திசையாக கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சஞ்ஜரிக்கும் காலம். இதை தக்ஷிணாயணம் என்று கூறுவர்.

அதேபோல் தைமாதம் முதல்  மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி, ஆனிவரை சூரியனின் சுற்று வடக்கு திசையாக கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சஞ்ஜரிக்கும் காலம் உத்திராயணம் என்று சொல்வர். இப்படிப் பார்க்கும் போது ஆடி மாதக் காற்று, புரட்டாசி, ஆவணி, வெய்யிலின் தூசுகள், ஐப்பசியின் அடை மழை, கார்த்திகை, மார்கழியின் பனி இவைகளால் ஏற்படும் மாசுகள், குளிர் இவைகளைப் போக்கிக் கொள்ள அந்த ஆண்டு முழுவதும் உபயோகித்து பழையதாகிப் போன பொருட்களை கழித்துவிட்டுபுதியன வாங்குதல் அவசியமாகிறது.

அந்தப் பழைய பொருட்களை குப்பையாக சேர்க்காமல், அவைகளை எரித்துக் குளிர் காய்ந்து, அதே சமையம், மீண்டும் சுத்தமாக மாறி புது வாழ்வு துவங்க, வீட்டிலிருந்து வாசல் வரை கழுவி கிருமி நாசினி என்று சொல்லக் கூடிய பசுமாட்டின் சாணத்தைக்கொண்டு மெழுகி, அரிசி மாவினால் கோலமிட்டு அவைகளையும் எறும்பு போன்ற ஜீவராசிகளுக்கு உணவாக அந்த அரிசிமாவையும் ஆக்கி பழையன கழிதல் புதியன புகுதல் என்னும் ஆன்றோர் வாக்குக்கு ஏற்ப கொண்டாடும் திருவிழா தான் போகி என்று கொண்டாடப் படுகிறது.

பொங்கல் திருநாள் :-

பொங்கல் திருவிழா என்பது இந்தப் பிரபஞ்சத்திலிலுள்ள அனைத்து உயிர்களும் உணவைத்தான் ஆதாரமாக வைத்திருக்கின்றன, அப்படிப்பட்ட உணவுக்கு ஆதாரமான பயிர்களை உருவாக்குவது. இயற்கை அதாவது, பஞ்ச பூதங்கள், நிலம், நீர், நெருப்பு, ஆகாயம், வாயு, வளமான மண் என்று எடுத்துக் கொண்டால் அந்த மண்ணை வளமாக்க இயற்கையாகவே தங்கள் உணவுக்காக வளை தோண்டும் எலிகள் தங்கள் வளைகளில் கொண்டு வந்து வைக்கும் உணவுப் பொருட்களை உண்ண வரும் பூச்சிகள் மண் புழுக்கள், எறும்புகள், வண்டுகள், அத்தனையும் நாம் சொல்லாமலே மண்ணை உழுது சூரிய வெளிச்சம், நீர், காற்று, ஆகிய இயற்கை சக்திகளை ஊடுருவச் செய்கின்றன. அதாவது நமக்கு மறைமுகமாக உதவுகின்றன. மேலும், நமக்கு ஆதாரமான உணவுப் பொருட்களை உருவாக்குவதற்கு நமக்கு உதவும் காளை மாடுகள், பசு, எல்லாவற்றிற்கும் நாம் நன்றி சொல்லக் கடமைப் பட்டுள்ளோம்,வருடம் முழுவதும் நமக்கு உதவும் இவை அத்தனைக்கும் நாம் நன்றி சொல்லும் நாளே புத்தாண்டுப் பொங்கல்திரு நாள். பொங்கல் என்பது பண்டிகை அல்ல அது திருநாள்,ஆமாம் பண்டிகை என்பது ஒவ்வொரு மதத்தினரும் அவரவர் மதத்துக்கு ஏற்ப அவர்கள் தர்மத்துக்கு ஏற்ப கொண்டாடுவது, ஆனால் திருநாள் என்பது அனைத்து ஜீவராசிகளுக்கும் பொதுவான திருநாள், திருவிழா ஆகவே பொங்கல் பண்டிகை என்று சொல்வதை விட பொங்கல் திருநாள் என்றே சொல்லுவோம். உலகத்தில் அனைத்து மதத்தவரும், அனைத்து மொழியினரும் வேற்றுமை பாராது கொண்டாட வேண்டிய ஒரே திருநாள் பொங்கல் திருநாள். ஏனெனில், விவசாயி இல்லையெனில் உலகமேஇல்லை.

அப்படிப்பட்ட விவசாயி எல்லா நாட்டிலும், எல்லா மதத்திலும், எல்லா மொழியிலும் இருக்கிறான். ஆகவே பாரபட்ஷமின்றி விவசாயிக்கும், அவன் விவசாயம் செய்ய உதவும் அத்தனை இதர துணை உதவிகள் என்று அழைக்கப்படுகின்ற அத்துனை பேருக்கும் நன்றி சொல்லும் விதமாகவே பொங்கல் திருநாள் எந்த வேறுபாடுமின்றி ஒருமுகமாக அனைத்து ஜீவராசிகளுக்கும் நன்றி சொல்லும் விதமாக ஏற்படுத்தப் பட்டதுதான் பொங்கல் திருவிழா. அதனால்தான் நாம் முதலில் இயற்கை வழிபாடாக சூரியனுக்கு பொங்கல் வைத்து அவனுடைய கருணையினால் நாம் விளைவித்த அரிசி,மஞ்சள், பருப்பு,கரும்பு, அதன் விளைவாக ஏற்பட்ட வெல்லம், பசுக்களின் மூலமாக ஏற்பட்ட பால் நெய் போன்றவற்றையும் கலந்து பொங்கி அந்தப் பொங்கலை பஞ்ச பூதங்களுக்கும் அளித்து, மேலும் நமக்கு உதவியாக இருந்த சாதனங்களாகிய ஏர் ,கலப்பை ,போன்றவைகளுக்கும் , மாடுகளுக்கும் நன்றி

சொல்லும் விதமாக பொங்கல் திருவிழாவையும், மாட்டுப் பொங்கல் என்னும் திருவிழாவையும்  கொண்டாடுகிறோம்.

வருடம் முழுவதும் வயலில் உழைத்த விவசாயிகள் தாங்கள் விளைவித்த அத்துணைப் பொருட்களையும் வெகு நாட்களாக காணாமலிருந்த உறவுக்காரர்களையும் காணும் முகமாக காணும் பொங்கல் என்னும் திருவிழாவையும், அன்று தங்கள் மாடுகளை வண்டியில் பூட்டி அந்த வண்டிகளில் அனைத்து  சுற்றத்தாரும் உட்கார்ந்துகொண்டு, அடுத்து அடுத்து ஊர்களில் வசிக்கும் தங்கள் சுற்றத்தாரைக்  கண்டு மகிழும் திருவிழாவாக காணும் பொங்கல் திருவிழாவையும் கொண்டாடுகிறார்கள்.அதுவும் தவிர காணும் பொங்கலை கன்னுப் பொங்கல் என்று குழந்தைகள், கன்னிப் பெண்கள், திருமணமான பெண்கள், மற்றும் வயதானவர்கள் அனைவரும் குளித்து புத்தாடைகள் அணிந்து, மஞ்சள் என்னும் செடியின் இலைகளைப் பறித்து அவைகளில் அரிசி உணவினால் செய்யப்பட்ட பலவகை உணவுகளளயும் கரும்பு, மஞ்சள் போன்றவற்றையும் அந்த இலைகளில் படைத்து சூரியனுக்கும் நன்றி சொல்லிவிட்டு இயற்கையாக செடி மரம் போன்றவைகள் பரவி வளர, பயிர்கள் செழிக்க, உதவும் கிளி, புறா, காகம்,போன்ற பறவைகள், அணில், எறும்புகள் போன்றவைகளுக்கு அவைகளை உணவாகட்டுமென்று படைத்துவிட்டு அவைகள் உண்டு செல்லும் காட்சியைப் பார்த்து மகிழும், திருவிழாவாகவும் காணும் பொங்கல் என்னும் திருவிழா கன்னுப் பொங்கல் என்று கொண்டாடப்படுகிறது. ஆகவே, நாம் நம்மைப் படைத்த இறைவனுக்கும் நமக்கு உதவும் மற்ற இயற்கைக்கும் நன்றி சொல்லும் விதமாக உருவாக்கப்பட்ட நாட்களே போகி, பொங்கல், மாட்டுப் பொங்கல், காணும் பொங்கலெனும் கன்னுப் பொங்கல்ஆகியவை ஆகும். நன்றி சொல்வோம்- தை பிறந்தால் வழி பிறக்கும் தங்கமே தங்கம். ஆகவே, உணவுப் பொருளை வீணடிக்காமல், தண்ணீரை வீணடிக்காமல், காற்றை மாசுபடுத்தாமல், சுற்றுப் புற சூழலை மாசு படுத்தாமல், நம் நாட்டின் பொக்கிஷமான விவசாயத்தை பெருக்கும் வழிமுறைகள் கண்டு, நாட்டின் தரத்தை உயர்த்தும் வழிகள் கண்டு நாமும் நம் சுற்றமும் நோயில்லாத வாழ்வு பெற நமக்கு அள்ளிக் கொடுத்த வளங்களுக்காக நன்றி சொல்வோம்.



**தமிழ்த்தேனீ**

rkc1947@gmail.com

**7.**

# கட்டாக் காலிகளின் கொக்கரிப்பு மேய்ச்சல்

--மறவன்புலவு க. சச்சிதானந்தன்.



25.10.2015 ஞாயிற்றுக்கிழமை நண்பகல்
வயல் வரப்புகளில் 30-40 மாடுகள், ஒன்றன் பின் ஒன்றாக ஓடிக்கொண்டிருந்தன. யாரோ கலைத்துக் கொண்டிருந்தார்கள்.

24.09.2015 மறவன்புவில் மழை தூறத் தொடங்கிய நாள். காய்ந்த நிலம் ஈரமானது. ஆனாலும் உழவோ விதைக்கவோ முடியாத ஈரம்.

05.10.2015 வரை தூறலாக வழங்கிய வானம், அடுத்த சில நாள்கள் மழையாகப் பொழிந்து தந்தது. உழவு தொடங்கியது. நெல் விதைப்பும் தொடர்ந்தது.

16.10.2015 தொடக்கம் கால்நடைகளை (கோழி, ஆடு, மாடு) வயல்களுக்குள் விடவேண்டாம் என்ற ஒலிபெருக்கி அறிவித்தல் தெருவெங்கும் சந்து பொந்தெங்கும். அடுத்த நாள் வயல்களுள் ஆடுகள் மாடுகள் இல்லை. வீட்டருகு வயல்களில்

விதைத்த நெல்மணிகளைச் சில கோழிகள் கொறித்தன. அதுவும் அதற்கடுத்த நாள்களுள் கூடுகளுள் முடங்கின.

விட்டு விட்டுத் தொட்டுத் தொட்டுப் பெய்த மழை. உழவுச் சால்களில் நீர்தேங்குவதும் உடனே வற்றுவதுமாக. புழுக்கம் தரும் வெயிலிலும் காயாத வயல் தரை. முந்தி விதைத்த வயல்கள் பசுமைத் தரைகளாக. 20.10.2015 அன்று மறவன்புலவு பார்க்குமிடமெங்கும் நீக்கமறப் பசுமைத் தரையானது. மறவன்புலவு மட்டுமன்று. கிழக்கே தளங்களப்பு, மேற்கே கைதடி-நாவற்குளி, அப்பால் தச்சன்தோப்பு வரை. கொடும் வெயிலில் காய்ந்த வயல்களில் எரிந்த புல்களைக் கண்டு புகைந்த கண்களுக்குப் பசுமை விரித்துக் குளிர்வித்தனள் நிலம் என்னும் நல்லாள்.

முளைவிட்ட நெல் வயல்களில் மாடுகள். மேய்ந்து கொண்டிருந்தன 30-40 மாடுகள். என் வயிறு புகைந்தது.கைகள் மரத்தன. கால்கள் சோர்ந்தன. கண்கள் பனித்தன. நெஞ்சம் பதைத்தது.

நகைகள் அடைவில். உயர் வட்டியில் கடன். உந்தால் உழுவிக்க, கைகள் விசிற, விரல்வழி சிதறும் நெல்மணிகள் விதையாக, விதைத்த ஐந்தாம் நாள் உந்தால் உழுது மறுக்க, ஒவ்வொரு பரப்புக்கும் சில ஆயிரங்கள் செலவாக, கண்களைக் குளிர்வித்த பசுந்தரையே நெஞ்சில் பாலை வார்த்தது வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வாதாரம் தேடும் வேளாண் பெருமகனுக்கு.

அந்தப் பசுமையை, முளைவிட்ட நெல்மணிகளை, மிதித்து, உழக்கி, நுனியில் கடித்துக் குதறும் மாடுகளை என் செய்யலாம்? காலில் கயிறால் கட்டிப் பழக்கமற்ற மாடுகள். எனவே கட்டாக் காலிகள். எவருக்கும் சொந்தமில்லாத மாடுகள். கிட்டப் போனால் எவரையும் முட்டித் தள்ளும் மூர்க்க மாடுகள். கலைத்தால் வாலைக் கிளப்பி மிரட்டும் நாகுகள், நாம்பன்கள், பசுக்கள், எருதுகள்.

1999 மார்கழி தொடக்கம் 2009 ஆவணி வரை 10 ஆண்டுகள் உயர்பாதுகாப்பு வலையமாக மறவன்புலவை அரசுப் படையினர் மாற்ற, மக்கள் விட்டுச் சென்ற மாடுகள் பல்கிப் பெருகிக் கட்டாக் காலிகளாக, சில ஆண்டுகளுக்குமுன் பல பிடிபட, சில பிடிபடாமல் உலவுகின்றன அறுகு வெளி தொடக்கம் தச்சன்தோப்பு வரை நீண்ட கட்டற்ற வெளிகளில்.

மறவன்புலவில் 1250 ஏக்கர் நெற்செய்கை வயல்கள். தனங்களப்பில் 800-900 ஏக்கர் நெற்செய்கை. கைதடி நாவற்குளியில் 750-800 ஏக்கர் நெற்செய்கை. யாவும் இப்பொழுது இந்தக் கட்டாக் காலிகளின் கொக்கரிப்பு மேய்ச்சலில். காலையில் பசும் நெல்லை மேய்தல், பகலில் குளமொன்றில் நீரருந்துதல், இரவில் மேட்டு நிலத்தில் ஓய்வு. எவருக்கும் சொந்தமில்லாத எதுவும் நிலப்பரப்பிலும் நிலத்தின் கீழும் வானத்தில் இருந்தாலும் அவை அரசுக்குச் சொந்தமல்லவா? இந்தக் கட்டாக் காலிகளும் அரசுக்குச் சொந்தமானவையே.

உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டும், நாடு உணவு உற்பத்தியில் தன்னிறைவு காணவேண்டும், அதற்காகக் கமக்காரரை ஊக்குவிக்கவேண்டும். மானிய விலையில் உரம், விதைநெல், கடன் என்பன வழங்கவேண்டும் என்ற கொள்கை அரசுக்கு. அந்தக் கொள்கையை முன்னெடுத்துச் செல்லும் அரசே விதைத்து முளைவிட்ட வயலில் கட்டாக் காலி மாடுகளை மேயவிட்டால்?

இஃது எங்கள் பணியல்ல, பிரதேசச் செயலகத்திடம் முறையிடுக என்றார் சாவகச்சேரிக் காவல்நிலையப் பொறுப்பாளர். கட்டாக்காலி மாடுகள் பிரதேச சபையின் பொறுப்பில் வருவன. நெல் விதைத்தபின் வருவன யாவுக்கும் கமநல சேவைத் திணைக்களமே பொறுப்பு என்றார் பிரதேசச் செயலர். நாங்கள் என்ன செய்யமுடியும் என்றார் பிரதேச சபைப் பொறுப்பாளர். பொறுத்திருங்கள் ஆவன செய்கிறேன் என்றார் கமநலசேவைத் திணைக்களத் துணை ஆணையர். தளங்களப்புக் கமக்காரர் அமைப்புத் தலைவரும் மறவன்புலவுக் கமக்காரர் அமைப்புத் தலைவரும் (ஒலிபெருக்கியில் அறிவித்தவர்) ஆற்றாமையால் கைவிரித்தனர். இன்றே கடிதம் கொடுக்கிறேன் என்றார் அரசின் நிலதாரி.

20.10.2015இல் கட்டாக் காலி மாடுகளை என் கண்கள் கண்டது முதலாக என் முயற்சிகளுக்குக் கிடைத்த விடைகள் இவை. நான் கடிதங்கள் எழுதினேன். இன்று வரை தோராயமாக 50 ஏக்கர் நெல்வயல்களை அரசின் கட்டாக் காலி மாடுகள் மேய்ந்து அழித்தன. தடுக்க எவரும் முன்வரவில்லை. கண்டால் கலைக்கும் சில வேளாண் பெருமக்களைத் தவிர. இன்று 25.10.2015வரை மாடுகள் வயல்களுள் முளைவிட்ட நெல்லை மேய்கின்றன.

அரச அலுவலர்களுக்கு மாதம் முடிய வங்கியில் சம்பளத் தொகை. ஓடித்திரிய மகிழுந்து. அழைக்கத் தொலைப்பேசி. பணிக்குக் குளுரூட்டிய அறைகள். கூட்டங்களுக்குப் போயுள்ளார், களத்துக்குப் போயுள்ளார் மேல்நிலை அலுவலர் என்ற

செய்தி தரும் கீழ்நிலை அலுவலர். யாவும் குடிமகன் தரும் ஊழியமும் வசதிகளும். அவர்கள் ஊழியம் பெற்று வசதியுடன் வாழ்கிறார்கள். உணவு உற்பத்திக்கு ஓயாது உழைக்கும் கடன் மிஞ்சிய வேளாண் பெருமகன் தன்னை மாய்ப்பதற்கு முயல்வதைத் தவிர வேறு வழி?



**மறவன்புலவு க.சச்சிதானந்தன்**

tamilnool@gmail.com

8.

# ஆறுகள் எழுதிய ஆற்றுப்படை

-- கவிஞர் ருத்ரா.



கூவம் என்றாய்.
"நடந்தாய் வாழி கூவம்"
என்று பாடாவிட்டாலும்
படர்ந்து ஓடும் என் இடம்
மறைத்தாய்.
மலஜலம் கழித்த
முகவரி தந்தாய்.
கட் அவுட் வைத்து
கனவுகள் வளர்த்தும்
உன் கனலின் தாகம்
அவிந்து கிடந்தாய்.

நீர் எனும் உயிரின்
அடையாளம் அழிந்த
அடையாறு அங்கே
சாக்கடைச்சங்கமம்.

முகம் பார்த்து பூரித்த
கட்டிடக்காடுகள்
பிம்பம் காட்டியதோ
சமுதாய அழிவின் விளிம்பில்
நிகழ்ந்து கொண்டிருக்கும்
கருச்சிதைவு.
ஆசை பணமாகி
பேராசையின் வேதாளமாய்
தெறிக்க வைத்த
அலங்கோலம்
அழகு காட்டியதே நம்
பொருளாதாரம்.
வானம் "சிப்பைக்கிழித்து"
ஊழி பிழிந்து
ஊர்த்துவ தாண்டவம்
ஆடுகின்றது.
ஆறுகள் தன் ஆறுகள் கண்டன.
ஏரிகள் தன் கரைகள் தேட
ஏறி மிதித்தன.
வெள்ளம் வெள்ளம் வெள்ளம்
எங்கும் வெள்ளம்.
வங்காள விரிகுடா
கேட்டது பலிகடா.
காற்றழுத்தத் தாழ்வு மண்டலம்
தாழ்ந்து தவழ்ந்து
காதில் ஒலித்தது கேட்டிலையோ?
இயற்கையோடு கை குலுக்கு?
இயற்கை கை முறிக்கும்
உன் பேராசையின்
மொழிபெயர்ப்பே
இங்கு பேரிடர் ஆனது.
இங்கு பேரழிவு ஆனது.
எத்தனை வெள்ளம் வந்தாலும்
அதையும் மூழ்கடிக்க

உன்னிடம் உள்ளது அறிவாயோ?
அதுவே இங்கு மானிடம் ஆனது.
குப்பைகள் மூடி
அழிவு உன்னை பயமுறுத்திய போதும்
நிவாரணங்கள் குவியும்..
மனிதம் எனும்
நம்பிக்கை இமயங்கள்
எங்கும் முளைக்கும்.
அச்சமில்லை அச்சமில்லை
அந்த
உச்சி எல்லாம்
உருகி உருகி வழிந்தாலும்
அச்சமில்லை அச்சமில்லை
அச்சம் என்பதில்லையே!
பாடம் இதனைக்கற்று விட
உன் பள்ளிக்கூடங்கள்
கொஞ்சம் மூடிக்கிடந்தாலும்
கவலையில்லை.
புதிய சிலேட்டில்
புதிதாய் "அகர முதல.."
எழுதித் தொடங்கு.
அ..என்று
அணில் விளையாட்டு போதும்.
அ..என்பது
இன்றும் என்றும்
இனி
"அறச்சீற்றம்" மட்டுமே!



**கவிஞர் ருத்ரா இ. பரமசிவன்**
ruthraasivan@gmail.com

9.

# மாமழையும் மாந்தர் பிழையும்!

- மேகலா இராமமூர்த்தி

தமிழகத்தின் நீராதாரத்திற்கு அடிப்படையான வடகிழக்குப் பருவமழை (Northeast monsoon) இவ்வாண்டு பொய்யாமல் பெய்துள்ளது. வந்த ஓரிரு நாட்களிலேயே விரைவாய் விடைபெற்றுச் சென்றுவிடும் கடந்த ஆண்டுகளின் மழைபோலல்லாது, இவ்வருடத்திய மழை மிக்க வாஞ்சையோடு(!) தமிழகத்தில் ஓரிரு வாரங்கள் தங்கிப் பெய்திருக்கின்றது.

விளைவு…? சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், புதுவை, சிதம்பரம் உள்ளிட்ட தமிழகத்தின் பெரும்பாலான வட மாவட்டங்கள் தண்ணீரில் மிதக்கின்றன; மக்களோ கண்ணீரில் மிதக்கின்றனர். 'அமிழ்தம்' என்று வள்ளுவரால் வர்ணிக்கப்பட்ட பெருமைமிகு மழைக்குச் சிலநாட்கள்கூடத் தாக்குப்பிடிக்க இயலாமல் தடுமாறும் தமிழகத்தின் அவலநிலையை என்னென்பது?

மக்களின் அடிப்படைத் தேவைகளில் முதன்மையான நீரைச் சரியான முறையில் தேக்கிவைப்பதும், அதனைப் பாதுகாப்பதும் அரசின் தலையாயக் கடனாகும். இதற்காக இன்றைய ஆட்சியாளர்கள் ஒன்றும் கரிகாற்சோழனைப்போல் புதிதாய்க் 'குளம்தொட்டு வளம்பெருக்க' வேண்டியதில்லை. ஏற்கனவே வெட்டப்பட்டிருக்கும் ஏரிகளையும், ஆறுகளையும், குளங்களையும் ஒழுங்காய்த் தூர்வாரிப் பராமரித்திருந்தாலே போதும். அவற்றின் நீர்க்கொள்ளளவு அதிகரித்திருக்கும்; கனமழையின் தாக்கத்தால் அவை உடைத்துக்கொள்ளாமல் இருந்திருக்கும். அரசாங்கம் இத்தகைய செயல்களில் போதிய கவனம் செலுத்தியதாய்த் தெரியவில்லை.

சங்கடமான இச்சூழலில், நம் பண்டை மன்னர்களைக் குறித்துப் 'பழம்பெருமை' பேசாதிருக்க முடியவில்லை. அவர்கள் எதில் திறன்வாய்ந்தவர்களோ இல்லையோ நீர்நிலைகளைத் தேக்கிவைப்பதிலும், நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்குவதிலும் திறன்வாய்ந்தவர்களாகவே திகழ்ந்திருக்கின்றனர்.

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனுக்கு, அணைகளைக் கட்டிவைத்து நீரைத் தேக்கிவைக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தவந்த குடபுலவியனார் எனும் புலவர்பெருந்தகை,

”போரிலே பெருவிருப்பமுடைய செழியனே! நீ மறுமை இன்பத்தை நுகர விரும்பினாலும்சரி…அல்லது…இந்நிலவுலகிலேயே நிலைத்த புகழைப் பெற விரும்பினாலும் சரி…நீ செய்யவேண்டியது என்ன தெரியுமா?

நீர்நிலைகளிலெல்லாம் நீண்ட கரையெடுத்து, அந்நீரைத் தேக்கி வைப்பாயாக! அப்போதுதான் உன்னுடைய புகழ், காலத்தை வென்று நின்றுவாழும்!” என்கின்றார். ‘Conservation of water resources’ என்று இப்போது நாம் பேசிக்கொண்டிருக்கிறோமே, இதைத்தான் ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பே இப்புலவர் பெருமான், பாண்டிய நெடுஞ்செழியனிடம் எடுத்துரைக்கின்றார்.

”… வயவேந்தே
செல்லு முலகத்துச் செல்வம் வேண்டினும்
ஞாலங் காவலர் தோள்வலி முருக்கி
ஒருநீ யாகல் வேண்டினுஞ் சிறந்த
நல்லிசை நிறுத்தல் வேண்டினு மற்றதன்
தகுதி கேளினி மிகுதி யாள
நீரின் றமையா யாக்கைக் கெல்லாம்
உண்டி கொடுத்தோ ருயிர்கொடுத் தோரே
[…]
அடுபோர்ச் செழிய இகழாது வல்லே
நிலனெளி மருங்கின் நீர்நிலை பெருகத்
தட்டோ ரம்ம இவண்தட் டோரே
தள்ளா தோரிவண் தள்ளா தோரே.” (புறம் - 18)

”தொழில்நுட்பத்தில் வல்லவர்கள் யாம்” என்று மார்தட்டிக்கொள்ளும் மேலைநாட்டாரும்கூட நம்முடைய நீர்ப்பாசன வசதிகளைகளைக் கண்டு பிரமித்துநின்ற காலமுண்டு! அவையெல்லாம் பொய்யாய்ப் பழங்கதையாய்க் கனவாய் மெல்லப் போய்விட்டன இன்று!

சென்னை மாநகராட்சியில் மட்டும் 124 ஏரிகள், 50 (கோயில்களைச் சார்ந்த) திருக்குளங்கள் இருந்தன என்கின்றது சென்னையில் இயங்கிவரும் சி.பி.ராமசாமி ஐயர் சூழலியல் கல்விமையம் (C.P.Ramaswami Aiyar Environmental Educational Center - C.P.R.EEC). 'இறைபக்தி'யில் இணையற்ற நம்மக்கள் பிளாஸ்டிக் பைகளையும், இன்னபிற குப்பைகளையும் வீசி அந்தத் 'திருக்குளங்களை'யெல்லாம் தெருக்குளங்களைவிட மோசமான நிலைக்குக் கொண்டுவந்துவிட்டனர். அவற்றில் பல, அழுக்கான நீரோடு துர்நாற்றம் வீசுகின்றன! மேலும் சில குப்பைமேடுகளாய்க் காட்சிதருகின்றன!

ஏரிகள் என்னவாயின? அவற்றில் பல பராமரிப்பின்றித் தூர்ந்துபோயின. தூர்ந்துபோன அந்த ஏரிகளிலும், நீரற்றுக் காய்ந்துபோன குளங்களிலும் அடுக்குமாடிக் குடியிருப்புக்கள் புதிது புதிதாய் முளைத்தவண்ணமிருக்கின்றன! இக்கட்டுமானங்களுக்காக, வறண்டுபோன ஆறுகளிலிருந்து லாரி லாரியாய் மணல் கொள்ளையடிக்கப்பட்டு வருகின்றது. என்ன கொடுமை இது!

'வட மாவட்டங்களில் கனமழை தொடர்ந்து பெய்யும்' என்று வானிலை ஆய்வுமையம் எச்சரிக்கை செய்திருந்தும், மக்களின் உயிர் மற்றும் உடைமைகளுக்கு எத்தகைய பாதுகாப்பு நடவடிக்கையையும் மேற்கொள்ளாத அரசாங்கத்தின் அலட்சியப்போக்கு வருந்தத்தக்கது.

பொதுமக்களிடமும் பிழையில்லாமல் இல்லை. மனிதவளம் மிகுந்த நம் தமிழகத்தில், மக்கள் நினைத்திருந்தால், எதற்கெடுத்தாலும் அரசைச் சார்ந்திராது, மழைநீர்ச் சேகரிப்பு, குளங்கள், ஏரிகள், ஆறுகள் முதலிய நீர்நிலைகளைத் தூர்வாருதல், நகரைத் தூய்மைசெய்தல் போன்ற எத்தனையோ பயன்மிகு பணிகளில் தாமே ஈடுபட்டுத் தாம்வாழும் பகுதியைச் சிறப்பாய்ப் பேணியிருக்கலாம். ஏனோ நம் மக்கள் இவற்றிலெல்லாம் ஆர்வம் காட்டுவதில்லை.

நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும்! 'கண்கெட்ட பின்பு சூரியவணக்கம் செய்வதே தமிழர் வழக்கம்' எனும் நிலை மாறட்டும்! இனியேனும் மக்கள் விழிப்போடிருந்து மழைவளத்தையும், சுற்றுப்புறத் தூய்மையையும் முறையாய்ப் பாதுகாக்க வேண்டும். அரசாங்கமும், (வாக்கு வங்கியைக் கைப்பற்றுவதற்காக) 'இலவசங்களை' அள்ளித்தந்து மக்களைச் சோம்பேறிகளாக்காமல், சமூக நற்பணிகளில் அவர்கள் முனைப்புடன் ஈடுபட ஊக்கமும், உற்சாகமும் அளிக்கவேண்டும்; ஏன்…சிறப்பாய்ப் பணியாற்றுவோருக்குப் பாராட்டும் பதக்கமும்கூட வழங்கி அரசு கவுரவிக்கலாம்!

இனிய தமிழ்மக்களே!

”வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்” எனும் வள்ளுவரின் வாய்மொழியை உள்ளுவோம்!
வாழ்வைச் செம்மையாக்க முற்படுவோம்!

நன்றி: வல்லமை - http://www.vallamai.com/?p=64418



**மேகலா இராமமூர்த்தி**
megala.ramamourty@gmail.com

10.

# நீர் நிலைகளை மீட்டெடுக்கும் முயற்சியில் பயங்கர வன்முறையில் மழை!

--கீழை ஜஹாங்கீர் அரூஸி.

ஒரு காலத்தில் ஏரி,குளம்,கண்மாய் என்று தனது நீர் நிலைகளை கட்டமைத்து ஒவ்வொரு வருடமும் தனது உழைப்பின் பயனை இத்தகைய நீர் நிலைகளில் சேமித்து வைத்து கோடை காலத்திலும் மக்களுக்கு உதவிய தண்ணீர் கொடையாளியான மழை இன்று உக்கிர கோபத்தில் கொந்தளித்து வருகிறது.

அதன் ஒரு பகுதியாக சென்னை வேளச்சேரி பகுதி முழுவதையும் தனது உக்கிர போராட்டத்தால் வெள்ளப்பகுதியாக்கி அங்குள்ள மக்களை மிரட்டி வருகிறது மழை.அந்த மக்கள் தான் நீர் நிலைப்பகுதிகளில் வீடு,கடைகள் போன்ற கட்டிடங்கள் கட்டி மழை நீர் ஒதுங்க முடியாத அவலநிலையை உருவாக்கியுள்ளனர்.

தமிழகம் முழுவதும் எத்தனையோ ஏரி,கண்மாய்,குளங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு மக்களின் சுயநல கட்டிடங்கள் உருவாக்கப்பட்ட பின்னர் மழைநீர் ஒதுங்க இடம் இல்லாவிட்டால் மழை நீர் வேறு எங்கு போகும்?



வேறு வழியில்லாமல் குடியிருப்பு பகுதிக்குள் அதாவது மழை நீர் தங்கும் பகுதியில் கட்டப்பட்ட வீடுகளுக்குள் தான் மழை நீர் தங்கும்.

அதன் செய்திகள் தான் தற்போதைய ஊடகங்களில் பெரிதாக பேசப்பட்டு வருகின்றன.

தான் ஓய்வெடுக்கும் நீர் நிலைப்பகுதிகளை கபளீகரம் செய்து விட்ட மனிதர்களின் மீதான கோபத்தில் இதுவரை 113 பேரை தமிழகத்தில் கொன்று விட்டது மழை.

இன்னும் எத்தனை பேரை வேண்டுமானாலும் கொல்லுவேன் என்றும் கொக்கரித்து வருகிறது.இந்த மழையின் வன்முறையை கட்டுப்படுத்த முடியாமல் விழி பிதுங்கி நிற்கிறது அரசு இயந்திரங்கள். தனது முழு ஆளுமையை கொண்டு மழையின் வன்முறையிலிருந்து மக்களை ஓரளவு காப்பாற்றி விடலாம் என நினைக்கும் அரசு அடுத்த ஆண்டு மழையின் தாக்குதலை எப்படி எதிர் கொள்ள போகிறது?

மழையின் கோரப்பிடியிலிருந்து மக்களை முழுமையாகவும் நிரந்தரமாகவும் பாதுகாக்க வேண்டுமென்று அரசு இயந்திரங்கள் நினைக்குமானால்...உடனடியாக ஆக்கிரமிப்பில் உள்ள அனைத்து ஏரி,கண்மாய்,குளங்களை கண்டெடுத்து அவைகளை கையகப்படுத்த வேண்டும்.

அவ்வாறு கையப்படுத்தும் நீர் நிலைப்பகுதிகளை தூர் வாரி,ஆழப்படுத்தி மழை நீர் செல்வதற்கான வழிகளையும் சீர்படுத்தி வைத்தால்...அடுத்த ஆண்டின் மழை மக்களுக்கு எவ்வித இடையூறும் செய்யாமல் தனது இருப்பிடம் சென்று அமைதியாய் உறங்கும். மக்களும் நிம்மதியாய் உறங்குவர்.இதை சிந்திக்க வேண்டியது அரசு மட்டுமல்ல,பொதுமக்களும் தான்.

நன்றி: முதுகுளத்தூர் டாட் காம்
http://mudukulathur.com/?p=38028



**கீழை ஜஹாங்கீர் அரூஸி**

jahangeerh328@gmail.com

11.

# எல்லீஸ் சத்திரம் அணை

--கோ.செங்குட்டுவன்.

எல்லீஸ் சத்திரம்...

விழுப்புரத்தின் மேற்கே இருக்கக் கூடிய ஒரு பகுதியின் பெயர். விழுப்புரத்தில் இருந்து இந்தப் பகுதிக்குப் போகும் சாலைக்கும், எல்லீஸ் சத்திரம் சாலை என்றே பெயர். இதன் பெயருக்கும் புகழுக்கும் காரணமாக அமைந்திருப்பது இங்குள்ள அணைக்கட்டு. தமிழ் நாட்டில், தென்பெண்ணையாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள 6ஆவது அணைக் கட்டு, எல்லீஸ் சத்திரம் அணைக்கட்டாகும். முதல் 5 அனியாளம், கிருஷ்ணகிரி, நடுங்கல், சாத்தனூர், திருக்கோவலூர் ஆகியவை யாகும். 7ஆவதாக அமைந்துள்ளது, புதுவை மாநிலம் அருகே உள்ள சொர்ணாவூர் அணைக்கட்டு.

எல்லீஸ் சத்திரம் அணைக்கட்டு 1949இல் தொடங்கப்பட்டு 1950இல் கட்டி முடிக்கப் பெற்றது. 1967இல் விரிவாக்கம் செய்யப்பட்டது. வினாடிக்கு 2இலட்சத்து 28ஆயிரம் கனஅடி நீர் வெளியேற்றும் வகையில் இந்த அணை அமைக்கப்பட்டுள்ளது. இதன் நீர்ப்பிடிப்புப் பகுதி 12ஆயிரத்து 481 சதுர கி.மீ. ஆகும். எல்லீஸ் சத்திரம் அணைக்கட்டின் மேல் 22ஆவது கி.மீ.இல் திருக்கோவலூர் அணைக்கட்டும், கீழே 31ஆவது கி.மீ.இல் சொர்ணாவூர் அணைக்கட்டும் அமைந்துள் ளது குறிப்பிடத்தக்கது.



எல்லீஸ் சத்திரம் அணைக்கட்டின் வலதுபுறமுள்ள எரளூர் வாய்க்கால் மூலம் பேரங்கியூர், அவியனூர், பைத்தாம்பாடி, அழகுபெருமாள் குப்பம் ஆகிய ஏரிகளுக்கும், ரெட்டி வாய்க்கால் மூலம் சாத்தனூர், மேலமங்கலம், இருவேல்பட்டு, காரப்பட்டு, மணம்தவிழ்ந்த புத்தூர், ஓரையூர், சேமக்கோட்டை ஆகிய ஏரிகளுக்கும், இடது புறமுள்ள ஆழங்கால் வாய்க்கால் மூலம் சாலாமேடு, சாலமடை, கொளத்தூர், பானாம்பட்டு, ஆனாங்கூர், அகரம் சித்தேரி, ஓட்டேரி பாளையம், சிறுவந்தாடு, வளவனூர் ஏரிகளுக்கும், கண்டம்பாக்கம் வாய்க்கால் மூலம் கண்டமானடி, கண்டம் பாக்கம், வழுதரெட்டி ஆகிய ஏரிகளுக்கும் தண்ணீர் சென்றடைகிறது.




எல்லீஸ் சத்திரம் அணைக்கட்டுக்கு அருகில் நீரேற்று நிலையம் அமைக்கப்பட்டு, அங்கிருந்து விழுப்புரம் நகருக்குத் தண்ணீர் எடுத்து வரப்படுகிறது.

1968இல் இதற்கு அடிகோலிட்டவர், அப்போதைய விழுப்புரம் நகரமன்றத் தலைவராக இருந்த டாக்டர் தியாகராஜன் என்பது குறிப்பிடத்தக்கது. பெண்ணையாற்றின் தண்ணீரைக் குடித்து வளர்ந்தவர்கள் என்று, இன்றும் எங்களால் பெருமையாகச் சொல்லிக் கொள்ள முடிகிறது. எல்லீஸ் சத்திரம் அணைக்கட்டு, விழுப்புரம் சுற்றுப்புறங்களில் உள்ளவர்களுக்கு, சின்னச் சுற்றலாத்தலமாக விளங்குகிறது. குறிப்பாக காதலர்க்கு!

கடந்த சில வாரங்களாகப் பெய்துவந்த தொடர் மழை, சாத்தனூர் அணையில் இருந்து தண்ணீர் திறப்பு ஆகியவற்றால் நிரம்பி வழிகிறது எல்லீஸ் சத்திரம் அணை.

நீங்கள் அருகிலிருப்பவர் என்றால் ஒரு நடை போய்விட்டு வரலாம், குடும்பத்தோடு..!



**கோ.செங்குட்டுவன்**

ko.senguttuvan@gmail.com

12.

# மறைந்து போன மயிலாப்பூர் ஏரி...

- கோ.செங்குட்டுவன்.

சென்னையின் பாரிமுனையில் இருந்தோ மற்ற இடங்களில் இருந்தோ பேருந்துகளில் மயிலாப்பூர் செல்பவர்கள் "மயிலாப்பூர் டேங்க்" என்று டிக்கெட் எடுப்பதைப் பார்த்திருக்கிறேன்.

கபாலிசுவரர் கோயில் குளத்தின் அருகில் உள்ள நிறுத்தம் இப்படி வழங்கப்படுகிறது. உண்மையில், மயிலாப்பூர் டேங்க், "ஏரி" ஒன்றிருந்தது. அது இருந்த இடம், தேனாம்பேட்டை.

இதுபற்றி தமிழ்த் தென்றல் திரு.வி.க. இப்படிச் சொல்வார்:
"இராயப்பேட்டை, தேனாம்பேட்டை, ஆழ்வார்பேட்டை, மயிலாப்பூர் முதலிய ஊர்கள் ஒரு சிறு கோட்டமெனத் திகழ்ந்தன. இவைகளின் பேரூர் மயிலாப்பூர். இவ்வூர்களின் ஒருமைப்பாட்டுக்கு உயிர் நாடியாயிருந்தது ஒரு சிற்றேரி. அதன் இடம் தேனாம் பேட்டை. ஆனால் அது மயிலாப்பூர் ஏரி என்றே வழங்கப்பட்டது. அவ்வேரி மயிலைக் கோட்டத்தை ஓம்பியது."

வன்னியர் தேனாம்பேட்டைக்கும் தியாகராயநகருக்கும் இடையேயுள்ள ஆலமர்ந்தாள் எனப்படும் காளி கோயில் குறித்து ஆய்வறிஞர் மயிலை சீனி.வேங்கடசாமி மிகவும் ஆய்வு செய்தார். அவரது ஆய்வின் முடிவு, ஆலமர்ந்தாள் என்பது ஆலமரத்தடியின் அமர்ந்தவள் என்பதல்ல, ஆலின் (நீரின்) கரையின் அமர்ந்தவள் என்பதாக இருந்தது.

இதற்குக் காரணம், அந்தக் கோயில் மயிலாப்பூர் ஏரிக்கரையின் மீது அமைந்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஏரியின் கரைகளில் பலமுறை மயிலையார் நடந்திருக்கிறார். "என்னுடைய வாழ்க்கையிலே நான் கண்ணாரக் கண்ட மயிலாப்பூர் ஏரி. மயிலாப்பூரைச் சேர்ந்த நிலபுலங்களுக்கு நீர்ப் பாய்ச்சிய மயிலாப்பூர் ஏரி" என அவர் சிலாகித்துச் சொல்கிறார்.

ஆம். சென்னை நகரின் பழைய வரைபடங்களில் இந்த ஏரியின் ஒரு பகுதி "லாங் டேங்க் (LONG TANK)" என்றும் இன்னொருப் பகுதி "நுங்கம்பாக்கம் ஏரி" என்றும் குறிப்பிடப்படுகிறது.

இதன் அமைப்பை "மதராசபட்டினம்" நூலாசிரியர் கே.ஆர்.நரசய்யா பின்வருமாறு விவரிப்பார்:
"இந்தப் பெரிய, நீள ஏரியின் வடக்கில் நுங்கம்பாக்கமும், தெற்கில் சைதாப்பேட்டை யும், கிழக்கில் தேனாம்பேட்டையும், மேற்கில் செங்கல்பட்டு ஜில்லாவின் ஒரு பகுதியும் இருந்தன. இந்த ஏரி ஒரு அரை பிறை வடிவைக் கொண்டதாய் இருந்தது. இதன் வடமேற்குப் பகுதி நுங்கம்பாக்கம் என்று அழைக்கப்பட்டது. மவுண்ட் ரோடு இதனையொட்டி வளைந்து சைதாப்பேட்டையை அடைந்தது."

1920லும் அதற்குப் பின்னும் வெளியான சென்னையின் வரைபடங்களில், லாங் டேங்க் என்றழைக்கப்பட்ட மயிலாப்பூர் ஏரி இடம்பெற்றிருந்தது.

"பின்னர் அது மறைந்தது. மயிலைக் கோட்டத்தின் கட்டுங்குலைந்தது" என வருத்தப் படுகிறார் திரு.வி.க. "என் வாழ்க்கைக் காலத்திலேயே மாடமாளிகைகள் நிறைந்து மக்கள் வாழும் நகரமாக மாறிப்போனதைக் கண்டேன்" என்கிறார் மயிலையார்.

என்ன நடந்தது?
நகரத்தின் வளர்ச்சி எனும் பெயரில் மயிலாப்பூர் ஏரி மறைக்கப்பட்டது.


இன்று, சென்னை வணிகத்தின் இதயமான பிரம்மாண்டமான நகர் அந்தப் பரந்த ஏரியின் மீது விளைந்து, வளர்ந்து, செழித்து நிற்கிறது!

ஆமாம். இன்றைய தியாகராய நகர்தான் அன்றைய மயிலாப்பூர் ஏரி.

"நீரின்றி அமையாது உலகு" என எழுதியதோடு மட்டுமல்லாமல், மழை நீரின் போக்கினையும், இவற்றைக் கட்டுப்படுத்தும் நீர் மேலாண்மைக் குறித்தும் நன்கு அறிந்தவர்கள் தமிழர்கள்.

ஆறுகளையும் ஏரிகளையும் குளங்களையும் வெட்டினார்கள். வெட்டியதோடு நிற்காமல், "இதனைக் காப்பவர் அடி தன் முடி மேலன" என பணிவுடன் கேட்டுக் கொண்டனர்.

அந்த மூத்தோர்ச் சொல் மதிக்கப்படவில்லை. இதற்கு ஒரு உதாரணமாக மயிலாப்பூர் ஏரி காட்டப்பட்டுள்ளது.



மூத்தோர்ச் சொல் மதிக்கப்படாததன் ஊழ்வினைதானோ என்னவோ, இன்று சென்னை உள்ளிட்ட நகரங்கள் ஓரிருநாள் மழைக்கே தண்ணீரில் தத்தளிக்கின்றன!

இன்னும் என்னென்ன இன்னல்களைச் சந்திக்கப் போகிறோமோ எதிர்காலத்தில்?

உதவியவை:

சங்ககால வரலாற்று ஆய்வுகள் - மயிலை சீனி.வேங்கடசாமி.
திரு.வி.க.வின் வெற்றிப் படிகள் - திருவாரூர் வி.கல்யாணசுந்தரனார்.
மதராசபட்டினம் - கே.ஆர்.நரசய்யா.



**கோ.செங்குட்டுவன்**
ko.senguttuvan@gmail.com

13.

# பல்லவர் வெட்டிய பனைமலை ஏரி

- கோ.செங்குட்டுவன்.

ஒவ்வொரு முறையும் சென்னைக்குச் செல்லும் போதும் மாமண்டூரில், பரந்து விரிந்து காணப்படும், அந்த ஏரியைப் பார்த்துப் பெருமூச்சு விடுவேன்.

பல்லவரின் நீர் மேலாண்மைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழும் ஏரி அது.

அப்போது என் உள்மனம் சொல்லும், "உன் மாவட்டத்திலும் பல்லவர் வெட்டிய ஏரி இருக்கிறதே."

அப்படியா? எங்கு? பனைமலையில்...!

பனைமலை ஏரியைப் பார்க்கும் வாய்ப்பு 2001இல் தான் எனக்குக் கிடைத்தது.




"நந்தன் கால்வாய்த் திட்டம்" தொடர்பான விவரங்கள் சேகரிப்பதாக, நண்பர் அன்னியூர் சிவா அவர்களின் துணையுடன் பனைமலை கிராமத்துக்குச் சென்றேன்.

குன்றின் அருகே மேற்கில், வானையும் நிலத்தையும் இணைப்பதுப் போன்று பிரம்மாண்டாகக் காட்சியளித்தது பனைமலை ஏரி.




நானும் சிவாவும் ஏரியில் இறங்கி சில அடிகள் நடந்தோம். பாளம் பாளமாக வெடித்திருந்தது. மழைத் துளியைப் பார்த்து வருடங்கள் பலவாகின்றதாம்!

2011இல் "நந்தன் கால்வாய்" நூலுக்காக மீண்டும் பனைமலை ஏரிக்குச் சென்றேன்.

இப்போது நிலைமை மாறியிருந்தது. அப்போதுதான் மழை பெய்திருந்ததால் ஏரி முழுக்கத் தண்ணீர் நிரம்பி, கண்களுக்கு விருந்தாகவும், புகைப்படம் எடுக்கவும் அழகாக இருந்தது.

பொறியாளரும் மூத்த ஆய்வாளருமான காலஞ்சென்ற கொடுமுடி ச.சண்முகன் பனைமலை ஏரி குறித்து இப்படி விவரிப்பார்:

"80 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட இந்த ஏரி 30 அடி ஆழம் உள்ளது. இதன் தொழில்நுட்பம் பார்த்து வியக்கத்தகுந்தது. தொடர்ச்சியாக பல மலைக் கரடுகளை இணைத்து இடையில் சிறுசிறு நீளத்திற்கு மட்டும் கரை அமைக்கப் பட்டுள்ளது. 30 அடி ஆழ மதகும் கால்வாயும் உள்ளன. ஒரு கோடியில் உள்ள பாறையே கழிங்கலாக அமைக்கப்பட்டுள்ளது. கட்டுமானச் சிக்கனத்திற்கு இது எடுத்துக் காட்டு. இன்றைய மேட்டூர் அணையோடு, பனைமலை ஏரி பல வகையில் ஒப்பிடத்தகுந்தது."




பல்லவர் கால கட்டட, ஓவியக் கலைக்குச் சான்றாதாரமாக இன்றும் நின்றிருக்கும் தாளகிரீசுவரர்க் கோயில், பனைமலை ஏரிக்கு அருகிலேயே குன்றின் மீது அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

“இந்த ஏரி அமைத்து வளம் பெருகிய பின்னரோ அல்லது சமகாலத்திலோ தாளகிரீசுவரர் ஆலயம் அமைந்திருக்கலாம்” என்பதும் கொடுமுடியாரின் கருத்தாகும்.

திருவண்ணாமலை மாவட்டம் துரிஞ்சல் ஆற்றில் இருந்துத் தொடங்கும் நந்தன் கால்வாய், பனைமலை ஏரியில் சேர்கிறது.

இந்த ஏரியின் மூலம் 1079.24 ஏக்கர் விளைநிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.

மேலும் நங்காத்தூர், முட்டத்தூர், நகர், பிரம்மதேசம், எசாலம், பெருங்கலம்பூண்டி, அன்னியூர், வெள்ளேரிப்பட்டு, வீரமூர், வெங்கந்தூர், ஆரியூர் ஆகிய ஊர்களுக்கான ஏரிகளுக்கும் இங்கிருந்து தான் தண்ணீர் செல்கிறது என்பதும் குறிப்பிடத்தகுந்ததாகும்.




பனைமலை ஏரியின் கிழக்கில் நந்தன் கால்வாய்த் திட்டத்தின் கதாநாயகரான, மறைந்த அமைச்சர் ஏ.கோவிந்தசாமி அவர்களின் சிலை நிறுவப்பட்டுள்ளது.



பல ஏரி கல்வெட்டுகளில் அதை வெட்டுவித்தவர்கள் "ஏரியை காப்பவர் அடி என் முடி (தலை) மேலன" என்று சொல்லியிருப்பார்கள்.

இந்தச் சொல்லை சிரமேற் கொண்டவர்கள்தான், பனைமலை ஏரியை இன்னமும் ஏரியாகவே வைத்திருக்கின்றனர்.

இன்று, ஏரிகள் பலவும் பேருந்து நிலையங்களாகவும், பெருந்திட்ட வளாகங்களாகவும், மருத்துவக் கல்லூரிகளாகவும் மாறிவருகின்றன. இன்னும் சில ஏரிகளை பழைய வரைபடங்களில் மட்டுமே பார்க்க முடிகின்றது.மிச்சம் மீதியிருக்கும் போரூர் ஏரி போன்றவற்றைக் காப்பாற்றுவதற்குத் தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறோம்.

இந்தச் சூழலில், வரலாறுப் பண்பாட்டுக் கூறுகளின் எச்சமாகவும், விவசாயத்துக்கும் நிலத்தடி நீராதாரத்திற்கும் நிலைக்களனாகவும் பனைமலை ஏரி எஞ்சி நிற்பது மகிழ்ச்சியைத் தருகிறது...!

பனைமலை:
விழுப்புரம்-செஞ்சி சாலையில் சூரப்பட்டு சென்று, அங்கிருந்து வடக்கே 7ஆவது கி.மீ.இல் அமைந்துள்ளது. செஞ்சி-அனந்தபுரம் வழியாகவும் இங்கு வரலாம்.



**கோ.செங்குட்டுவன்**
ko.senguttuvan@gmail.com

**14.**

# கூவம்

- கோ.செங்குட்டுவன்.

கூவம் ...

இந்தப் பெயரைக் கேட்டவுடன் சென்னையில் நாற்றமெடுத்து ஓடிக் கொண்டிருக்கிற அந்த ஆறுதான் நினைவுக்கு வரும். இந்த ஆறு முன்பு நல்ல நிலைமையில் இருந்தது என்பது வேறு விசயம்.



கூவம் என்பது ஒரு கிராமத்தின் பெயர். திருவள்ளூர் மாவட்டம் அரக்கோணம் அருகே உள்ளது இந்த ஊர். திருக்கூவப் புராணம் இயற்றிய துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் பாடுகிறார்,

“மைந்தரை அன்னையை மாதரை ஆவைத்
தந்தையை அந்தணர் தம்மை வதைத்த
அந்தம்இல் பாதகர் ஆயினும் எல்லை
வந்திடின் அந்நகர் வண்கதி நல்கும்”

மைந்தரையும், தாயையும் மடந்தையரையும் பசுவையும் தந்தையை அந்தணரைக் கொன்ற எல்லையற்ற பாவம் செய்தவரே ஆயினும் அவர் கூவம் என்ற பதியின் எல்லையை அடைந்தார் என்றால், அவர்க்கு அப்பகுதி நல்கதியைத் தரும், என்பது சிவப்பிரகாச சுவாமிகளின் வாக்கு. சமய இலக்கியங்கள் மற்றும் கல்வெட்டுகளில் திருவிற்கோலம், கூகம், மதுராந்தக நல்லூர், தியாக சமுத்திரம் போன்ற பெயர்களால் அழைக்கப்படும் இந்த ஊர், இப்போது கூவம் என்றழைக்கப்படுகின்றது.



இங்கு திரிபுர சுந்தரி சமேத திரிபுராந்தக சுவாமி திருக்கோயில் அமைந்துள்ளது. இக்கோயில் குறித்து,

“தொகுத்தவன் அருமறையங்கம் ஆகமம்
வகுத்தவன் வளர்பொழில் கூகமேவினான்
மிகுத்தவன் மிகுந்தவர் பரங்கள் வெந்தறச்
செகுத்தவன் உறைவிடம் திருவிற்கோலமே”
என்று பாடுகிறார் திருஞான சம்பந்தர்.

தாருகாட்சன், கமலாட்சன், வித்யுன்மாலி ஆகிய மூன்று அசுரர்கள் பொன், வெள்ளி, இரும்பாலான கோட்டைகளைக் கட்டித் தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் துன்பத்தினை விளைவித்தனர். தேவர்களும் முனிவர்களும் சிவபெருமானிடம் முறையிட இறைவன் அசுரர்களின் ஆற்றலை ஒடுக்கியதோடு, அந்த மூன்று நகரங்களையும் அழித்தக் காரணத்தால் திரிபுராந்தகர் என்றும், போருக்குச் சென்றபோது வில்லேந்திய கோலத்துடன் சென்றதால் திருவிற்கோல நாதர் என்றும் அழைக்கப்படுகிறார். இறைவி திரிபுராந்த நாயகி.



இறைவனைத் தொடாமலேயே (தீண்டாத் திருமேனியர்) இங்கு அபிஷேக ஆராதனைகள் நடக்கின்றன. சிவன் சுயம்பு மூர்த்தியாக அருள்பாலிக்கிறார். இப்பகுதியில் மழை மிகுதியாகப் பொழியும் என்பதைத் தனது வெண்மையானத் திருமேனி மூலமாகவும், மழைக் குறைவு, வன்மை போன்றவற்றைத் தமது செம்மையான திருமேனி மூலமாகவும் இறைவன் முன் உணர்த்துதலைச் செய்கிறார் என்பது இப்பகுதி மக்களின் நம்பிக்கை.



கூவம் உள்ளிட்ட ஐந்து ஊர்களைச் சேர்ந்த கொண்டல்கட்டி வேளாளர் சமூகக் கோயிலாகவும் திரிபுராந்தகர் கோயில் உள்ளது. இக்கோயிலில் 1909இல் நடத்தப்பட்ட ஆய்வில் 31 கல்வெட்டுகள் கண்டறியப்பட்டன. இரண்டாம் இராசேந்திரன் காலந்தொடங்கி பல்வேறு காலக்கட்டங்களில் வழங்கப்பட்டக் கொடைகளை இக்கல்வெட்டுகள் விளக்குகின்றன.

இந்த ஊரைத் தொட்டு வருவதால்தான், அந்த ஆற்றுக்கு 'கூவம் ஆறு' எனும் பெயர் வழங்கப்படுகிறது.



**கோ.செங்குட்டுவன்**
ko.senguttuvan@gmail.com

15.

# வேதக்கல்லூரி இயங்கிய “எண்ணாயிரம்”

- கோ.செங்குட்டுவன்.

எண்ணாயிரம் ...

விழுப்புரம் அருகே அமைந்துள்ள சின்னஞ்சிறிய கிராமம். வரலாற்றில் நீங்காத இடத்தைப் பிடித்த ஒரு ஊர். இதற்குக் காரணம் இராசேந்திரச் சோழன் காலத்தில் (கி.பி.1012-1044) இங்கு இயங்கி வந்த வடமொழி வேதக்கல்லூரியாகும். இக்கல்லூரிக்காக சோழப் பேரரசன் 300 ஏக்கர் நிலத்தை தானமாக வழங்கியிருக்கிறான்.

இங்கு இளநிலை மாணவர்கள் 270பேரும், முதுநிலை மாணவர்கள் 70 பேரும், ஆசிரியர்கள் 14பேரும் இருந்திருக்கின்றனர். இளநிலை மாணவர்கள் 270 பேர்களில் 40 பேர் ரூபாவதார இலக்கணமும், 75 பேர் ரிக் வேதமும், 75 பேர் யஜுர் வேதமும், 20 பேர் வாஜசனேய சாமவேதமும், 20 பேர் சண்டோக சாம வேதமும், 10 பேர் அதர்வ வேதமும், எஞ்சிய 10பேர் பௌதாயன கிருஷ்ய சூத்திரம், கல்ப சூத்திரம், ஞான சூத்திரம் ஆகியவற்றையும் பயின்றுள்ளனர். முதுநிலை மாணவர்கள் 70 பேர்களில் மேம்பட்ட பாடங்களான வியாபரணத்தை 25 பேரும், பிரபாகர மீமாம்சத்தை 35 பேரும், வேதாந்தத்தை 10 பேரும் படித்துள்ளனர்.

இளநிலை மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் நாள்தோறும் ஆறு நாழி நெல் கொடுக்கப்பட்டது. முதுநிலை மாணவர்களுக்கு பத்துநாழி நெல் தினசரி கொடுக்கப் பட்டது. மீமாம்சமும் வியாகரணமும் சொல்லிக் கொடுத்த ஆசிரியர்களுக்கு ஊதியமாக தினசரி ஒரு கலம் நெல் கொடுக்கப்பட்டது. வேதாந்தப் பேராசிரியருக்கு கூடுதல் ஊதியமாக ஒன்றரைக் கலம் நெல் வழங்ககப்பட்டது. மற்ற ஆசிரியர்களுக்கு ஒரே அளவு ஊதியமாக முக்கால் கலம் அல்லது மூன்று குருணி கொடுக்கப்பட்டது. தானியமாகக் கொடுக்கப்பட்ட இந்த ஊதியத்தைத் தவிர ஆசிரியர்கள் மற்றும் முதுநிலை மாணவர்களுக்குத் தங்கமும் வழங்கப்பட்டுள்ளது.





வேதாந்த ஆசிரியருக்கு இந்தத் தங்கம் கொடுக்கப்படவில்லை. காரணம், வேதாந்தத்தைச் சொல்லிக் கொடுத்து பணம் சம்பாதிப்பது சட்டப்படியும், வழக்கப்படியும் தடை செய்யப்பட்டிருந்தது. வேதாந்த ஆசிரியருக்குத் தங்கம் கொடுக்கப்படாதிருந்ததற்கு இதுவே காரணமாக இருந்திருக்கக்கூடும் என்பார் "சோழர்கள்" நூலாசிரியர் கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி.

சோழராட்சியில் கோயில்களில் அழகியத் தமிழில் தேவாரம் ஓதப்பட்டது. அதே நேரம் வடமொழி வேதமும் கற்பிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. எண்ணாயிரம் கிராமத்தில் இயங்கிய இவ்வேதக் கல்லூரி காலப்போக்கில் அழிந்து விட்டது. இதுபற்றிய விவரங்களைச் சொல்லும் கல்வெட்டுகள் மட்டும், இங்குள்ள அழகிய நரசிங்கப் பெருமாள் கோயிலில் எஞ்சி நிற்கின்றன.

எண்ணாயிரம் - கவிகாளமேகம் பிறந்த ஊர் என்பதும் கூடுதல் சிறப்பாகும்.



**கோ.செங்குட்டுவன்**
ko.senguttuvan@gmail.com

16.

# கல்வெட்டுகள் உதிர்க்கும் செய்திகள்

-- து.சுந்தரம்

பேரிடர்கள் நிகழும்போது துயர் துடைக்கத் தொண்டுள்ளங்கள் இணைவதை நாம் கண்கூடாகப் பார்த்துவருகிறோம். அண்மையில் வெள்ளம் நிகழ்த்திய அழிவுத் தாக்கத்தின்போதும் அவ்வாறுதான் நடந்தது. களத்தில் நேரடியாக இறங்கி உயிர் காத்தும், உணவும் நீரும் அளித்தும் மனிதத்தை மலையளவு உயர்த்தினர். அடுத்து அழிவிலிருந்து மீளும் முயற்சிகளில் கைகொடுக்க நிதிக் கொடை தொடர்கிறது. சமுதாயத்தின் எல்லா நிலையினரிடமிருந்தும் நிதிக்கொடை. இவ்வகையில், பணியிலுள்ளோரும், பதவியிலுள்ளோரும் தங்களது ஊதியத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதியைக் கொடையாக அளிப்போர் பற்றிய செய்திகளைப் பார்க்கிறோம். ஒரு மாதம் அல்லது ஒரு நாள் ஊதியம் கொடையாகச் செல்கிறது. இவ்வகைச் செய்திகளை நாளிதழில் காண்கையில், கோவை-பேரூர் பட்டீசுவரர் கோவிலில் உள்ள கல்வெட்டு ஒன்று நினைவுக்கு வந்தது. அதில், ஒரு நாள் ஊதியம் கொடையாக அளிக்கப்பட்ட செய்தி தற்போதைய நிலைமையோடு இயைந்து நிற்பதைப் பார்க்கிறோம்.

கல்வெட்டு தொடர் எண் : 122 / 2004 (கோயம்புத்தூர் மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி-1)

**கல்வெட்டுப் பாடம்:**

**1. ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரமசோழ தேவற்கு யாண்டு 2-ஆவது ஆளுடையார் இடங்கை நாயகீஸ்வரமுடையார் நடுவிற்சமக்கட்டோமும் அம்மன**
**2. க்காறரோமும் சேனாபதிகளோமும் நாயகஞ்செய்வா**
**3. ர்களோமும் மற்று இத்தந்திரத்தில் கொற்றுண்ண கடவாரெல்லாம் ஆட்டொரு நாளை படி குடுத்தோம் சந்திராதி**
**4. த்தவர் செல்வதாக கல்வெட்டிக் குடுத்தோம் நடுவிற்சமக்கட்டோம் பந்மாஹேஸ்வர ரக்ஷை**

கல்வெட்டில் வருகின்ற கொங்குச்சோழ அரசன் இரண்டாம் விக்கிரம் சோழன் ஆவான். அவனுடைய இரண்டாம் ஆட்சியாண்டில் - கி.பி. 1258-இல் - கல்வெட்டு வெட்டப்பட்டுள்ளது. அவனது படைகளில் ஒன்றான நடுவிற்சமக்கட்டார் என்னும் படைப்பிரிவைச் சேர்ந்தவர்களும், அம்மனக்காறர் என்னும் பதவியிலுள்ளோரும், சேனாபதிப் பதவியிலுள்ளோரும், படைகளின் நிர்வாக மேற்பார்வை செய்யும் நாயகம் செய்வார் என்பவரும், அந்தத் தந்திரத்தில் (படைத்தளத்தில்) கொற்றுண்ணக்கடவாரும் (படைப்பிரிவின் ஊழியர் தொகுதி) ஆகிய எல்லாரும் ஆண்டுக்கொருமுறை (ஆட்டொரு) ஒரு நாள் வருவாயைக் கோவிலுக்கு அளிப்பதாகக் கல்வெட்டிக் கொடுத்துள்ளார்கள். இக்கொடைச் செயல் நிலவும் கதிரும் உள்ளவரை (சந்திராதித்தவர் செல்வதாக) நடக்கட்டும் என உறுதி ஏற்கிறார்கள். இக்கொடைச் செயல் தவறாது நடப்பதைப் பந்மாஹேச்வரர் என்னும் அதிகாரிகள் கன்காணித்துக் காப்பார்களாக என்னும் காப்புறுதியோடு கல்வெட்டு முடிகிறது.

பெரும்பதவிகளில் இருந்த பலர் கொடையளித்துள்ளது போலவே, அப்படையில் சிற்றாள் பணியில் இருந்த ஊழியர்களும் கொடையளித்துள்ளது வேறுபாடில்லா ஒற்றுமையைச் சுட்டி நிற்கிறது. கல்வெட்டில் நாம் கண்டது மகேசன் தொண்டு. இந்நாளில் நாம் கண்டுகொண்டிருப்பது மக்கள் தொண்டு.



**து.சுந்தரம்**
கல்வெட்டு ஆராய்ச்சியாளர் கோவை.
doraisundaram18@gmail.com
அலை பேசி : 9444939156

17.

# வட்டெழுத்துகளுடன் 1200 ஆண்டுகள் பழைமையான ஐயனார் சிற்பம் கண்டுபிடிப்பு

-- தென்கொங்கு சதாசிவம். சு.

திருப்பூரில் இயங்கிவரும் வீரராசேந்திரன் தொல்லியல் மற்றும் வரலாற்று ஆய்வு மையத்தைச் சேர்ந்த சு.வேலுச்சாமி, க.பொன்னுச்சாமி, சு.சதாசிவம் மற்றும் பொறியாளர் சு.ரவிக்குமார் ஆகியோர் திருப்பூரிலிருந்து 20 கி.மீ தொலைவில் உள்ள கொடுவாயில் உள்ள நாகீஸ்வரர் கோவிலில் வட்டெழுத்துகளுடன் 1200 ஆண்டுகள் பழைமைவாய்ந்த ஐயனார் சிற்பத்தைக் கண்டறிந்துள்ளனர்.



இதைப் பற்றி ஆய்வு மையத்தின் இயக்குநர் பொறியாளர் சு.ரவிக்குமார் மேலும் கூறியதாவது பண்டைய காலத்தில் தரைவழிப் பயணம் மேற்கொண்டு வணிகம் செய்தவர் சாத்துவர் என்றும், கடல் வழிப்பயணம் மேற்கொண்டு வணிகம் செய்தவர் நாயகர் என்றும் அழைக்கப்பட்டனர். பண்டைய காலத்தில் வணிகம் செய்த வணிகர்கள் தங்களின் காவல் தெய்வமாக ஐயனாரை வழிபட்டனர். அவ்வணிகர்கள் தாங்கள் பயணம் செய்து வணிகம் செய்யும் பெருவழிகளில் இவ்வய்யனார் சிலைகளை அமைத்து வழிபாடு செய்தனர். அந்த வகையில் தமிழகத்தின் பண்டையப் பெருவழிகளில் முக்கியமானதும் சங்க காலத்தில் மேலை நாட்டாரும் சேரர் கடற்கரை தலைநகராம் முசிறியில் இருந்து சோழர் துறைமுகத் தலைநகரான பூம்புகார் வரை (முசிறி (பட்டணம்), பேரூர், வெள்ளலூர், சூலூர், பல்லடம், காங்கேயம், கரூர், உறையூர் வழியாகப் பூம்புகார் வரை சென்றது). பயணம் செய்து வணிகம் செய்த சிறப்பு மிக்க பெருவழியான இராசகேசரிப் பெருவழியருகே இவ்வட்டெழுத்துக்களுடன் கூடிய ஐயனார் சிற்பம் காணப்படுவது சிறப்புடையதாகும். இச்சிற்பம் 105செ.மீ உயரமும், 75 செ.மீ அகலமும் உடையதாகும்.

ஐயனார் பீடத்தின் மீது வலது காலை மடித்து வைத்த நிலையிலும், இடது காலைக் குத்திட்டு வைத்து அதன் மீது இடது கையை வைத்தபடியும் (சிதைந்து உள்ளது), வலது கையில் செண்டு (ஆயுதம்) பிடித்த படியும் மகாராஜ லீலாசனத்தில் உள்ளார். தலை ஜடாபாரம் அலங்காரத்தில் உள்ளது. காதில் குதம்பை என்னும் பத்ர குண்டலமும், கழுத்தில் கண்டிகை, சரப்பளி, வீரச்சங்கிலி என மூன்று அணிகலன்களையும் அணிந்துள்ளார். இடுப்பில் உதரபந்தமும், கையின் மேற்பகுதியில் தோள்வளை, கீழ் பகுதியில் சூடக வகை அணிகலன்களும், இடையில் அரைஞான் எனப்படும் கடிசூத்ரம் அணிந்துள்ளார். இடையணியாக அரைப்பட்டிகை என்ற அழகிய ஓர் அணியை அணிந்துள்ளார். இடுப்பில் கொசுவம் வைத்த நிலையில் மரவுரி அல்லது பஞ்சாடை அணிந்துள்ளார். காலில் வீரத்திற்கு அடையாளமாக மணியொன்று காட்டப்பட்டுள்ளது. இதற்க்கு வீரக்கழல் என்று பெயர். பாதத்தில் அணியாக அரியகம் எனப்படும் காற்சதங்கை அணிந்துள்ளார். சிற்பத்தின் மேற்பகுதியில் இரண்டு சேடிப்பெண்கள் சாமரம் வீசும் நிலையில் உள்ளனர்.

இவ்வட்டெழுத்துகளைப் படித்த உலகின் தலை சிறந்த தொல்லியல் அறிஞர்களுள் ஒருவரும் தமிழகத் தொல்லியல் துறையின் முன்னாள் துணை இயக்குநருமான முனைவர் ர.பூங்குன்றனார் இரண்டு வரிகளில் உள்ள இவ்வெழுத்துக்கள்

**"ஸ்ரீ முல்லை பதகி நாகமுழு(க்)**
**கோ புன கணமா(ன்) ஏற்றை சாத்தன்"**

என்று வருகிறது என்றார். கொங்கு மண்டலம் பெரும்பாலும் முல்லை நிலமாக உள்ளது அந்த நிலம் குறிக்கப்பட்டுள்ளது, கணமான் என்பது ஒரு குலத்தின் தலைவனைக் குறிக்கலாம். புனம் திணையைக் குறிக்கும் சொல், ஏற்றை என்பது காளைகளைக் குறிக்கலாம் என்றும், சாத்தன் என்ற பண்டைய தரைவழி வணிகக் குழுவின் பெயரில் முடிவது மிகச் சிறப்பாகும் என்றார். மேலும் எழுத்து அமைப்பு, பிற்கால ஐயனார் சிலைகளில் காணப்படும் இரண்டு மனைவிகள், யானை, நாய், பன்றி போன்ற விலங்குகள் இல்லாமையாலும் இது கி.பி. 8ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும் என்றார்.



**தொல்லியல் முனைவோர்**
**திரு. தென்கொங்கு சதாசிவம். சு**
thenkongu@gmail.com

18.

# குருவித்துறைக் கோயில் கல்வெட்டுகள்

-- து.சுந்தரம்.

குருவித்துறைக் கோவில் கல்வெட்டுப்படங்களைப் படித்துப் பார்த்தபோது கல்வெட்டு வரிகள் மூலம் தெரியவந்த சில செய்திகளையும் அவற்றோடு தொடர்புடைய சில செய்திகளையும் இங்கே பகிர்ந்துகொள்கிறேன். இரண்டு தூண் கல்வெட்டுகள் படிக்கப்பட்டன.



முதல் தூண் கல்வெட்டின் பாடம்:

**1 சோழ குலாந்தகச்ச**
**2 (துர்வேதி) மங்கலத்(தி)ல் இ**
**3 ன்னாயனார் சிவநாமத்தா**
**4 ல் அனுபவித்து வருகிற**
**5 பாடகம் இருபதாலுள்ள**

6 பாடிகாவல் ஸ்ரீ ஸுந்தர பா
7 ண்டிய தேவற்கு யாண்டு
8 20 ஆவது முதல் இன்னா
9 யனாற்கு அமுதுபடியாக
10 க்குடுத்தோம் இவ்வோ

குறிப்பு : வரி 6-இல் உள்ள “ஸ்ரீ ஸுந்த” என்பது கிரந்த எழுத்துகளால் ஆனது.



இரண்டாம் தூண் கல்வெட்டின் பாடம்:

1 தென்னவன் மூவே
2 ந்த வேளா(ந்) எழுத்
3 து இந்த சிலா
4 லே(கை) பண்ணி
5 னேந் இந்நாயனார்
6 கோயில் தச்சாசாரி
7 யன் (சீயன்) சிவலவ
8 னான பாகனூர் கூற்ற
9 த்து ஆசாரியன் எழு
10 த்து இந்த சிலா(லே)

குறிப்பு : வரிகள் 3,4,10-இல் உள்ள "சிலாலேகை" என்பது கிரந்த எழுத்துகளால் ஆனது.

முதல் கல்வெட்டு மூலம் பெறப்படும் செய்திகள்:

சோழகுலாந்தகச் சதுர்வேதி மங்கலம் - தற்போதைய சோழவந்தான் ஊரின் பழம்பெயர். சோழவந்தான் பண்டு சதுர்வேதி மங்கலமாக (பிராமணர்குடியேற்றம்) இருந்தது. சதுர்வேதிமங்கலங்கள் உருவாக்கப்படும்போது அரசன் ஒருவனின் பேராலே அமைக்கப்படுவது வழக்கமாக இருந்துள்ளது. அவ்வகையில் இவ்வூரும் "சோழகுலாந்தகன்" என்னும் அரசனின் சிறப்புப் பெயராலே அமைந்துள்ளது. சோழகுலாந்தகன் என்னும் சிறப்புப் பெயர் எந்த அரசனின் பெயர் என்னும் கேள்வி எழுகிறது. பாண்டியன் இரண்டாம் வரகுணனின் தம்பியான சடையவர்மன் பராந்தக பாண்டியனின் பேரனான வீரபாண்டியன் என்னும் அரசனின் சிறப்புப் பெயரே சோழகுலாந்தகன். அதாவது சோழகுலத்துக்குக் காலன். இவன் கி.பி. 946 முதல் கி.பி. 966 வரை ஆட்சி செய்தவன். இவனைப்பற்றி டாக்டர் கே.கே.பிள்ளை தம் "தமிழக வரலாறு-மக்களும் பண்பாடும்" என்னும் நூலில் கீழ்வருமாறு குறிப்பிடுகிறார்.

"இராசசிம்மன் மகன் வீரபாண்டியன் பாண்டி நாட்டுக்கு ஏற்றம் புரிந்தவர்களுள் ஒருவனாவான். பராந்தக சோழன் ஆட்சியில் சோழப்பேரரசின் ஆட்சிக்குட்பட்டிருந்த பாண்டி நாட்டுப்பகுதிகளை அவன் மீட்டுக்கொண்டான். அவன் 'சோழன் தலைகொண்ட கோவீரபாண்டியன்' என்று தன்னைப்பாராட்டிக்கொண்டுள்ளான். அவன் கொண்டது சோழ இளவரசர்களுள் ஒருவனது தலையே போலும். முதலாம் இராசராசனின் தமையனாகிய ஆதித்த கரிகாலன் வீரபாண்டியனை வென்று அவன் முடியைக்கொண்டிருக்கவேண்டும் என்று சோழர்களின் கல்வெட்டுகளிலிருந்து விளங்குகிறது. வீரபாண்டியன் கி.பி.966-இல் போரில் உயிர் துறந்தான்."

மேற்படி சதுர்வேதிமங்கலத்து நாயனார் (இறைவன்) பெயரில் உள்ள இருபது பாடகம் அளவுள்ள நிலத்தின் விளைவிலிருந்து பெறப்படும் வரிவருமானம் பாடிகாவல் செலவினங்களுக்குத் தற்போது பயன்பட்டு வருகிறது. அவ்வருமானம் ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவரின் இருபதாவது ஆட்சியாண்டிலிருந்து இக்கோயில் இறைவற்கு அமுதுபடிச் செலவினங்களுக்குப் பயன்படுத்தப்படவேண்டும் எனக் கல்வெட்டு ஆணை கூறுகிறது.

பாடகம் - ஒரு நில அளவு.
பாடிகாவல் - ஊர், நாடு முதலியவற்றைக் காத்தல்; அதன்பொருட்டுத் தண்டும் வரி.
அமுதுபடி - படையல் சோறு (நைவேத்தியம்?)

முன்னர் நான் எழுதிய குறிப்பில் இக்கல்வெட்டு அரசனின் நேரடி ஆணையைக் குறிப்பதாகச் சொல்லியிருந்தேன். அது தவறான குறிப்பு. சதுர்வேதிமங்கலத்துச் சபையார் பாடிகாவல் வருமானத்தை அமுதுபடிச் செலவினங்களுக்கு மாற்றிக்கொடுத்ததைக் கல்வெட்டு தெரிவிக்கிறது.

கல்வெட்டு, சுந்தரபாண்டியன் என்னும் அரசனின் இருபதாம் ஆட்சியாண்டுக் காலத்தது. மாறவர்மன் சுந்தரபாண்டியன் மற்றும் சடையவர்மன் சுந்தரபாண்டியன் என இரு அரசர்கள் சிறப்பானவர்கள் உளர். அவர்களுள் முதலாமவன் கி.பி. 1219 முதல் கி.பி. 1239 வரை ஆட்சியிலிருந்தவன். இரண்டாமவன் கி.பி. 1251 முதல் கி.பி. 1268 வரை ஆட்சியிலிருந்தவன். கல்வெட்டு இருபதாம் ஆட்சியாண்டைக்குறிப்பதால் கல்வெட்டு மாறவர்மன் சுந்தரபாண்டியனின் ஆட்சிக்காலத்தைச் சேர்ந்தது என்பது பெறப்படுகிறது. எனவே, கல்வெட்டு கி.பி. 1239-ஆம் ஆண்டைச் சேர்ந்தது எனக்கொள்ளலாம்.

இரண்டாம் கல்வெட்டு மூலம் பெறப்படும் செய்திகள்:
இக்கல்வெட்டு முதல் கல்வெட்டின் இறுதிப்பகுதியா எனத்தெரியவில்லை. வேறொரு கல்வெட்டின் இறுதிப்பகுதியாகவும் இருக்கக்கூடும். எவ்வாறெனினும், இக்கல்வெட்டு வரிகள், ஒரு கல்வெட்டின் இறுதிப்பகுதியைச் சேர்ந்தன. கல்வெட்டின் முடிவில் அரச ஆணையைத் தெரிவித்துச் சான்றுக் கையெழுத்து (கையொப்பம்) இடுபவர்களின் பெயர்கள் விளக்கமாகக் குறிப்பிடப்பெறும். அவ்வாறே, இக்கல்வெட்டிலும் சான்றுக் கையெழுத்திட்டவர்களின் பெயர்கள் காணப்படுகின்றன.

1. தென்னவன் மூவேந்த வேளான் எழுத்து - அரச அலுவலர்களில் உயர்ந்த பதவி வகித்தவர்களின் பட்டங்களில் “மூவேந்த” என்னும் முன்னொட்டுபெயர் வருவதுண்டு. அவ்வகையில் வேளான் ஒருவரின் பெயர் இது. தென்னவன் என்பது பாண்டியனைக் குறிக்கும் முன்னொட்டு.

2. கோயில் தச்சாசாரியன் சிவலவன் எழுத்து - தச்சாசாரியன் என்பவர் தற்காலத்து வழக்கிலுள்ளதுபோல் மரவேலை செய்கின்ற தச்சர் அல்லர். இவர் கல்தச்சர்.

அதாவது சிற்பி (ஸ்தபதி). கோயிலில் காணி உரிமை பெற்ற தச்சராயிருக்கவேண்டும். சான்றுக் கையெழுத்திட்டதோடு, இக்கல்வெட்டைப் பொறித்தவரும் இவரே. இவர் பாகனூர் கூற்றத்தைச் சேர்ந்தவர். (சோழ நாடு கூற்றங்கள் என்னும் பல நிருவாகப்பிரிவுகளைக் கொண்டிருந்தது என்பது நாம் அறிந்த ஒன்று.) இவர் பெயர் சிவலவன் என்பது. ஸ்ரீவல்லபன் என்னும் இப்பெயர் தமிழ்ப்படுத்தப்பெற்று ஸ்ரீ>சீ , வல்லபன் > வல்லவன் > வலவன் என மருவியது. (நா.கணேசன் அவர்கள், கேரளத்தில் கண்டுபிடிக்கப்பட்ட தமிழிக் கல்வெட்டு குறித்து "ஸ்ரீ பழமி" என்பது "சீ பழமி" என எழுதப்பட்டுள்ளது என நிறுவியுள்ளதை நினைவு கூர்க.)

3. சிலாலேகை - சிலா=கல் லேகா (லேகை) = ரேகா, ரேகை, கோடு, எழுத்து. (Graph).

ஆசிரியரின் நன்றி : செய்திகள் தந்துதவிய தொல்லியல் துறை அறிஞர் முனைவர் சொ.சாந்தலிங்கம் அவர்களுக்கு.



**து.சுந்தரம்**
கல்வெட்டு ஆராய்ச்சியாளர் கோவை.
doraisundaram18@gmail.com
**அலை பேசி** : 9444939156

19.

# ஏரிகளில் கல் ஆவணங்கள்

-- சேசாத்திரி சிறீதரன்

இரண்டு வருடத்திற்கு மேலாக ஒரு கல்வெட்டை தேடி கிடைக்காமல் இருந்தது. ஓமலூர் - தாசசமுத்திரம் ஊர் மக்களிடம் விசாரித்தபோதும் கிடைக்கவில்லை, யாரோ எடுத்து சென்று விட்டதாக கூறினார்கள். ஆனால் இன்று நண்பர் மூலம் கிடைத்துவிட்டது.




கல்வெட்டு வாசகம்:-

> **"ஸ்வஸ்தி ஸ்ரீ  இராஜ ராஜ சோழ தேவற்கு திருவெழுத்திட்டுச் செல்லா நின்ற திருநல்லியாண்டு பதினொன்றாவது வடபூவாணிய நாட்டு 'கச்சிப் பள்ளி காமிண்டந்' பொங்கிலந் அமன்தாத் களியும் எந்தம்பி..ம்,**

"இவ்விருவே மெங்கள் கைய்யால் மணலொழிக்கி இவ்வேரி கட்டினோம் இந்த அழிவு படாமற் காத்தாந் காலெந் தலை மேலென".

காலம்: கி.பி. 996

தாச சமுத்திரம் எரி , பேரரசன் ராசராசனின் பதினொன்றாம் ஆட்சி ஆண்டில் இந்த ஏரி கட்டப்பட்டது . கி.பி .996 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட இந்த ஏ ரி தற்போது ஆயிரம் ஆண்டைக் கடந்து விட்டது .
ஏரியை அமைத்தவர் கச்சிப் பள்ளி காமிண்டன் பெங்கிலன் அமைந்தான் களி . அவனும் அவன் தம்பியும் கூட இருந்து வேலை செய்துள்ளனர் . இந்த ஏரியை அழியாமல் காப்பவர்களில் "கால் என் தலைமேல் " என்கிறான் . இதற்க்கு அவர்களும் பாதம் பணிவேன் என்று பொருள்படும் .

- முனைவர் . கொடுமுடி சண்முகன்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வெளியிட்ட "தமிழில் ஆவணங்கள் " என்ற நூலில் முனைவர் .கொடுமுடி சண்முகன் அவர்கள் எழுதிய "ஏரிகளில் கல் ஆவணங்கள் " என்ற கட்டுரையில் (பக்கம் 37) வெளியிடப்பட்டுள்ளது.




**சேசாத்திரி சிறீதரன்**

sseshadri69@gmail.com

## 20.

# பட்டணத்தில் தாய்த்தெய்வச்சிற்பம்

--து.சுந்தரம்.

நெகமத்துக்கு அருகில் அமைந்துள்ளது பட்டணம் என்னும் சிற்றூர். இவ்வூரில் கிடைத்த ஒரே ஒரு கல்வெட்டு ஆதாரத்தைக்கொண்டு இவ்வூர் இருநூற்று அறுபது ஆண்டுப்பழமை வாய்ந்தது என்றும், அது ஒரு வணிக நகரமாக விளங்கியது என்றும் அண்மையில் ஒரு செய்தி வெளியிட்டிருந்தோம். தற்போது, அங்கு ஓர் அரிய தாய்த்தெய்வ நடுகல் சிற்பம் கண்டறியப்பட்டுள்ளது. தேவனாம்பாளையத்தைச் சேர்ந்த, வரலாற்று ஆர்வலர் ருத்திரன் என்பவர் தெரிவித்த தகவலின் அடிப்படையில், கோவை கல்வெட்டு ஆராய்ச்சியாளர் து.சுந்தரம் நேரில் சென்று அந்தச் சிற்பத்தை ஆய்வு செய்தார்.



பட்டணத்தில், நல்லட்டிபாளையம் பிரிவுச் சாலையோரத்தில் செடிகளுக்கிடையில் காணப்படுகின்ற அந்தச் சிற்பமானது, பெண்ணொருத்தி தன் வலக்கையில் குழந்தையை அணைத்துப்பிடித்தவாறு அமைந்துள்ளது. பெண்ணின் இரு புறமும், இரு எருதுமாடுகள், தம் தலைகளைக் கீழ்நோக்கிச் சாய்த்தபடி,  கொம்புகளை உயர்த்தி அந்தப்பெண்ணின் இடைப்பகுதியில் குத்துவதைப்போல் காணப்படுகின்றன. அப்பெண், தன் கூந்தலில் வலப்புறமாகக் கொண்டை போட்டிருக்கும் தோற்றம்.

காதுகளில், காதணிகள் உள்ளன. ஆனால், கழுத்தில் அணிகள் எவையும் காணப்படவில்லை. கைகளில் ஒன்றில் மட்டும் வளைகள் காணப்படுகின்றன.





இடையிலிருந்து கணுக்காலுக்குச் சற்று மேலே வரை ஆடை, மடிப்புகளோடு காணப்படுகிறது. சிற்பத்தின் பீடப்பகுதியில் எழுத்துகள் தெரிந்ததால், சிலையை

நன்கு தோண்டி நிற்கவைத்துப் பார்த்ததில் மூன்று வரிகளில் கல்வெட்டு எழுத்துகள் காணப்பட்டன.





எழுத்துகளைப்படித்த வாசகம் பின்வருமாறு:

**குறோதி வருசம் அற்ப்பிசை மீ (மாதம்) ௯ உ (தேதி)**
**முத்திலிவாட செட்டி உபையம்**

அதாவது, தமிழ் ஆண்டான குரோதி வருடத்தில், ஐப்பசி மாதத்தில் ஒன்பதாம் தேதி, முத்திலிவாட செட்டி என்பவரால் இச்சிற்பம் உபையமாகச் செய்து தரப்பட்டது எனக் கல்வெட்டுச் செய்தி கூறுகிறது. எழுத்தமைதியை வைத்துப் பார்க்கும்போது குரோதி வருடம், கி.பி. 1724 அல்லது கி.பி. 1784 ஆண்டுகளோடு பொருந்தி வருகிறது. ஐப்பசி மாதம், செப்டம்பர், 1724 அல்லது அக்டோபர், 1784 என்னும் காலக்கணக்கீட்டுடன் பொருந்தி வருகிறது.

ஏறத்தாழ, இருநூற்றைம்பது ஆண்டுகள் பழமை கொண்ட இச்சிற்பம், கோவைப்பகுதியில் கிடைத்துள்ள அரிய சிற்பமாகவே கருதப்படவேண்டும். ஏனெனில், எழுத்துப்பொறிப்புகளோடு உள்ள நடுகல் சிற்பங்கள் இப்பகுதியில் காணக்கிடைப்பது மிகவும் அரிது. மேலும், இறந்துபட்ட வீரனோடு தானும் மாய்ந்துவிட்ட பெண்ணுக்கு எடுக்கப்பட்ட "மாசதிக்கல்" என்னும் நடுகல் கோவைப்பகுதியில் காணப்பட்டாலும், குழந்தையோடு உள்ள தாய்ப்பெண்ணுக்கு எடுக்கப்பட்ட நடுகல் இதுவரை கிடைக்கவில்லை என்றே தோன்றுகிறது.

இவ்வூர் மக்கள், இந்தச் சிற்பத்தைப்பற்றி ஒரு செய்தி சொல்கிறார்கள். கருவுற்ற ஒரு பெண், மாடு முட்டியதால் இறந்து விட்டதாகச் சொல்கிறார்கள். இது போன்ற, மக்களிடையே வழங்கும் கதை மரபும் இச்சிற்பத்தின் உண்மைப் பின்னணியைத் தெரிந்துகொள்ள உதவும் சான்றுகளில் ஒன்று. இந்தச் சிற்பத்தின் ஒளிப்படத்தைப் பார்த்த தொல்லியல் ஆய்வாளரான, சென்னை சு.இராசகோபால் அவர்கள், இச்சிற்பம், தாய்த்தெய்வ வழிபாட்டுடன் தொடர்புடைய ஒன்றாக இருக்கலாம் எனக்குறிப்பிடுகிறார்.

தாய்த்தெய்வ வழிபாடு தமிழ்நாடெங்கும் வழக்கில் உள்ள ஒன்றுதான். தாய்த்தெய்வ வழிபாட்டின் தாயகம் இந்தியா என்னும் கருத்து நிலவுகிறது. சிந்துவெளியில், கருத்தாங்கிய நிலையில் சில தாய்த்தெய்வங்களின் வடிவங்கள் கிடைத்துள்ளதாக அறிகிறோம். கருவுற்ற நிலையில் கொல்லப்பட்ட பெண் ஒருத்தி பொன்னரத்தா என்னும் அம்மன் வடிவில் தெய்வமாக, திருநெல்வேலி அருகே கடையம் ஊரில் வழிபடப்பெறுகிறாள். குமரி,நெல்லை,தூத்துக்குடி,விருதுநகர்,சிவகாசி ஆகிய மாவட்டங்களில் கிராம தேவதையாக பேச்சியம்மன்(பேய்ச்சியம்மன்), இசக்கியம்மன்

ஆகிய தெய்வங்கள் வணங்கப்படுகின்றன. இவ்வகைக் கோயில்கள் சிலவற்றில், இத்தெய்வங்கள் கைகளில் குழந்தை வைத்திருப்பதைக் காணலாம். மதுரை, வைகை ஆற்றங்கரையில் அமைந்துள்ள கோயிலில், பேச்சியம்மன் கையில் குழந்தையுடன் ஆறடி உயரத்தில் இருப்பதைக் காணலாம். பேச்சியம்மனுக்கு மரத்தொட்டில், மரப்பாச்சி பொம்மை ஆகியவற்றைக் காணிக்கையாகக்கொடுத்து, பிள்ளைப்பேற்றுக்காக வேண்டிக்கொள்கிறார்கள். இசக்கி என்பது 'இயக்கி' என்பதன் திரிபு என்றும், சமணத் தீர்த்தங்கரர்களின் பரிவாரத்தெய்வங்களுள் ஒன்றான 'யக்ஷி' யான அம்பிகா என்னும் தெய்வத்தையே கிராமங்களில் இசக்கியாக வழிபடுகிறார்கள் என்னும் கருத்து நிலவினாலும், கொலையுண்ட அல்லது தற்கொலை புரிந்துகொண்ட பெண்கள் இசக்கி என்னும் தெய்வமாகிறார்கள் என்னும் கருத்தும் வலுவாக உள்ளது. இசக்கியின் உறைவிடம் கள்ளிமரம் எனக்கூறப்படுகிறது. நீலி என்று கூறப்படும் பெண்தெய்வம் இந்த இசக்கிதான் எனக்கூறப்படுகிறது.





நாகராஜருடன் இசக்கி அம்மன்



குழந்தையுடன் இசக்கி அம்மன்




செட்டி நாட்டில், பூமணத்தாள், அக்கினியாத்தாள், டைக்கம்மையாத்தாள், மெய்யம்மையாத்தாள் ஆகிய தெய்வங்கள் வணங்கப்படுவதாகவும், அவற்றில் பல தெய்வங்கள் கையில் குழந்தையுடன் காணப்படுவதாகவும் அறிகிறோம்.

இத்தெய்வங்களுக்குப் படையல் இட்டு வழிபடுவதால், ஒவ்வொரு கோயிலையும் ”படப்பு” என்னும் பெயரிலேயே குறிப்பிடுகிறார்கள். வழிபடப்படும் தாய் பற்றிய கதைகள், அவளை அகால மரணமடைந்தவளாகச் சொல்கின்றன. கணவனால் ஒதுக்கப்பட்டு, கர்ப்பிணியாகவோ, குழந்தையுடனோ தனித்துச் சென்றபோது நிகழ்ந்த மரணமாக இருக்கலாம். கள்ளர்களாலும், விலங்குகளாலும் மரணம் நிகழ்ந்திருக்கலாம். கருவுற்றபெண், கருக்குழந்தையோடு இறந்துபோகும் சூழ் நிலையில், வயிற்றைக்கிழித்துக் குழந்தையை எடுத்து, இரண்டு உடல்களையும் ஒன்றாகப்புதைத்தபின் அப்பெண்ணைத் தெய்வமாக வணங்குகிறார்கள் என்பது குமரி மாவட்டத்தில் நிலவும் கதை.

மேலே கூறப்பட்ட நாட்டார் வழக்குகள் எல்லாம், கருவுற்ற நிலையில் அகால மரணம் எய்திய பெண், தெய்வமாக வழிபடப்பெறுகிறாள் என்பதை உறுதி செய்வதால், பட்டணத்தில் நாம் புதிதாகக் கண்டறிந்த தாய்-குழந்தை சிற்பமும், ஊர் மக்கள் வழங்கும் கதை மரபோடு சேர்த்து ஆய்வு செய்யும்போது, கருவுற்ற பெண் அகால மரணம் ( இங்கே விலங்கால் மரணம்) அடைந்ததால் நினைவுக்கல் ( நடுகல் ) எடுக்கப்பட்டுள்ளது எனக்கருதலாம்.

கருவுற்ற நிலையைச் சிற்பத்தில் குறிப்பாகக் காட்டவே, கையில் குழந்தையைச் செதுக்கியுள்ளார்கள் எனக் கருதுவதில் தவறில்லை. சிலையை ஒரு செட்டி உபையமாக அளித்திருப்பதால், வணிக நகரமாக இருந்த பட்டணத்தில் வணிகரின் குலதெய்வ வழிபாட்டின் எச்சமாக இச்சிற்பத்தைக் கருதவாய்ப்புண்டு. இது போன்ற பல வரலாற்று யூகங்களுக்கு இடமளிக்கும் இச்சிற்பத்தைத் தொல்லியல் துறையினர் மேலும் ஆய்வு செய்தால் இன்னும் புதிய செய்திகள் கிடைக்கக்கூடும்.

ஆசிரியரின் நன்றி :
தாய்த்தெய்வ வழிபாடு பற்றிய பல செய்திகள் தந்த திரு சு.இராசகோபால், தொல்லியல் துறை அறிஞர், சென்னை அவர்களுக்கு.



**து.சுந்தரம்**
கல்வெட்டு ஆராய்ச்சியாளர் கோவை.
doraisundaram18@gmail.com
அலை பேசி : 9444939156

## 21.

# 2.9.1953 இல் திறக்கப்பட்ட கல்கி கூடம்


-- கோ.செங்குட்டுவன்.

50களில் அச்சுக் கலை தொழிற்கல்விப் பாடமாக தமிழகக் கல்விக் கூடங்களில் சொல்லித் தரப்பட்டது. குறிப்பாக அவினாசி, வாலாஜாபாத் மற்றும் விழுப்புரம் போன்ற இடங்களில் இப்பாடப் பிரிவுகள் பிரபலம்.

விழுப்புரம் மகாத்மா காந்தி பாடசாலையிலும், அதன் நிர்வாகி திரு.இலஷ்மணசுவாமி அவர்களது முயற்சியில் அச்சுக் கருவிப் பொருத்தப்பட்டது.

இக்கட்டடத்திற்குக் கல்கி கூடம் என்று பெயரிடப்பட்டது.

இப்புதியக் கட்டத்தை இன்றைக்குச் சரியாக 62 ஆண்டுகளுக்கு முன்பு 2.9.1953இல் சென்னை அரசாங்க தேவஸ்தான அமைச்சர் கே.வெங்கடசாமி நாயுடு திறந்து வைத்தார்.




மகாத்மா காந்தி பாடசாலை
கல்கி கூடம்
2-9-1953.
திறப்பாளர்
சென்னை அரசாங்க தேவஸ்தான பாதுகாப்பு அமைச்சர்
கனம் K. வெங்கடசாமி நாயுடு அவர்கள்
B.A.B.L., M.L.A.
தலைவர்: திரு. V.R. நாகராஜன் B.A. B.L., M.L.A.
பெ. சு. லக்ஷ்மணசுவாமி,
நிர்வாகி.
fb.com/ko.senguttuvan



இந்நிகழ்ச்சிக்கு விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினரும், அரசு தேர்வாணையக் குழு உறுப்பினருமான வழக்கறிஞர் வி.ஆர்.நாகராஜன் தலைமை தாங்கினார்.

தகவல் மற்றும் புகைப்பட உதவி:
திரு.இல.ரவீந்திரன் அவர்கள், நிர்வாகி, மகாத்மா காந்தி பாடசாலை, விழுப்புரம்.




**கோ.செங்குட்டுவன்**

ko.senguttuvan@gmail.com

22.

# விழுப்புரத்தில் தொடங்கப்பட்ட ஆங்கிலோ இந்தியன் பள்ளி (1938)

-- கோ.செங்குட்டுவன்.




கடந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் விழுப்புரம் இரயில்வேயில் பெருமளவு- ஆங்கிலோ இந்திய - தொழிலாளர்கள்தான் பணியாற்றினர். இவர்கள் தங்கள் குழந்தைகள் பயிலுவதற்கு தனியாக ஒரு பள்ளித்தேவை எனக் கருதினர். தங்கள் எண்ணத்தை அப்போதைய புதுச்சேரி மறைமாவட்டப் பேராயர் டாக்டர்.கோலஸ் என்பவரிடம் வெளிப்படுத்தினர்.

இதன்பேரில், கேரள மாநிலம் எர்ணாகுளத்தில் கார்மேல் கன்னியர் சபையால் நடத்தப்பட்டு வந்த தெரசா எனும் கத்தோலிக்கக் கல்வி நிறுவனத்தை டாக்டர்.

கோலஸ் அணுகினார். இதனைத் தொடர்ந்து மேரி, ரீட்டா ஆகியோர் தலைமையில் செர்லிஸ்டெய்ன், ஹயாசின்த், பெனிகுனா ஆகியோர் அடங்கிய கார்மேல் கன்னியர் சபையினர் விழுப்புரம் வந்தனர்.

கிழக்குப் பாண்டிரோடில் இரயில் நிலையம் மற்றும் கிறிஸ்து அரசர் ஆலயத்தையொட்டி மூன்று ஏக்கர் பரப்பளவில் அமைந்திருந்த "லாபோன்சா பங்களா" பள்ளிக்காகத் தேர்வு செய்யப்பட்டது. புதுச்சேரியை சேர்ந்த ஆங்கிலோ இந்தியக் குடும்பத்தினர் அந்த இடத்தை இவர்களுக்கு வழங்கினர். அங்கு, 21.01.1938இல் "சேக்ரட் ஹார்ட் கான்வென்ட்" தொடங்கப்பட்டது.

கார்மேல் கன்னியர் சபையால் கேரளாவுக்கு வெளியே சென்னை மாகாணத்தில் தொடங்கப்பட்ட முதல் கல்வி நிறுவனம், இக்கல்வி நிறுவனம் என்பது குறிப்பிடத்தக்கது. தொடக்கத்தில் இங்குப் பயின்ற மாணவர்களின் எண்ணிக்கை 18. மேலும், அன்றைய விழுப்புரத்தில் இரயில்வே இருபாலர் பள்ளி இயங்கி வந்ததால், சேக்ரட் ஹார்ட் கான்வென்ட் 5,6,7ஆம் வகுப்புகளுடன் தொடங்கப்பட்டது என்பதும், பின்னர்தான் முதல் மற்றும் இரண்டாம் வகுப்புகள் தொடங்கப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது.

1947இல் இப்பள்ளி நடுநிலைப்பள்ளியாகவும், 1949இல் உயர்நிலைப்பள்ளியாகவும், 1978இல் மேனிலைப்பள்ளியாகவும் தரம் உயர்த்தப்பட்டது. இப்பள்ளியில் பயின்ற மாணவர்கள் இந்தியாவில் மட்டுமின்றி உலகம் முழுவதும் வியாபித்துள்ளனர்.

இங்கு உயர்தர இசைப்பயிற்சி வழங்கப்பட்டது. இதில் பியானோ கற்றுக் கொண்ட மாணவர்கள், புகழ்ப்பெற்ற இலண்டன் டிரினிட்டி இசைக் கல்லூரியில் மிகச்சிறந்த முறையில் தேர்ச்சி பெற்றனர் என்பது, விழுப்புரத்துக்குப் பெருமை சேர்க்கும் விசயமாகும்.



**கோ.செங்குட்டுவன்**
ko.senguttuvan@gmail.com

## 23.

## பள்ளிக்கட்டிட நிதிக்காக நடைபெற்ற பரத நாட்டியம் (6.12.1953)

-- கோ.செங்குட்டுவன்.

1953 நவம்பர் மாத கல்கி இதழில் "விழுப்புரம் மகாத்மா காந்தி பாடசாலை" எனும் தலைப்பில் கீழ்க்காணும் செய்தி பிரசுரிக்கப்பட்டிருந்தது:

"அபூர்வமான அடக்கத்துடன் அற்புதமான கல்வித் தொண்டு நடத்திவரும் விழுப்புரம் ஸ்ரீலட்சுமண சாமியைப் பற்றியும், அவருடைய மகாத்மா காந்தி பாடசாலையைப் பற்றியும் கல்கியில் வெளியான விவரங்கள் நேயர்களுக்கு நினைவிருக்கும்.

சுமார் 750 சிறுவர் சிறுமிகள் படிக்கும் பள்ளிக்கூடத்துக்கு ஒரு அறை போதாது தானே? மேலும் தொடர்ந்து கட்டிடப் பணியைச் செய்யும் பொருட்டு, வரும் டிசம்பர் 6 ஞாயிற்றுக் கிழமை மாலை, வெள்ளித் திரையிலும் பரதநாட்டியத் துறையிலும் புகழ்பெற்ற குமாரி கமலாவின் உதவி நாட்டியக் கச்சேரி ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

அன்று பிற்பகல் விழுப்புரத்தில் நடக்க இருக்கும் ஆரம்பக் கல்வி ஆசிரியர் மாநாட்டுக்காக விஜயம் செய்யும் மந்திரிகள் ஸ்ரீசி.சுப்பிரமணியம் அவர்களும், ஸ்ரீமாணிக்கவேல் அவர்களும் இக்கச்சேரியிலும் பிரசந்நமாயிருக்க இசைந்திருக்கிறார்கள் என்று அறிகிறோம்.

உட்கார்ந்து நிம்மதியாகப் படிக்க இடமின்றித் திண்டாடிக் கொண்டிருக்கும் சுமார் 750 குழந்தைகளின் நிலையினை விழுப்புரத்திலும் சுற்றுப்புறங்களிலும் உள்ளவர்கள் மனதிற் கொண்டு மேற்படி உதவிக் கச்சேரிக்குப் பெருந்திரளாக விஜயம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்."

இதனைத் தொடர்ந்து "விழுப்புரம் மகாத்மா காந்தி பாடசாலை கட்டிட உதவிக்காக நாட்டிய கலாகேசரி வழுவூர் ஸ்ரீராமையாப் பிள்ளையின் சிஷ்யை குமாரி கமலாவின் பரதநாட்டியக் கச்சேரி 6-12-53 மாலை 6-30 மணிக்கு விழுப்புரம் ஜோதி தியேட்டரில் நடைபெறும். கட்டணம் ரூ.25, 10, 5, 2, 1" என விளம்பரம் செய்யப்பட்டது.






இதன்படி குறிப்பிட்டத் தேதியில் குமாரி கமலாவின் பரதநாட்டியக் கச்சேரி சிறப்பாகவும் நடந்தேறியது.

தகவல்(ம)புகைப்பட உதவி: திரு.இல.இரவீந்திரன், நிர்வாகி, மகாத்மா காந்தி பாடசாலை, விழுப்புரம்.



**கோ.செங்குட்டுவன்**

ko.senguttuvan@gmail.com

24.

## குறளுக்காக வாழ்ந்த திருக்குறளார் வீ.முனிசாமி (1913 - 1994)

-- கோ.செங்குட்டுவன்.



“சிரித்து மறக்கப்படாது. சிந்திக்க வேண்டும்” - வயிறு குலுங்க சிரிக்க வைக்கும் தன் பேச்சின் ஊடாக, திருக்குறளார் வீ.முனிசாமி அடிக்கடிச் சொல்லும் வார்த்தை இது.

விழுப்புரம் அருகே உள்ள தோகைப்பாடி கிராமத்தில் 1913ஆம் ஆண்டு செப்டம்பர் 26ஆம் தேதி வீராசாமி பிள்ளை - வீரம்மாள் தம்பதிக்கு மகனாகப் பிறந்தார். தங்கள் குலதெய்வமான முனீஸ்வரன் பெயரையே இவரதுப் பெற்றோர் இவருக்குச் சூட்டினர்.




திருச்சியில் உயர்நிலைப் பள்ளியில் படிக்கும்போதே முனிசாமிக்கு திருக்குறளின் மீது ஆழ்ந்த ஈடுபாடு ஏற்பட்டது. 1,330 குறட்பாக்களையும் மனப்பாடம் செய்திருந்தார்.

1935ஆம் ஆண்டில் திருச்சி மலைக்கோட்டை நூற்றுக்கால் மண்டபத்தில் தொடங்கிய குறளாரின் குறள் பரப்பும் பணி அரை நூற்றாண்டையும் கடந்தது.

அக்காலத்தில் புராண இதிகாச நூல்கள் சோறு, குழம்பு போலவும் திருக்குறளை ஊறுகாய் போலவும் வைத்திருந்தனர். இதனை மாற்ற வேண்டும் என்பதை தம் அடிப்படை நோக்கமாகக் கொண்ட திருக்குறளார், இதில் வெற்றி பெற்றார் என்றே சொல்ல வேண்டும்.

பல்பொடி, கண்ணாடி, கடிகாரம் போல் திருக்குறளும் மக்களின் அன்றாடப் பயன்பாட்டில் இருக்க வேண்டும் என விரும்பிய திருக்குறளார், தமிழகத்தின் மூலை முடுக்குகளில் பயணம் செய்து திருக்குறள் பரப்பும் பணியில் ஈடுபட்டார். பாமரர்களும் புரிந்து கொள்ளும் வகையில் இவரதுப் பேச்சில் நகைச்சுவை இழையோடியது.

“இந்த உலகத்தில் எல்லா செல்வங்களும் அழிந்துவிடும்.”

ரொம்ப வருடங்களாக இங்கிருந்த ஆலமரம் புயல் காற்றிலே விழுந்துவிட்டது. இங்கிருந்த பெரிய கட்டடம் மழை பெய்து இடிந்துவிட்டது. அதோ போகிறாரே 10

வருடங்களுக்கு முன்பு அவர் லட்சாதிபதியாக இருந்தார். இப்போ, எல்லாம் செலவழித்து ஏழையாகிவிட்டார். இது அழியும் செல்வம்."

"ஆனால் கல்வி அப்படிப்பட்டதல்ல. அவர் 10 வருடங்களுக்கு முன்பு எம்.ஏ. பாஸ் செய்திருந்தார். இப்போது எல்லாம் செலவாகி எஸ்.எஸ்.எல்.சி. ஆகிவிட்டார். என்று யாரும் சொல்ல மாட்டார்கள்."

"கேடில் விழுச்செல்வம்" எனும் குறளுக்கு, திருக்குறளார் அளித்த எளிய விளக்கம் இது.

அதே போல், "எல்லோரிடத்திலும் எல்லாவிதமான கேள்விகளும் கேட்டுவிடக் கூடாது. எந்த வருடத்தில் பிறந்தீர்கள் என்று கேட்கலாம். எத்தனை வருடங்கள் இருக்கலாம் என்று இருக்கிறீர்கள் என்று கேட்கக் கூடாது. நீங்க எப்போது போறதா யிருக்கீங்க என்றும் கேட்டுவிடக்கூடாது."

திருக்குறளாரின் பேச்சு மக்கள் மத்தியில் வரவேற்பை பெற்றது. இலக்கியம், இலக்கணம் என்றாலே முகத்தைத் திருப்பிக் கொண்டவர்கள் கூட திருக்குறளாரின் பேச்சின் இரசிகரானார்கள். வள்ளுவரின் குறள் மக்களிடம் வேகமாகப் பரவியது.

பெரியார், பாரதிதாசன், ப.ஜீவானந்தம், காமராசர், கலைஞர் மு.கருணாநிதி, மு.வ., கி.ஆ.பெ.விசுவநாதம், இரா.பி.சேதுப்பிள்ளை, ந.மு.வேங்கடசாமி நாட்டார், நாவலர் சோமசுந்தர பாரதியார், குன்றக்குடி அடிகளார், கவியோகி சுத்தானந்த பாரதி, உ.வே.சா., தண்டபாணி தேசிகர், சுவாமி சகஜானந்தா, விபுலானந்த அடிகளார், சர்.பி.டி.இராசன், சி.பா.ஆதித்தனார், கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் உள்ளிட்ட தமிழறிஞர்களுடன் நட்புறவு கொண்டிருந்தார் திருக்குறளார்.

1941ஆம் ஆண்டு, முதன் முதலாக சேலத்தில் இவர் நடத்திய திருக்குறள் மாநாட்டில் தேவநேயப் பாவாணர் உள்ளிட்ட தமிழறிஞர்கள் பங்கேற்றனர். சென்னை புரசை வாக்கத்தில் தங்கி, சட்டப் படிப்பினை மேற்கொண்டு திருக்குறள் வகுப்பினையும் நடத்தியபோது அ.கி.பரந்தாமனார், நடேசனார், வடிவேலனார் ஆகியோருடன் இணைந்து குறட்பாக்களை அட்டைகளில் எழுதி தெருக்கள் தோறும் தமிழ் முழக்கம் செய்யும் தொண்டிலும் திருக்குறளார் ஈடுபட்டார்.

“குறள் மலர்”” (1948-1952) இதழ் மூலம் மக்களிடையே திருக்குறள் பரவுமாறு செய்தார். 1949ஆம் ஆண்டு கடலூரில் கூட்டுறவு முறையில் திருக்குறள் அச்சகம் தொடங்கப்பட்டு, அதனைப் பொறுப்பேற்று நடத்தினார் திருக்குறளார்.

தமிழகத்தில் மட்டுமல்லாது தலைநகர் தில்லி, மும்பை, கல்கத்தா போன்ற இடங்களிலும், கடல்கடந்து மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலும் குறளாரின் குறள் பரப்பும் பணி தொடர்ந்தது.

குறளாரின் பணியை “குறட் பயன் கொள்ள நம் திருக்குறள் முனிசாமி சொல் கொள்வது போதுமே” என புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் (1948) பாராட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.

23.1.1951இல் குடந்தை மாநகரில் உடையார்பாளையம் குறுநில மன்னர் கச்சியுவரங்க காளாக்க தோழ உடையாரால் “திருக்குறளார்” பட்டம் வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து தமிழ்மறைக் காவலர், திருக்குறள் கேசரி, முப்பால் வித்தகர், திருக்குறள் இரத்தினம், நகைச்சுவை இமயம் என பல்வேறு இடங்களில் ஏராளமானப் பட்டங்கள் இவருக்கு வழங்கப்பட்டன. ஆனாலும், முதன் முதலில் வழங்கப்பட்டப் பட்டம்தான் இவரது வாழ்நாள் இறுதி வரை தொடர்ந்தது.

திருக்குறளார் எழுதிய நூல்கள்:
வள்ளுவனார் உள்ளம், திருக்குறள் மூலம், வள்ளுவர் காட்டிய வழி, அவள் சிரித்த சிரிப்பு, இன்பத் தோட்டம், முருகன் முறையீடு, இன்பம் தரும் இன்பம், மானத்தை விற்காதே, திருக்குறள் இன்பம், இன்பம் இருக்கும் இடம், காதல் கள்வன், தேய்ந்த விரல், மயங்கிய நெஞ்சம், வள்ளுவர் குறளும் ஈ.வெ.ரா. வாழ்க்கையும், வள்ளுவரும் பெரியாரும், திருவள்ளுவரும் திராவிடக் கொள்கையும், வடலூரும் ஈரோடும், வள்ளுவர் பூங்கா, காதல் உழவன், திருக்குறள் - காமத்துப் பால் - பொழிப்புரை, வள்ளுவரைக் காணோம், வள்ளுவர் பேசினால், வள்ளுவரும் பரிமேலழகரும், வள்ளுவர் ஏன் எழுதினார், திருக்குறளில் நகைச்சுவை, அகமும் முகமும், வள்ளுவர் வகுத்த வாழ்க்கைப் பாதை, வள்ளுவர் வழிப் பயணம், ஏன் இந்த வாழ்வு?, உலகப் பொதுமறை திருக்குறள் உரை விளக்கம், திருக்குறளாரின் சிந்தனைகள், திருக்குறள் காமத்துப் பால், திருக்குறளில் நகைச்சுவை, வள்ளுவர் காட்டிய வழி, வள்ளுவர் காட்டும் வாழ்க்கைப் பாதை, திருக்குறள் அதிகார விளக்கம்.

அரசியல்:

பெரியவர் எஸ்.எஸ்.இராமசாமி படையாட்சியாரால் தொடங்கப்பட்ட உழைப்பாளர் கட்சியில் தன்னை இணைத்துக் கொண்ட திருக்குறளார் தீவிரமாக செயல்பட்டார். 1952இல் நடந்த முதல் பாராளுமன்றத் தேர்தலில் திண்டிவனம் தொகுதியில் வேட்பாளராகக் களமிறங்கினார். இவரை எதிர்த்து காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டவர், எக்ஸ்பிரஸ் பத்திரிகை அதிபர் இராம்நாத் கோயங்கா. தேர்தலில் வெற்றிபெற அத்தனை பலங்களையும் பிரயோகித்தார் கோயங்கா. ஆனால் இறுதி வெற்றி, அதுவும் நேருவுக்கு அடுத்தபடியாக அதிக வாக்குகள் வித்தியாசத்தில் இமாலய வெற்றி, மண்ணின் மைந்தர் சாமானியரான திருக்குறளாருக்கே கிடைத்தது.

நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த ஐந்தாண்டு காலத்தையும் குறள் பரப்பும் பணிக்கே இவர் பயன்படுத்தினார். டாக்டர் அம்பேத்கர் போன்ற தலைவர்களுடன் நெருக்கமாக இருந்தார்.

தொடர்ந்து 60களில் சி.பா.ஆதித்தனார் தொடங்கிய “நாம் தமிழர்” இயக்கத்திலும் பொதுச்செயலாளர் பொறுப்பினையேற்று திறம்பட செயலாற்றினார் திருக்குறளார்.

1981ஆம் ஆண்டு மதுரையில் நடந்த உலகத் தமிழ் மாநாட்டில், திருக்குறளுக்காக ஒரு நாளை ஒதுக்கிய முதல்வர் எம்.ஜி.ஆர். அந்த அரங்கிற்கு திருக்குறளாரை தலைமையேற்று நடத்தச் செய்தார். தமிழக அரசு தொடங்கிய திருக்குறள் நெறி பரப்பு மையத்திற்கு தொடர்ந்து நான்குமுறை இயக்குநராக நியமிக்கப்பட்டார் திருக்குறளார். அப்போது முதல் தமிழக அரசுப் பேருந்துகளில் திருக்குறள் வலம்வரத் தொடங்கியது.

“அரண்மனைகளில் மட்டுமே மன்னர்கள் முன்னிலையில் தவழ்ந்து கொண்டிருந்த திருக்குறளை ஆல மரத்தடிக்குக் கொண்டு வந்து பாமர மக்களின் முன்னிலையில் நடமாடச் செய்தவர் திருக்குறளார் ஆவார்” என நாவலர் நெடுஞ்செழியன் ஒருமுறை பாராட்டியிருந்தது குறிப்பிடத்தக்கது.

திருக்குறளார் தன் வாழ்நாளின் பெரும்பகுதியை பேருந்து மற்றும் இரயில் பயணங்களிலேயே கழித்தார். அவரது பயணம் முழுவதும் திருக்குறளை நோக்கியே இருந்தது.



திருக்குறளார் முனுசாமி உடல் மீது முதன்மந்திரி ஜெயலலிதா மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியபோது எடுத்தபடம்.

சென்னை மருத்துவமனையில்

# திருக்குறள் முனுசாமி திடீர் மரணம்

## தலைவர்கள் இரங்கல்

சென்னை, ஜன.5-
தமிழ் அறிஞர் திருக்குறள் முனுசாமி நேற்று (செவ்வாய்க்கிழமை) சென்னையில் மரணம் அடைந்தார். அவருக்கு வயது 81. அவரது மறைவுக்கு தலைவர்கள் இரங்கல் தெரிவித்து உள்ளனர்.

**குடல் புண்!**

திருக்குறள் முனுசாமி கடந்த மாதம் 25-ந்தேதி குடல்புண் சிகிச்சைக்காக சென்னை அரசு பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

நேற்றுமுன்தினம் அவருக்கு குடல் அறுவை சிகிச்சை நடைபெற்றது. பிறகு அவர் தீவிர கண்காணிப்பு பிரிவில் வைக்கப்பட்டு இருந்தார்.

**மாரடைப்பு!**

நேற்று பகல் 12 மணிக்கு திருக்குறள் முனுசாமிக்கு திடீரென்று மாரடைப்பு ஏற்பட்டு மருத்துவமனையிலேயே உயிர் பிரிந்தது. உயிர் பிரியும்போது அவரது மகன்கள் மகள்கள் மற்றும் அண்ணாமலை [illegible] ராஜன் அருகில் இருந்தனர்.

தகவல் கேட்டதும் முதல்-மந்திரி ஜெயலலிதா மருத்துவமனைக்கு விரைந்து [illegible] மரணம் அடைந்துவிட்டார்.

**வாழப்பாடி!**

திருக்குறள் முனுசாமி மறைவுக்கு தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி எம்.பி. டெல்லியில் இருந்து இரங்கல் செய்தி வெளியிட்டு உள்ளார். அதில் அவர் கூறி இருப்பதாவது:-

திருக்குறள் நெறிபரப்பு பணியை இலக்காகவும், சிறந்த தமிழறிஞரும், "திருக்குறளார்" என்ற சிறப்பு பெயரால் அழைக்கப்படுபவருமான திருக்குறள் முனுசாமி காலமான செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்தேன். அவரது மறைவு தமிழ்நாட்டுக்கும், தமிழ் மக்களுக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

கடந்த அரை நூற்றாண்டு காலமாக தன்னுடைய நகைச்சுவை கலந்த பேச்சாற்றலால் திருக்குறள் அருமை பெருமையை தமிழ் மக்கள் உணரச் செய்தவர். அன்னாரது மறைவால் துயரத்தில் ஆழ்ந்துள்ள அவரது குடும்பத் [illegible] தமிழ்நாடு காங்கிரஸ் [illegible] சார்பில் ஆழ்ந்த இரங்கலை [illegible] உள்ளார்.

திருக்குறள் முனுசாமி

**திருநாவுக்கரசு!**

எம்.ஜி.ஆர். அ.தி.மு.க. பொதுச்செயலாளர் சு.திருநாவுக்கரசு வெளியிட்டு உள்ள இரங்கல் செய்தியில் கூறி இருப்பதாவது:-

உலக திருமறையாம் திருவள்ளுவரின் திருக்குறளினை உலகமெங்கும் வாழும் மக்களிடம் தன் அற்புதமான விளக்கவுரையோடு எடுத்து பரப்பி தமிழ்த்தொண்டு செய்துவந்த தமிழ் அறிஞரும், "திருக்குறளார்" என்று தமிழ்ப்பெரு மக்களால் சிறப்பு பட்டத்தோடு அன்போடு அழைக்கப்பட்டவரு [illegible] திடீர் மறைவு தமிழ் கூறும் நல் உலகத்திற்கு பேரிழப்பாகும்.

fb.com/ko.senguttuvan

குறளுக்காக வாழ்நாள் முழுவதும் இயங்கிய திருக்குறளார் எனும் எக்ஸ்பிரஸ் 4.1.1994இல் சென்னையில் தன் இயக்கத்தை நிறுத்திக் கொண்டது. 5.1.1994இல் விழுப்புரம் கன்னியாகுளம் இடுகாட்டில் திருக்குறளார் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

## விழுப்புரத்தில்

# திருக்குறள் முனுசாமி உடல் அடக்கம்!

## முன்னாள் அமைச்சர் பொன்முடி–ராமதாஸ் இறுதி அஞ்சலி!!

விழுப்புரம், ஜன. 6–
சென்னையில் மரணம் அடைந்த திருக்குறள் முனுசாமியின் உடல் அடக்கம் அவரது சொந்த ஊரான விழுப்புரத்தில் நேற்று நடந்தது. முன்னாள் அமைச்சர் பொன்முடி., டாக்டர் ராமதாஸ் ஆகியோர் இறுதி அஞ்சலி செலுத்தினார்கள்.

### திருக்குறள் முனுசாமி!

திருக்குறள் முனுசாமி நேற்று முன்தினம் மாரடைப்பு காரணமாக சென்னை மருத்துவமனையில் மரணம் அடைந்தார் அல்லவா?

அவரது உடல் அவரது சொந்த ஊரான விழுப்புரத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. அங்கு அவரது உடல் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டு இருந்தது.

### கலெக்டர்!

விழுப்புரம் ராமசாமி படையாச்சியார் மாவட்ட கலெக்டர் அசோக்வர்தன்ஷெட்டி நேரில் சென்று திருக்குறள் முனுசாமி உடலுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

தி.மு.க. சார்பில் முன்னாள் அமைச்சர் பொன்முடி, திருச்சி சிவா, ஏ.ஜி.சம்பத், என் கோவிந்தசாமி. அ.தி.மு.க. சார்பில் எஸ்.எஸ்.பன்னீர்செல்வம். தேவன் செல்வராஜ், தனுசு, ஜெயராமன், முன்னாள் எம்.எல்.ஏ. பழனியப்பன், ராஜேந்திரன் மற்றும் முனுசாமி, தங்கஜோதி, அரிகரன், வந்தியதேவன், மூர்த்தி வழக்கறிஞர்கள் தயாநிதி, உலகநாதன், கண்ணப்பன், நகர காங்கிரஸ் தலைவர் மணி, தட்சிணாமூர்த்தி, லட்சுமணன் உள்பட ஏராளமானவர்கள் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

### உடல் அடக்கம்!

அதன்பிறகு மாலை 5.30 மணிக்கு திருக்குறள் முனுசாமி இறுதி ஊர்வலம் புறப்பட்டது. பாட்டாளி மக்கள் கட்சி தலைவர் டாக்டர் ராமதாஸ் உள்பட அரசியல் பிரமுகர்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

மாலை 6. 30 மணி அளவில் கன்னியாகுளம் ரோட்டில் உள்ள சுடுகாட்டில் திருக்குறள் முனுசாமி உடல் அடக்கம் செய்யப்பட்டது.

### பள்ளி விடுமுறை!

திருக்குறள் முனுசாமி மறைவையொட்டி விழுப்புரத்தில் பள்ளிகளுக்கு விடுமுறை விடப்பட்டது. எல்லா கடைகளும் மூடப்பட்டு இருந்தன.

fb.com/ko.senguttuvan

## தேர்தல் கமிஷனிடம் பா.ம.க. மனு!

புதுடெல்லி, ஜன.
பாட்டாளி மக்கள் கட்சி தலை
வர் தீரன் தலைமையில் ஓ
தூதுக்குழுவினர் டெல்லியி
தேர்தல் கமிஷன் அதிகாரிக
டம் மனு ஒன்றை அளித்த
அதில் கூறி இருப்பதாவது:–

தமிழ்நாட்டில பாட்டாளி
கள் கட்சி அங்கீகரிக்கப்
அரசியல் கட்சி ஆகும்.
யின் ஒரே எம்.எல்.ஏ.
பண்ருட்டி ராமச்சந்தி
கட்சி விரோத நடவடிக்கை
ஈடுபட்டதால் அவர் கட்
விட்டு நீக்கப்பட்டார். சட்ட
யில் பண்ருட்டி ராமச்சந்
எந்த கட்சியையும்சார
என சபாநாயகர் அறிவி

எனவே தேர்தல் கமி
இதே போல நடவ
எடுக்கவேண்டும்.

இவ்வாறு அதில் கூற
உள்ளது.

தேர்தல் கமிஷனிடம்
ஆதாரங்களையும்,
வேஜுகளையும் ப
முடிவு எடுப்போம் எ
தல் கமிஷன் அறிவித்




“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.” (குறள்)



**கோ.செங்குட்டுவன்**
ko.senguttuvan@gmail.com

25.

# வள்ளுவத்தில் காப்பீடுக்கொள்கை

-- சொ.வினைதீர்த்தான்.



வள்ளுவம் இரண்டாயிரம் ஆண்டுகள் பழமையானது. இன்சூரன்சு 1800 களில் முகிழ்த்த ஒரு பொருளாதாரக்கோட்பாடு. வள்ளுவம் படித்த பிறகு "வேறொருவர் வாய்க்கேட்க நூல் உளவோ" என்றும் "எல்லாக்கருத்தும் இதன்பால் உள" என்றும் திருவள்ளுவமாலை கூறுவதால் காப்பீடுகொள்கைகளை வள்ளுவத்தில் தேடிப்பார்த்ததில் விளைந்தது இப்பதிவு.

காப்பீடு:

காப்பீடு ஒரு பொருளாதார ஏற்பாடாகும். மனிதன் ஒரு பொருள் ஈட்டுகிற சொத்து (Income generating Asset) எனக்கொள்ளலாம். அந்த பொருள் ஈட்டுகிற திறன் சந்திக்கிற இடர்பாடுகள் இரண்டு. அதாவது வாழ்வு சார்ந்த இரண்டு இடர்களால் ஒருவருடைய வருமானம் ஈட்டுகிற திறன் தடைப்படலாம்.

1.இளமையில் அகால இறப்பு.

2.முதுமையில் வயோதிகத்தால் வருமானம் ஈட்டுகிற திறனை இழத்தல்.

இந்த இரண்டு இடர்பாடுகளிலும் பொருள் ஈட்டுகிற திறன் பாதிக்கப்படுகிறது. அதனால் ஏற்படுகிற பொருளாதார இழப்பு ஈடுசெய்யப்படல் அவசியம். அதற்கான ஏற்பாடே காப்பீடு.

காப்பீடு "வாழும்போதும் வாழ்க்கைக்குப்பிறகும்" என்பார்கள். வாழும்போது ஒருவருக்கு எய்த்தகாலத்தில் வைப்பாக, சேமிப்பாக காப்பீடு உதவுகிறது. அவரின் வாழ்க்கைக்குப்பிறகு அவரைச் சார்ந்தவர்கள் தவிப்பின்றி வாழ உதவி புரிகிறது. எனவே காப்பீடு என்பது வாழ்கிறவர்களுக்கு! இறந்தவர்களுக்கல்ல!! ஒருவர் நீண்டநாள் வாழ்ந்தால் அவருடைய தேவைக்கான அல்லது இளமையில் அகலாமரணடைந்தால் அவரைச் சார்ந்தவர்கள் வாழ்வதற்கான பொருளாதார ஏற்பாடு.

வள்ளுவம்:
திருக்குறள் இடர் வருமுன்பாகக் காத்துக்கொள்ள வேண்டியதின் அவசியத்தை
"வருமுன்னர் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக்கெடும்."
என்று வலியுறுத்தியது. அதாவது முன்ஏற்பாடு இல்லாதவன் வாழ்வு நெருப்பு முன் தூசியாகும்.

நிலையாமையைக் கீழ்க்கண்ட குறள் போல வலிமையாக வேறெவரும் கூறிவிட முடியாது.
"நெருநெல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு"
நேற்று இருந்த ஒருவன் இன்று? இல்லாமல் போனான். அடடா! வந்தவன் எல்லாம் தங்கிவிட்டால்? 'கோடியும் மேலும் கருதும்' இந்த மாந்தர் "ஒரு பொழுதும் வாழ்வது அறியார்!" என்பது தானே வள்ளுவம்.

இறப்பைத்தவிர்க்க முடியாது. ஆனால் அதனால் குடும்பத்திற்கு விளைகிற பொருளாதார இழப்பை ஓரளவு ஈடுசெய்யலாம்.

பொருளின் அவசியத்தைப் "பொருளல்லவரை பொருளாகச்செயும்" என்றும், "பொருளென்னும் பொய்யா விளக்கம்" என்றும், தீதின்றி வந்த பொருள் "அறன்ஈனும் இன்பமும்ஈனும்" என்றும் அதனால்

"செய்க பொருளை" என்றும் வள்ளுவம் அறிவுறுத்துகிறது. தர்மம்செய்து அருள் கிடைக்க வேண்டுமென்றால் கூட "பொருள் என்னும் செல்வச்செவிலியால்" தான் வருமாம்! நம்மிடமுள்ள பொருள் குறைவு. ஆனால் எதிர்பாராத இறப்பினால் நிகழும் பொருளாதார இழப்பு அளப்பரியது. அதனை எவ்வாறு ஈடுசெய்வது?

இழப்பை ஈடுசெய்தல்:

இழப்பை ஈடுசெய்தலே(INDEMNITY) காப்பீட்டின் நோக்கம். காப்பீட்டால் எவரும் இலாபம் அடையக்கூடாது என்பது கோட்பாடு. இலாபமடைந்தால் அது சூதாட்டமாகிவிடும். ஒரு ரூபாய் செலுத்தி நிகழ்வு நடக்கிறபோது இலட்சம் ரூபாய் அடைந்தால் அது சூதாட்டமல்லவா? ஆனால் இன்சூரன்சு சூதாட்டமல்ல. ஒரு இடருக்கு ஆளாகக்கூடியவர்கள் பலர் ஒன்றுசேர்ந்து தன்னுடைய இழப்புக்காளாகக்கூடிய பொருளுக்குத்தக்கவாறு ஒரு சிறுதொகையை அளிக்கிறார்கள். அவ்வாறு எல்லோரும் எடுத்துவைக்கிற தொகை பெருந்தொகையாகிறது. அப்படிச் சேர்ந்த பெருந்தொகையிலிருந்து அவர்களில் ஒருவரின் சொத்திற்கு குறிப்பிட்ட இடரால் இழப்பு ஏற்படுகிறபோது அந்த இழப்பு காப்பீடால் ஈடு செய்யப்படுகிறது. உதாரணமாக 40 வயதுக்காரர்கள் 1,000 பேரைச்சேர்த்து அவர்களிடமிருந்து ஆளுக்கு 20 ரூபாய் என்று பெற்றுக்கொண்டால் 20,000 ரூபாய் சேர்கிறது. அவர்களில் அந்த ஆண்டில் இருவர் இறந்தால் அவர்கள் குடும்பத்திற்கு 10,000 வீதம் வழங்கப்படுகிறது. 1000 பேரும் இறப்பதில்லை. இருவரே இறக்கின்றனர் என்பதே காப்பீட்டின் சூட்சுமம்! இந்தக் காப்பிற்கான பிரிமியப்பங்குடன் சேமிப்பிற்காகத் தேவைக்கேற்ப ஒரு பெரிய பங்குதொகையும் காப்பீட்டு நிறுவனத்தை நடத்தும் செலவினத்திற்க்காக ஒரு பங்குத்தொகையும் சேர்த்து காப்பீடு ஈவுத்தொகையாக பிரிமியம் என்ற பெயரில் வசூலிக்கப்படுகிறது.

ஆக காப்பு+சேமிப்பு+நிதி பராமரிப்புச்செலவினம் = பிரிமியம் ஆக உருவாகிறது.

வினையால் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று

என்றார் வள்ளுவர். பழகிய ஒரு யானையால் மற்றொரு யானையையும் பிடித்தலைப் போல ஒருசெயலைச்செய்யும்போது மற்றொரு செயலையும் செய்து முடித்துக்கொள்ளவேண்டுமென்றார். உயிர்க்காப்பிற்காக பணம் செலுத்தும்போதே ஒரு கூடுதல் பணம் சேமிப்பிற்காகச்சேர்த்து காப்பினையும் சேமிப்புத்தொகையையும் இலாபப்பங்கீட்டுடன் பெற்றுக்கொள்ளுதல் வள்ளுவர் கூறும் ஒரு செயலைச்செய்யும்போதே மற்றொரு செயலையும் முடித்துக்கொள்ளுதலுக்கு ஒப்பானதல்லவா!

மேலே விவரித்துள்ளதுபோல கப்பல் விபத்து காப்பீடு என்று உதாரணமாக எடுத்துக்கொண்டால் ஒரே சமயத்தில் காப்பீடுசெய்துள்ள அனைத்து கப்பல்களுக்கும் இடர்பாட்டால் இழப்பு ஏற்படுவதில்லை. ஏதாவது ஒரு கப்பலுக்கே நிகழ்கிறது. சிறு தொகையாகப் பல கப்பல்களிடமிருந்து பெறப்பட்டுப் பெருநிதியாக உருவான தொகையிலிருந்து இழப்பு கொடுக்கப்படுகிறது. எனவே தனிமனித இழப்பை ஒன்று சேர்ந்த சமுதாயம் பகிர்ந்துகொள்கிறது. ஆதலால் இன்சூரன்சின் அடிப்படைக்கொள்கை இழப்பை ஈடுசெய்தலும், இழப்பைப் பகிர்ந்து கொள்ளுதலுமாகும்! பகிர்தலைக்குறித்து வள்ளுவம் பகர்வதைக் கீழே காணலாம்.

பகிர்தல்:

வள்ளுவத்தின் உச்சக்கொள்கை பகிர்தலேயாகும். “மங்கை மணாளனோடு ஆடிய சுகத்தைச் சொல்லெனில் சொல்லுமாறு எங்ஙனே” என்று கேட்டது சமய இலக்கியம். ஆனால் வள்ளுவர் அவ்வின்பத்தைக் காட்டுகிறார்.

“தம்மில் இருந்து தமதுபாத்து உண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு”

அழகிய மாந்தளிர் நிறம்கொண்ட இவளுடைய தழுவுதல் தம்முடைய வீட்டிலிருந்து தாம் ஈட்டிய பொருளைப் பகுத்துக்கொடுத்து உண்டாற்போன்றது என்பது இக்குறளுக்கான பொருள். இங்கு உச்சபட்ச இன்பத்திற்கு அடிப்படை பகிர்தல் ஆகும். “ஈத்துவக்கும் இன்பம்” இணையற்றது. இன்சூரன்சில் பலரும் இணைந்து சிறுபொருள் பகிர்ந்து தமக்கு ஏற்படக்கூடிய பேரிழப்பிற்கு ஈடு பெறுவதோடு தன்னையொத்து இழப்புக்கு ஆளாகும் பிறருடைய இழப்பையும் பகிர்ந்துகொள்கிறார்கள். ஒவ்வொருவரும் கொடுக்கிற சிறுதொகையினால் உருவாக்கப்பட்ட பெருந்தொகையால் இழப்பும் பகிர்ந்துகொள்ளப்படுகிறது. இவ்வாறு உருவாக்கப்பட்ட பெருந்தொகை காப்பீட்டு நிறுவனத்தின் எதிர்காலப்பொறுப்புக்களான முதிர்வு உரிமம் மற்றும் இறப்பு உரிமம் ஏற்படுகிறபோது கொடுக்கப்படவேண்டிய வைப்புத்தொகையாகும் (LIFE FUND). இந்த வைப்பின் பயன்கள் அளப்பரியவை.

இன்சூரன்சு நிறுவனத்தின் வைப்பு நிதி (LIFE FUND):

மேற்கண்டவகையில் இந்திய ஆயுள் காப்பீடு நிறுவனம் (Life Insurance Corporation of India) 1956 முதல் இதுவரை சேர்த்துள்ள வைப்புத்தொகை (Life Fund) ரூ18,24.194 கோடிகளாகும்! கற்பனைசெய்யவும் கடினமான இந்தப் பல்லாயிரம் கோடிப்பணம் இந்திய ஆயுள்காப்பீட்டு நிறுவனத்தின் 29 கோடி பாலிசிதாரர்கள் கொடுத்த பிரிமியத்தொகையிலிருந்து உருவானது. அவர்களுடைய பணம். அவர்களது எதிர்கால இறப்பு மற்றும் முதிர்வு உரிமம் ஏற்படுகிறபோது கொடுக்கப்படவேண்டிய தொகை.

இத்தொகை அரசாங்கத்திட்டங்களிலும், பங்குச்சந்தையிலும் பிறவற்றிலும் இன்சூரன்சு சட்டத்தின்படி முதலீடு செய்யப்படுகிறது. இந்தப்பெருந்தொகை 'மக்கள் பணம் மக்களுக்கே - Peoples' money for Peoples' welfare' என்ற கொள்கையின்படி மக்களுக்குச் சாலை வசதியாக, மின்சாரவசதியாக, குடிநீர் மேல்நிலைத்தொட்டிகளாக, ஐந்தாண்டு திட்டங்களாக மாறி மக்கள் சமுதாயத்திற்கு பேருதவிபுரிகின்றது.

"ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு"

"பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின்"

என்பதிற்கிணங்க பொதுத்துறை இன்சூரன்சு நிறுவனத்தின் சொத்து மக்களுக்கே பயன்படுகிறது. தனியார் துறை நிறுவனங்களும் குறிப்பிட்ட கணிசமான சதவிகித தொகையை மக்களுக்கு உதவும் வகையில் முதலீடு செய்யவேண்டும் என்பது இந்திய இன்சூரன்சு சட்டம்.

ஒருவன் பொருள் பெற்றால் அதனைச் சேர்த்துவைக்கும் இடம் "கடும்பசியுடன் இருக்கும் வறியவரின் வயிறே" என்றது குறள்!

"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள் வைப்புழி"

என்ற வள்ளுவத்திற்கிணங்க "மக்கள் பணம் மக்களுக்கே" என்பதே இன்சூரன்சு நிறுவனத்தின் செயல்பாடுகளுக்கான நோக்கம்.

இதுகாறும் காட்டியவற்றால் காப்பீடுக்கொள்கைகளான பொருளாதர ஏற்பாடு, இடர்களைதல், இழப்பை ஈடுசெய்தல், பகிர்தல், மக்கள் பணம் மக்களுக்கே ஆகியவையும் வள்ளுவமும் ஒத்திருத்தல் வெள்ளிடைமலை!

குறிப்பு:

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகமும் தேவகோட்டை சேவுகன் அன்ணாமலைக்கல்லூரியும் இணைந்து 7.1.2016,8.1.2016,9.1.2016 தேதிகளில் திருக்குறள் பன்னாட்டுக்கருத்தரங்கை வெகு சிறப்பாக நடத்தின. அக்கருத்தரங்கில் 8.1.2016 பிற்பகல் இணைஅமர்வில் நான் கலந்துகொண்டு என்னுடைய "வள்ளுவத்தில் காப்பீடுக்கொள்கை" என்ற கட்டுரையை வாசித்தளித்தேன். விழாவில் வெளியிடப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பு நூலில் இக்கட்டுரை வெகுசிறப்பாக வெளியிடப்பட்டுள்ளது.

கருத்தரங்கில் கலந்துகொண்ட சான்றோர்கள் வித்தியாசமான கட்டுரையென்றும் சிறப்பாகவுள்ளதென்றும் பாராட்டினர். மகிழ்ச்சியாக இருந்தது.
நண்பர்கள் பார்வைக்கும் கனிவான கருத்திற்கும் பகிர்ந்துள்ளேன்.

(சொ.வினைதீர்த்தான், மேனாள் பகுதி மேலாளர், எல்.ஐ.சி ஆப் இந்தியா, மனிதவள ஆலோசகர், F10, மெசெச்டிக் டெரசு அடுக்ககம், சர்ச் ஐந்தாவது வீதி, காரைக்குடி - 630001 **கைபேசி**:9443446388)



**சொ. வினைதீர்த்தான்**

karuannam@gmail.com

26.

# தமிழ்மணம் பரப்பிய குளிர்தென்றல்!

-- மேகலா இராமமூர்த்தி



வெள்ளையர் ஆட்சியில் தாழ்வுற்று வறுமைமிஞ்சி விடுதலை தவறிக்கெட்டுப் பாழ்பட்டு நின்றது நம் பாரதம். அத்தருணத்தில் மண்விடுதலை பெறுவதற்காகக் கண்ணுறக்கமின்றி உழைத்த உத்தமர்தாம் எத்தனை பேர்! அத்தகையோரில் நாட்டுவிடுதலைக்கு மட்டுமல்லாது, தொழிலாளர் முன்னேற்றம், பெண்கல்வி, பெண்கள் முன்னேற்றம், சமூகச் சீர்திருத்தம், மொழி வளர்ச்சி, சமய நெறி எனப் பல்துறைகளிலும் பார்வையைச் செலுத்திச் சாதனை படைத்தோர் வெகுசிலரே ஆவர். அத்தகு அரிதான மனிதர்களில் ஒருவர்தாம் திருவாரூர் விருத்தாசலக் கலியாணசுந்தரனார் என்ற பெயருடைய திரு.வி.க. அத்தமிழ்மகனாரைப் பற்றிச் சிறிது சிந்திப்போம்!

பூர்வீகமாய்த் திருவாரூரைக் கொண்டிருந்த திரு.வி.க.வின் குடும்பம் அவருடைய பாட்டனார் காலத்திலேயே சென்னைக்குக் குடிபெயர்ந்துவிட்டது. 1883-ஆம் ஆண்டு

ஆகஸ்டு 26-ஆம் நாள், சென்னைக்கு அருகிலுள்ள துள்ளம் எனும் கிராமத்தில் பிறந்தார் திரு.வி.க.

குடும்பச்சூழல் காரணமாகப் பத்தாம் வகுப்புக்குமேல் படிக்க வழியின்றிப்போனாலும், நாவன்மையில் சிறந்தவரும், தமிழ் வடமொழி ஆகிய இருமொழிப் புலமை செறிந்தவருமான யாழ்ப்பாணத்துக் கதிரைவேற் பிள்ளையிடமும், மகாவித்வான் தணிகாசல முதலியாரிடமும் தமிழ்க் கல்வியையும் வடமொழிக் கல்வியையும், சைவசமய நூல்களையும் கசடறக் கற்றார் திரு.வி.க. அதுமட்டுமா? வேதாந்தம், பிரம்மஞான தத்துவம் போன்றவற்றிலும்கூடப் புலமைபெற்றிருந்தார் அவர்.

சென்னை ஆயிரம்விளக்கு பகுதியிலுள்ள வெஸ்லியன் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றிய திரு.வி.க., அதனைத் தொடர்ந்து வெஸ்லி கல்லூரியிலும் சிலகாலம் பணியாற்றியிருக்கின்றார்.

வெள்ளையர் எதிர்ப்பு மிகத்தீவிரமாக இருந்த அக் காலகட்டத்தில், நாட்டு விடுதலையில் நாட்டங்கொண்டிருந்த திரு.வி.க.வால் ஆசிரியர் பணியில் ஆர்வங்காட்ட இயலவில்லை. ஆகையால், ஆசிரியப் பணியைத் துறந்தார்; நாட்டு விடுதலைக்கு முழுமூச்சாய்ப் பாடுபடத் தொடங்கினார். தேசபக்தன், திராவிடன், நவசக்தி போன்ற பல இதழ்களில் பணிசெய்த அவர், தம் கனல் கக்கும் எழுத்துக்களால் இளைஞர்களிடத்து சுதந்திரத் தீயை மூட்டினார்; விடுதலை வேட்கையை ஊட்டினார். அப்போது பத்திரிகைகளில் அவர் எழுதிய தலையங்கங்கள் மக்களிடத்துப் பெரும் வரவேற்பைப் பெற்றன. தம் எண்ணங்களைத் திறம்பட எழுத்தில் கொணர்வதெப்படி என்பதை அறிந்துகொள்ள இன்றைய பத்திரிகையாளர்களும் அவசியம் படிக்கவேண்டிய எழுத்துக்கள் அவை!

திரு.வி.க. நவசக்தியில் பணிபுரிந்துகொண்டிருந்த சமயத்தில்தான் (1924) தந்தை பெரியார் கேரளாவிலுள்ள 'வைக்கம்' எனுமிடத்தில் தீண்டாமைக்கு எதிராகப் போர்புரிந்து சிறைசென்றார். பெரியாரின் வீரத்தைப் பாராட்டித் தம்முடைய தலையங்கத்தில் 'வைக்கம் வீரர்' (Hero of Vikom) என்று அவரை வருணித்திருந்தார் திரு.வி.க. அப்பெயர் பெரியாருக்கு இன்றுவரை நிலைத்துவிட்டதை நாமறிவோம்.

தொழிலாளர் நலனிலும் பெரிதும் அக்கறைகாட்டிய திரு.வி.க.வின் சீரிய முயற்சியால் 1918-இல் சிங்காரச்சென்னையில் 'தொழிற்சங்கம்' எனும் அமைப்பு

முதன்முதலில் தோற்றங் கண்டது. இது தமிழர்களாகிய நாம் பெருமிதம் கொள்ளவேண்டிய ஒன்றாகும்!

அன்னைத் தமிழின் அருமையை மறந்தோராய், தனித்தமிழில் எழுதுவதே சாத்தியமற்றது என்று எண்ணிக்கொண்டு, மணிப்பவள நடைமீது மயல்கொண்டிருந்த அன்றைய தமிழ்ச்சமுதாயத்தின் மடமையைப் போக்கித் தெள்ளுதமிழ் நடையில் எழுதுவதே தமிழரின் கடமை என்று உறுதிபட மொழிந்த திரு.வி.க., தன் ஆற்றொழுக்கான அழகுத்தமிழ் நடையால் மக்களைத் தென்றலாய் வருடினார்; அவர்தம் மனங்களைத் திருடினார். அதனாலன்றோ 'தமிழ்த்தென்றலாய்' இன்றும் அவர் மக்கள் மனங்களில் உலாவருகின்றார்!

தேசத் தலைவர்களான மகாத்மா காந்தி, திலகர் போன்றோர் தமிழகம் வந்தபோது அவர்களின் மேடைப்பேச்சுக்களைத் தமிழில் மொழிபெயர்க்கும் 'மொழிபெயர்ப்பாளராகவும்' திரு.வி.க. திகழ்ந்திருக்கின்றார். அண்ணல் காந்தியாரின் அகிம்சைக் கொள்கையும், அறவாழ்வும் திரு.வி.க.வைப் பெரிதும் ஈர்த்தன. அதனால் வாணாள் முழுவதும் காந்தியத்தைப் பின்பற்றுவதையே தம் கடனாய்க் கொண்டிருந்தார் அவர்.

மகாத்மாவை, 'காந்தியடிகள்' என்ற பெயரால் முதலில் அழைத்தவரும் திரு.வி.க.வே ஆவார். அதற்கு அவர்தரும் விளக்கம் மனங்கொளத்தக்கது. "அறநெறியில் நின்று உயர்ந்தோரே 'அடிகள்' எனும் பெயருக்கு உரியோர்; அவ்வகையில் இளங்கோவடிகள், கவுந்தியடிகள், அறவண அடிகள் போலத் தம் வாழ்வையே அறவாழ்வாக மாற்றிக்கொண்ட மாமனிதர் மகாத்மாவை நான் காந்தியடிகள் என அழைக்கின்றேன்" என்றார் அவர்.

'காந்தியடிகளின் வாழ்வே மனிதவாழ்வுக்கு இலக்கணம்' எனும் உறுதியான கொள்கையுடைய திரு.வி.க., 'மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்' எனும் அருமையான நூலொன்றை எழுதியுள்ளார். அதில் மகாத்மாவையும், அவர்தம் வாழ்வியல் முறைகளையும் வாயூறிப் பேசுகின்றார். (It's a study of the implications of Gandhi's thought for human conduct).

அந்நூலிலிருந்து சில கருத்துக்கள்…

> *"மக்களின் கொலை புலை தொலையக் கீழைநாட்டில் தோன்றிய ஞாயிறு காந்தியடிகள். அண்ணலின் வாழ்க்கையே ஓர் பெருங்கல்விக் கழகமாகும். அதில் நாம் கற்கவேண்டியவை எண்ணிறந்தவையாகும்.*
> *தன்னை ஓர் சனாதன இந்து என்று சொல்லிக்கொள்ளும் மகாத்மா, ஒழுங்கீன முறைமையற்ற வருணாசிரம தர்மத்தை நான் நம்புகிறேன் என்றார். வருணாசிரம தர்மத்தை ஏற்கும் அதேவேளையில் அவை உயர்வு தாழ்வு பேசுவதை அவர் ஏற்றுக்கொண்டாரில்லை. நால் வருணங்களும் மனிதனின் கடமைகளைக் குறிப்பனவேயன்றி உயர்வு தாழ்வைக் குறிப்பவையல்ல என்பதே அண்ணலின் எண்ணம். மனித வாழ்வுக்கு இலக்கியமாக வாழும் பெரியாரான காந்தியடிகள், அகிம்சை தர்மத்தை அரசியற் போரில் முதன்முதல் நுழைத்த பெருந்தகையாளர் ஆவார்."*

இவ்வாறெல்லாம் மகாத்மாவின் வாழ்வியலைச் சொல்லோவியங்களாகத் தீட்டியுள்ளார் திரு.வி.க. அந்நூலில்!

தமிழிலக்கியத்தில் ஆழ்ந்த புலமையும் காதலுமுடைய திரு.வி.க., பண்டைத் தமிழரின் இயற்கையோடு இயைந்த இனியவாழ்வை, காட்சிக்கினிய 'முருகை'யே (முருகு-அழகு) அவர்கள் கடவுளாய்க் கொண்ட தன்மையை தம்முடைய 'முருகன் அல்லது அழகு' (Lord Murugan or Beauty) எனும் நூலில் பின்வருமாறு விவரிக்கின்றார்:

"மலைப்பகுதியே மாந்தஇனம் முதலில் வாழ்ந்த இடம் என்பது அறிஞர்கள் துணிபு. குறிஞ்சி நிலத்தைச் சார்ந்த அம்மக்கள் தம் கண்களுக்குப் புலப்பட்ட 'கைபுனைந்தியற்றா கவின்பெறு வனப்பான' இயற்கையழகில் ஈடுபட்டு அதற்கு 'முருகு' என்று பெயர் சூட்டினர். காலையும், மாலையும் மலையில் தோன்றும் காய்கதிர்ச்செல்வனின் கண்ணுக்கினிய செம்மையழகும், செக்கர் வானத்தின் சொக்கவைக்கும் பேரழகும் அம்மக்களைப் பெரிதும் கவர்ந்தன. அச்செவ்விய இயற்கையழகைச் 'சேய்' என்று போற்றினர் அவர்கள். குன்றாத அழகும், குறையாத இளமையும், மாறாத மணமும், மறையாத கடவுள்தன்மையும் கொண்ட அந்த முருகையே செம்பொருளாகக் கருதி அவர்கள் வழிபட்டனர்" என்று குறிப்பிடுகின்றார். அடடா! இயற்கையில் நிறைந்திருக்கும் இறையின் தோற்றத்தைக் கவினுறக் காட்சிப்படுத்தியுள்ள தமிழ்ச்சான்றோர் திரு.வி.க.வின் புலமைத்திறன் போற்றத்தக்கதன்றோ?

சிறந்த மேடைப்பேச்சாளராகவும் புகழ்பெற்றவர் திரு.வி.க. பெண்களின் முன்னேற்றத்திற்காகவும் பெண்கல்விக்காகவும் உண்மையாய் உழைத்தவர் அவர். விதவைகள் மறுமணத்தை வலியுறுத்திய முற்போக்குச் சிந்தனையாளராகவும், மனிதாபிமானம் மிக்க மனிதராகவும் அவர் திகழ்ந்தார். பெண்மையின் சிறப்பையும் தனித்துவத்தையும் நவில்வதற்கென்றே ‘பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்துணை’ எனும் ஒப்பற்ற நூலை எழுதினார். பெண்ணுரிமை குறித்து அதிலே அவர் கூறியுள்ள கருத்துக்கள் சிந்திக்கற்பாலன.

”பகுத்தறிவற்ற அஃறிணை உலகில் பெண்ணுரிமைக்குப் பழுதுநேர்ந்ததில்லை. அந்தோ! ஆறறிவுள்ள உயர்திணை இனத்திலேயே பெண்ணுரிமைக்குப் பழுது நேர்ந்திருக்கின்றது…வெட்கம்! வெட்கம்! இதற்குக்காரணம் ஆண்மகனின் தன்னலமே ஆகும். ஆண்மகன், பெண்மகளைத் தனக்குரிய காமப்பொருளாகவும், பணியாளாகவும் கொண்ட நாள்முதல் அவள்தன் உரிமையை இழக்கலானாள். ஆனால், ஒரு நாட்டின் நாகரிகம் என்பது அந்நாட்டுப் பெண்கள் நிலையைப் பொறுத்தேயன்றோ அமைகின்றது. பெண்கள் எவ்விதக் கட்டுப்பாடும் இடுக்கணுமின்றி எங்கே தம் பிறப்புரிமையை நுகர்கின்றனரோ அங்குள்ள ஆண்மக்களே நாகரிக நுட்பம் உணர்ந்தோராவர். அந்நாடே நாகரிகம் பெற்றதாகும்.” என்று முழங்குகின்றார்.

வாய்ச்சொல் வீரராயும், நன்னெறிகளை ஏட்டில் மட்டுமே எழுதிக்குவிக்கும் காகிதப் புலியாகவும் திகழ்ந்தவர் அல்லர் திரு.வி.க. தாம் வலியுறுத்திய வாழ்வியல் நெறிகள் அனைத்தையும் தம் வாழ்வில் தவறாது கடைப்பிடித்தவர். இளவயதிலேயே தம் அருமை மனைவியைப் பறிகொடுத்தும் பிறிதொரு பெண்ணைச் சிந்தையாலும் தொடாத பேராண்மையாளர் அவர் என்றறியும்போது அவருடைய புலனடக்கமும், தவவொழுக்கமும் நம்மைச் சிலிர்க்க வைக்கின்றன.

பல்துறைப் புலமையும், அண்ணல் காந்தியைப் போன்ற எளிமையும், சொல்லும் செயலும் ஒன்றேயான நேர்மையும், பெண்களைத் தெய்வமாய்ப் போற்றும் நீர்மையும் கொண்ட அரிதினும் அரிதான மாமனிதர் தமிழ்த்தென்றல் திரு.வி.க. என்பதை எவரே மறுப்பர்?

இம்மனிதருள் மாணிக்கத்தைப் பற்றி நூலெழுதியுள்ள பேராசிரியர் திரு. ம.ரா.போ. குருசாமி அவர்கள், “படிப்பால் இமயம், பண்பால் குளிர்தென்றல், பணியால்

நாவுக்கரசர், சுருங்கச் சொல்லின் தமிழகம் கண்ட ஓர் காந்தி இவர்!" என்று திரு.வி.க.வைப் பற்றி வியந்துபேசுவது உண்மை வெறும் புகழ்ச்சியில்லை!

***


கட்டுரைக்கு உதவியவை:

1. https://en.wikipedia.org/wiki/Thiru._V._Kalyanasundaram

2.https://ta.wikipedia.org/wiki/%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%B0%E0%AF%81._%E0%AE%B5%E0%AE%BF._%E0%AE%95%E0%AE%B2%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%BE%E0%AE%A3%E0%AE%9A%E0%AF%81%E0%AE%A8%E0%AF%8D%E0%AE%A4%E0%AE%B0%E0%AE%A9%E0%AE%BE%E0%AE%B0%E0%AF%8D

3. முருகன் அல்லது அழகு - திரு.வி.க.

4. பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்துணை - திரு.வி.க.

5. மனித வாழ்க்கையும் காந்தியடிகளும் - திரு.வி.க.



நன்றி வல்லமை மின்னிதழ்:

http://www.vallamai.com/?p=62984





**மேகலா இராமமூர்த்தி**

megala.ramamourty@gmail.com

**27.**

## பாரதி காட்டும் ஒலி அலைகள்!

--ஷைலஜா.



எதிரே விண்ணை முட்டும் கோபுரம் தெரிகிறது. தொலைவில் மண்ணை முட்டும் தொடுவானம் தெரிகிறது. சிறகிருந்தால் இந்த கோபுரத்தின் உச்சியிலிருந்து கிளம்பி அந்தத்தொடுவானம் வரை சக்கர வட்டம் அடிக்கலாம். என்னும் ஆசை எழுகிறது. நமக்குச்சிறகு இல்லை ஆனால் என்ன? வானத்துக்கும் மண்ணுக்குமாய் நாம் சவாரி செய்வதற்கு ஏற்ற வாகனம் ஒன்று இருக்கிறதே!

பாரதி பாடுகிறார்...

தென்னையின் கீற்றுச் சலசல வென்றிடச் செய்துவருங் காற்றே!
உன்னைக் குதிரை கொண்டேறித் திரியுமோர் உள்ளம் படைத்து விட்டோம்.

ஆம் காற்றுதான் அந்த வாகனம். அதிலே ஸ்தூலமாக அதாவது இயல்பான உருவத்துடன் செல்லமுடியாதுபோனாலும், சூட்சமமாக அதாவது உணர்வினால் சவாரி செய்யலாம் அத்தகைய உள்ளம் படைத்திருக்கிறோம் நாம்.

'மண்ணுலகத்து நல்லோசைகள்  காற்றெனும் வானவன் கொண்டுவந்தான்'. என்கிறார் மகாகவி. இந்தக்காற்று நமக்குப்பணிவிடை செய்கிற தூதுவனாக விளங்கி எத்தனை எத்தனை சப்த ஜாலங்களை, ஒலி அலைகளை ஏந்தி வருகிறது! அவை எல்லாவற்றையும் மண்ணில் இசைத்துப்பாடி மகிழ வேண்டும் என்கிற ஆசை எழுகிறதல்லவா!

ஒரு கவிஞர் சொன்னார் "இறைவா  இந்த உலகத்தில்தான் எத்தனை அன்பு நிறைந்திருக்கிறது! அந்த அன்பை எல்லாம் வாரிச்சுருட்டிக்கொண்டுவிடமுடியுமானால் எத்தனை பேறு அது!"

அன்புக்கு மட்டுமல்ல  ஒலிக்கும் அதே தாபம்தான். பாரதியின்  வசனகவிதையில் இதனைக்காணலாம்...

பாரதியின் வசன கவிதை இனிமைகொண்டது. எளிமையானது, கவிதைநயம் மிக்கது, உயிர்த்துடிப்பான  ஓட்டம்பரவியது!

பாம்புப் பிடாரன் பற்றிப் பாரதி தன் வசன கவிதையில்கூறுவதைப்பார்க்கலாம். பாம்பு அவன் இசைக்கு மயங்கி ஆடுகிறது,ஆனால் பாம்புக்கு செவி இல்லை என்கிறார்கள் பிறகு ஏன் அது ஆடுகிறது? பாம்புக்கு செவி என்று தனி உறுப்பு இல்லை ஆனால் தன் உடல் முழுதுமே ஒலி அலைகளை உள்வாங்கி புல்லரித்து நர்த்தனமிடும் அபூர்வ நாத லயம் நிறைந்திருக்கத்தான் வேண்டும்!

இசையை இப்படி உடல்முழுதும் வாங்கி மகிழும்  பிராணி வேறு ஏதும் உண்டா என்று வியப்பு ஏற்படுகிறது! அதிருக்கட்டும்  பாம்புப்பிடாரன் குழல் ஊதுகிறானே அந்தக்குழலிலா இசை பிறந்தது! குழல் தனியாக  இசை புரியமுடியாதே! அப்படியானால் குழலில் உள்ள தொளைமூலமாக இசை பிறந்ததா? வெறும் தொளையில் இசை பிறக்கமுடியாதே! அப்படியானால் பாம்புப்பிடாரன் மூச்சிலே பிறந்ததா இந்த இசை?

கேள்வி சிக்கலாக இருக்கிறது.
பாரதி பதில் சொல்கிறார்...
"அவன் உள்ளத்திலே இசை பிறந்தது, குழலிலே வெளிப்பட்டது!"

அவன் உள்ளத்தில் பாடுகிறான். அது குழலின் தொளையிலே கேட்கிறது' என்கிறார் தன் வசன கவிதையில். ஆனால் நமக்குத்திருப்தி பிறக்கவில்லையே! உள்ளத்திலே இசை பிறந்தாலும் உள்ளம் தனியே எப்படி ஒலிக்கும் என்று கேட்கிறோம். நியாயம் தான்.

உள்ளம் குழலில் ஒட்டாது. ஆனால் உள்ளம் மூச்சில் ஒட்டும். குழல் கூட எப்படி தனியே ஒலிக்கும்? மூச்சு குழலில் ஒட்டும், குழல் பாடும்!

பொருந்தாத பொருள்களைப்பொருத்தி வைத்து அதிலே இசை உண்டாக்குதல்...சக்தி.

இந்த அபூர்வமான விளக்கத்தை பாரதியின் வசன கவிதையில் பார்க்கிறோம். மூச்சிலே ஒட்டும் உள்ளமும், காற்றிலே சவாரி செய்யும் உள்ளமும் அழகும் அருளும் நிறைந்த இப்பெரிய உலகின் ரசானுபவங்களை எல்லாம் நமக்குக்காட்டுகின்றன!

ஒலிமயமானது உலகு! அத்தனை ஒலிகளும் இசைக்கீற்றுகள். அவற்றைக்கேட்டுப் பண்ணிசைக்கும் உள்ளமெல்லாம் பாக்கியம் செய்தவை! எதிரே கோபுரம் தெரிகிறது அது அழகின் வார்ப்பு! தொலைவில் தொடுவானம் தெரிகிறது அது அருளே வடிவான இறைவன் கருணையுடன் மண்ணைத்தொட்டு நிற்கும் பூரிப்பு!

தெரியும் பொருளைக்கொண்டு தெரியாத பொருளை எட்டிப்பிடித்துவிட முடியும் என்கிற தத்துவம் புரிகிறது!

ஒலி அலைகளும் அதே வித்தையைத்தான் உணர்த்துகின்றன. அவை புற உலகை மட்டுமல்லாது அக உலகையும் நமக்குக்காட்டுகின்றன. அவ்வாறு காண்பதில் வெறும் காட்சி இன்பம் மட்டுமல்ல காட்சிக்கு அப்பாற்பட்ட இறையருளின் மாட்சி இன்பமும் நமக்கு வாய்க்கின்றன!
இது எத்தனை பாக்கியம்!




**ஷைலஜா**
shylaja01@gmail.com

28.

# சேலம் கவிச்சிங்கம் இராஜரிஷி அர்த்தநாரீச வர்மா

-- கோ.செங்குட்டுவன்.



“மலையாளர், வங்கர், வடுகர், துருக்கர்
நிலையாகத் தாய்மொழியில் நிற்கத் - தலையாம்
தமிழ்மாது பெற்ற தனயர்க்கு மட்டும்
அமிழ்தமோ இங்கிலீஷ் அறை”

தமிழர்களின் மொழிப்பற்றுக் குறித்து அர்த்தநாரீச வர்மா அவர்களின் கவிதை வரிகள் இவை.

அர்த்தநாரீச வர்மா பாரதிக்கு முன்பு பிறந்தவர். பாரதிக்கும் பின்பும் இருந்தவர். பாரதியின் மறைவுக்கு (அந்தச் சமயத்தில் - 12.9.1921) இரங்கற்பா பாடிய ஒரே கவி எனும் பெருமை படைத்தவர்.

சேலத்தில் சுகவனேசுவரர்- லட்சுமி ஆகியோரின் மகனாக 27.7.1874இல் பிறந்தவர். திருச்செங்கோட்டில் உறையும் அர்த்தநாரீசுவரரின் அருளால் பிறந்ததால் அர்த்தநாரீசு வரர் என்றே பெயரிட்டனர்.

இவர் தமிழில் ஈடுபாடும் தேர்ச்சியும் உடையவர். சிறுவயதிலேயே கவிபாடும் திறன் படைத்தவர். ஆங்கிலத்தில் பழைய மெட்ரிகுலேசன் வரை இவர் தேச்சியுற்றிருக் கிறாராம். சமஸ்கிருத்ததிலும் புலமை வாய்ந்தவராக இருந்திருக்கிறார்.

“அர்த்தநாரீசர் மொத்தத்தில் தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம், தெலுங்கு, இசை, வானசாஸ்திரம், பூகோளம், வரலாறு, சோதிடம், மருத்துவம் இன்னும் பல நூல்களைக் கற்று சகலகலா வல்லுநர் எனப் பெயர் பெற்றிருந்தார்” என்பார் “அர்த்த நாரீச வர்மா” நூலாசிரியர் கவிஞர் த.பழமலய்.

1912இல் சேலத்தில் இயங்கிவந்த சுதேசாபிமானி அச்சுக்கூடத்தின் மேலாளராக இருந்த வர்மா, அச்சுக்கலையில் தேர்ச்சிப் பெற்றவராவார். பத்திரிகைகளுக்கு ஓவியங்களையும் வரைந்து கொடுத்திருக்கிறார்.

சேரமான் பெருமாள் நாயனார் சரிதம் (1909), முதலாவது கரிகாற் சோழன் (1913), பராசரஸ்மிருதி-மூலமும் உரையும் (1923), விதிமதி விளக்கம், வன்னி வம்ச ப்ரகாசிகை (1912), சம்புவராயர் வரலாறு உள்ளிட்ட பல நூல்களை இவர் எழுதியுள்ளார்.

க்ஷத்திரியன், க்ஷத்திரிய சிகாமணி, வீரபாரதி, தமிழ் மன்னன், சூரியோதயம் உள்ளிட்ட இதழ்களையும் நடத்தியிருக்கிறார்.

சுதேசியம், சுதந்திரம், பெண்கல்வி, மதுவிலக்கு குறித்து இவர் எழுதியக் கவிதைகள் அப்போது மிகவும் பிரபலம். எழுச்சியை ஊட்டியவை.

கல்வியைக் கல், கட்சியொழி, கட்குடியை வேண்டாதே, கொல்லாதே, தன்னலத்தைக் கோராதே, நல்லோரைப் போற்று, புலை நீக்கு, புண்ணியஞ் செய், ஆவினங்காப்பாற்று, மரப்பொழுக்கம் பற்று - ஆகியவை அர்த்தநாரீச வர்மா அவர்களின் உபதேச உரைகளாகும்.

தமது 90ஆவது வயதில் 7.12.1964இல் திருவண்ணாமலையில் மறைந்தார் அர்த்தநாரீச வர்மா.

“சுப்பிரமணிய பாரதியின் பாடல்களும், சேலம் அர்த்தநாரீச வர்மா அவர்களின் பாடல்களும் மக்கட்கு தேசபக்தி ஊட்டுவதுபோலக் கற்றைக் கற்றையாக அரசியல் நூல்களை ஓதியவரின் சொற்பெருக்குகளும் அப்பக்தியை ஊட்டா” - திரு.வி.க.

“வர்மா அவர்கள் நம் இந்திய தேசத்தின் பொதுச்சொத்துப் போன்றவர். இவரது கவித்துவம் அபாரமானது. அற்புதமானது. ஆழ்ந்த புலமை நிறைந்தது. கவிதைகள் அனைத்தும் சொற்செட்டானவை. இன்பமளிக்கும் இசையைப் போல இனிமையானவை” - திவான் பகதூர் ஆர்.வி.கிருஷ்ணய்யர்)

“அர்த்தநாரீச வர்மா அவர்கள் தம் பெருஞ்செல்வத்தைத் தரும மார்க்கத்தில் மக்களை உயர்த்துவதற்காகச் செலவிட்டு மிகப்பெரும்பணி செய்துவந்தார். தாழ்ந்தவர்களை உயர்த்துவது சமூகச் சீர்திருத்தம், உயர்ந்தவர்களைத் தாழ்த்துவது சமூகப்பணி அல்ல என்பதை நன்குணர்ந்தமகான். அடக்கத்தையும் தெய்வ பக்தியையும் சத்திய வாழ்க்கையும் பெரிதாக மதித்த ஒருவர்.” - இராஜாஜி.

சேலம் கவிச்சிங்கம் இராஜரிஷி அர்த்தநாரீச வர்மா அவர்களின் சமாதி, திருவண்ணா மலையில் கிரிவலப்பாதையில் ஈசான்ய லிங்கேசுவரர் கோயில் அருகே அமைந்துள்ளது.



**கோ.செங்குட்டுவன்**
ko.senguttuvan@gmail.com

29.

# தமிழ்நாட்டை தனி நாடாக்க குரல் கொடுத்த “விழுப்புரம் கோவிந்தராஜுலு நாயுடு காரு”

-- கோ.செங்குட்டுவன்.




விழுப்புரம் என்.கோவிந்தராஜுலு நாயுடு காரு  திராவிட இயக்க வேர்களில் ஒருவர்.

1922இல் நீதிக்கட்சியைச் சேர்ந்த என்.சுப்புராயப் பிள்ளையை தலைவராகக் கொண்டு விழுப்புரத்தின் முதல் நகர மன்றம் அமைந்தது.

இதில் இடம்பெற்ற 16 உறுப்பினர்களில் கோவிந்தராஜுலு நாயுடு காருவும் ஒருவராவார்.

02.11.1927 - 30.11.1931, 17.04.1941 - 30.03.1947 ஆகிய காலங்களில் விழுப்புரம் நகர மன்றத்தின் தலைவராகவும், 20 ஆண்டுகளுக்கும் மேல் நகரமன்ற உறுப்பினராகவும் கோவிந்தராஜுலு நாயுடுகாரு பதவி வகித்துள்ளார்.

10.01.1953 அன்று நடந்த விழுப்புரம் நகரமன்றக் கூட்டத்தில் பேசிய உறுப்பினர் ஏ.பக்தவச்சலு நாயுடு, சென்னை நகரில் தமக்கு உரிமை கொண்டாடி பேராசைக் கிளர்ச்சியில் ஈடுபடும் ஆந்திரத் தலைவர்களைக் கண்டித்தார்.

இதற்கும் ஒருபடி மேலே சென்ற மூத்த உறுப்பினர் என்.கோவிந்தராஜுலு நாயுடுகாரு "வடக்கே திருப்பதி மலையில் இருந்து தெற்கே கன்னியாகுமரி வரை தமிழ்நாட்டை ஒன்றாக்கி தனி நாடாக்க வேண்டும்" என்று சென்னை முதன் மந்திரியை வலியுறுத்தினார்.

விழுப்புரம் பகுதியில் திராவிட இயக்கத்தைப் பரவச் செய்த முன்னோடி கோவிந்த ராஜுலு நாயுடுகாரு. பெரியாரின் அன்பிற்கும் பாசத்திற்கும் உரியவர்.

இவர், விழுப்புரம் நகரமன்றத்தின் தலைவர் பதவியினை வகித்தபோது, நடிகவேள் எம்.ஆர்.இராதாவின் நாடகங்களை, நகராட்சியின் சார்பிலேயே நடத்தினார் என்பது குறிப்பிடத்தகுந்தது.

என்.எஸ்.கே. மற்றும் தியாகராஜ பாகவதர் ஆகியோருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டபோது இவர்களை விடுதலை செய்ய அரசாங்கத்தை வலியுறுத்துவதற்காக, கீழ்க்காணும் கமிட்டி அமைக்கப்பட்டது.

ஈ.வெ.ரா.பெரியார், தி.பொ.வேதாசலம் (திருச்சி வழக்கறிஞர்), முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம், ராவ்பகதூர் ஏ.ஒய்.அருளானந்தசாமி நாடார் (தஞ்சை நகரசபை தலைவர்), டி.சண்முகம் (தஞ்சை ஜில்லா போர்டு தலைவர்), பி.இரத்தினசாமி பிள்ளை (சேலம் நகரசபை தலைவர்), வி.எஸ்.வீரபத்திரன் (திருப்பத்தூர் நகரசபை தலைவர்), கே.எஸ்.பழனிசாமி கவுண்டர் (திருப்பூர் நகரசபை தலைவர்), ஆர்.கே. வெங்கடசாமி (ஈரோடு நகரசபை தலைவர்), கே.முத்துகிருஷ்ண நாயுடு (தாராபுரம் நகரசபை

தலைவர்), எஸ்.சின்னசாமி முதலியார் (கரூர் நகரசபை தலைவர்), சி.என்.நாராயணன் செட்டியார் (காரைக்குடி நகரசபை தலைவர்), திருவாங்கூர் வி.எஸ்.கிருஷ்ணப்பிள்ளை எம்.எல்.ஏ., ஆர்.எஸ்.நாயுடு, பார் அட் லா (மதுரை மீனாட்சியம்மன் கோயில் நிர்வாக அதிகாரி), எம்.எஸ்.எம்.ராஜன் (இலங்கை) உள்ளிட்டோர் இடம்பெற்றிருந்தனர். இக்குழுவில் விழுப்புரம் நகரசபை தலைவர் என்.கோவிந்தராஜுலு நாயுடுகாருவும் இடம்பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

விழுப்புரம் (பழைய) பேருந்து நிலையத்தில் 01.05.1955 அன்று நகராட்சி சார்பில் உந்து வண்டி நிலையம் திறக்கப்பட்டது, நகரமன்றத் தலைவராக எம்.சண்முகம் இருக்கிறார். ஆனாலும் உந்து வண்டி நிலையத்தைத் திறந்து வைத்தவர் முன்னாள் தலைவரான எம்.கோவிந்தராஜுலு நாயுடு என்பது குறிப்பிடத்தக்கது.

அன்றைய அரசியலில் நாயுடு பெற்றிருந்த முக்கியத்துவத்தை இவை நமக்கு உணர்த்துகின்றன. கோவிந்தராஜுலு நாயுடுவின் நினைவைப் போற்றும் நினைவுச் சின்னங்கள் எதுவும் விழுப்புரத்தில் இல்லை. கிழக்குப் பாண்டி ரோடில் அவருக்குச் சொந்தமான மிகப்பெரிய பங்களா இருந்தது. "நாயுடு பங்களா" என்றழைக்கப்பட்ட அந்த பங்களா, 20 ஆண்டுகளுக்கு முன்பு இடிக்கப்பட்டுவிட்டது. இப்போது அந்த இடத்தில் எல்.ஐ.சி. அலுவலகம் நின்று கொண்டிருக்கிறது. விழுப்புரம் பழைய பேருந்து நிலையத்தில் காணப்படும் அடிக்கல் மட்டுமே கோவிந்தராஜுலு நாயுடு காருவின் நினைவாய் இருந்து கொண்டிருக்கிறது.



இந்த அடிக்கல்லும் இன்னும் எத்தனை நாளைக்கு இருக்குமோ யாருக்குத் தெரியும்?

துணை நின்றவை:

திராவிட இயக்க வரலாறு - நாவலர் நெடுஞ்செழியன்

ஏழிசை மன்னர் எம்.கே.டி.பாகவதர் - மாலதி பாலன்

விழுப்புரம் வரலாற்றுச் சுவடுகள் - கோ.செங்குட்டுவன்

விழுப்புரம் நகரமன்ற நடவடிக்கைக் குறிப்புகள் 1919 -2010




**கோ.செங்குட்டுவன்**

ko.senguttuvan@gmail.com

## 30.

# முனைவர் ந. அரணமுறுவலுக்கு அஞ்சலி

-- ந. தெய்வ சுந்தரம்.



**முனைவர் ந. அரணமுறுவல்** **(20-10-1949) ... (06.11.2015)**

தனித்தமிழ் உணர்வாளர் ... தமிழியக்கத் தொண்டர் ... ஈழவிடுதலைப் போராட்டத் தீவிர ஆதரவாளர் ... பொதுவுடைமைச் சிந்தனையாளர் ... தமிழ்த்தேசியப் போராளி... இவ்வாறு அடுக்கிக்கொண்டே செல்லலாம். எனக்கு 40 ஆண்டுகால நண்பர்... தோழர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பிஓஎல்., பட்டம், சென்னைப் பச்சையப்பா கல்லூரியில் தமிழில் முதுகலைப் பட்டம், சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்மொழித்துறையில் எனது வழிகாட்டுதலில் முனைவர் பட்டம் ஆகியவற்றைப் பெற்றவர்.

பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் தென்மொழி இதழுக்கு ஆணிவேராகச் செயல்பட்டவர். தென்மொழி இதழுக்காகவே கடலூரிலிருந்து சென்னையைநோக்கித் தனது வாழ்க்கையைத் திருப்பினார். சூளைமேட்டில் ஒரு தனியார் உயர்நிலைப் பள்ளியில் தனது ஆசிரியப் பணியைத் தொடங்கினார். இவரது திருமணத்தைப் பாவலரேறு அவர்களே முன்னின்று 1971 ஆம் ஆண்டு நடத்தினார். அரசுப் பள்ளிகளிலும் பணியாற்றிய இவர், பின்னர் பாவாணர் அச்சகத்தைத் தொடங்கினார். 1977 இல் தமிழீழப் போராட்டத்தையொட்டி, தமிழகத்தில் தமிழக ஈழ

நட்புறவுக்கழகத்தைத் தொடங்கினார். தமிழீழப் போராளிகளின் அனைத்து குழுக்களுக்கும் தமிழகத்தில் தேவையான உதவிகள் அனைத்தையும் செய்து கொடுத்தார். குறிப்பாக, தோழர் பத்மநாபா அவர்களின் உற்ற தோழராக இருந்தார். பொதுவுடமைச் சிந்தனைகளால் ஈர்க்கப்பட்ட இவர், தமிழகத்தின் மார்க்சிய இயக்கங்கள் அனைத்துடனும் தொடர்பு கொண்டிருந்தார்.

சென்னையில் தமிழ்மொழி, தமிழ்த்தேசியம், பொதுவுடமை இயக்கம், தமிழீழம் தொடர்பான எந்த ஒரு கூட்டமாகவும் பேரணியாகவும் இருந்தாலும், அவற்றில் முதல் செயல்வீரராக முன்னின்றவர் தோழர் அரணமுறுவல். சென்னையில் பேராசிரியர் பொற்கோ, நான், அரணமுறுவல் மூவரும் இணைந்து தமிழ் பயிற்றுமொழிக் கருத்தரங்கம், அனைத்துமொழிகளையும் அரசு அலுவலகமொழிகளாக ஆக்கவேண்டும் என்பதை வலியுறுத்தும் மாநாடு, கணினித்தமிழ் கருத்தரங்கம் போன்றவற்றை நடத்தியுள்ளோம். சில காலம் தமிழ்நாடு அரசின் தமிழ்வளர்ச்சித்துறையில் உதவி இயக்குநராகவும் பணியாற்றியுள்ளார். பின்னர் செம்மொழித் தமிழ் மத்திய ஆய்வு நிறுவனத்தில் ஆய்வறிஞராகப் பணியாற்றினார். தமிழியக்கத்தின் துணைப் பொதுச்செயலாளராகப் பணியாற்றி, 'தமிழியக்கம்' என்ற இதழையும் தொடங்கினார். பாவாணரின் 'முதன்மொழி' என்ற இதழை மீண்டும் தொடர்ந்தார்.

ஆங்கில எதிர்ப்பு இயக்கத்தின் முன்னணி வீரராகச் செயல்பட்டார். உலகத்தமிழ்க் கழகத்திற்குப் புத்துயிர் ஊட்டினார். மறைந்த பேராசிரியர்கள் க. கைலாசபதி, பேரா. சிவத்தம்பி ஆகியோருக்கும் மார்க்சியப் புரட்சிகர எழுத்தாளர் திரு. கணேசலிங்கன் அவர்களுக்கும் நெருங்கிய நண்பராக இருந்தார். செம்மொழித் தமிழ் மத்திய ஆய்வுநிறுவனத்தில் பணியாற்றிபோது, தமிழ்ப் பேரறிஞர் தி.வே. கோபாலய்யர் அவர்களுடன் இணைந்து, தொல்காப்பியம் பொருளதிகாரம் -நச்சினார்க்கினியர், இளம்பூரணர் ஆகியோரின் உரைகளைப் பதிப்பித்தார். அவருடைய முனைவர் பட்ட ஆய்வேடு பேரா. க. கைலாசபதி அவர்களின் ஆய்வுமுறைகள்பற்றிய ஆய்வாகும்.

அவரது தோளில் எப்போதும் ஒரு பை தொங்கும். அதில் தமிழ் இயக்கம், பொதுவுடமை இயக்கம், தமிழீழ இயக்கம் ஆகியவைபற்றிய துண்டுப்பிரசுரங்களும் நூல்களும் அடங்கியிருக்கும். அவரில்லாமல் சென்னையில் எந்த ஒரு கூட்டத்தையும் கருத்தரங்கையும் கூட்டத்தையும் நான் நடத்தியது கிடையாது என்ற அளவிற்கு எனக்கு உதவியவர். சில மாதங்களுக்கு முன்னர் நான் நெல்லை சென்றிருந்தபோது, பாளையில் கணினித்தமிழ்பற்றிய ஒரு கூட்டத்திற்கு

ஏற்பாடுசெய்து, என்னை உரையாற்றும்படிக் கூறினார். அவர் மறைவை என்னால் இன்னும் நம்பமுடியவில்லை. அவரதுதுணைவியார் பெயர் திருமதி கண்ணம்மை. ஒரு மகள் ( திருமதி இறைமொழி) , ஒரு மகன் ( திரு.அறிவுக்கனல்). எனக்கு மட்டுமல்ல.. பலருக்கும் அவரது மறைவு, ஒரு கையை இழந்ததுபோல், ஒரு பேரிழப்பாக இருக்கிறது.

மறைந்த தோழர் ந. அரணமுறுவலுக்கான இரங்கல்கூட்டம் அவருடைய சென்னை தாம்பரம் இல்லத்தில் 07-11-2015 சனியன்று காலை 11 மணிக்கு நடைபெற்றது. திரு. பழ. நெடுமாறன் அவர்கள் தலைமைதாங்கினார். அரணமுறுவலின் நண்பர்கள், தோழர்கள் பலர் இக்கூட்டத்தில் பேசினர். தோழர்கள் ஆனைமுத்து, தியாகு, மணியரசன், இளவழகன், டி டி எஸ் மணி, .பொழிலன், பேராசிரியர்கள் பொற்கோ, மணியன், அரசேந்திரன் , கவிஞர் அறிவுமதி, கவிஞர் இன்குலாப், எழுத்தாளர் சூரியதீபன், திரு. பிரபா கல்யாணி உட்பட பலர் அரணமுறுவலுடன் தங்களுக்கு இருந்த தொடர்பையும், அவரது பணிகளையும்பற்றிப் பேசினர்.

தமிழியக்கம், இடதுசாரி இயக்கங்களைச் சேர்ந்த பலர் பங்கேற்றனர். தமிழியக்கத்திற்கு ஒரு பெரிய இழப்பு என்று ஒருமித்த குரலில் அனைவரும் கூறினர். இறுதியில் ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது . பின்னர் அவரது உடல் தாம்பரம் மயானக்கரைக்கு ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டது. 2 மணியளவில் மின்தகன மேடைக்கு உடல் எடுத்துச்செல்லப்பட்டு, எரியூட்டப்பட்டது. தோழர் அரணமுறுவலின் வாழ்க்கைப் பயணம் முடிவடைந்தது. ஆனால் அவரது தமிழுணர்வு வரலாற்றில் நம்மிடையே தொடரும் என்பதில் ஐயமில்லை.



**முனைவர் ந. தெய்வ சுந்தரம்**
ndsundaram@hotmail.com

## 31.

# ஜப்பானியத் தமிழறிஞர் நொபுரு கரஷிமாவுக்குப் புகழஞ்சலி

--து.சுந்தரம்.



தமிழுக்குத் தொண்டாற்றிய அயல்நாட்டுப் பெருமக்கள் பலப்பலர். அத்தகைய பெருமக்களுள் ஒருவர், அண்மையில் 26.11.2015-இல் மறைந்த ஜப்பானிய அறிஞர் நொபுரு கரஷிமா அவர்கள். நம்மில் பலருக்கு அவரைப்பற்றித் தெரியுமா என்பது ஐயமே. (கட்டுரை ஆசிரியர் குறிப்பு: கட்டுரை ஆசிரியர் கல்வெட்டியலைக் கற்கத்தொடங்கி தமிழகத்தொல்லியல் கழகத்தில் சேர்ந்த பின்னரே கரஷிமா என்பவர் யார் எனத்தெரிய வந்தது..) தமிழ்க் கல்வெட்டுகளை ஆராயும் முகத்தான் தமிழ் கற்ற அப்பெருமகனாருக்குப் புகழஞ்சலி செய்யும் நிகழ்வு 5.12.2015 அன்று கோவையில் ”தமிழ்நாடு கலை இலக்கியப்பெருமன்ற”த்தின் சார்பில் நடைபெற்றது. அதுபோழ்து, தொல்லியல் அறிஞர் பேராசிரியர் எ.சுப்பராயலு அவர்களும், தொல்லியல் அறிஞர் முனைவர் அர.பூங்குன்றன் அவர்களும் உரை நிகழ்த்தினர். பேராசிரியர் எ.சுப்பராயலு அவர்கள், நொபுரு கரஷிமா அவர்களுடன் இணைந்து பணியாற்றியவர் என்னும் கரணியத்தால் அவர் கரஷிமா பற்றி விரிவாகப் பேசினார். அவருடைய உரை கரஷிமாவைப்பற்றி நாம் தெளிவாகத் தெரிந்துகொள்ளப் பெரிதும் துணை செய்தது.

அவருடைய உரையைச் செவிமடுத்து உள்வாங்கியவற்றை இங்கே கட்டுரை வடிவில் தந்துள்ளேன். (பிழைகள் சுட்டப்பட்டால் திருத்தம் எளிதாகும்.)

1933-ஆம் ஆண்டு பிறந்த கரஷிமா தம் இருபத்தைந்தாவது அகவையில் 1958-இல் டோக்கியோ பல்கலையில் வரலாற்றுத்துறையில் பட்டப்படிப்பை (Graduation) முடித்தார். அது ஒரு முதன்மையான பட்டமாகும். அப்போதே அவரது எதிர்காலப்பணி தொடங்கியது எனலாம். அப்பட்டத்துக்கான ஆய்வுக்கட்டுரையாக அவர் தெரிவு செய்தது சோழர் வரலாறு. (ஆசிரியர் குறிப்பு; ஜப்பான் பட்டப்படிப்பில் ஒரு ஜப்பானியர் அவரது நாட்டின் வரலாற்றுக்கூறுகளில் ஒன்றைத் தெரிவு செய்யாமல் தமிழக வரலாற்றில் நாட்டம் கொண்டார் என்பது வியப்பையே அளிக்கிறது.) அந்த ஆய்வுக்கட்டுரையை அவர் எழுதியது ஜப்பானிய மொழியில்தான். அவருக்கு ஆங்கிலம் அவ்வளவாகத் தெரியாது. ஆங்கிலத்தில் பேசுவதும் எழுதுவதும் குறைவு. (பின்னாளில் 1980களில் உலகமயமாக்கல் கரணியமாக ஜப்பானில் மற்ற மொழிகளுக்கும் முதன்மை தரப்பட்டபோது. அவர் ஆங்கிலத்தில் எழுதினார்.)

அவருடைய காலகட்டத்தில், கல்விக்கு மதிப்பும் முதன்மையும் இருந்தன. கல்வியாளர்கள் பெரிதும் மதிக்கப்பட்டார்கள். கல்வித்துறையில் புதிய திட்டங்களைக் கல்வித்துறை அறிஞர்கள்தாம் கொண்டுவந்தனர். அரசோ அல்லது அரசியல்வாதிகளோ  தலையிடவில்லை. மற்ற துறைகளுக்கும் இந்த நடைமுறைதான். வெளிநாட்டுக்கல்வியும் கொண்டுவரப்பட்டது. தாய் மொழியான ஜப்பானிய மொழியிலேயே கல்வி கற்றதும், அரசியல் தலையீடற்ற கல்வித்திட்டங்கள், செயல்பாடுகள் ஆகியன நடைமுறையில் இருந்தமையும் கரஷிமாவின் வளர்ச்சிக்குக் கரணியங்களாக அமைந்தன. மேலும், Study Group என்னும் கற்போர் குழுக்கள் இருந்தமையும் கரஷிமாவின் வளர்ச்சிக்குப் பெரிதும் துணைசெய்தன. ஆய்வுக்கான பாடங்களைப் பயில்வோர் சிலர் ஒன்றுசேர்ந்து மாதம் ஒரு முறை இத்தகைய கற்போர் குழுவாக அமைந்து கூடிப்பேசுவர். கருத்துகளைப் பகிர்ந்துகொள்வர். கூட்ட விவாதங்களின் அடிப்படையில் ஆய்வுக்கருத்துகள் பின்னர் நூலாக வெளிவரும். பின்னாளில் இவ்வாறான குழுக்கூட்டங்களுக்குக் கரஷிமா சுப்பராயலுவை அழைத்துக்கொண்டதுண்டு. (சுப்பராயலு அவர்கள் 1973-இல் டோக்கியோ பல்கலையில் ஆராய்ச்சி மாணவராகச் சேர்ந்தபோதுதான் கரஷிமாவுடன் முறையான அறிமுகம் வாய்க்கப்பெற்றார்.)

ஜப்பானில் பிறமொழிகளுக்கும் இடம் கிடைத்த காலத்தில்தான் கரஷிமா ஆங்கில அறிவை வளர்த்துக்கொண்டார். முதன் முதலில் ஆங்கிலத்தில் எழுதத்தொடங்கிய

ஜப்பானியர் கரஷிமாவாக இருக்க வாய்ப்புண்டு. 1966-இல் முதன் முதலில் கோலாலம்பூரில் நடைபெற்ற தமிழ் மாநாட்டில் தம்முடைய முதல் ஆங்கிலக்கட்டுரையை வெளியிட்டார். அதற்கு முன்னரே, 1963-இல் ஜப்பான்-இந்தியா நாடுகளுக்கிடையேயான மாணவர் பரிமாற்றத்தில் (Exchange students) வரலாற்று ஆய்வு மாணவராகச் சென்னைப்பல்கலைக்கு வந்தார். அப்போது, நடுவணரசின் தொல்லியல் துறையின் தென்னிந்திய மையம் உதகையில் இயங்கிவந்தது. எனவே 1963-இல் தமிழ்க் கல்வெட்டுகளைப் படிப்பதற்காக கரஷிமா உதகை வந்து சில மாதங்கள் படித்தார். தமிழ்க்கல்வெட்டுகளைப் படிப்பதற்காகவே தமிழ் கற்றார். 1968-இல் இரண்டாம் உலகத்தமிழ் மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்னை வந்தார். அப்போது சுப்பராயலு அவர்கள் சென்னைப் பல்கலையில் ஆராய்ச்சி மாணவராக இருந்தார். சோழ நாட்டு நாடுகள், ஊர்கள் ஆகியன பற்றிய ஒரு அட்டவணையை சுப்பராயலு அவர்கள் ஆக்கியிருந்தார். கரஷிமா அதைப் படித்திருக்கிறார்.

1968-இல் சென்னை வந்த கரஷிமா 1968 முதல் 1971 வரை மூன்றாண்டுகள் மீண்டும் கல்வெட்டுத்துறையில் கழித்தார். இந்தக் காலகட்டத்தில் கரஷிமாவுக்குத் திருமணம் ஆகிவிட்டிருந்தது. ஒரு மகன் உண்டு. இப்போது கல்வெட்டுத்துறையின் தென்னிந்திய மையம் மைசூரில் இயங்கியது. மைசூரில் இரண்டாவது மகன் பிறப்பு. இந்த மூன்றாண்டுகளில் அவர் தமிழ் நன்றாகக் கற்றார். கல்வெட்டுத்தமிழை நன்றாகப் படிக்கக் கற்றுக்கொண்டார். ஆனால் பேசுவதற்குத் தயக்கம். ஜப்பானில் அவர் தலைமையேற்ற கற்போர் குழுவினர்க்குத் தமிழைக் கற்றுவித்தார். இந்நிலையில், 1967-1974 ஆண்டுகளில் கரஷிமா டோக்கியோவில் ஆசிய ஆப்பிரிக்க மொழி மற்றும் பண்பாட்டு ஆய்வு நிறுவனத்தில் ஆசிரியப்பணியையும் மேற்கொண்டிருந்தார். 1973-1975 ஆண்டுகளில் சுப்பராயலு அவர்கள் டோக்கியோ சென்றார்; கரஷிமாவுடன் கூட்டு ஆராய்ச்சியில் இணைந்துகொண்டார். தலைப்பு “சோழர் காலக் கல்வெட்டுகளில் ஆள்பெயர்கள்”. இங்கு கரஷிமா அவர்களின் ஆய்வு முறை கருதுதற்குரியது. காலமுறைப்படியும் இட முறைப்படியும் ஆய்வு செய்வதில் அவர் முனைந்தார். கல்வெட்டுகளைப் படித்துப் புரிந்துகொள்வதில் “Contextual meaning” முதன்மையான ஒன்று என அவர் கருதினார். எல்லாக் கல்வெட்டுகளையும் தொகுத்துக் கிடைக்கும் ஒருங்குநிலையில் சொற்களுக்குப் பொருள்காணவேண்டும் என்பது அவரது ஆய்வு நெறிமுறை. புள்ளியியல் முறை(Statistics)யோடு இயைந்த ஒன்று. மேற்படி ஆள்பெயர் ஆய்வில் 9000 சொற்களை வெளியிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கரஷிமா அவர்கள் ஒரு ஆய்வாளர் என்ற நிலையில் தமக்கு முன்னர் இருந்த வரலாற்று ஆய்வாளர்களை ஒருபோதும் மதிக்காமல் இருந்ததில்லை. அவருடைய

ஆய்வுக்கட்டுரைகளில் முந்தைய வரலாற்று ஆசிரியர்களைப் பற்றிய குறிப்புகள் உள. ஆனால் அவர் வலியப்போய் மற்றவரிடம் வம்பிழுப்பதில்லை. கருத்தியல் (Theoretical) சார்ந்த ஆய்வுமுறைகளை அவர் ஏற்கவில்லை. காட்டாக மார்க்சியம் சார்ந்த ஆய்வினை முன்வைத்து அவர் ஆய்வு செய்யவில்லை. சார்பின்மை என்பது அவரது ஆய்வு நெறிமுறை. கல்வெட்டு ஆய்வுகளிலும் நூல்கள் தொகுத்தலிலும் அவர் கூட்டு முயற்சியை ஊக்குவித்தார். முதன்முதலில் அவர் தம் ஆய்வுக்கட்டுரையை 1980-இல் எழுதினார். முதலில் ஜப்பானிய மொழியில் எழுதி அவரே அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். அந்த ஆய்வுக்காக அவர் எடுத்துக்கொண்ட பொருள் சோழர்கால ஊர்களிலிருந்த நிலவுடைமை. சோழர்களின் 10, 11 -ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டுகளைக் கொண்டு அவர் தம் ஆய்வை மேற்கொண்டார். அதற்காகப் பயன்படுத்திய கல்வெட்டுகள் திருச்சிக்கருகில் அமைந்த அல்லூர் மற்றும் ஈசானமங்கலம் ஆகிய ஊர்களின் கல்வெட்டுகள். பெரும்பாலான ஊர்களில் நிலவுடைமையில் கூட்டுடைமை இருந்தது என்பதும், மாறாகப் பிராமண ஊர்களில் தனியுடைமை நிலவியது என்பதும் அவர் நிறுவிய கருதுகோள்களாகும். 1980-ஆம் ஆண்டில் அவர் விஜய நகர வரலாற்றில் ஆய்வு செய்தார். முதலில் தமிழ்க் கல்வெட்டுகளைப் படித்தும் பின்னர் கன்னடக் கல்வெட்டுகளைப் படித்தும் அவர் ஆய்வுசெய்தார். நாயக்கர் என்பது ஒரு பட்டமே; அது சாதிப்பெயரல்ல. “நாயக்கத்தனம்” என்று தமிழிலுல் “நாயங்க்கரம்” என்று தெலுங்கிலும் நாயக்கர்களின் தன்மை மற்றும் நிலையை விளக்கினார். நாயக்கர் என்பது சாதியன்று என்பதற்குச் சான்றாக சாளுவநாயக்கன் என்பான் காஞ்சிபுரத்திலிருந்த ஒரு பிராமணன் ஆவான் என்னும் குறிப்பு சிறந்த எடுத்துக்காட்டு.

கி.பி. 1350-இலிருந்து விஜயநகர ஆட்சி தொடங்குகிறது. விஜயநகர ஆட்சியில் ஆட்சிக்குட்பட்ட நிலப்பகுதி பல இராஜ்ஜியங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன. நாற்பதுக்குமேல் இராஜ்ஜியங்கள் இருந்தன. திருச்சி, தஞ்சை, வழுதலம்பட்டு, தாராபுரம், டணாயக்கன்கோட்டை ஆகியன அவற்றுள் ஒரு சில. இராஜ்ஜியங்களின் ஆட்சிப்பொறுப்பும் தலைமையும் பிரதானிகள் என்பாரிடம் ஒப்படைக்கப்பட்டன. இத்தகைய இராஜ்ஜிய-பிரதானி ஆட்சிமுறை விஜயநகர ஆட்சியில் மூன்றாண்டுக்காலம் நிலவியது. மூன்றாண்டுகளுக்குப்பின்னர், படைத்தலைவர்களுக்கு முதன்மையிடம் அளிக்கப்பட்டது. விஜயநகரப்பேரரசு உருவாக்கத்துக்காக விஜயநகர அரசர்கள் பல போர்களில் ஈடுபடவேண்டியிருந்தது. படைத்தலைவர்கள் பல்வேறு இடங்களில் ஆங்காங்கே நிலை நிற்க (தங்க) வேண்டியிருந்தது. அவர்களின் நிலை நிற்றலுக்குத் தொடர்ச்சியான செலவுகளும் இருந்தன. அச்செலவுகளை ஈடுகட்ட அவர்களுக்கு விஜயநகர அரசர்கள் நிலங்களை

ஒதுக்கீடு செய்தனர். அந்நிலங்களின் வரி வருமானங்களில் ஒரு பகுதி படைத்தலைவர்களுக்கும் மிகுந்தபகுதி விஜயநகர அரசுக்கும் பங்கீடு செய்யப்பட்டன. இதை நாயக்கர்கள் சற்றே மாற்றினர். விஜயநகர அரசுக்கு முறையான வரி வருமானத்தில் சிக்கல் ஏற்பட்டது. கி.பி. 1460-க்கு மேல் குறுநிலத் தலைவர்களின் ஆட்சி மேலோங்கியது. கி.பி. 1505 முதல் துளுவ அரசர்களின் ஆட்சி ஏற்பட்டது. கிருஷ்ணதேவராயர் நாயக்கர்களைக் கட்டுக்குள் கொண்டுவருவதற்காக நாயக்கர்களுடன் ஒப்பந்தம் செய்கிறார். நாயக்கர்கள் கிருஷ்ணதேவராயருக்குப் பணிந்தனர். மைசூர் நஞ்சராயர்கள் மட்டும் பணியவில்லை. ஆட்சி அதிகாரம்,

1. அரசன்
2. நாயக்கர்கள் (பெரிய நாயக்கர்)
3. சின்ன நாயக்கர்கள்

என்னும் படிநிலையில் அமைந்தன.

தஞ்சை, மதுரை, செஞ்சி ஆகிய பகுதிகளின் நாயக்கர்கள் பெரிய நாயக்கர் வரிசையில் அடங்குவர்.
கரஷிமாவின் நாயக்கர்கள் பற்றிய ஆய்வில் ஏறத்தாழ 150 ஆண்டுகள் காலகட்டத்தில் 300 நாயக்கர்கள் குறிக்கப்படுகிறார்கள். நாயக்கர்களின் தொடர்ச்சியாகப் பாளையக்காரர்கள் காணப்படுகிறார்கள்.

அடுத்து, கரஷிமா அவர்களின் ஆய்வு, தென்னிந்தியாவுக்கும் தென்கிழக்காசியாவுக்கும் இருந்த தொடர்பு மற்றும் பண்பாட்டுத் தாக்கம் பற்றியது. இந்த ஆய்வும் ஜப்பானிய மற்றும் தமிழ் அறிஞர்களின் கூட்டு ஆய்வாக நிகழ்ந்தது. அடுத்து மேற்கொண்ட தென்னிந்திய வணிகக்குழுக்கள் பற்றிய ஆய்விலும் மேற்சொன்னவாறு ஜப்பானிய, தமிழ் அறிஞர்களின் கூட்டு ஆய்வு நடைபெற்றது. தென்னிந்திய வணிகக் குழுக்களில் முதன்மையானவர்கள் நானாதேசி வணிகக்குழுவினர் ஆவர். இவர்களின் தொடக்கம் கன்னடப்பகுதியிலிருந்து காணப்படுகிறது. கி.பி. 9-ஆம் நூற்றாண்டுக்குப் பின்னரே தமிழகத்தில் இவர்கள் குறிக்கப்பெறுகிறார்கள். இவர்களது வணிகத் தொடர்பு மற்றும் செயல்பாடுகள் பல்வேறு அயல் நாடுகளுடன் என்றாலும் இவர்களின் தொடர்பு மொழி தமிழாகவே இருந்துள்ளது. இதன் கரணியமகவே, நானாதேசிகளின் கல்வெட்டுகள், மியான்மர்(பர்மா), மலேசியா, இந்தோனேஷியா, தாய்லாந்து, கம்போடியா ஆகிய நாடுகளில் தமிழ்க்கல்வெட்டுகள் வடிவிலே கிடைக்கின்றன. முதல் குலோத்துங்கனின் தமிழ்க்கல்வெட்டொன்று இந்தோனேஷியாவில் உள்ளது. இதில்

ஜாவா, தமிழ் ஆகிய இரு மொழிகளும் காணப்படுகின்றன. லாவோஸ் நாட்டில் ஒரு மலைமீதுள்ள சிவன்கோவிலில் சமற்கிருதக் கல்வெட்டொன்று காணப்படுகிறது.

கரஷிமா அவர்கள் எட்டு தமிழ் மாநாடுகளில் கலந்துகொண்டுள்ளார். அவரைப்பற்றித் தெரிந்துகொள்ளும்போதே ஜப்பானிய நாட்டுச் சூழ்நிலையும் மக்களின் பண்பும் நமக்கு ஒருவாறு விளங்கும். உலகப்போரின் தாக்கங்கள், சிக்கல்கள்(பிரச்சினைகள்) அவர் அறிந்திருந்தவர். ஜப்பானியர் அணுசக்தியின் பேரழிவைச் சந்தித்தவர்களாகையால் அணுசக்திக்கு எதிர்ப்புக் காட்டியவர்கள். இருப்பினும், தற்போது, நிலைமை மாறி ஆக்கப்பணிகளுக்கு அணுசக்தியை ஏற்றுக்கொள்கின்றனர். ஜப்பானியர் கல்வியை மிக உயர்வாக மதித்தனர். ஜப்பானியப் புத்தாண்டன்று ஜப்பானியர் முதலில் சந்தித்து மரியாதை செய்வது தம் ஆசிரியர்களைத்தான்.

கரஷிமா அவர்கள் தம் 72-ஆம் அகவையில் எழுத்துப்பணிகளை நிறுத்திவிட்டுத் தமக்குப்பிடித்த மரச்சிற்பங்கள் செய்யும் பணியில் ஈடுபடப்போவதாகக் கூறினாலும், ஆய்வும் எழுத்துப்பணியும் அவரை விடவில்லை. இறப்புவரை எழுத்துப்பணி. அவருக்குக் கடந்த பத்து ஆண்டுகளாக உடல் நலக்குறைவு இருந்துள்ளது. முன்னர் ஒருமுறை மஞ்சள் காமாலை நோய் தாக்கியதுண்டு. எனினும் குருதிப்புற்று நோய் கரணியமாக அவரது மறைவுக்கு ஒரு மாதம் முன்பு அவரது பணி முடங்கியது. வருகின்ற 2016 ஜனவரியில் கரஷிமா அவர்கள் தம் மனைவியோடு தமிழகம் வந்து உதகை, மைசூர், சென்னை ஆகிய ஊர்களில் பதினைந்து நாள்கள் கழிக்கத் திட்டஏற்பாடு வைத்திருந்தார். ஆனால் நிகழ்ந்தது வேறு.

முடிவுரை: கரஷிமா அவர்களின் ஆய்வுகள் இளைஞர்களை எட்டவேண்டும். தற்போதுள்ள சூழ்நிலையில், ஆய்வுப்பட்டமான முனைவர் பட்டம் பெற்றவர் ஏராளமாக உளர். எளிதில் பட்டம் பெறும் சூழலும் உள்ளது.
ஆனால், ஆய்வறிவில் ஆழம் இருப்பதில்லை. முந்தைய ஆய்வறிஞர்களின் நூல்களை எல்லாம் படித்துள்ளனரா என்பது ஐயமே. குறிப்பாக ஆங்கிலத்தில் கிடைக்கின்ற மிகுதியான ஆய்வு நூல்கள் படிக்கப்படுவதில்லை. அவை தமிழில் மொழியாக்கமும் செய்யப்படுவதில்லை. இனிவரும் ஆய்வாளர்கள், இவற்றையெல்லாம் செய்யவேண்டும்.

முனைவர் அர.பூங்குன்றன் அவர்களின் சுருக்கவுரையிலிருந்து சில செய்திகள்:
கரஷிமா அவர்களைச் சந்தித்ததுண்டு. அவருடன் உரையாடியதுண்டு. ஆனால் அவருடைய நூல்களைப் படித்துத்தான் அவருடைய ஆய்வுப்பணியை

அறியமுடிந்தது. சோழ நாட்டில் ஏற்பட்ட மாற்றங்கள் குறித்த நூல்கள் குறிப்பிடத்தக்கவை. அவரது நூல்கள் உறுதியான சான்றுகள் கொண்டவை. சோழர் காலத்தில் நூற்றுக்கணக்கான வரிகள் நடைமுறையில் இருந்தன என்றாலும், அனைத்துமே அனைத்துப் பகுதிகளிலுமே நடைமுறையில் இல்லை. ஏழே ஏழு வரிகள் மட்டிலுமே எல்லாப்பகுதிகளிலும் வாங்கப்பட்டன. மற்றவரிகள் யாவும் அவ்வப் பகுதிகளைப் பொறுத்தன. மேலும் பல்வேறு காலங்களில் பல்வேறு வரிகள் நடைமுறையில் இருந்தன. கரஷிமாவின் ஆய்வு புள்ளிவிவரங்களைக் கொண்டு அமைந்தவை. அவரது ஆய்வு நெறிமுறை விஞ்ஞான அடிப்படையிலானது. அது பல ஆய்வுகளுக்கு உற்ற துணையாக இருக்கும். 1984-இல் முதல் நூல்; அதுவும் தமிழக வரலாற்றைப்பற்றியது. முன்னர் ஆய்வு செய்த அறிஞர்களைப்பற்றிய குறிப்புகள் அந்நூலில் உண்டு. காட்டாக, இந்திய ஆய்வறிஞர் திரு. டாங்கேயின் நூல் பற்றிய குறிப்பைச் சொல்லலாம். அவருக்கென்று ஒரு நெறிமுறை இருந்தது. ஜப்பானில் ஆய்வு நடைபெற்றாலும் ஜப்பான், மைசூர் ஆகிய இரு பகுதிகளைச் சேர்ந்த அறிஞர்குழுவினர் ஆய்வு செய்தனர். இங்கிருந்து பல அறிஞர்களை அழைத்துச் சென்று ஆய்வுகள நடத்தினார்.

ஆய்வுச் சொற்களைப் பொருள்கொள்வதில் காலமும்,புலமும் (context meaning) இன்றியமையாதன என்றார். அவரது “காணியாட்சி” பற்றிய ஆய்வு சிறப்பானது. காணியாட்சி பற்றிய தமிழ்க்கல்வெட்டுகளில் “குடும்பு” என்னும் சொல் பயில்கிறது. அது நிலம் என்னும் பொருளையும், ஆங்கிலச் சொல்லான “ward” என்னும் பொருளையும் கொண்டது. அதுபோல், “கரை” என்னும் சொல்லையும் நுணுக்கமாக ஆய்வு செய்தவர் அவர். 2013-இல் வெளியான “Concise History of South India” என்னும் நூல் மிகச் சிறந்த ஒன்று. அவரது நூல் ஒன்று இறுதியாக 2014-இல் வெளியானது.

உரையின் கட்டுரை வடிவாக்கம்: து.சுந்தரம், கல்வெட்டு ஆராய்ச்சியாளர், கோவை. அலைபேசி : 9444939156.



**து.சுந்தரம்**
கல்வெட்டு ஆராய்ச்சியாளர் கோவை.
doraisundaram18@gmail.com
அலை பேசி : 9444939156

32.

# ஈழத் தமிழர் மறைந்த அறப்போராளி டேவிட் ஐயாவிற்கான அஞ்சலி

-- இ. பு. ஞானப்பிரகாசன்.



அறப்போராளி தாவீது (டேவிட்) ஐயாவுக்கு
நாம் செலுத்தக்கூடிய உண்மையான அஞ்சலி



ஈழ விடுதலைப் போராட்டத்தைக் குறை கூறும் எல்லோரும் கேட்கும் முதன்மையான கேள்விகளுள் ஒன்று, "அவர்கள் என்ன காந்தி போல அறவழியிலா போராடினார்கள்? ஆயுதம் ஏந்தியவர்கள்தானே!" என்பது.

காலமெல்லாம் எழுப்பப்பட்டு வந்த, வருகிற இந்தக் கேள்விக்கான வாழும் விடையாக நடமாடிக் கொண்டிருந்த காந்தியம் தாவீது(டேவிட்) ஐயா கடந்த ஐப்பசி 24 [கக-க0-உ0கரு (11.10.2015)] அன்று நம் தமிழுலகை விட்டு மறைந்தார்.

ஈழத் தமிழ் மக்களால் 'டேவிட் ஐயா' என அன்பொழுக அழைக்கப்படும் சாலமன் அருளானந்தம் டேவிட் அவர்கள் எழுபதுகளில், அன்றைய ஈழத் தமிழ் மண்ணிலே காந்திய வழியில் தமிழர்களுக்காகப் பாடுபட்டவர். "தமிழர்கள் தங்களைத் தாங்களே ஆண்டு கொள்ளத் தகுதியானவர்களாக மாறுவதுதான் ஈழத் தமிழர் சிக்கலுக்கான தீர்வின் முதல் படி" என்று நம்பியவர். விடுதலை, தனி ஈழம் போன்ற எந்த நோக்கமும் இன்றி வெறுமே கல்வி, வேலைவாய்ப்பு, மருத்துவம், தமிழ் வளர்ச்சி ஆகியவற்றை மட்டுமே சார்ந்து செயல்பட்டார். மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு தன் நண்பர்கள் மருத்துவர் இராசசுந்தரம், அவர்தம் மனைவியார் முதலான சிலருடன் சேர்ந்து வேளாண் கல்விப் பண்ணை அமைத்தார்; நடமாடும் மருத்துவமனைகள் தொடங்கினார்; கல்விக் குடில்கள் திறந்தார்; காந்தியையும் காந்தியத்தையும் முதன்மையாகக் கொண்டு பாடத்திட்டம் வகுத்தார்; பெண்களுக்கும் சிறாருக்கும் அந்த காந்தியக் கல்வியைப் புகட்டினார்; இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து வேலைவாய்ப்பும் படிப்பும் அளித்தார்; குழந்தைகளுக்குப் பாலும் பால் மாவும் இலவசமாக வழங்கினார்; ஒவ்வோர் ஊரிலும் ஒரு பெண்மணியைத் தேர்ந்தெடுத்துக் கல்வி கற்பித்து அவர்கள் மூலம் அந்தந்த ஊர்களில் கல்வி கற்பிக்க ஏற்பாடு செய்வதன் மூலம் எல்லா ஊர்களிலும் கல்வித்தரத்தை உயர்த்தத் தொலைநோக்குத் திட்டம் தீட்டினார்.

ஆனால், இப்படி முழுவதும் மக்கள் தொண்டினை மட்டுமே இலக்காகக் கொண்டு இயங்கிய இந்த மாமனிதரை சிங்கள அரசு, ஈழ விடுதலைப் போராளிகளைச் சந்தித்ததை ஒரு சாக்காக வைத்து வன்கொடுமையாளர் (terrorist) முத்திரை குத்திச் சிறையில் தள்ளியது. சிறையில் தானும் மற்ற தமிழர்களும் நடத்தப்பட்ட விதத்தைப் பற்றி இவர் கூறுவதைப் படித்தால் தமிழர் அல்லாதவர்க்கும் கடும் சீற்றம் பிறக்கும். (படிக்க: டேவிட் ஐயா - தமிழ் மக்களின் துயர் தீர்க்க காந்திய வழியில் போராடிய அறப் போராளி).

குமுகச் (சமூகச்) சேவை செய்த ஒரே குற்றத்துக்காக மேற்படியெல்லாம் இழிவுபடுத்தப்பட்ட இந்தப் பெருமனிதர் அன்று இடப்பட்ட அந்த வன்கொடுமையாளர் எனும் முத்திரை கடைசி வரை மங்காமல் மறையாமல் ௯0 (90) அகவையிலும் 'பேரிடர் (அபாயம்) விளைவிப்போர் பட்டியலிலேயே வைக்கப்பட்டிருந்து, அந்த அடையாளம் மாறாமலே இதோ நம்மை விட்டுப் பிரிந்திருக்கிறார்.

இந்த மனிதர் செய்த குற்றம்தான் என்ன? தன் மக்களின் நல்வாழ்வுக்காகப் பாடுபட்டதா? படிக்காத மக்களுக்குக் கல்வியும் வேலைவாய்ப்பும் அளித்ததா? காந்தியத்தைப் பரப்ப முயன்றதா? காந்திய வழியில் தன் மக்களை முன்னேற்ற முடியும் என்று நம்பியதா? "ஈழத் தமிழர்கள் என்ன காந்திய வழியிலா போராடினார்கள்" என்று மீண்டும் மீண்டும் கேட்டு, வயிற்றிலிருந்த தளிர் முதல் தலை நரைத்த கிழம் வரை எந்தப் பாகுபாடும் இல்லாமல் துள்ளத் துடிக்கக் கொன்றொழிக்கப்பட்ட அந்த இனப்படுகொலையின் குற்றச்சாட்டை நீர்க்கச் முயல்பவர்களே! இந்தக் கேள்விகளுக்கு உங்கள் பதில் என்ன? இவர் என்ன தனிநாடு கேட்டாரா? தன்னாட்சி கோரினாரா? அரசுக்கு எதிராகக் கலகங்கள் தூண்டினாரா? புரட்சி செய்தாரா? போர்க்கொடி தூக்கினாரா? ஒன்றுமே இல்லை!

குற்றம் எனச் சொல்ல வேண்டுமானால், காந்தியரான இவர், கூடவே ஆயுதப் போராளிகளோடும் தொடர்பு கொண்டிருந்து, அவர்கள் தப்பிச் செல்ல உதவியதைச் சொல்லலாம். ஆனால், அது கூட மனிதநேயத்தின் அடிப்படையில் அவர் செய்த ஓர் உதவிதானே தவிர, மற்றபடி ஆயுதப் போராளிகளை அவர் தாங்கவோ அவர்கள் வழியைப் பின்பற்றவோ இல்லை. தன்னளவில் அவர் எப்பொழுதும் காந்தியராகவே இருந்தார். ஆனால், அப்படிப்பட்டவருக்கு இலங்கை-சிங்கள அரசு அளித்த அடையாளம்! இதற்கே இவருக்கு இந்த நிலைமை எனில், இன்னும் காந்திய வழியில் விடுதலை வேறு கேட்டுப் போராடியிருந்தால் இவர் நிலை என்ன?

மற்றவர்களைப் பொறுத்த வரை வேண்டுமானால், தாவீது(டேவிட்) ஐயா ஈழத் தமிழர்களின் காந்திய முகமாக இருக்கலாம். ஆனால் என்னைப் பொறுத்த வரை, அவர் சிங்களர்களின் ஈவிரக்கமற்ற குணத்துக்கு முன்னால் காந்தியம் எப்பேர்ப்பட்ட தோல்வியைத் தழுவும் என்பதற்கான நடமாடிய எடுத்துக்காட்டு!

இப்படி, ஈழத்து காந்தி செல்வநாயகம் அவர்கள் முதல் காந்தியம் தாவீது (டேவிட்) அவர்கள் வரை இலங்கையில் தமிழர்களுக்காகக் காந்திய வழியில் போராடிய தலைவர்கள் அனைவரும் தோல்வியாளர்களாகவே வரலாற்றில் நிலைபெற்றிருக்க,

நாம் மறுபடியும் மறுபடியும் விடுதலைப்புலிகளின், ஈழத் தமிழர்களின் போராட்ட முறையை “என்ன இருந்தாலும் ஆயுதப் போராட்டம்தானே?” எனப் போகிற போக்கில் இழிவுபடுத்திப் பேசுவது எந்த வகையிலான காந்தியம், அறம் என எனக்குப் புரியவே இல்லை.

ஈழப் போராட்டம் பற்றி ஓரளவாவது அறிந்த யாருமே இரண்டு சிறை நிகழ்வுகளைப் பற்றிக் கண்டிப்பாய்க் கேள்விப்பட்டிருப்பார்கள்.

முதலாவது, வெலிக்கடைச் சிறை இனவெறித் தாக்குதல்!

தமிழ் அரசியல் கைதிகள் மீது திட்டமிட்டே தொடுக்கப்பட்ட இந்தக் கொலைவெறித் தாக்குதலில்தான் குட்டிமணி, தங்கத்துரை, செகன் முதலான ஏராளமானோர் மிகக் கொடுமையான முறையில் துடிக்கத் துடிக்கப் படுகொலை செய்யப்பட்டனர். பிறர் சொல்லக் கேட்டால் கூட உள்ளத்தை நடுங்கச் செய்யும் இந்தக் கொடிய நிகழ்வில் தானும் கொல்லப்பட இருந்தபொழுது கடைசி நொடியில் நல்லவேளையாகத் தப்பிய தாவீது (டேவிட்) ஐயா, அங்கிருந்து மட்டக்களப்புச் சிறைக்கு மாற்றப்பட்டார். அப்பொழுதுதான் நடந்தது, ஈழ வரலாற்றின் அடுத்த முதன்மைச் சிறை நிகழ்வான மட்டக்களப்புச் சிறை உடைப்பு!

தமிழர்கள் மீது அன்றைய சிங்கள இனவெறி அரசு கட்டவிழ்த்து விட்ட இனப்படுகொலையால் எங்கெங்கும் தமிழரின் உயிர் ஓலம் எதிரொலித்த அந்த நேரத்தில், அதுவரை சிங்களர்கள் அடித்தாலும் மிதித்தாலும் கொன்றாலும் கொளுத்தினாலும் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள மட்டுமே முயன்று வந்த தமிழர் கரங்கள் முதன் முறையாக வேறு வழி இல்லாமல் திருப்பி அடித்தன! அதன் ஒரு பகுதியாக, வெலிக்கடையில் நடந்தது போலவே மட்டக்களப்பிலும் தமிழர் குருதி மீண்டும் பெருக்கெடுக்காதிருக்க அந்தச் சிறை தமிழ்ப் போராளிகளால் தகர்க்கப்பட்டுக் கைதிகள் தப்ப வைக்கப்பட்டனர். அதில் உயிர் பிழைத்தவர்களில் ஐயாவும் ஒருவர்.

இவ்வாறு, ஈழ விடுதலைப் போராட்டத்தில் காந்தியத்தின் தோல்வி, இலங்கை ஆட்சியாளர்கள் அந்தக் காலத்திலேயே எப்பேர்ப்பட்ட இனவெறி கொண்டவர்களாக இருந்தார்கள் என்பதற்குச் சான்றான வெலிக்கடைச் சிறைத் தாக்குதல், எப்படிப்பட்ட கையறு நிலையில் வேறு வழியேயில்லாமல் ஈழத் தமிழர்கள் ஆயுதப் போராட்டத்துக்கு மாறினார்கள் என்பதற்குச் சான்றான மட்டக்களப்புச் சிறையுடைப்பு எனத் தமிழீழ வரலாற்றின் தலையாய மூன்று திருப்புமுனைகளுக்குக் கண்கூடான

சான்றாளராய் நம்மிடையே இத்தனை ஆண்டுக் காலமாக வாழ்ந்து வந்த தாவீது(டேவிட்) ஐயா, இவையெல்லாம் முறைப்படி உசாவப்பட்டு உலகக் குமுகாயத்தின் (சமுதாயத்தின்) முன்னால் உறுதிப்படுத்தப்படும் முன் நம்மை விட்டுப் பிரிந்து விட்டது பெரும் வேதனை!

ஐயா அவர்களைப் பற்றி நான் முதன் முதலில் அறிந்தது ஆனந்த விகடன் மூலமாகத்தான். செய்தியாளர் அருள் எழிலன் அவர்கள் மேற்கொண்ட நேர்காணலில் கேட்போர் உளம் உருகும் தன் வரலாற்றை எடுத்துரைத்த ஐயா அவர்கள், நடந்து முடிந்த அவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல், தன்னிடமிருந்த நூல்களைப் பற்றித்தான் கவலையுடன் குறிப்பிட்டார். ஒன்றில்லை இரண்டில்லை, ஆயிரத்து ஐந்நூறு தமிழ் நூல்களை அவர் பாதுகாத்து வந்தார்.

விடுதலை பெற்ற தமிழீழ நூலகத்தில் தன் நூல்கள் சேர்க்கப்பட வேண்டும் என்பதும் விடுதலையடைந்த ஈழத் தமிழ் மண்ணில் தன் உடல் அடக்கம் செய்யப்பட வேண்டும் என்பதும்தாம் அவருடைய கடைசி விருப்பங்களாக இருந்தன. ஆனால், இதோ வரலாறு காணாத தமிழினப் பெரும்படுகொலையால் சிவந்து போயிருக்கும் இலங்கை மண்ணின் நிறம் மாறும் முன்பே கிளிநொச்சியில் அவர் உடல் அடக்கம் செய்யப்பட்டு விட்டது! மிஞ்சியிருப்பது தன் நூல்கள் பற்றிய அவருடைய விருப்பம் மட்டும்தான். அதையாவது நாம் நிறைவேற்றி வைக்கலாமே?

தற்பொழுது தமிழ்நாடு அரசின் 'தமிழ் இணையக் கல்விக்கழகம்' உ0கசு (2016) - பொங்கல் திருநாளுக்குள் நூறாயிரம் (இலட்சம்) நூல்களை மின்னுருவாக்கும் அரும்பெரும் பணியில் இறங்கியுள்ளது. இதற்காகத் தமிழ்நாடெங்கும் அரிய நூல்களை எல்லோரிடமிருந்தும் தேடிச் சேகரிக்கும் பெருமுயற்சியை அந்நிறுவனம் முடுக்கி விட்டிருப்பதாக அண்மையில் 'வலைப்பதிவர் திருவிழா - உ0கரு (2015)'இல் பேசிய அந்நிறுவன உதவி இயக்குநர் முனைவர் மா.தமிழ்ப்பரிதி அறிவித்தார். முறைப்படி அரசு அறிவிப்பாகவும் இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ் நூல்கள் நிலைபேறு அடைய இப்படியொரு சிறப்பான முயற்சியில் இறங்கியிருக்கும் தமிழ் இணையக் கல்விக்கழகம், ஈழத் தமிழர்களுக்காக அறவழியில் பாடுபட்ட காந்தியர் தாவீது (டேவிட்) ஐயாவின் அரிய நூல்களையும் தங்கள் திட்டத்தின் கீழ்ச் சேர்த்துக் கொண்டு அந்த நூல்களை அழியாமல் பாதுகாக்க முன் வர வேண்டும் என மிகவும் பணிவன்போடு வேண்டுகிறேன்! தமிழர் வரலாற்றிலேயே மிகப் பெரிய இழப்பாகக் கருதப்படுவது 'யாழ் நூலக எரிப்பு'.

ஈழத்திலிருந்து வந்தவர் என்பதால் ஒருவேளை அந்தப் பேரழிப்பில் நாம் இழந்த அரிய நூல்கள் கூட ஐயா அவர்களின் சேகரிப்பில் இருக்கலாம். அப்படி இருந்தால், அவற்றை மின்னுருவாக்கம் செய்வது தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் வரலாற்றிலேயே ஈடு இணையற்ற புகழாக இருக்கும். எனவே, நிறுவனத்தினர் உடனே இதற்கான முயற்சியில் இறங்க முன்வர வேண்டும்!



அவருடைய இறுதி விருப்பங்கள் இரண்டில் ஒன்றைத்தான் நம்மால் நிறைவேற்ற முடியவில்லை. நம்மால் இயன்ற இந்த இன்னொன்றையாவது நிறைவேற்றலாமே? கடைசி விருப்பத்தை நிறைவேற்றி வைப்பதை விட ஒரு மனிதருக்கு நாம் செலுத்தக்கூடிய உண்மையான அஞ்சலி வேறென்ன இருக்க முடியும்? எனவே தமிழ்நாடு அரசே! தமிழ் இணையக் கல்விக்கழகத்தினரே! தமிழ்த் தலைவர்களே! அருள் கூர்ந்து இதற்கு ஆவன செய்யுங்கள்!

நன்றி: அகரமுதல -

http://www.akaramuthala.in/modernliterature/katturai/அறப்போராளி-டேவிட்-ஐயாவிற/




**இ. பு. ஞானப்பிரகாசன்**

e.bhu.gnaanapragaasan@gmail.com

தொலைபேசி: 9043585723

33.

## தமிழண்ணலின் தமிழ் வாழ்வு (12.08.1928 - 29.12.2015)

-- கி. சிவா.



எண்பத்தெட்டாம் அகவைவரை வாழ்ந்து தமிழ் மொழிக்குத் தன்னாலான பல ஆய்வு நூல்களை வழங்கித், தமிழர் நெஞ்சங்களில் நீங்காத இடம் பிடித்துள்ளார், அறிஞர் இராம.பெரியகருப்பன் என்கின்ற தமிழண்ணல். ஆய்வுலகில் ஓர் தமிழரிமாவாகத் திகழ்ந்தார். கவிஞர், புதின ஆசிரியர், திறனாய்வாளர், பதிப்பாசிரியர், சொற்பொழிவாளர் எனப் பல முகங்களைக் கொண்டிருந்தவர். தம்முடைய திறமையால் பல படிநிலைகளைக் கடந்தவர். மொழிப்போர் வீரர். அஞ்சா நெஞ்சினர். ஓயா உழைப்பினர். 24.07.2015 அன்று நானும் என் துணைவியாரும் வீட்டிற்குச் சென்று, நேரில் சந்தித்தபோதுகூட, பக்தி இலக்கியம் தொடர்பான அவருடைய ஆய்வுநூலைத் திருத்திக் கொண்டிருந்தார். “பணியாற்றிய காலத்தில் தொல்காப்பியம், சங்க இலக்கியங்களை மட்டுமே படித்துக்கொண்டிருந்தேன். இனிமேலாவது பக்தி இலக்கியங்களைப் படிப்போமென்று நினைத்து இந்த நூலை எழுதியுள்ளேன். மீண்டும் சங்க இலக்கியங்கள் முழுமையையும் படிக்க வேண்டும் என்று விரும்புகிறேன்” எனத் தெரிவித்தார். ஆனால், அவருடைய எண்ணம் நிறைவேறாமலேயே போய்விட்டது.

2006 - 2009 ஆண்டுகளில் நான் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் இளநிலை ஆய்வு செய்தபோதும் அங்கேயே பணியாற்றியபோதும் அவருடைய பேச்சைப் பலமுறை கேட்டுள்ளேன். அவரைக் குருவாக மதிக்கும் பேரா. முதுமுனைவர் ச.சு.இராமர்இளங்கோ அவர்கள் இவரை அடிக்கடி அழைத்துவருவார். அண்ணலுடைய பொழிவில் நகைச்சுவை இழையோடும். ஜனசக்தியின் நடுப்பக்கத்தில் நான் எழுதிய "நடிப்பு சுதேசிகளும் நச்சு உணவுகளும்" (25.06.2015) என்ற கட்டுரையை அவரிடம் கொடுத்தபோது (24.07.2015), அதில் மேற்கோள் காட்டியிருந்த "கருங்கால் வரகே இருங்கதிர்த் தினையே, சிறுகொடிக் கொள்ளே பொறிகிளர் அவரையொடு, இந்நான் கல்லது உணவும் இல்லை" (புறம்.335) என்ற புறநானூற்றுப் பாடலைப் படித்துவிட்டுப், "பொருத்தமான பாடலைத் தேடிப்பிடித்துச் சரியாக எழுதியிருக்கப்பா" என்று மனதாரப் பாராட்டினார். இளையவர்களுடன் இணைந்து பணியாற்ற எவ்விதத்திலும் தயக்கம் காட்டாதவர். பேரா.இ.முத்தையாவுடன் இணைந்து தமிழியல் ஆய்வு என்கின்ற புத்தகத்தைப் பதித்துள்ளதே இதற்கு நற்சான்று.

கல்விப்பயணம்:

மேலைச்சிவபுரி கணேசர் செந்தமிழ்க் கல்லூரியிலும் திருவையாற்று அரசர் கல்லூரியிலும் பயின்று வித்துவான் (1948) பட்டம் பெற்றார். தன் முயற்சியாகச் சென்னைப் பல்கலையில் இளங்கலைப் பொருளியல் (1948), முதுகலைத் தமிழ் (1961) ஆகிய பட்டங்களைப் பெற்றார். மொழிப்போர் மறவர் பேராசிரியர் சி.இலக்குவனார் மற்றும் இலக்கணச் செம்மல் போராசிரியர் அ.சிதம்பரநாதன் செட்டியார் ஆகியோரின் வழிகாட்டுதலில் "Tradition and Talent in Cankam Poetry" (1969) என்ற தலைப்பில் முனைவர்பட்ட ஆய்வைச் செய்தார். காரைக்குடியிலுள்ள மீ.சு.உயர்நிலைப் பள்ளியில், தன்னுடைய கல்லூரித் தோழர் கவியரசு முடியரசனாருடன் இணைந்து 13 ஆண்டுகள் பணியாற்றினார். இவருடைய சங்க இலக்கியப் பயிற்சியை அறிந்த மதுரைக் கருமுத்து தியாகராசர் அவர்கள் தமது தியாகராசர் கல்லூரிக்கு அழைக்க, அங்கு 10 ஆண்டுகள் பணிசெய்தார். 1971இல் பேரா.முத்து சண்முகம்பிள்ளையின் விருப்பத்தின் பேரில் காமராசர் பல்கலைக்கழகத்தில் பணியில் சேர்ந்தார். இவர் 1988இல் காமராசர் பல்கலைக்கழகத் துறைத்தலைவராக இருந்தபோது, அத்துறை பள்ளியாக (School of Tamil Studies) மாறுவதற்குப் பெரிதும் உழைத்தார். மறைந்த முன்னாள் அமைச்சர்கள் மு.தமிழ்க்குடிமகன், கா.காளிமுத்து முதலிய நாற்பதுக்கும் மேற்பட்டவர்களுக்கு ஆய்வு நெறியாளராக இருந்துள்ளார். அமெரிக்கா, இலங்கை, சப்பான், சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்குக் கல்விப் பயணம் மேற்கொண்டுள்ளார். சிங்கப்பூர் அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் அங்குள்ள தமிழ் மாணவர்களுக்குப்

பாடத்திட்டம் வகுக்கும் பணியாற்றியுள்ளார். '1989இல் மலேசியத் திராவிடர் கழகம் நடத்திய விழாவிற்குத் தலைமை தாங்கியுள்ளார்' (thirutamil.blogspot.in).

பெற்ற விருதுகள் / சிறப்புகள்:

திரு.வி.க. விருது (1989), கலைமாமணி விருது (2010), நல்லாசிரியர் விருது, தமிழ்ச்செம்மல் விருது (1995, காமராசர் பல்கலைக்கழகம்), தொல்காப்பியர் விருது (2010-2011, செம்மொழித் தமிழாய்வு நிறுவனம்), பேரா.இரா.மோகன், நிர்மலாமோகன் ஆகியோர் தமது இலக்கிய இணையர் அறக்கட்டளை சார்பில் வழங்கிய வாழ்நாள் சாதனையாளர் விருது (2012, ரூபாய் பத்தாயிரம், நாள்: 27.04.2013, eraeravi.blogspot.in), எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகம் வழங்கிய வாழ்நாள் சாதனையாளர் விருது (2013 - பாரிவேந்தர் பைந்தமிழ் விருது- 5இலட்சம்) எனப் பல விருதுகள் இவரின் தகுதிக்கு அணிசேர்த்துள்ளன. 1981-82இல் பல்கலைக்கழக மானியக்குழு, இவரைத் தேசியப் பேராசிரியராகத் தேர்வு செய்தது. சாகித்திய அகாதெமியின் பொதுக்குழு உறுப்பினராகப் பத்து ஆண்டுகள் இருந்துள்ளார். 1985முதல் ஞானபீட விருதிற்குரிய கருத்துரைஞராகப் பல்லாண்டுகள் இருந்துள்ளார். 1996-2001இல் தமிழக அரசால் குறள் பீடத்திற்குத் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டார். உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் ஆய்வரங்கக் குழுவில் ஒருவராக நியமனம் செய்யப்பட்டிருந்தார். தி.மு.க. தலைவர் திரு.மு.கருணாநிதி எழுதிய, தொல்காப்பியப் பூங்கா என்ற நூலை வெளியிடும் விழாவிற்குத் தலைமையேற்றார்.

மொழிப்போர் வீரர்:

1992இல் "தமிழ்ச்சான்றோர் பேரவை" என்ற அமைப்பைத் திருவாளர் நா.அருணாசலம் என்பார் தோற்றுவித்தார். அவ்வமைப்பில் தமிழண்ணலும் இருந்தார். ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்புவரை அனைத்துப் பள்ளிகளிலும் தமிழ்வழிக் கல்வியை நடைமுறைப்படுத்துதல், தமிழே ஆட்சிமொழியாக வேண்டும், கோவில்களில் செய்யப்படும் அர்ச்சனைகள், சடங்குகள், இசையரங்குகள் ஆகியவற்றில் தமிழே இருக்க வேண்டும், பாராளுமன்றத்தில் தமிழ் நடைமுறை மொழியாக ஏற்கப்பட வேண்டும், தமிழ் படித்தவருக்கு வேலைவாய்ப்பு, எங்கும் தமிழ், எதிலும் தமிழ் முதலாய பல கோரிக்கைகளை வலியுறுத்தி, 25.04.1999 அன்று சென்னை வள்ளுவர் கோட்டத்தில் 102 தமிழறிஞர்கள் சாகும்வரை உண்ணாநோன்பிருந்தனர். அந்த அறப்போராட்டத்திற்குச் சிலம்பொலி செல்லப்பன் தலைமையேற்பதாய் இருந்தது. அவர் விலகிக்கொள்ள, தமிழண்ணல் தலைமையேற்றார். கோரிக்கைகளையேற்று நடைமுறைப்படுத்துவதாய், அன்றைய தி.மு.க. அரசின் தமிழ் ஆட்சிமொழித்துறை அமைச்சர் மு.தமிழ்க்குடிமகன் தெரிவித்தார். அதையடுத்துப் போராட்டப் பந்தலில்

தமிழண்ணல் பேசியதாவது, "என் நெஞ்சை நெகிழவைக்கும் வகையில் உணர்வுப்பூர்வமாக இங்கே திரண்டிருக்கும் தமிழுணர்வாளர்களே! பட்டினிப் போராளிகளே! உன்னதமான உங்கள் தமிழுணர்வுக்கும் எழுச்சிமிக்க உங்கள் போராட்டத்திற்கும் வெற்றி கிடைத்திருக்கிறது" என்றார் (கீற்று.காம்). அறிவாலயம் சென்று தமிழ்க்குடிமகனுடன் கலந்துபேசி நல்லமுடிவு எட்ட வழிவகுத்தார் (முந்தைய நாளில் நடைபெற்ற பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது). ஆயினும், தன்னை முன்னிறுத்தாமல் உங்களுடைய போராட்டத்திற்கு வெற்றிகிடைத்துள்ளது என்று பேசியுள்ளதால் தமிழண்ணலின் தூய உள்ளம் தெளிவாகத் தெரிகிறது. அரசாணை எண் 117 (3.5.1999)இன்படி, 30.4.1999இல் நீதிபதி மோகன் தலைமையில், தமிழண்ணல், புலவர் இரா.இளங்குமரன், பேரா.ச.முத்துக்குமரன், பேரா.வா.செ.குழந்தைசாமி ஆகியோர் உறுப்பினர்களாக நியமனம் செய்யப்பட்டனர். இவர்களின் வழிகாட்டுதலில் பொதுமக்கள் விரும்பும் வகையில் கல்விக்கொள்கை வகுக்கப்படுமென்று அரசு அறிவித்தது. இன்றைக்கும் பல கோரிக்கைகள் கிடப்பில் உள்ளன. ஆகவே, தமிழறிஞர்கள் முன்வைத்துப் போராடிய கோரிக்கைகள் எத்தனை இன்றைக்கு நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன என்று சிந்தித்து, மீண்டும் போராட்டத்தைக் கையிலெடுக்க வேண்டியவர்களாகவே உள்ளோம்.

அஞ்சா நெஞ்சினர் :

பொள்ளாச்சி மகாலிங்கனார், அறிஞர் இராமலிங்கனார், பகீரதன் முயற்சியில் தொல்காப்பியப் பதிப்பொன்றை வெளியிட்டார். அப்பதிப்பு, தமிழுக்குக் கேடானது என்று துணிந்துசொல்லிய தீரமிக்கவர்.

எழுதிய நூல்கள் (பொது - 21)

1.வாழ்வரசி, 2.நச்சுவளையம் (புதினங்கள்), 3.தாலாட்டு, 4.காதல் வாழ்வு, 5.பிறைதொழும் பெண்கள், 6.ஒப்பிலக்கிய அறிமுகம் (மீனாட்சி, 1973), 7.மாணிக்கக் குறள், 8.ஆய்வியல் அறிமுகம் (திரு.இலக்குமணனுடன் இணைந்து), 9.எழுச்சிதரும் எண்ணச் சிறகுகள் (மெய்., 2008), 10.ஊடகங்களால் ஊரைப் பற்றும் நெருப்பு (மெய்., 2008), 11.சிவ வழிபாட்டின் தோற்றமும் வளர்ச்சியும், 12.வேதமும் ஆகமமும், 13.தமிழில் வழிபாடு - குழப்பமும் விளக்கமும், 14.இறைவன் இறைவி பெயர் மாற்றம், 15.வடமொழியின் செல்வாக்கும் இருக்குவேதத் தோற்றமும், 16.இருக்கு வேத சாரம், 17.யசூர் சாம வேத சாரம், 18.அதர்வ வேத சாரம், 19.சேக்கிழார் திருவுள்ளம் - சண்டீசர் வரலாறு, 20.சேக்கிழார் திருவுள்ளம் - மனுநீதிச் சோழன் வரலாறு (11-20, தமிழ்க் கல்வி, பண்பாட்டு விழிப்புணர்ணவுப் பேரியக்கம், ஏப். 2011, குறுநூல்கள்), 21.உரை விளக்கு (விழிகள், 2011)

உரைநூல்கள் (13)

இலக்கணநூல்கள் (10): 1.தொல்காப்பிய எழுத்ததிகாரம் உரை (மணிவாசர், ஆகத்து 1999), 2.சொல்லதிகார உரை (மணி., 15.06.1994), 3.பொருளதிகாரம் உரை பகுதி-1 (செப்.2003), 4.பகுதி-2 (செப்.2003), 5.பகுதி-3 (செப்.2003), 6.நன்னூல், 7.அகப்பொருள் இலக்கணம், 8.புறப்பொருள் வெண்பாமாலை, 9.யாப்பருங்கலக்காரிகை, 10.தண்டியலங்காரம்

சங்க இலக்கியங்கள் (2): குறுந்தொகை (ஏப்.2002, கோவிலூர் மடாலயம்), அகநானூறு 3ஆம் பகுதி (301-400) (கவிஞர் நா.மீனவனுடன் இணைந்து, செப்.2004, கோவிலூர் மடாலயம்)

திருக்குறள்: திருக்குறள் நுண்ணுரை

ஆய்வு நூல்கள் (23)

சங்க இலக்கியம் தொடர்பானவை (13): 1.பரிசில் வாழ்க்கை (பாரிநிலையம், அக்.1956), 2.குறிஞ்சிப்பாட்டு இலக்கியத் திறனாய்வு (மீனாட்சி, மே 1961), 3.சங்க இலக்கிய ஒப்பீடு (இலக்கியக் கொள்கைகள்) - மீனாட்சி, அக்.1975, இதன் திருத்திய முதற்பதிப்பு, 2003இல் சிந்தாமணிச் செல்வ வெளியீடாக வந்துள்ளது), 4.சங்க இலக்கிய ஒப்பீடு (இலக்கிய வகைகள்) - சோலைநூலகம், மார்ச்சு 1978, 5.ஔவையார் (சாகித்திய அகாதெமி, 2008), 6.ஒப்பிலக்கியப் பார்வையில் சங்க இலக்கிய ஒளிச்சுடர்கள் (மெய்., திசம்.2007), 7.சங்க இலக்கியத் தொன்மைச் சான்றுகள் (நோக்கு, நவம்.2008), 8.செவ்விலக்கியச் சிந்தனைகள் (மெய்., 2008), 9.செம்மொழிப் படைப்பியல் (மணி., 2008), 10.சங்க மரபு (முனைவர்பட்ட ஆய்வேடு, சிந்தாமணிப் பதிப்பகம், அக்.2009, மொ.பெ. பேரா.கு.வெ.பாலசுப்பிரமணியன்), 11.தொல்லியல் துறைஞர் இரா.நாகசாமியின் பழுதடைந்த கண்ணாடியும் பார்வைக் கோளாறுகளும் (எஸ்.ஆர்.எம்., 2013), 12.The Tainted Spectacles and Faulty vision of Dr.Nagasamy (The Real Status of Tamil and Sanskrit) - S.R.M., 2013, Tr. Dr. K.V.Balasubramaniyan), 13.கபிலர் பாடல்களில் காட்சி உருவகம் (சிந்தாமணிச் செல்வ வெளியீடு, ஆ.இ., குறுநூல்)

தொல்காப்பியம் தொடர்பானவை (8): 1.தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கைகள்: உள்ளுறை, 2.இறைச்சி (மீனாட்சி, ஏப். 1986), 3.மெய்ப்பாடு (மீனாட்சி, மே 1986), 4.நோக்கு, 5.தொல்காப்பியர் (சாகித்திய அகாதெமி, 1998), 6.தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கைகள் (உள்ளுறை, இறைச்சி, நோக்கு, மெய்ப்பாடு நான்கும்

இணைந்தது. மணி., 2004), 7.தொல்காப்பிய இலக்கிய இயல் (மெய்யப்பன், 2008), 8.தொல்காப்பியர் விளக்கும் திருமணப்பொருத்தம் (எஸ்.ஆர். எம்., 2012)
திருவள்ளுவம் தொடர்பானவை (2): 1.தேடவைக்கும் திருவள்ளுவர் (மெய்., 2008), 2.வள்ளவர் நெறியில் வாழ்வது எப்போது? (மெய்., 2008)

வரலாறுகள் (2): 1.புதிய நோக்கில் இலக்கிய வரலாறு (மீனாட்சி, 13ஆம் பதி.1995), 2.உலகத் தமிழ் இலக்கிய வரலாறு - தொன்மை முதல் கி.பி.500வரை (உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 2004)

தமிழ்மொழி (15): 1.தமிழை அறிவோம்! தமிழராய் வாழ்வோம்! (மெய்., 2007), 2.தமிழ் ஒரு கட்டமைப்புள்ள மொழி (மெய்., 2008), 3.இனிய தமிழ் மொழியின் இருவகை வழக்குகள் (மெய்., 2008), 4.தமிழ்வழிக் கல்விச் சிந்தனைகள் (மெய்., 2008), 5.தமிழில் அடிக்கடி நேரும் பிழைகளும் திருத்தமும், 6.பேசுவது போல் எழுதலாமா?, 7. பேச்சுத் தமிழை இகழாலாமா?, 8.பிழை திருத்தம் மனப்பழக்கம், 9.தமிழ் உயிருள்ள மொழி, 10.தமிழ் கற்பிக்கும் நெறிமுறைகள், 11.தமிழ்த்தவம், 12.உங்கள் தமிழைத் தெரிந்துகொள்ளுங்கள், 13.இனிய தமிழ்மொழியின் இயல்புகள், 14.தமிழுக்கு ஆகமங்கள் தடையாகுமா?, 15.சொல் புதிது சுவை புதிது.

பதிப்பாசிரியர் (12)

- தமிழியல் ஆய்வு (இ.முத்தையாவுடன் இணைந்து) - மதுரை காமராசர் பல்கலைக்கழகம், 1983
- சங்க இலக்கியங்கள் (முனைவர் சுப.அண்ணாமலையுடன் இணைந்து) - கோவிலூர் மடாலயப் பதிப்பு (11 தொகுதிகள், 2002- 2004, அகம். 3 தொகுதிகள்).

இங்கு, மொத்தம் 74 நூல்களின் பட்டியல் தரப்பட்டுள்ளது. அவற்றுள் 11 நூல்கள் குறுநூல்கள். பதிப்பாசிரியராயிருந்து 12 நூல்களைக் கொணர்ந்துள்ளார். ஆகமொத்தம் 86 நூல்கள். (இப்பட்டியல் முழுமையானதாய் இருக்குமென்று தோன்றவில்லை.) 2008இல் மட்டும் 11 நூல்கள் வெளியாகியுள்ளன. சிந்தாமணிச் செல்வ வெளியீடு, சிந்தாமணிப் பதிப்பகம், தமிழ்க் கல்வி, பண்பாட்டு விழிப்புணர்ணவுப் பேரியக்கம் என்னும் பதிப்பகப் பெயர்கள் அவருடைய சொந்த வெளியீடுகள். பொது நூல்களில் 10, 11ஐ மட்டுமே நேரில் கண்டேன். 13-20வரையுள்ள நூல்கள் பின்னட்டையில் தரப்பட்டுள்ள பட்டியலைப் பார்த்துக் குறிக்கப்பட்டுள்ளது. 15.01.1976இல் காரைக்குடி இராமசாமி தமிழ்க்கல்லூரி, மறைமலையடிகள் நூற்றாண்டையொட்டி (15.06.1976), அவர் பெயரில் பிள்ளைத்தமிழ் நூலொன்று எழுதும் போட்டியை அறிவித்தது. அதில்

பதின்மூவர் பங்கெடுத்தனர். அப்போட்டியில், மலேசிய நாட்டுப் பினாங்கைச் சேர்ந்த திரு.சி.அன்பானந்தம் முதல் பரிசு பெற்றார். இதில், தமிழண்ணலும் கலந்துகொண்டு நூல் எழுதினார். அந்நூல் அச்சாயிற்றா என்பது தெரியவில்லை. (அன்பானந்தம் எழுதிய நூலை, அக்கல்லூரியே செப்.1978இல் வெளியிட்டுள்ளது.)

“ஆங்கிலத்தில் எழுதும் எழுத்தாளர் அனைவரும் கிரேக்க, இலத்தீன் இலக்கியங்களைப் பயின்ற பிறகே, இலக்கியத்தைப் படைத்துள்ளனர். ஆனால், நமது தமிழில், சிறுகதை, நாவல், கவிதை எழுதுவோர் பலரும் பழந்தமிழ் இலக்கியப் பயிற்சியை அறவே புறக்கணித்துவிட்டுத் தம் படைப்புகளை எழுதுகின்றனர். ஆகவே, அவர்களது படைப்புகள் ஒளிவீசித் திகழவில்லை. வேரை மறந்து, அடிமரத்தைச் செல்லரிக்கவிட்டால் கிளைகள் காய்ந்து சருகாகுமே தவிர தளிர்க்காது. தமிழராகப் பிறந்த அனைவரும் சங்க இலக்கியத்தில் அறிமுகம் பெற்றாலன்றி, நமது தமிழ் வளர்ச்சியை மேலெடுத்துச் செல்ல முடியாது” (சிங்கப்பூர் தமிழாசிரியர்களுக்கான முத்தமிழ் விழாவில், அமெரிக்கன் கல்லூரியில், 10.12.2012 அன்று பேசியது, தினமணி.காம்) என்ற அவருடைய கருத்தை நடைமுறைப்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

2015ஆம் வருடம் பெருமழைச் சேதத்தோடு, எழுத்தாளர்கள் ஜெயகாந்தன் (8.4.15), இசைமேதை எம்.எஸ்.விசுவநாதன் (14.7.15), ஏவுகணை இயலறிஞர் மேதகு கலாம் (27.7.15), சமூகச் சீர்திருத்தச் செயற்பாட்டாளர் பேரா.கல்புர்கி (30.8.15), நடிகர் திலகம் ஆச்சி மனோரமா (10.10.15), கலைமாமணி விக்கிரமன் (1.12.15) எனப்பலர் மறைந்தனர். அவ்வகையில், தமிழுக்குத் தமிழண்ணலின் இழப்பு, பேரிழப்பு. அவரின் எண்ணங்களை ஈடேற்றப் பாடுபடுவோமாக.

நன்றி: www.akaramuthala.in, muelangovan.blogspot.com, ta.m.wikipedia.org, சங்க இலக்கியக் களஞ்சியம் - பேரா.சு.அமிர்தலிங்கம்

--

நன்றி கீற்று: http://keetru.com/index.php/2014-03-08-04-35-27/2014-03-08-12-18-14/30054-12-08-1928-29-12-2015



**கி. சிவா,**
ஆய்வாளர், காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகம்
தொலைபேசி: 97517-79791

## 34.

# தமிழர் உரிமை மீட்பரின் எழுத்துப் பயணம்

-- தேமொழி.



இக்கால இந்தியாவின் அரசியலிலும், சமூக அமைப்பிலும் எண்ணற்ற மாற்றங்கள் எத்தனையோ ஏற்பட்டிருந்தாலும், வரலாற்றிற்கு முற்பட்ட காலத்திலிருந்து பத்தொன்பதாம் நூற்றாண்டின் துவக்க காலம் வரையில், ஒரு மாறுதலற்ற தேக்க நிலையில் இந்தியாவின் சமூக வாழ்வு அமைந்திருந்தது என்பதாக கார்ல் மார்க்ஸ் (The British Rule in India - Karl Marx) கருதினார். அதுபோன்றே, இந்தியாவின் நிலையில், பொருளாதார அடிப்படையில் படிப்படியாக புராதனப் பொதுவுடைமை, அடிமையுடமை, நிலபிரபுத்துவம், முதலாளித்துவம், சோஷலிசம் எனப் பல நிலைகளைச் சந்தித்ததற்கான வரலாற்றுச் சான்றுகளைக் காட்ட இயலாது என்று மார்க்சிய வரலாற்று ஆசிரியர் டி. டி. கோசாம்பி கருதினர்.

இக்கருத்தைப் பெரியார் தனது கோணத்தில், நமது நாட்டில் இந்தச் சாதீய அடிப்படையிலான அடிமைத்தனம் ஒவ்வொரு அரசகுலத்தின் ஆட்சியிலும், பேரரசுகளிலும்மாறாது, காலம் காலமாக ஊறிப்போயிருப்பதாகக் குறிப்பார். இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் வெளியிடப்பட்ட இந்திய மக்கள் கணக்கெடுப்பு அறிக்கை ஒன்று (1901), சென்னை மாகாணத்தில் நிலவிய சாதீயமானது மனிதர் ஒருவரின் வாழ்வை, வேலையை, இருப்பிடத்தை, சமூக அந்தஸ்தை, உணவை,பெயரை, உடையைத் தீர்மானிக்கிறது என்றே குறித்திருந்தது. இவ்வாறு வாழ்வில் பிறந்ததிலிருந்து, இறப்பதுவரை பிரிக்கவழியின்றி வாழ்வோடு கலந்து ஒருவரது வாழ்வின் போக்கையே தீர்மானிக்கும் நிலையில் புரையோடிப் போயிருந்த பாகுபாட்டையும், சமத்துவமற்ற பேத நிலையையும் அசைத்துப் பார்க்க முற்பட்டவர் தந்தை பெரியார். வரலாற்றுப் போக்கில் பெரியார் புரட்சி செய்த காலம் ஒரு மிக முக்கியமான காலகட்டம் என்பதை யாராலும் மறுக்க இயலாது. ஒரு எழுத்தாளராக

… இதழியலாளராக … தனது எழுத்து, உரை ஆகியவற்றால் தமிழக வரலாற்றைப் புரட்டிப்போட்ட பெரியாரை, அறிஞர் அண்ணா, “பெரியார் ஒரு சகாப்தம்; ஒருகாலகட்டம்; ஒரு திருப்புமுனை” என்று புகழ்ந்துரைத்தார். அத்தகைய பெரியாரது கருத்துப் பரப்பல் முயற்சியை மீண்டும் திரும்பிப் பார்க்கும் பொழுது மலைக்க வைக்கிறது.

ஒரு எழுத்தாளராக, இதழியலாளராக போராட்டங்கள் பல சந்தித்து தனது கருத்துகளை, உரைகளை மக்களிடம் தனது பத்திரிக்கைகள் மூலம் கொண்டு சேர்த்த பெரியாரின் பணி வியக்கவைப்பது. தமிழகத்தில் வெறும் 7% மக்களே எழுதப் படிக்கத் தெரிந்திருந்த ஒரு காலகட்டத்தில், அவர்களிலும் 5% பிராமண குல மக்களாகவும் இருந்த காலத்தில், இந்துமதத்தின் ஆணிவேரை அசைக்கும் நோக்கில், சனாதன தர்ம அமைப்பையும், வர்ண முறையையும் தீவிரமாக எதிர்க்கும் கருத்துகள் நிரம்பிய ஏடுகளை, வசதியற்ற ஒடுக்கப்பட்ட மக்கள் கூட்டத்தினர் ஓரணா, ஈரணா என்ற விலையையும் கூடப் பொருட்படுத்தாமல் ஆர்வத்துடன் வாங்கிப் படிக்கும் நிலையை உருவாக்கிய பெரியாரை, அதனால் மக்களின் சிந்தனையில் தெளிவை வளர்க்க விரும்பிய பெரியாரை எழுத்தாளராக, இதழியலாளராக பாராட்டுவது என்பதை அவர் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்தவராலும் கூட சிறப்பாகச் செய்ய இயலாது.

கொள்கை பரப்பவே பத்திரிக்கை:
தமிழக காங்கிரஸ் கட்சியின் தலைவராகவோ அல்லது செயலாளராகவோ காங்கிரசுடன் பெரியார் இணைந்திருந்த மிகக்குறுகிய ஐந்தாண்டு காலகட்டத்தில், 1922 ஆம் ஆண்டு அவர் கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டதால், கோவை சிறையில் பெரியார் அடைக்கப்பட்டார். பெரியாருடன் அவரது தோழரான ஈரோடு கருங்கல்பாளையம் வழக்கறிஞர் தங்கபெருமாள் பிள்ளையும் சிறையில் அடைபட்டிருந்தார்.சிறைவாழ்க்கையில் இருவரது சிந்தனையில் உதித்தது “குடிஅரசு” என்ற இதழைத் துவக்கும் எண்ணம்.

சிறை வாழ்க்கை முடிந்தவுடன் 1923 ஆம் ஆண்டு ஜனவரி 19 இல் ‘குடிஅரசு’ மற்றும் ‘கொங்குநாடு’ என்ற பெயர்களில் பத்திரிக்கைக்கான பதிவைத் துவக்குகிறார் பெரியார். சுமார் இரண்டாண்டுகளுக்குப் பிறகு, 1925 ஆம் மே மாதம் இரண்டாம் நாள், சனிக்கிழமையன்று ஈரோட்டில் திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் அடிகள் தலைமையில் முதல் இதழ் வெளியிடப்பட்டு, ஒவ்வொரு ஞாயிறு அன்றும் ‘குடிஅரசு’ வார இதழாக, பெரியார் காங்கிரசில் இருக்கும்பொழுதே குடியரசு அவர் எழுத்தில் வரத்துவங்குகிறது. அதன்பிறகே, சற்றொப்ப ஆறு மாதங்கள் கழித்து

காங்கிரசின் காஞ்சிபுரம் மாநில மாநாட்டில், தேவையான உறுப்பினர் எண்ணிக்கைக்கும் அதிக அளவில் ஒப்புதல் பெற்று அவர் முன்வைத்த "வகுப்புரிமை தீர்மானம்" விவாதத்திற்கு ஏற்காமல் நிராகரிக்கப்பட்டு, கட்சி விதிகளுக்கு புறம்பாகப் புறக்கணிக்கப்பட்டதால், கட்சி மேலிடத்தின் மீது சினம் கொண்டு தனது நண்பர்களுடன் வெளியேறி சுயமரியாதை இயக்கத்தைத் துவக்குகிறார். ஆகவே, காங்கிரசில் உறுப்பினராக இருந்த காலத்திலேயே தனது கொள்கை பரப்பும் கருவியாக 'குடிஅரசு' வார ஏட்டை வெளியிடும் எழுத்தாளராக, இதழியலாளராக பெரியார் இருந்தார். அப்பொழுதே, "ஒவ்வொரு வகுப்பும் முன்னேறவேண்டும். இதை அறவே விடுத்து தேசம், தேசம் என்று கூக்குரலிடுவது எமது பத்திரிகையின் நோக்கமன்று. மக்களுக்குள் தன்மதிப்பும், சமத்துவமும், சகோதரத்துவமும் ஓங்கி வளர வேண்டும்" என்று காங்கிரசில் இருக்கும்போதே முதல் குடிஅரசு இதழில் தனது நோக்கத்தையும் பெரியார் தெளிவாகக் குறிப்பிடுகிறார்.

அனைத்துயிர் ஒன்றென் றெண்ணி
அரும்பசி யெவர்க்கு மாற்றி
மனத்துள்ளே பேதா பேதம்
வஞ்சகம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன் றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகுந்தானே!

என்று திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் சுவாமிகள் 'குடி அரசை' ஆரம்பித்து வைத்த போது ஆற்றிய உரைமொழிகள் தொடர்ந்து (தமிழர் தலைவர் தந்தை பெரியார் வாழ்க்கை வரலாற்றுத் தொடர் - சாமி.சிதம்பரனார்), பெரியாரின் கோணத்தை சாற்றும் விதமாக குடிஅரசு இதழில் வெளிவந்தது.

முதல் இதழின் அட்டையை பாரதியாரின் "சாதிகள் இல்லையடி பாப்பா" மற்றும் "எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் இனம்" ஆகிய வரிகள் அலங்கரித்தன. பின்னாளில் மேலும் பல திருக்குறள்களும், பெரியார் காங்கிரசை விட்டு வெளியேறினாலும் " மகாத்மா காந்தி வாழ்க", "கதர் வாழ்க" போன்ற வரிகளும் மாறி மாறி இடம் பிடித்தன. சுயமரியாதை இயக்கத்தின் துவக்கமும், குடிஅரசு இதழின் துவக்கமும் ஒரே ஆண்டிலேயே அமைந்து பெரியாரின் கொள்கை மக்களிடம்

சேர்வது என்பது சரியான பாதையில் பயணிக்கத் துவங்குகிறது. பெரியாரின் புரட்சிகர எழுத்தும் பேச்சும் சமுதாய மாற்றத்துக்கான போர்க்கருவிகளாக அமைந்தன.

ஆரம்ப நாட்களிலேயே தங்கபெருமாள் பிள்ளை உடல்நலக் குறைவு காரணமாக ஆசிரியர் பொறுப்பில் இருந்து விலகிவிடுகிறார். 1925 ஆம் ஆண்டு மே மாதம் முதல் 1949 நவம்பர் முடிய வெளிவந்த குடி அரசு வார ஏட்டின் ஆரம்ப நாட்களில், வார இதழின் 12 பக்கங்களையும் பெரியாரே எழுதி வந்ததாய் பெரியார் குறிப்பிட்டுள்ளார். பின்னர் பகுத்தறிவுப் பாதையில் அவருடன் பயணித்த திராவிடக் கழக உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் ம.சிங்கார வேலர், சாமி.சிதம்பரனார், கைவல்யசாமியார், மயிலை.சீனி.வேங்கடசாமி, பாரதிதாசன், ஜீவானந்தம் எனப் பலரும் எழுதியுள்ளனர்.

பெரியார் வரலாற்றைத் தமிழர்களுக்கு படைத்தளித்த சாமி. சிதம்பரனார் பெரியார் பற்றிக் கூறும்போது ...

இவர் எதைப்பற்றியும் அஞ்சாமல் எழுதுவார். இவருக்கு இலக்கணம் தெரியாது. எழுதுவதில் எழுத்துப் பிழைகளும் மலிந்திருக்கும். சொற் பிழைகள் நிறைந்திருக்கும். ஒருவாக்கியம் எப்படி இருக்கவேண்டும் என்பதே இவருக்குத் தெரியாது. இவர் எழுதுவதில் காற்புள்ளி, அரைப்புள்ளி, முற்றுப்புள்ளிக்கு வேலையில்லை. ‘கிணர்’ ‘வயிர்’ ‘சுவற்றில்’ ‘ஆஷி’ ‘சூஷி’ ‘ஆருதல்’ ‘பொருமை’ போன்ற பிழைகள் தாராளமாகக் காணப்படும். சாதாரணமாகப் பேசுந் தமிழில்தான் எழுதுவார். அதிலும் எழுவாயெங்கேயிருக்கிறது, பயனிலை எங்கேயிருக்கிறது என்று தேடினாலும் சில சொற்றொடர்களில் அகப்படா. ஒரு வாக்கியம் நான்கு முழம் ஐந்து முழம் நீண்டிருக்கும். இவ்வளவுபிழைகள் மலிந்திருந்தாலும் படிப்போரை தன்வசமாக்கும் சக்தி இவர் எழுத்துக்கு மட்டும் தனியாக அமைந்துள்ளது. அது என்ன சக்தி என்று நம்மாற் சொல்லமுடியாது.” (‘தமிழர் தலைவர்’ .ப.169) என்கிறார்.

இதனைப் பெரியாரும் ஒருநாளும் மறுத்ததில்லை. அவர் சிலவேளை ஒரே பத்தியில் அனுகூலம் - அநுகூலம், அன்னியர் - அந்நியர், கட்சி - கஷி, சூழ்ச்சி - சூஷி, முஸ்லீம் - முஸ்லிம், தேசீய - தேசிய என்று மாற்றி மாற்றித் தொடர்ந்து எழுதியும், பேச்சுத் தமிழிலும் எழுதியதை அவரே அறிந்திருந்தாலும், இதற்காக இலக்கணம் கற்கப்போவதில்லை என்று கூறி தான் சொல்ல நினைத்த கருத்துக்கு மட்டுமே முக்கியத்துவம் அளித்தார்.

பெரியார் பல்வேறு புனைப் பெயர்களில் கட்டுரைகளை எழுதியுள்ளார். இவற்றில், "சித்திரபுத்திரன்', 'பழைய கருப்பன்' என்பவை நன்கு அறியப்பட்ட புனைப்பெயர்களாகும். இதைத் தவிர தேசீயத்துரோகி, ஒரு தொழிலாளி, சுமைதாங்கி, யார் எழுதினாலென்ன, எவர் எழுதினாலென்ன, ஒருநிருபர், நமதுஅரசியல் நிருபர், பொதுநலப்பிரியன், குறும்பன், உண்மை காண்போன், நம்பிக்கையிழந்தவன், பார்ப்பனரல்லாதான், உண்மை விளம்பி, வம்பளப்போன், பழைய காங்கிரஸ்காரன், வம்பன் என்ற புனைப் பெயர்களிலும் இவர் எழுதியிருக்கலாம் என்ற பெரியாரியலில் ஆர்வம் கொண்டோர், அவர் எழுதும் முறையை நன்கறிந்த வாசகர்கள் கருதுவதுண்டு.

ஆண்டு, மாதம்,தேதி ஆகியவற்றைக் குறிக்க முறையே ௵, ௴, ௳ என்ற குறியீடுகளும், மேற்படி என்பதைக் குறிக்க ௸ என்ற குறியீடும் , ரூபாய், அணா, பைசா எனும் அன்றைய நாணயமுறைக் கணக்குகளையும் அப்படியே பயன்படுத்தினார். பெரியார் முதல் முதலாக எழுத்துச் சீர்திருத்தத்தை குடி அரசில் அறிமுகப்படுத்த எண்ணி இருந்தாலும், எழுத்துச் சீர்திருத்தத்தை அறிமுகப்படுத்தியது 1935 ஆண்டு ஜனவரி 6 ஆம் நாள் வெளிவந்த அவரது மற்றொரு பத்திரிக்கையான "பகுத்தறிவு" வார இதழில்தான். எழுத்துச் சீர்திருத்தத்தை அறிமுகப்படுத்தும் திட்டத்தை, இதற்கு முதல் வார (30.12.1934) "பகுத்தறிவு" இதழின் துணைத் தலையங்கத்தில் கீழ்வருமாறு குறிப்பிடுகிறார்...

_________ "இன்னமும் தமிழ் பாஷை எழுத்துகளில் அனேக மாறுதல்கள் செய்யவேண்டி இருந்தாலும் இப்போதைக்கு இந்த சிறுமாறுதலை அனுபவத்திற்குக் கொண்டு வரலாம் என்று கருதி அந்தப்படியே எழுத்துக்களை உபயோகித்து அடுத்தாப்போல் பிரசுரிக்கப்போகும் 'குடிஅரசு' பத்திரிகையைப்பிரசுரிக்கலாம் என்று இருக்கிறோம்" _________ (பகுத்தறிவு 30.12.1934, ப.12)

சமூக சீர்திருத்தம் மட்டுமே பத்திரிக்கையின் குறிக்கோள்:
ஒவ்வொரு வாரமும் 10,000 'குடிஅரசு' பத்திரிகைகளை அச்சேற்றினாலும், வருவாய் கிடைக்கக் கூடிய விளம்பரங்களை அதிகம் வெளியிட பெரியார் அதிக ஆர்வம் காட்டியதில்லை. விளம்பரங்களுக்கு அதிக பக்கங்களை ஒதுக்கினால் கருத்துகளை அதிகம் சொல்ல இயலாது போகிறது என்பது பெரியாரின் கருத்து. அதிக பக்கங்களை விளம்பரத்திற்கு ஒதுக்க இயலாது என்ற தனது நிலையை வாசகர்களுக்கும், விளம்பரதாரர்களுக்கும் வெளிப்படையாகவே பத்திரிக்கை வாயிலாகக் குறித்து கீழ்வருமாறு அறிவிப்புச் செய்தி அனுப்புகிறார். _________"கொஞ்சநாளைக்கு 'குடிஅரசு'

16 பக்கத்துடனே வெளிப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. என்றாலும் இதனால் வாசகர்களுக்கு அதிகமான குறை ஏற்படாதிருக்கும் பொருட்டு இப்போது விளம்பரத்திற்காக உபயோகப்படுத்தி வரும் சுமார் 7, 8 பக்கங்களை இனி 3 அல்லது 4 பக்கங்களுக்கு அதிகப்படாமல் செய்துவிட்டு, சற்றேறக்குறைய 12 அல்லது 13 பக்கங்களுக்கு குறையாத விஷயங்கள் வெளியாக்க உத்தேசித்திருக்கின்றோம். இதனால் ஒரு சமயம் விளம்பர வியாபாரிகளுக்கு சற்று அதிருப்தி இருக்கலாம்” __________ (குடி அரசு -23.12.1928), என்று தன்நிலை விளக்கம் அளித்துள்ளார்.

“சமதர்ம அறிக்கை”(Communist Manifesto)யின் முதல்பாகம் மொழிபெயர்க்கப்பட்டு, 1931 ஆண்டு, அக்டோபர் 4 ஆம் நாள் குடிஅரசில் தொடங்கி, அந்த ஆண்டு நவம்பர் 1 ஆம் நாள்வரை தொடர்ந்து 5 இதழ்களில் வெளிவந்துள்ளது. இது போன்றே ‘ஜாதியொழிய வேண்டும்’ என்ற தலைப்பில் அறிஞர் அம்பேத்கர் கட்டுரை மொழிபெயர்க்கப்பட்டு வெளிவந்துள்ளது. ‘சமதர்ம அறிக்கை’, ‘ஜாதியொழிய வேண்டும்’ இவையிரண்டும் இந்தியமொழிகளில் தமிழிலும், ஏடுகளில் ‘குடிஅரசி’லும் தான் முதலில் வெளிவந்தன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

‘ஒன்றே குலம்’ என்பதை வலியுறுத்த குடிஅரசு இதழைத் துவக்கிய பெரியாரிடம், நீதிக்கட்சி நடத்தி வந்த ‘திராவிடன்’ நாளேட்டை அவர்களால் நடத்த முடியாத நிலை ஏற்பட்ட பொழுது ‘திராவிடன்’ நாளேட்டை நடத்தும் பொறுப்பும் பெரியாரிடம் வந்து சேர்ந்தது. கொள்கைகளின் படி ‘குடிஅரசு’ பத்திரிக்கை போலத்தான் அதே கொள்கையுடன் ‘திராவிடன்’ நாளேட்டையும் நடத்துவேன், ஒப்புக்கொள்ளாவிட்டால் ஒத்துழைக்காமல் விலகிவிடுவேன் என உறுதியாக அறிவித்துவிட்டுப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார் பெரியார்.

நீதிக்கட்சி, தங்கள் கட்சியில் பார்ப்பனர்களையும் சேர்த்துக்கொள்ளும் முடிவை எடுத்த பொழுது அதை அவர்களது திராவிடன் நாளேட்டிலேயே கண்டித்து எழுதத் துவங்கினார் பெரியார். அதிர்ச்சி அடைந்த நீதிக்கட்சி, ‘திராவிடன்’ நாளேட்டை அவரிடம் இருந்து திரும்பப்பெற்றது. அலர்மேலுமங்கைத்தாயார் எனும் அம்மையாரை ஆசிரியராக அமர்த்தி, ‘திராவிடன்’ நாளேட்டை நீதிக்கட்சி தனது சார்பில் மீண்டும் வெளிக்கொண்டு வந்தபொழுது, “திராவிடன் மதவேறுபாடு, வகுப்புவேறுபாடு காட்டாமல் இனி வெளியிடப்படும்” என்ற அறிவிப்பை வெளியிட்டு, பெரியாரிடம் இருந்து திராவிடன் நாளேடு திரும்பப் பெறப்பட்டதன் நோக்கத்தை வெளிப்படுத்தியது. திராவிடன் நாளேட்டுடன் கொண்ட தொடர்பில் பெரியாருக்கு பொருளிழப்பு

ஏற்பட்டும், தனது கொள்கைக்குப் புறம்பாக இருந்தால் விலகிவிடுவேன் என்று சொல்லியது போலவே, 'திராவிடன்' ஏட்டின் பொறுப்பிலிருந்து விலகினார் பெரியார்.

போராட்டங்களுக்குள்ளான பத்திரிக்கை எழுத்துப்பணி:
பெரியாரின் பத்திரிக்கைகள், பகுத்தறிவு பாசறைகள் மட்டுமல்ல, தமிழக வரலாற்றுப் போக்கையும், அக்கால இந்திய வரலாற்றுப் போக்கையும் படம் பிடித்துக் காட்டுவன. பெரியார் துவக்கிய சுயமரியாதை இயக்கம் என்னும் சமூகப்புரட்சியை, அதனோடு தொடர்புள்ள பெரியாரின் பொதுவாழ்வுப் பயணத்தை, அவர் தமிழகத்தில் கொண்டுவந்த சிந்தனை மாற்றத்தைச் சிறந்த முறையில் பதிவு செய்துள்ள ஆவணங்களாகவும் விளங்குகின்றன.

குடிஅரசு :-
குடிஅரசு தொடங்கிய எட்டு ஆண்டுகளில், "இன்றைய ஆட்சி ஏன் ஒழியவேண்டும்?" என்ற தலைப்பில் பெரியார் எழுதிய தலையங்கத்துக்காக பிரிட்டிஷ் அரசு பெரியார்மீது 'அரசு துரோகக் குற்றச்சாட்டு'களின் கீழ் வழக்கு தொடர்ந்து, 1933 ஆம் ஆண்டில் ரூ.300 அபராதமும் விதித்து, 9 மாதங்கள் சிறையிலும் அடைத்தது. பெரியாரின் மனைவி நாகம்மாளின் மறைவிற்குப் பிறகு, குடிஅரசின் பதிப்பாளராகப் பொறுப்பேற்ற பெரியாரின் தங்கை கண்ணம்மாளுக்கும் ரூ.100 அபராதமும், 6 மாத சிறைத் தண்டனைக்கு விதிக்கப்பட்டது. குடியரசு முடக்கப்படலாம் என எதிர்பார்த்த பெரியார் கவலை கொண்டதாகத் தெரியவில்லை. குடியரசு தடைப்பட்டால் அதேநாளில் வேறு பத்திரிக்கை வரும் என குடிஅரசில் அறிவிக்கிறார். அறிவித்ததுபோலவே, குடிஅரசு வரவேண்டிய அதேநாளில் 'புரட்சி' என்ற பத்திரிக்கையை தடைபடாது வெளியிட்டு விட்டு, அதில், "குடிஅரசை" ஒழிக்கச்செய்த முயற்சியால் "புரட்சி" தோன்ற வேண்டியதாயிற்று. கண்டிப்பாகப் புரட்சி தோன்றியேதான் ஆகவேண்டும்" என்று காரணமும் குறிப்பிடுகிறார்.

பெரியாரின் 'குடியரசு' இதழ் அரசின் அடக்குமுறைகளை எதிர்கொள்வதும் தொடர்கதையானது. பெரியார் சிறையிலிருந்த 1933 ஆம் ஆண்டு நவம்பர் 19 லிருந்து 'குடிஅரசு' தற்காலிகமாக நிறுத்தப்பட்டு மீண்டும் 1935 ஆம் ஆண்டு ஜனவரி 13 லிருந்து வெளிவரத்தொடங்கியது. பிறகு மீண்டும் 1940 ஆம் ஆண்டு டிசம்பர் 29 இல் நிறுத்தப்பட்டு, மீண்டும் 1943 ஆம் ஆண்டு அக்டோபர் 16 லிருந்து வெளிவரத்தொடங்கி, மீண்டும் 1949ஆம் ஆண்டில் அரசின் ஒடுக்கு முறைக்கு உள்ளானது. மேலும் அரசு ரூ.3000 ஜாமீன் தொகை கேட்கவே, குடி அரசு தொடராமல் போகும் நிலைக்குத் தள்ளப்பட்டது. ஆனாலும் 1925 ஆம் ஆண்டு துவங்கி 1949 ஆம்

ஆண்டுவரை ‘குடி அரசு’ தமிழகத்தில் ஏற்படுத்திய தாக்கம் தலைமுறைகள் கடந்து இன்னமும் தொடர்ந்து கொண்டுதான் உள்ளது.

புரட்சி:-

குடியரசு ஏடு மட்டுமல்ல, தொடர்ந்து வந்த “புரட்சி”யும் அடக்கு முறைக்கு உள்ளானது, ஆசிரியர் பெயர் பத்திரிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்று கூறி மீண்டும் வெளியிட்டாளர் கண்ணம்மாள் மீது வழக்கு தொடரப்பட்டு ரூ 1,000 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. ஒரே ஆண்டில் அடுக்கடுக்காக மூன்று வழக்குகள், ஆயிரக்கணக்கில் அபராதங்களுக்கு மேல் அபராதங்கள் எனத் தொடர்ந்து தீட்டப்பட்டு, சுமார் ரூ. 5,000 க்கும் மேல் பொருளிழப்பில் “புரட்சி” இதழும் வெளிவரமுடியாத நிலையை எட்டியது.

பகுத்தறிவு :-

“புரட்சி’ ஏடு வெளிவரும்போதே ‘பகுத்தறிவு’ எனும் நாளிதழைத்தொடக்கிய பொழுது அதுவும் இரண்டு மாதங்கள் என்ற குறுகியகாலத்தில் முடங்கிப் போனது. ஆனால் அதே பகுத்தறிவை தொடர்ந்து வார ஏடாகவும், பிறகு மாத ஏடாகவும் ஏறத்தாழ ஒரு நான்கு ஆண்டுகள் நடத்தியுள்ளார் பெரியார். பகுத்தறிவு வார இதழுக்கும், அதன் உண்மை விளக்கம் அச்சகத்துக்கும் இரண்டாயிரம் ரூபாய் பிணையத் தொகை கட்டவேண்டும் என்று 1935 ஆம் ஆண்டு ஜனவரி 29 இல் அரசு ஆணை பிறப்பித்தது. தடைபட்ட ‘பகுத்தறிவு’ இதழ் பிறகு மீண்டும் 1935 ஆம் ஆண்டு தொழிலாளர் தினமான மே முதல் நாளிலிருந்து பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகத்தின் சார்பில், பகுத்தறிவு மாத இதழாக வெளிவரத்தொடங்கியது.

விடுதலை :-

‘குடி அரசு’ம் வார இதழாக வெளிவந்து கொண்டிருந்த காலத்தில், நீதிக்கட்சியின் சார்பில் வெளிவந்து நின்று போயிருந்த ‘விடுதலை’ இதழும் ஜூன் 1, 1935 ஆம் ஆண்டு முதல் வாரம் இருமுறை இதழாக வெளிவரத் தொடங்கியது. பிறகு 1937 ஆண்டுமுதல் ‘விடுதலை’ வாரம் இருமுறை பதிப்பு என்பது நிறுத்தப்பட்டு, ‘விடுதலை’ நாளேடாக வெளிவருகிறது

ரிவோல்ட்:-

இவற்றோடு பெரியார் ஆங்கில இதழும் வெளியிட்டுள்ளார். சோவியத் புரட்சி நாளான நவம்பர் 7 ஆம் நாளைத் தேர்ந்தெடுத்து 1928 ஆம் ஆண்டில், ரிவோல்ட் (Revolt) என்ற ஆங்கில வார ஏட்டைத் தொடங்கி 55 இதழ்கள் வரையும் வெளியிட்டுள்ளார்.

‘குடிஅரசு’ இதழையும், சுயமரியாதை இயக்கத்தையும் 1925 ஆம் ஆண்டில் துவக்கி, அவற்றின் உதவியுடன் தனது ‘பகுத்தறிவு கொள்கை’ பரப்பும் இயக்கப் பயணத்தைத் தொடங்கிய பெரியாரின் எழுத்தும், பேச்சும் 1938 ஆம் ஆண்டு காலம் வரை முழுமையான வீச்சோடு தமிழகத்தில் மாறுதல்கள் பலவற்றைக் கொண்டு வந்தன. அவற்றின் விளைவுகளால் அவரது கருத்துப் போர்க்களங்களான ‘குடிஅரசு’, ‘புரட்சி’, ‘பகுத்தறிவு’, ‘விடுதலை’ பத்திரிக்கைகள் தொடர்ந்து சந்தித்த அரசின் அடக்குமுறைகளும், இழப்பை ஏற்படுத்தி பத்திரிக்கையை முடக்கும் நோக்கில் ஆயிரக்கணக்கில் தீட்டப்பட்ட அபராதத் தொகைகளும், பிணைப் பணம் கட்டச் சொல்லி தடை செய்த அரசின் கெடுபிடிகளும் பெரியாரை அசைக்க முடியாமல், அவரது போராட்டத்தை தீவிரப்படுத்த மட்டுமே செய்தன.

அடக்குமுறைகள் பல எதிர்கொண்டாலும், பத்திரிக்கை நடத்துவதை ஒரு வருவாய் வரும் வாய்ப்பு என்றே கருதாமல், பகுத்தறிவு கருத்துக்களை மக்களுக்கு எடுத்துச் செல்லும் கருவியாகவும் கருதியவர் பெரியார். இதனால் அவர் என்றும் எழுத்துக்காகப் பெறும் சிறைத் தண்டனைகளையும், அபராதங்களையும் துச்சமாக மதித்திருந்தார். தனது கொள்கைகளில் இருந்து பிறழாமலும், விளம்பரங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காமலும் இதழ் நடத்திய பெரியார் பத்திரிக்கை துறையில் ஒரு முற்றிலும் மாறுபட்ட ஒரு வியத்தகு மனிதர்தான்.

பெரியார் சந்தேகமற உணர்ந்திருந்தது… எவ்வாறாயினும் தமிழக மக்களை சிந்திக்கத் தூண்டி, அவர்களைப் பகுத்தறிவு சிந்தனைப்பாதையில் திருப்பிவிட்டால், அவர்கள் மீண்டும் தங்கள் தன்மதிப்புக்கு இழுக்கு தரும் பாதையில் திரும்பிச் செல்லவே வாய்ப்பிருக்காது என்ற எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் மட்டுமே. தமிழர் உரிமை மீட்பராகப் பெரியார் இதனை அவரது ‘பகுத்தறிவு’ இதழின் தலையங்கத்திலும் குறிப்பிடுகிறார்…

“முடிவாய்க் கூறுமிடத்து. பகுத்தறிவு மனித ஜீவாபிமானத்துக்கு மக்களை வழிநடத்திச் செல்லுமேயொழிய எக்காரணம் கொண்டும் மக்கள் பின் நடந்து செல்லும்படியான அடிமை வாழ்வில் உயிர் வாழாது என்பதேயாகும்” (பகுத்தறிவு-தலையங்கம்-26.8.1934)

**வாழ்க பெரியாரின் சிந்தனையும் நல்முயற்சியும்.**

நன்றி:

சிறகு: http://siragu.com/?p=18458

சிறகு: http://siragu.com/?p=18518

---

கட்டுரைக்கு உதவிய நூல்:

குடிஅரசு 1925, பெரியாரின் எழுத்தும் பேச்சும், தொகுதி 1 (இரண்டாம் பதிப்பு - 2008)

பார்க்க:

பெரியாரின் குடி அரசு மின்னூல்கள்

http://thfreferencelibrary.blogspot.com/2015/03/blog-post_6.html

தமஅ வெளியீடு # 221 முதல் தமஅ வெளியீடு # 244 வரை

அறிமுகம் & தொகுதி 1 --- 23

---

படம் உதவி: சுபாஷிணி டிரம்மல்



**தேமொழி**

themozhi@yahoo.com

35.

# பெரியாரைத் தோற்கடிக்க முடியாது: தொ.பரமசிவன் நேர்காணல்

-- என்.கௌரி.



தொ.பரமசிவன் | படம்: எல்.ஸ்ரீனிவாசன்

தமிழ்ப் பண்பாட்டு ஆய்வுக்களத்தில், பேராசிரியர் தொ. பரமசிவன் தவிர்க்க முடியாத பெயர். வெகுமக்கள் வழக்காறுகள் மற்றும் நம்பிக்கைகள், சடங்குகள் சார்ந்தவை இவரது ஆய்வுகள். 'அழகர் கோயில்', 'பண்பாட்டு அசைவுகள்' போன்ற இவரது நூல்கள் பரவலான கவனத்தைப் பெற்றவை. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராக இருந்து ஓய்வுப் பெற்றவர். அவரிடம் உரையாடியதிலிருந்து...

உங்களுடைய ஆய்வுகளைக் கல்வெட்டுகள், ஓலைச்சுவடு களைத் தாண்டி நாட்டார் வழக்காறுகள் வழி அமைத்துக் கொண்டிருக்கிறீர்கள். அதைப் பற்றி கூறவும்.

நாட்டார் என்கிற சொல்லால் நம்மை மாதிரி நகர்புறத்துக் காரங்க யாரை அர்த்தப்படுத்துகிறோம்? பெரும்பாலும் 'அவுட்காஸ்ட்' எனப்படும் ஊருக்கு வெளியே இருக்கிறவர்கள், கல்வியறிவு இல்லாதவர்கள், ஏழை மக்கள் இவர்களைத்தான் நினைக்கிறோம். நாட்டார் என்று சொன்னவுடன், ஏதோ வேடிக்கை பொருள்மாதிரி,

பெரிய மீசை வைத்துக்கொண்டு, தலையில் துண்டுப் போட்டுக்கொண்டு சாமி ஆடுகிற கூட்டம் மாதிரிதான் நாம் நினைக்கிறோம். ஆனால், அப்படியில்லை. அவர்களைப் படிக்கிறதுதான் உண்மையாகவே தேசத்தைப் படிப்பதாகும். அவர்களுடைய வாழ்க்கை அசைவுகள் அர்த்தமுடையவை. இன்னும் சொல்லப்போனால், நாட்டார் என்று நாம் அடையாளங்காட்டும் ஒவ்வொருவரையும் 'படிக்கப்பட வேண்டிய புத்தகங்கள்' என்று சொல்லலாம். அந்தப் புத்தகங்களைத்தான் நான் ரொம்ப விரும்பிப் படிக்கிறேன். அவர்களிடம் இருக்கும் இயல்பான ஞானம், நம்ம நகர்ப்புறத்துக்காரங்கக்கிட்ட இல்லைங்கிறதுதான் சோகமான விஷயம்.

நாட்டார் வழக்காற்றியல், நாட்டார் பண்பாடு குறித்த ஆய்வுகளுக்கு ஒரு சித்தாந்தம் சார்ந்த அணுகுமுறை அவசியமா?
என்னுடைய ஆய்வுகள் மற்றவர்களைக் கவர்கிற இடமே, பெரியாரியத்தையும், நாட்டாரியலையும் நான் இணைத்துப் பார்ப்பதால்தான். இந்த வியப்பு, மார்க்சியவாதிகளிடமும் இருந்தது. சாதாரணமாகச் சொன்னால், நாட்டார் வழக்காற்றியல் மீது நமது கவனத்தைக் குவித்தது இடதுசாரிகள்தான். எங்கள் ஊரைச் சேர்ந்த என் பக்கத்துத் தெருவைச் சேர்ந்த நா. வானமாமாலை போன்றவர்கள்தான் இந்தத் துறையின் முன்னோடிகள் . மார்க்சிய வெளிச்சத்தில் நாட்டார் மரபை அணுகுகிற போக்கு இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் தலைப்படத் தொடங்கியது.

உங்களுக்கு முன்னர் நா.வானமாமாலை, பேராசிரியர் லூர்து போன்றவர்களும் சமகாலத்தில் நீங்கள், நா. முத்துமோகன் போன்றவர்கள் இத்தகைய ஆய்வுகளில் கவனம் செலுத்தி வருகிறீர்கள். இன்று இத்துறையில் நம்பிக்கையளிக்கும் ஆய்வு களை யார் செய்து வருகிறார்கள்?
அப்படி நம்பிக்கையளிக்கக்கூடியவர்கள் யாரும் இல்லை. நாங்கள் நம்பிக்கையிழந்து போயிருக்கிறோம் என்பதுதான் இப்போதைய சோகம். நீங்கள் சொல்வது போல், வானமாமாலை, லூர்து போன்றவர்கள் முதல் தலை முறையினர். எங்களைப் போன்றவர்கள் அவர்களுக்கு அடுத்தத் தலைமுறை. மூன்றாவது தலைமுறைக்கு இப்போது ஆள் இல்லையென்பதுதான் உண்மை. என்னைவிட, முத்துமோகனுக்கு சித்தாந்தத் தெளிவு நிறைய இருக்கிறது. அவருடைய 'ஏகம், அநேகம், சாதியம்' என்ற புத்தகத்துக்கு நான் முன்னுரை எழுதியிருக்கிறேன். என்னுடைய 'தெய்வங் களும் சமூகமரபுகளும்' என்ற புத்தகத்துக்கு அவர் முன்னுரை கொடுத்திருக்கிறார். நாங்கள் இருவரும் ஒரே படகில் பயணிப்பவர்கள்.

நீங்கள் பாண்டியர்களுடைய வரலாற்றில் கவனம் செலுத்தப் போவதாகக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். இன்னும் செய்ய வேண்டியவை எவை?

களம் திறந்துகிடக்கிறது. ஆய்வாளர்களைத்தான் காண வில்லை. செய்ய வேண்டிய வேலைகள் நிறைய இருக்கின்றன. ஆட்களும், கருவிகளும், நிறுவன வசதியும்தான் இல்லை. மீனாட்சியம்மன், பாண்டியர்களோடு நெருங்கிய தொடர்புடைய தெய்வம் என்பதோடு பழைய வரலாற்றாசிரியர்கள் நிறுத்திக்கொள்வார்கள். நான் கூடுதலாக ஒரு தகவலைத் தருகிறேன். அந்தத் தகவலை அவர்கள் கண்டுகொள்ளவும் இல்லை. கணக்கில் எடுத்துக்கொள்ளவும் இல்லை. மதுரை மீனாட்சியம்மனுக்கு நவராத்திரி திருவிழாவில் ஒரு நாள் 'வேப்பம்பூ மாலை' அணிவிக்கப்படுகிறது. பாண்டியர்களை அடையாளப்படுத்துகிற ஒரு மாலையை ஒரு தெய்வம் அணிகிறது. அதைப் பற்றி எந்த வரலாற்றாசிரியர்களும் இதுவரை ஆய்வுசெய்யவில்லை.

அதிகரித்து வரும் வைதீக மரபின் தாக்கத்தினால் சிறு தெய்வ மரபுகள் அழிந்துவிடுமா?

உக்கிரம் பொருந்திய கையில் ஆயுதமேந்திய, அக்னி மகுடம் சூடிய தாய்த் தெய்வங்களை வைதீக மரபால் ஏற்றுக்கொள்ள முடியாது. மீனாட்சியம்மனைப் போல சாந்தசொரூபியாய் இருக்கும் தெய்வங்களைத்தான் அவர்களால் ஏற்றுக் கொள்ள முடியும். இதை ஒரு 'மைக்ரோ பாலிடிக்ஸ்' என்றுகூடச் சொல்லலாம். எல்லாப் பெருந்தெய்வங்களின் கோயில்களிலும் சிறுதெய்வங்களைக்கொண்டுவந்து குடியமர்த்துவதனா லேயே சிறுதெய்வங்களை பெருந்தெய்வங்கள் தின்று விடும் என்று அச்சப்படத் தேவையில்லை.

சமீபகாலமாக, தமிழகத்தில் சாதி அமைப்புகள் வலுவடைந்து வருகின்றன. மதவாத சக்திகளும் இவற்றை ஊக்கப்படுத்தி வருகின்றன. இந்த நிலையில், அரை நூற்றாண்டுக்கு மேலாக சாதி ஒழிப்பு போராட்டத்தை முன்னெடுத்த பெரியாரின் முயற்சிகள் தோல்வியடைந்துவிட்டதாக விமர்சனங்கள் எழுகின்றனவே?

பெரியார் தோற்றுப்போகவில்லை என்பது மட்டுமல்ல, பெரியாரைத் தோற்கடிக்க முடியாது. ஏனென்றால், அவர் வாக்கு வங்கி அரசியலோடு துளிக்கூட தொடர்பு இல்லாதவர். அவர் மனிதகுலத்தின் விடுதலைக்கு இந்தியாவின் தென்பகுதியில் முதல் நிபந்தனையாக முன்வைத்தது சாதி ஒழிப்பு என்பதைத்தான். எனவே, அவரை மனித குலத்தின் விடுதலையைத் தேடியவர் என்று சொல்லமுடியுமே தவிர, தமிழர்களின் விடுதலையைத் தேடியவர் என்றுகூட சொல்லமுடியாது. அந்த விடுதலைக்கான வழியாக அவர் சாதி ஒழிப்பை முன்வைத்தார். கடவுள் ஒழிப்பு, மத

ஒழிப்பு அல்ல, சாதி ஒழிப்புதான். சாதி புகல்கிற கோயில்கள், சாதி புகல்கிற இலக்கியங்கள், சாதி புகல்கிற மொழி என்று அவர் அதை முன்வைத்தார்.

சாதிக்கு அங்கீகாரம் தருகிற எல்லாவற்றுக்கும் அவர் அங்கீகாரம் தர மறுத்தார். பெரியாரைப் பற்றி எதிர்மறை விமர்சனங்கள் வருவதற்குக் காரணம் நம் கல்வியறிவின் வக்கிரங்கள்தான். நாடாளுமன்ற ஜனநாயகத்தை ஏற்றுக்கொண்டதால்தான் பெரியாரை அடுத்தத்தலைமுறைக்கு எடுத்துச் செல்ல முடியவில்லை. ஊழல், அரசியல் ஒழுக்கமின்மை காரணமாக, பெரியாரை திராவிடக் கட்சிகளால் முன்வைக்க முடியவில்லை. பெரியாரை, சமூகத்திடம் கொண்டுசெல்வதற்கான திறனை அவர்கள் இழந்துவிட்டார்கள்.

பாளையங்கோட்டை வரலாற்றைப் பற்றி எழுதிவருவதாகத் தெரிவித்திருக்கிறீர்கள். அந்தப் பணி முடிந்துவிட்டதா?

அந்தப் புத்தகப் பணி கிட்டத்தட்ட நிறைவடைந்துவிட்டது. பாளையங்கோட்டை, கிறிஸ்தவ சமய மரபுகளை உள் வாங்கிக்கொண்ட ஊர். சமய சகிப்புத்தன்மை என்பது அந்த ஊரைப் பொறுத்தவரை கெட்டவார்த்தை. ஏனென்றால், அது அங்கே இயல்பாகவே இருக்கிறது. நூறு ஆண்டுகளுக்கு முன்பாகவே பார்வையில்லாதவர்களுக்கும், செவித்திறனில்லாதவர்களுக்கும் பள்ளிக்கூடங்களைக் கட்டிய ஊர் அது. அந்த முயற்சியில் நிறைய ஐரோப்பியர்களும் இருந்தார்கள். அதனால்தான், கால்டுவெல் போன்ற அறிஞர்கள் நெல்லை மாவட்டத்தில் இருந்து வந்தவர்கள். ஹென்றி பவர் என்று ஒருவர் இருந்தார். கால்டுவெல்லுக்கு சமகாலத்தவர். பெரியார் எல்லாம் பிறப்பதற்கு முன்னாலேயே ஐரோப்பிய சமூகம் அவரை 'திராவிட இயல் அறிஞர்' என்றுதான் அடையாளப்படுத்தியிருக்கிறது. அவருடைய கல்லறையில் 'எமினென்ட் டிராவிடியன் ஸ்காலர்'(Eminent Dravidian Scholar)என்றுதான் எழுதிவைத்திருக்கின்றனர். பாளையங்கோட்டை தேவாலயங்களில் இப்போது கேட்டாலும் ஹென்றி பவரின் வேதாகம மொழிப்பெயர்ப்பைத்தான் வாசிக்கிறோம் என்று சொல்வார்கள்.

முதல் அறிவியல் தமிழ் நூல் என்று சொல்லப்படுகின்ற 'பூமிசாஸ்திரத்தை' எழுதிய 'சார்லஸ் தியோபலஸ் இரேனியஸ்' என்ற அறிஞரும் பத்தொன்பது ஆண்டுகள் பாளையங்கோட்டையில் வாழ்ந்திருக்கிறார்.

பாளையங்கோட்டையைப் பற்றிய இதுபோன்ற நிறைய நுணுக்கமான சான்றுகள் அழிந்துவிட்டன. அதற்குப் பிறகுதான் நான் என் ஆய்வுகளைத் தொடங்கினேன்.

ஹென்றி பவரின் நூல்கள் எதுவும் கிடைக்கவில்லை. ஒரு வியப்பான செய்தி என்னவென்றால், ஹென்றி பவர் சிந்தாமணிக்கு ஒரு உரை எழுதியிருக்கிறார். சிந்தாமணியைப் பாடம் சொல்வதற்கு தமிழ் ஆசிரியர்கள் இப்போதும் பயப்படுவார்கள். ஆனால், ஹென்றி பவர் 1865-லேயே 'நாமகள் இலம்பகம்' பகுதிக்கு உ.வே.சாவிற்கு முன்னர் உரை எழுதியிருக்கிறார். ஆனால், உ.வே.சா அதைச் சொல்லவேயில்லை.

நன்றி: தி இந்து
http://tamil.thehindu.com/general/literature/பெரியாரைத்-தோற்கடிக்க-முடியாது-தொபரமசிவன்-நேர்காணல்/article7214606.ece

**என். கௌரி**
gowri.n@thehindutamil.co.in

## 36.

# கவுதம் சன்னாவுடன் ஓர் நேர்காணல் (தொடர் ...)

-- செல்வன்.



கேள்வி: 1990ல் மக்கள் அம்பேத்கர் நூற்றாண்டு விழாவை கொண்டாடினார்கள். அந்த காலகட்டத்தில் அம்பேத்கரின் கொள்கைகளும், தலித் எனும் சொல்லாடலும் தமிழகமெங்கும் பரவலாக அறியப்பட்டன. அந்த காலகட்டத்தில் இருந்து தமிழகத்தில் இயங்கிவரும் இயக்கங்கள் குறித்து கூற முடியுமா? அப்போதுதான் டி.பி.ஐ (விடுதலை சிறுத்தை இயக்கம்) மற்றும் புதிய தமிழகம் இயக்கம் ஆகியவை உருவாகின. அதேபோல பல அமைப்புகளும் அக்காலகட்டம் முதல் மக்களை குறிப்பிட்ட அளவில் தம் அமைப்பில் திரட்டியும் வருகின்றன

பதில்: பல எழுத்தாளர்களும், சிந்தனையாளர்களும் தலித் மக்களின் ஒருங்கிணைப்பு அம்பேத்கர் நூற்றாண்டு விழாவின் போதுதான் துவங்கியது என கூறிவந்தாலும் நான் ஆரம்பம் முதலே இதற்கு மாறான கருத்தையே நான் கொண்டுவந்துள்ளேன்.

கேள்வி: அப்போதுதான் இது பரவலாக அறியபட்டது

பதில்: இருக்கலாம், ஆனால் நான் அந்த கருத்தாக்கத்தையே மறுக்கிறேன். தலித் இயக்கங்கள் எப்போதுமே போராடியே வந்துள்ளன. பொதுவாக ஒரு இயக்கத்தால் முப்பது வருடம் மாத்திரமே தீவிரமாக போராடமுடியும். முப்பது வருடம் கழித்து இயக்க முன்னோடிகள் பலருக்கும் வயதாகிவிடும்- வயது நிச்சயமாக இதில் பங்கு வகிக்கிறது- அவர்கள் துணிச்சல் குறையும், அடுத்த தலைமுறை புதிதான ஒரு துவக்கத்தை எதிர்கொள்ளும். உலகெங்கும் உள்ள சமூக இயக்கங்களின் ட்ரெண்டே இதுதான். தமிழக வரலாற்றையே எடுத்துக்கொண்டால் 1880களில் துவங்கிய தலித் இயக்கம் 1914ல் அயோத்திதாசர் மறைவுக்குப்பின் சிறிது தடுமாறியது. அவருக்குபின் 1919ல் அவ்வியக்கம் மீண்டும் வலுப்பெற்றது. 1920களில் திராவிட இயக்கம் தோன்றி அதை நீர்த்துபோகச்சேயும்வரை தலித் இயக்கம் வலுவாகவே இருந்தது. அதன்பின்

அம்பேத்கரின் காலகட்டத்தில் 1932 முதல் 1956 வரை தலித் இயக்கம் தமிழ்நாட்டில் வலுவாகவே இருந்தது. 1956ல் அம்பேத்கரின் மரணத்துக்குபின்  பிராந்திய அளவிலான தலித் தலைவர்கள் தோன்றும் வரை அதில் சிறிது தொய்வு ஏற்பட்டது. அதன்பின் 1960 முதல் 1980 வரை மாநிலமெங்கும் சிறிய அளவில் செல்வாக்கு கொண்ட ஏராளமான பிராந்திய தலைவர்கள் உருவானார்கள். இவர்கள் அதிக அளவில் பேசபட்டவர்களாக இருந்தாலும் இவர்கள் அங்கீகாரம் பெறவில்லை. நீங்கள் எத்தனை போராட்டம் நடத்தியிருந்தாலும், அங்கீகாரம் பெற்றிருந்தால் தான் நீங்கள் தலைவராக ஏற்கபடுவீர்கள் அல்லவா? 1990களுக்கு முன்பு பெரிய அளவில் மோதல்கல் நிகழ்ந்துள்ளன. மீனாட்சிபுரத்தில் நிகழ்ந்த கலவரம் குறித்து மோதல் கேள்விபட்டிருப்பீர்கள். ஆனால் இம்மோதல்களை பதிவு செய்ய அக்காலகட்டத்தில் வாய்ப்பு கிடைக்கவில்லை.

கேள்வி: இவ்விடைக்காலத்தில் உதித்த தலைவர்கள் யார்?

பதில்: வை. பாலசுந்தரம், சேப்பன், இளையபெருமாள், சக்திதாசன் என ஒரு பெரிய பட்டியலே இருக்கிறது. ஆனால் அக்காலகட்டத்தில் அவர்களை அங்கீகரிப்பவர்கள் இல்லை. அவர்கள் இயக்கமாக இருந்தார்களே ஒழிய அரசியலில் அவர்களால் நுழைய முடியவில்லை. 1990க்கு முந்தைய காலகட்டத்தில் இன்னொரு சிக்கலும் இருந்தது. 1990க்கு முன் இன்றைய தலித் சிந்தனையாளர்களும், தலித்-அல்லாத சிந்தனையாளர்களும் 1990க்கு முற்பட்ட தலித் இயக்கத்தை கொள்கையால் உந்தபட்ட இயக்கமாக கருதவில்லை. அவர்கள் அம்பேத்கரையே சாதிகட்சி தலைவராக தான் பார்த்தார்கள். அவர்கள் மனதில் பெரிய தத்துவஞானிகள் என்றால் அவர்கள் லெனின், மார்க்ஸ், மாவோ, ஸ்டாலின் என்ற எண்ணமே இருந்தது. இக்கண்ணோட்டம் கொண்ட அவர்கள் தலித் இயக்கங்களை நிலம், பொருளாதாரம் சம்பந்தபட்ட பொருளியல் ரீதியான போராட்டங்களாகவே கருதினார்கள். அவர்கள் அம்பேத்கரை ஒரு ஜனநாயகவாதியாக அல்லது முற்போக்குவாத எண்ணம் கொண்ட ஒரு முதலாளித்துவ சக்தியாகவே கருதினார்கள். அப்படித்தான் அவர்களால் அவர் வரையறை செய்யபட்டார். இதன் விளைவாக தலித் இயக்கங்களின் பின்புலம், சித்தாந்தம் மற்றும் மக்களை திரட்டுதல் ஆகியவற்றுக்கு அவர்கள் முக்கியத்துவம் அளிக்க தவறினார்கள்.

அவர்கள் சிந்தனையில் மாற்றம் எப்போது வந்தது என கேட்டால் 1988 முதல் 1991 வரை ரஷ்யாவில் பெருத்த மாற்றம் ஒன்று நிகழ்ந்தது. கோர்பசேவ் ரஷ்யாவில் பெரஸ்ட்ராய்டிகாவை அறிமுகபடுத்துகிறார். ஆனால் அது தோல்வியடைகிறது. அது

தோல்வியடைந்தபின் சோவியத்யூனியன் வீழ்ச்சியடைகிறது. சோவியத் யூனியனின் குடியரசுகள் விடுதலையடைந்து முதலாளித்துவ, ஜனநாயக அமைப்பை உருவாக்குகின்றன. கம்யூனிசத்தால் உந்தப்பட்ட சிந்தனையாளர்கள் பலரும் ரஷ்யாவிலேயே தம் கவனத்தை செலுத்தி வந்ததால் உள்ளூரில் உருவான இயக்கங்களை படிக்க தவறிவிட்டார்கள். சோவியத்யூனியனின் வீழ்ச்சிக்கு பின்னரே அவர்கள் ஆய்வுகளில் மாற்றம் உருவானது. சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்கு பின்னர் தான் அவர்கள் அங்கே நடப்பதை பற்றி பேசுவதில் எப்பலனும் இல்லை எனும் முடிவுக்கு வருகிறார்கள். சீனாவிலும் அதே சமயம் முதலாளித்துவம் அறிமுகமாகிறது. இம்மாற்றங்களால் அவர்கள் சிந்தனையில் மாற்றம் நிகழ்ந்த சமயத்தில் தான் அம்பேத்கர் நூற்றாண்டு உதயமாகிறது. இதன்பின்னர்தான் இந்த சிந்தனையாளர்கள் அம்பேத்கரை படிக்கவே தொடங்குகிறார்கள். அம்பேத்கரை படித்தபின் தான் அவர் ஒரு தலைசிறந்த சிந்தனையாளர் என்பதை அறிந்து அவரை அங்கீகரிக்க துவங்குகிறார்கள். இவர்கள் அடைந்த மனமாற்றத்தை ஏதோ சமூகமே மாறியதாக கருதி எழுதினார்கள். இந்த கண்ணோட்டத்தில் தான் அவர்கள் அம்பேத்கர் நூற்றாண்டுக்கு பின்னரே தலித் இயக்க எழுச்சி உருவானதாக கருதுகிறார்கள். முந்தைய போராட்டங்களையும், இயக்கங்களையும் யாரும் கருத்தில் கொள்ளவில்லை.

கேள்வி: நீங்கள் சொல்வது உண்மையே. அவர்களை நாம் மறந்துவிடக்கூடாது

பதில்: ஆம், அவர்களை நாம் மறக்ககூடாது, ஆனால் அவர்கள் மறக்கபட்டுவிட்டார்கள் 1990களுக்கு முந்தைய காலகட்டத்தில் கணக்கற்ற தலித் இதழ்கள் வெளிவந்தன. ஆனால் இவர்கள் அவற்றை படிக்கும் எண்ணம் கூட கொண்டிருக்கவில்லை. இவர்கள் என்ன செய்தார்கள் என்றால் 1990க்குபின் அவர்கள் இந்த இதழ்களை படிக்க துவங்கினாலும், தாம் அவற்றை படிக்க துவங்கியதையே தலித் இயக்க எழுச்சியின் காரணமாக கூறிவருகிறார்கள். தலித்-அல்லாத சிந்தனையாளர்களிடம் தான் தலித்துகளுக்கு முன்பு இல்லாத சித்தாந்த அறிவு இருப்பதாக இவர்கள் கருதுகிறார்கள். களம் எதுவாக இருப்பினும் 30 ஆண்டுகளுக்கு ஒருமுறை புதிய இயக்கங்கள் எழும். அதேபோல அம்பேத்கர் நூற்ராண்டுவிழாவின்போது புதிய தலித் இயக்கங்கள் எழுச்சி பெற்றன. தலித் சிறுத்தைகள் இயக்கம் அப்போது மறுமலர்ச்சி பெற்றாலும், அது 1990க்கு முன்பே உருவாகிவிட்டது. ஆனால் திருமாவளவன் தலைமையேற்ற பின்னரே இந்த தலித்-அல்லாத சிந்தனையாளர்கள் அவரை ஆதரித்கு உடன் வர ஒத்துழைக்கிறார்கள். அன்று இருந்த இயக்கம் இதுமட்டுமல்ல. புதிய தமிழகமும் இருந்தது, அருந்ததியினர்

இயக்கங்கள் இருந்தன, பல சிறு இயக்கங்களும் ஜாதி ஒழிப்பு இயக்கங்களும், முண்ணனிகளும் இருந்தன. இந்த எழுச்சியின் ஒரு காரணமாக அம்பேத்கர் நூற்றாண்டை குறிப்பிடலாமே ஒழிய- தலித் இயக்கம் உருவாகவே இதுதான் காரணி என கூறமுடியாது. ஏனெனில் (அது உண்மையெனில்) அம்பேத்கரின் சிந்தனைகளை இத்தனை ஆண்டுகளாக அழியாமல் பாதுகாத்து வந்தவர்கள் யார்?

***

பேரா. யூகோ: ஆனால் 1987/1988/1989 காலகட்டத்தில் தானே அவர்கள் அம்பேத்கரின் படைப்புகளை தமிழில் மொழிபெயர்த்தார்கள்?

சன்னா: அவர்கள் மொழிபெயர்த்தது உண்மையே. ஆனால் அதற்கும் முன்பே பல குறுவெளியீடுகளில் அவரது படைப்புகள் வெளிவந்தன. சரி, இதைகூட விடுங்கள், உங்களை இன்னொரு கேள்வி கேட்கிறேன். அந்த காலகட்டத்துக்கு முன்பு தமிழ்நாட்டில் அம்பேத்கரின் சிலைகள் இருக்கவில்லையா?

பேரா யூகோ: இருந்தன. ஆனால் இந்த அளவு எண்ணிக்கையில் இருக்கவில்லை

சன்னா: அம்பேத்கரை பொறுத்தவரை மக்கள் அவரது கருத்துக்களை படித்தபின் போராட்டத்தில் இறங்கவில்லை. மக்களை பொறுத்தவரை அவர் பெரும்பாலும் ஒரு குறியீடு மட்டுமே. அவர் நமக்காக உழைத்தார், நமக்காக போராடினார், அதனால் அவர் நம் ரட்சகர் என்றே மக்கள் கருதுகிறார்கள். அதனால் கிராமம் கிராமமாக அம்பேத்கரின் சிலைகளை எழுப்பி போராடும் உணர்வை அதன்மூலம் வளர்த்தார்கள். பொதுமக்கள் போராட கொள்கை, தத்துவம் போன்றவை அவசியமில்லை. தலித் அல்லாத சிந்தனையாளர்கள் கருதியது என்னவெனில் போராட ஒரு தத்துவ அடித்தளம் வேண்டும் என கருதியதே. அப்படி கருதியதால் தான் இந்த இடைப்பட்ட காலத்தை அவர்கள் முற்றிலும் தவறாக புரிந்து கொண்டார்கள். ஆக நாம் 1990 அம்பேத்கர் நூற்றாண்டுவிழாவை தலித் அல்லாதோருக்கான விழிப்புணர்வுகாலம் என புரிந்துகொள்ளலாமே ஒழிய, அது தலித்துகளை பொறுத்தவரை ஒரு நல்ல வாய்ப்பு மட்டுமே. இந்த கோணம் பலராலும் புரிந்துகொள்ளபடவில்லை என்றே கருதுகிறேன்

பேரா யூகோ: நல்ல பாயிண்ட், வெகு சிலரே இதைப்பற்றி பேசுகிறார்கள். பேராசிரியர்கள் நூலகங்களில் அமர்ந்தபடி அயோத்திதாசரைப்பற்றியும் தலித்

இயக்கங்களின் தொடர்வரலாறு குறித்தும் பேசுவார்கள். இயக்கங்கள் ஓரிரவில் அல்லது ஒரே நாளில் எழமுடியாது என்பதும் தெளிவு. புரட்சிக்கான விதைகள் முதற்கண் ஊன்றபடல் அவசியம். நாமும் இயக்கங்களின் முந்தைய வரலாற்றை ஆராய்வதும் அவசியம். நான் இதுவரை பேசியவர்களின் உங்களைபோல தெளிவாக இதை பேசியவர்கள் யாருமே இல்லை. ஆனால் இதுவரையிலும் யாருமே 1957 முதல் 1990 வரை வாழ்ந்த தலித் தலைவர்களைப்பற்றி எழுதியதில்லை

சன்னா: அவர்கள் அத்தலைவர்களைபற்றி கொஞ்சமும் அக்கறை காட்டியதில்லை

பேரா யூகோ: ஆம். இவர்கள் அத்தலைவர்களை புறக்கணித்தது மட்டுமின்றி அவர்களைப்பற்றி எழுதவும் இல்லை

சன்னா: ஆமாம். சிவராஜ் (குடியரசு கட்சி தலைவர்) ஒரு முக்கியமான தலைவர். அவர் அம்பேத்கருக்கு அடுத்த நிலையில் அவருடன் இருந்தவர். ஆனால் அவரைப்பற்றி யாருக்கு என்ன அக்கறை சொல்லுங்கள்? அவர் அம்பேத்கரை விட ஒரு வருடம் மட்டுமே மூத்தவர், ஆனால் அவரைப்பற்றி எழுதுபவர்கள் யாருமே இல்லை. அம்பேத்கரின் மறைவுக்கு பின் அவர் அமைக்க விரும்பிய குடியரசுக் கட்சியை என் சிவராஜ் அமைத்தார். அம்பேத்கர் இந்திய குடியரசு கட்சியை அமைக்க விரும்பி அதற்கான விதிகளையும், கொள்கைகளையும் எழுதினார். ஆனால் அக்கனவு நனவாகும் முன்னரே மறைந்தார். குடியரசுகட்சியை உருவாக்கி அகில இந்திய அளவில் கொண்டு சென்றதில் பெரும்பங்கு என். சிவராஜுக்கு உண்டு. அப்போது அதிகம் புகழ் பெற்ற தலைவர்கள் தமிழகத்தில் பலர் இருந்தார்கள். அம்பேத்கர் 1956ல் இறந்தார். குடியரசுக்கட்சி 1957ல் உதயமாகிறது. 1962 தேர்தலில் திமுக குடியரசுக் கட்சியுடன் கூட்டணி சேர்கிறது. கூட்டணி உருவாகும் சமயத்தில் தமிழகத்தில் இருந்த முக்கிய தலித் தலைவர் ஆர்ய சங்கரன் ஆவார். அவருக்கு பின் பள்ளிகொண்டா எம். கிருஷ்ணசாமி, ஜி.மூர்த்தி, சக்திதாசன், சேப்பன், எல். இளையபெருமாள், வை.பாலசுந்தரம் மற்றும் பல தலைவர்களும் பிற்காலத்தில் வந்த இயக்கங்களுக்கு வழிகோலினார்கள். இந்த தலைவர்களை யாருமே அங்கீகரிக்கவில்லை. திமுகவுடன் கூட்டு சேரும் அளவுக்கு அக்காலகட்டத்தில் குடியரசுக்கட்சி வலுவானதாக இருந்தது. என்.சிவராஜ் வேலூரில் போட்டியிட்டு இரண்டாமிடத்தை பிடித்தார். (அவர் இதற்குமுன் 1957ல் செங்கல்பட்டு நாடாளுமன்ற தொகுதியில் போட்டியிட்டு வென்றிருந்தார்). சிவராஜ் வேலூர் எம்பி தொகுதியில் போட்டியிட்டார். அதே சமயம் வேலூரில் இருந்த ஆறு தொகுதியிலும் திமுக வேட்பாளர்கள் போட்டியிட்டார்கள். இரு கட்சியினரும் ஒரே கூட்டணி என்பதால்

இருவரும் வென்றிருக்க வேண்டும். திமுக ஆறு தொகுதியிலும் வென்றிருந்தால் குடியரசு கட்சியும் எம்பி தேர்தலில் வென்றிருக்க வேண்டும். ஆனால் அதிர்ச்சியளிக்கும் முறையில் ஆறு திமுக வேட்பாளர்களும் வெற்றிபெற்றும், குடியரசு கட்சி வேலூர் எம்பி தேர்தலில் தோற்கடிக்கபட்டார். இது யார் குற்றம்? திமுகவினர் அவருக்கு ஓட்டு போட்டிருக்கவேண்டும் இல்லையா? கூட்டணிகட்சிக்கு துரோகம் செய்த திமுக தலித்களின் உரிமைக்கும்,அடையாளத்துக்கும் போரிடுவதாக எப்படிக்கூற முடியும்?

திராவிட கட்சிகள் மற்றும் திராவிட இயக்கங்களின் இயல்பே இதுதான். தலித் தலைவர்களின் குரலை ஒலிக்க அனுமதிக்கபடாததால் தலித் இயக்கமே இல்லை என நாம் முடிவுகட்ட முடியாது. ஆக, அம்பேத்கர் மறைந்து 1990 வரையிலான 30 ஆண்டு காலகட்டத்தில் குறிப்பிடதக்க இயக்கங்கள் தமிழ்நாட்டிலும், இந்திய அளவிலும் இயங்கியே வந்துள்ளன. அவற்றை ஏற்றுகொள்ள மனமில்லாத நிலையாலேயெ இவ்வகை விவாதங்கள் தோன்றுகின்றன. 1990ல் சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்கு பின்னரே தலித அல்லாத சிந்தனையாளர்கள் கண்ணில் தலித் செயல்பாடுகள் தெரிய துவங்கின

பேரா யூகோ: குடியரசுகட்சி போன்ற கட்சிகள் தம் சொந்த சின்னத்தில் போட்டியிடவில்லை என்பதும் திமுக அல்லது அதிமுக போன்ற கட்சிகளின் சின்னத்திலேயே போட்டியிட்டன என்பதும் சரியான தகவல் தானே?

சன்னா: ஆம். துவக்க நிலையில் (1952 மற்றும் 1957 தேர்தல்களில்) குடியரசுக்கட்சி சொந்தமாக யானை சின்னத்தில் நின்றது. சட்டசபை தேர்தலில் காமன்வீல் கட்சியுடன் உதயசூரியன் சின்னத்தில் (இதை பின்பு திமுக சுவிகாரம் எடுத்தது) நின்றது. அதன்பின் தலித் கட்சிகள் தனித்துபோட்டியிடும் அளவு ஓட்டுவங்கியை திரட்ட முடியாததால் அவர்களால் சொந்த கட்சி சின்னத்தில் நிற்க முடியவில்லை. அவர்களுக்கு கொடுக்கபட்ட தொகுதிகள் 1 அல்லது 2 எனும் அளவிலேயே இருந்ததால் திமுகவுடன் கூட்டணி வைத்தால் உதயசூரியன் என்றும் அதிமுகவுடன் கூட்டணி வைத்தால் இரட்டை இலை என்ற நிலையிலேயே அவர்கள் போட்டியிட நேர்ந்தது. இப்படித்தான் அவர்களின் இயக்கங்கள் ஒடுக்கபட்டன.

***

பேரா. யூகோ: இதனால் தான் 1990க்கு பிறகு உருவான இயக்கங்கள் தேர்தலை புறக்கணித்தும், மக்களை ஒரு புரட்சிகரமான முறையை கையாண்டும் திரட்ட முற்பட்டனவா?

சன்னா: ஆம். தேர்தலில் என்ன நடக்கிறது என பார்த்தோமானால் தலித்துகளால் தங்களுக்கு உரிய பங்கை பெறமுடியாத சூழலே நிலவுகிறது. இதற்கு இரு காரணங்கள் உள்ளன. ஒன்று 1932ல் வந்த அரசு உத்தரவால் 1935 முதல் அவர்களால் இரட்டை தொகுதிகளை பெற முடியவில்லை. இரட்டை தொகுதிமுறைக்கு பதில் ரிசர்வ் தொகுதிகளை பெற்றார்கள். இதன் விளைவு என்னவெனில் இத்தொகுதிகளின் பிரதிநிதி தலித்தாக இருக்கவேண்டும் என ஆனாலும், அனைத்து கட்சிகளும் இத்தொகுதிகளில் நிறுத்தும் தலித் வேட்பாளர் கட்சி பிரதிநிதியாக செயல்படுகிறாரே ஒழிய இனப்பிரதிநிதியாக செயல்படுவதில்லை. ஆக தலித்துகளுக்கு கிடைத்த இந்த அரசியல் உரிமை தலித் அல்லாதவருக்கே முதன்மையாக பயன்படும் சூழல் இதனால் உருவாகிறது. இந்த அரசியல்முறை மேல் தலித்துகளுக்கு இருந்த நம்பிக்கையை குறைத்து தலித்களின் வலிமையை வேறு வழிகளில் அதிகரிக்கவேண்டும் என்ற சிந்தனையை உருவாக்கியது. அடிப்படையில் தலித் மக்கள் தேர்தல்களில் தொடர்ந்து மனசோர்வையும், ஏமாற்றத்தையுமே கண்டு வருகிறார்கள். குறிப்பாக இது தலித் இளைஞர்களிடையே எந்த கட்சியும் தங்களுக்கான பிரதிநிதியாக இல்லை என்றும் எக்கட்சியுமே அவர்களின் குரலாக ஒலிக்கவில்லை என்ற எண்ணத்தையுமே மேலோங்க வைத்தது. இந்த சூழலில் தேர்தல் புறக்கணிப்பை விடுதலை சிறுத்தைகள் முன்வைத்தபோது அது பெருத்த உற்சாகத்துடனும், புரட்சியாகவும் தென்மாவட்டங்களில் குறிப்பாக மதுரை மற்றும் சுற்றுப்புற மாவட்டங்களிலும் கருதப்பட்டு தமிழகத்தின் அனைத்து பகுதிகளுக்கும் பரவியது. தேர்தல் புறக்கணிப்பு தமிழகத்தில் இன்றும் கூட ஒரு உணர்ச்சிகரமான விஷயமாகவே தொடர்ந்து வருகிறது.

இரண்டாவது காரணம் ஜாதி ஒடுக்குமுறைகள் ஆகும். 1990ல் ஜெயலலிதா ஆட்சிக்கு வந்து பெருமளவில் முக்குலத்தோர் சமுதாயவர்க்கு முன்னுரிமை வழங்கினார். இது தேவர் சமுதாய மக்களிடையே ஆண்ட பரம்பரை என்ற எண்ணத்தையும், தமக்கு தலித்துகளை அடக்கி ஆள உரிமை உண்டு என்ற எண்ணத்தையும் வளர்த்தது. தலித்துகள் இதை ஏற்க மறுத்ததால் பெருமளவில் ஜாதி மோதல்கள் நிகழ்ந்தன. இச்சூழலிலும் ரிசர்வ் தொகுதி தலித் எம்.எல்.ஏக்கள் பேசாமடைந்தைகளாக சட்டசபையில் அமர்ந்திருந்தார்களே அன்றி ஜாதிரீதியான அடக்குமுறைக்கு எதிராக குரல் கொடுக்கவில்லை. தலித் மக்களிடையே, குறிப்பாக தலித் இளைஞர்களிடையே

இது பெருத்த மனச்சோர்வை ஏற்படுத்தி தற்போதைய தேர்தல் முறை தங்களை காப்பாற்றாது எனும் எண்ணத்தையுமே உருவாக்கியது. ஆக அவர்கள் இயல்பாகவே தேர்தல் புறக்கணிப்பாலும், தலித் சிறுத்தைகள் முன்வைத்த புரட்சிகர மனப்பான்மையாலும் கவரப்பட்டார்கள். இதுவே இதன் சமூக பின்புலன் ஆகும்

பேரா யூகோ: ஜாதி முறையின் தீய விளைவுகள் இப்போது குறைந்து, சாதி இந்துக்களின் அடக்குமுறைகள் குறைந்துவிட்டனவா?

சன்னா: இல்லை. இது சாத்தியமில்லை. இவ்வடக்குமுறை இன்னமும் உயிருடன் தான் உள்ளது. இப்போதும் தினமும் பல அடக்குமுறைசம்பவங்கள் நிகழ்ந்தவண்ணமே உள்ளன.

பேரா யூகோ: கல்வியால் தீண்டாமையை ஒழிக்க இயலுமா? அதிகரிக்கும் கல்வியால் ஜாதி அடையாளத்தை பாதுகாக்கும் எண்ணமும், தீண்டாமையை பின்பற்றுவதும் குறையுமா? கல்வி இதை ஒழிக்க உதவும் என நம்புகிறேன்

சன்னா: இல்லை. நான் அப்படி நினைக்கவில்லை. ஏனெனில் சாதி இந்துக்கள் இப்போது படித்த சாதி-இந்துக்களாகவே இருக்கிறார்கள். ஜாதிமுறையால் தங்களுக்கு கிடைத்த சலுகைகளை இழக்க அவர்கள் எப்படி முனைவார்கள்? தம்முடைய அடையாளத்தை பாதுகாக்கவே அவர்கள் தீண்டாமையை வலியுறுத்துகிறார்கள். அத்துடன் இருவிதமான தீண்டாமைகள் நிலவுகின்றன. ஒன்று வெளிப்படையான தீண்டாமை, இரண்டாவது நுட்பமான வெளிப்படையாக தெரியாத மறைமுகமான தீண்டாமை.

பேரா யூகோ: இதன் பொருள் என்ன?

சன்னா: எதிர்காலத்தில் இருக்கும் பெரிய சவாலே நுட்பமான, மறைமுக தீண்டாமையின் வெளிப்பாடுகளை கண்டறிவதே. இத்தகைய தீண்டாமை நகரங்களில் நிலவுகிறது. இத்தகைய மறைமுகமான தீண்டாமையை கண்டறிந்து அரசியல் சூழலில் இது உருவாக்கும் காரணிகளையும், தாக்கங்களையும் ஆராய்ந்து கண்டுபிடிக்க கல்வியாளர்களுக்கு நான் அழைப்பு விடுக்கிறேன்

பேரா யூகோ: இது இருப்பதே கூட நமக்கு தெரியாமல் இருக்கலாம்

சன்னா: ஆமாம். ஜாதி ஒழிப்பை பற்றி பேசினால் இதை கண்டறிந்துவிடலாம். ஜாதி ஒழிப்பை பற்றி பேசினால் உடனே அவர்கள் "இதோ பாருங்கள். நான் (ஜாதியால்) பெரியவன். பழைய எண்ணங்களை துறந்து தலித்துகளுடன் அமர்ந்து உண்ணவும், டீ குடிக்கவும் செய்கிறேன்" என்பார்கள். இப்படி சொல்லுவதே ஒருவித ஜாதிய உயர்வு மனப்பான்மை ஆகும். இப்படித்தான் எல்லா சமயங்களிலும் நடக்கிறது. அதன்பின் நீங்கள் சென்னைக்கு வருவீர்கள். வந்து அங்கிருக்கும் அடுக்குமாடி கட்டிடங்களில் குடியிருப்பீர்கள். அதன்பின் நான் தலித் உரிமையைப்பற்றி பேசுவேன் என்பீர்கள். ஆனால் உங்கள் வீட்டுக்கு அருகே குடிசைகள் இருக்கும். அவர்களை பற்றி வாயை திறக்க கூட மாட்டீர்கள். கேட்டால் "அவர்கள் மோசமானவர்கள்" என்பீர்கள். இது மாதிரியான உள்ளொன்று வைத்து புறமொன்று பேசும் மனப்பான்மையே அறிவுஜீவிகளிடம் நிலவுகிறது

பேரா யூகோ: இதுமட்டுமல்ல. தலித்துகளின் வரலாற்றை புறக்கணிக்கும் மனப்பான்மையும் காணப்படுகிறது. உதாரண்மாக - சபால்டர்ன் ஸ்டடிஸ் எனும் பெயரில் ஒடுக்கபட்ட மக்கலின் வரலாற்றை ஆராயும் உலகப்புகழ் பெற்ற வரலாற்றுத்துறை ஆசிரியர்கள் கூட தலித்களைப்பற்றி பேசியதில்லை

சன்னா: ஆம். அவர்கள் பேசவில்லை

பேரா யூகோ: ஆனால் தலித்துகள் தானே ஒடுக்கப்பட்ட மக்களில் முக்கியமானவர்கள்?

சன்னா: நிச்சயமாக. இம்மாதிரி குற்றசாட்டுக்களை அவர்கள் மேல் நாம் சுமத்தியபின்னரே அவர்கள் அமைதியாகி, விலகினார்கள். சில காலம் கழித்து அவர்கள் மனதில் "என்னை இப்படி இவர்கள் திட்டுகையில் இவர்களது பிரச்சனையை நான் ஏன் பேசவேண்டும்?" என்ற எண்ணமே வந்தது. இதன் காரணமாக தான் அறிவுசார் வட்டங்களில் தலித் அல்லாத சிந்தனையாளர்கள் அமைதியாக இருக்கிறார்கள். இல்லையெனில் அவர்கள் இந்நேரம் தங்கள் குரலை எழுப்பி இருக்க வேண்டும் அல்லவா?

பேரா யூகோ: வி. கீதா போன்ற பலரும் தலித் இயக்கங்களை பற்றி எழுதிக்கொண்டு வருகிறார்கள் அல்லவா?

சன்னா: இது நாங்கள் எழுப்பும் குற்றசாட்டுகளை எதிர்கொள்ள அவர்கள் கடைபிடிக்கும் பாதுகாப்பு உத்தியாகும். ஆக ஓரிரவில் 1990ல் தலித் இயக்கம்

எழுந்தது என சொல்வதை விட  நீண்ட-கால நோக்கில் மக்களை திரட்டும் முயற்சியே நிகழ்ந்தது என கூறலாம். 1990களில் அம்முயற்சிக்கு வழியும், ஆற்றலும் கிடைத்தபின்னர் தலித் அரசியல் வீறுகொண்டு எழுந்தது. அரசிடம் இது எத்தகைய அச்சத்தை உருவாக்கியது என கேட்டால், அப்போது இத்தகைய புரட்சிகர அமைப்புகள் தேர்தலை புறக்கணித்தும், தலித் மக்களை ஒருங்கிணைத்தும் வந்தன. அவை நக்சல்பாரி இயக்கங்களாக ஆகலாம் எனும் அச்சம் அப்போது அரசிடம் நிலவியது. தம் இருப்புக்கு இத்தகைய சோதனை வந்ததை உணர்ந்த திராவிட அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து தலித் இயக்கங்களுக்கு நெருக்கடி கொடுத்தன. தலித் மக்கள் மேல் அவர்கள் வழக்குகளை தொடர்ந்தும், கலவரங்களை தூண்டியும் அழுத்தம் கொடுத்து பாராளுமன்ற அரசியலுக்கு கொண்டுவர முயன்றார்கள். அதே சமயம் நாம் 1990 முதல் 1998 வரை தேர்தல் புறக்கணிப்பு செய்ததால் விளைந்த விளைவுகள் என்ன என கேட்க வேண்டும். இதனால் இவர்களால் மக்களை திரட்ட முடிந்தது. அவர்களின் துயரங்களுக்கு ஒரு வடிவத்தை கொடுக்க முடிந்தது. தாக்கபடுகையில் திருப்பி அடிக்கவும் முடிந்தது. ஆனால் இது மட்டுமே ஒரு அரசியல் கட்சியின்முழுமையான பணியாக இருக்க முடியாது.

***

பேரா: ஹ்யூகோ: ஆனால் விழிப்புணர்வை ஏற்படுத்த அவை உதவின அல்லவா?

சன்னா: ஆமாம், ராஜதந்திர ரீதியில் மக்களுக்கு அரசியல் விழிப்புணர்வை ஊட்ட அவை உதவின. இதற்கு அடுத்தகட்டம் தலித்துகளை அரசியல் ரீதியாக அதிகாரத்தை அடையவிடாமல் தடுப்பவர்கள் யாரோ அவர்களிடமிருந்து அதிகாரத்தை கைப்பற்றுவதே ஆகும். அரசியல் வளர்ச்சியின் இயல்பான பரிணாமமே இது. தேர்தலை புறக்கணித்து வந்த தலித் கட்சிகள் அதிகாரத்தை தாமே கையில் எடுப்பது அல்லது அதிகாரம் உள்ளவர்களிடமிருந்து அதிகாரத்தை பறிப்பது எனும் தேர்வுகளில் ஒன்றை தேர்ந்தெடுக்கும் நிலைக்கு ஆளாகின. விடுதலை சிறுத்தைகள் அமைப்பில் இணைந்தவர்களின் அரசியல் வலு குறைவதை இது தடுக்கும் என்ற நோக்கில் அவை தேர்தலில் பங்கெடுக்க முன்வந்தன. இப்படி முடிவெடுத்ததும் அரசியல் கூட்டணிகள், தேர்தல் வேலைகள் போன்றவற்றை செய்யும் அவசியம் உருவானது. அனால் நான் முன்பே சொன்னதுபோன்ற 30 வருட காலசுழற்சியை அவை மிக சிறப்பாக பயன்படுத்தி மக்களைத்திரட்டி போரிட தயார் செய்தன

பேரா ஹ்யூகோ: சரி 1999 வரை நீங்கள் "தேர்தல் பாதை திருடர் பாதை" எனவும் "அரசியல் ஒரு சாக்கடை" என்றும் கூறீவந்தீர்கள். இப்போது சாக்கடையில் புதிய தமிழகம், விடுதலை சிறுத்தைகள் உள்ளிட்ட கட்சிகள் இறங்கிவிட்டன. இதன்பின் தலித் அரசியலை எப்படி முன்னெடுக்கிறீர்கள்?

சன்னா: தேர்தலில் இறங்கியபின் தமிழ்மாநில காங்கிரஸ் தலைவர் மூப்பனாருடன் கைகோர்த்து மூன்றாவது அணியை அமைத்தோம். இதன் நோக்கம் திமுக, அதிமுக அல்லாத புதிய தமிழகம், விடுதலை சிறுத்தைகள் கட்சிகளை உள்ளிட்ட இடைநிலை சாதிகளின் அமைப்பை உருவாக்குவதே. ஆனால் மூப்பனார் இதற்கு இணங்காமல் 1999க்கு பிறகு அதிமுகவுடன் கூட்டணி அமைத்தார். அதன்பின் 2001, 2011, 2006 என அனைத்து தேர்தல்களிலும் திராவிட கட்சிகள் இல்லாத மாற்று அமைப்பை உருவாக்குவதே விடுதலை சிறுத்தைகளின் நோக்கமாக இருந்தது. இதை நிறைவேற்ற இக்கட்சி கடுமையாக முயன்றாலும் வெற்றி கிட்டவில்லை. இது அரசியல் நிலையில் மாற்றம் வருவதற்கான சிறந்த வாய்ப்பாகும். விடுதலை சிறுத்தைகளுக்கு மாற்றம் வேண்டும் எனும் ஆர்வம் இருந்தாலும் மற்ற கட்சிகளின் மனதில் அப்படிப்பட்ட விருப்பம் இல்லை. உதாரணமாக மருத்துவர் ராமதாஸை எடுத்துக்கொள்வோம். ராமதாஸ் எளியவர்களை ஒருங்கிணைக்க முயன்றார். மீனவர்கள், முஸ்லிம்கள் முதலானோரை இடைநிலை சாதியினருடன் ஒருங்கிணைக்க முயன்றார். அவர் எங்களுடன் சேர்ந்து தமிழ் பாதுகாப்பு அமைப்பை துவக்கி ஈழம் முதலான போராட்டங்களில் பங்கெடுத்தாலும் இதுவரை மூன்றாம் அணியாக எங்களுடன் இணைந்து தேர்தலை சந்திக்க அவர் முன்வரவில்லை. 2009ல் மூன்றாவது அணியை அமைக்க முயன்றோம். எங்கள் தலைவர் தொல். திருமாவளவன் மாற்று அணியை அமைக்க மிகுந்த முன்னேற்பாட்டுடன் முயற்சிகளை எடுத்தார். அதே சமயம் 2007ல் ஒரு தலித் சித்தாந்தம் உருவானது. இதன்படி தமிழகத்தில் தலித்துகள், கிறிஸ்துவர்கள், மீனவர்கள், முஸ்லிம்கள், ஆதிவாசிகள் மற்றும் பிற சிறுபான்மை சமூகத்தினர் ஆகியோர் பாமகவுடன் இணைந்தால் அது தமிழக அரசியலில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என நம்பினோம். அரசியல்ரீதியாக இத்தகைய அமைப்பு திமுக மற்றும் அதிமுக ஆகிய கட்சிகளுக்கு சமமான மாற்று அமைப்பாக இருக்கும். 1996 தேர்தலில் இது ஒரு புரட்சிகர மாற்று சித்தாந்தமாக முன்வைக்கபட்டது. 1996 தேர்தலில் இதை ஓரளவு நிறைவேற்ற முயன்றார்கள். தலித்துகள் இதை செய்ததும் உடனே தலித் அல்லாத சாதிகளும் அரசியல் கட்சிகளை உருவாக்கினார்கள். உருவாக்கி திமுகவுடன் கூட்டணி சேர்ந்தார்கள். கூட்டணி சேர்ந்ததும் பெரும்தோல்வியை அடைந்தார்கள். இந்த அனுபவத்திற்கு பின் சாதிகட்சிகளுடன் கூட்டணி அமைக்க 1996க்கு பிறகு

திமுக முன்வரவில்லை. ஆக அச்சமயத்தில் மாற்று அமைப்பை உருவாக்க இச்சாதிகட்சிகள் முயன்றாலும் திமுக அதை தன் அரசியல் ஆதாயத்திற்கு பயன்படுத்திக்கொண்டது.

இது நிகழ்ந்தபின் சிறுகட்சிகளின் மேலான மக்களின் நம்பகதன்மை குறைந்து மூன்றாவது அணிக்கான வாய்ப்பு மங்கியது. இச்சயமத்தில் தான் புதிய தமிழகம் அரசியலில் நுழைந்தது, விடுதலை சிறுத்தைகள் அமைப்பும் தன் அரசியல் நிலைப்பாட்டை மறுபரிசீலனை செய்தது.அதன்பின் 1999, 2001 தேர்தல்களில் ஜாதிகட்சிகளுடன் சேரமாட்டோம் என அறிவித்த திமுக ஜாதிகட்சிகள் என தங்களை வெளிப்படையாக அறிவிக்காத கட்சிகளுடன் கூட்டணி சேர்ந்தது. இதனால் விடுதலை சிறுத்தைகளுக்கு அதில் சேர வாய்ப்பு கிடைக்காமல் அதிமுகவுடன் சேரும் நிலை உருவானது. ஆனால் மாற்று அணி என அந்த சமயம் உருவான திட்டம் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் முக்கிய செயல்திட்டமாகவே இருந்து வருகிறது. அன்றிலிருந்து 2011 வரை அத்தகைய அணியை உருவாக்கவே முனைந்து செயல்பட்டு வருகிறோம். ஆனால் அந்த முயற்சிகள் எல்லாமே தோல்வியையே சந்தித்துள்ளன.ஆக இதன் அடிப்படை உண்மை என்னவெனில் விடுதலை சிறுத்தைகள் கட்சி அரசியலில் நுழைந்தாலும் தன் கொள்கையில் உறுதியாகவே இருந்து வருகிறது. ஆனால் அதை நிறைவேற்றுவதில் அவர்கள் வெற்றி பெறவில்லை

பேரா ஹ்யூகோ: சரி, இப்போது திராவிட கட்சிகளுடன் இணைந்து செயல்படவேண்டியது அவசியம் ஆகிவிட்டது. அவர்கள் தங்கள் கூட்டணியில் உங்களுக்கான அங்கீகாரத்தை வழங்குகிறார்களா? தேர்தல் சமயம் களத்தில் இறங்கி உங்களுக்காக அடிமட்ட அளவில் பணியாற்றுகிறார்களா? உங்களுக்கு ஓட்டு போடுகிறார்களா? உங்கள் தலைவருக்கு மேடையில் மரியாதை கொடுக்கிறார்களா? கூட்டணியில் உங்கள் நிலை என்ன?

சன்னா: இரு கட்சிகளையும் பார்த்தால் அதிமுக இப்போது ஒரு தேவர் கட்சியாக- அதாவது முக்குலத்தோர் கட்சியாக மாறிவிட்டது. ஜெயலலிதா என்று சசிகலாவுடன் சேர்ந்தாரோ அன்றே அது முக்குலத்தோர் கட்சியாக மாறிவிட்டது. வடக்கே வன்னியர் ஓட்டுக்கள் பாமக, திமுக என இரண்டாக பிரிந்துள்ளன. அதிமுகவை பொறுத்தவரை அவர்களின் வன்னியர் வாக்குவங்கி மிக சிறியதே. அதிமுகவுடன் விடுதலை சிறுத்தைகள் கட்சி சேர்ந்தால் வடக்கே விடுதலை சிறுத்தைகளே அதிமுகவை தாண்டி ஆதிக்கம் செலுத்தும். ஆனால் பல அடித்தட்டுமக்கள்

அதிமுகவில் இருக்கிறார்கள் என்பதையும் குறிப்பிடவேண்டும். இதனால் அதிமுகவில் விடுதலை சிறுத்தைகளுக்கு நல்ல மரியாதை கிடைத்தது. திமுகவை பொறுத்தவரை மேடையில் எங்கள் தலைவர்களுக்கு கிடைக்கும் அங்கீகாரம் அடிமட்ட அளவில் கிடைப்பதில்லை. திமுக மேடைகளில் எங்கள் தலைவர்கள் கருணாநிதிக்கு சமமாக மேடையில் அமராலம். அவர்கள் கட்சிதலைவர்கள் எங்கள் கட்சி மேடைகளுக்கு வருவார்கள். ஆனால் மேடையில் கிடைக்கும் மரியாதை அடிமட்ட அளவில் கிடைப்பதில்லை. அதிமுகவை பொறூத்தவரை அவர்கள் தென்மாவட்டங்களில் முக்குலத்தோர் கட்சியாக இருப்பதால் அங்கே அவர்கள் எங்களை மதிப்பதில்லை. இந்த சமூகத்தில் நாங்கள் எந்த மேடைகளில் எங்களை ஏற்றுகொள்கிறார்கள் என்பதை மட்டுமே பார்க்கும் சூழலே நிலவுகிறது.

அரசியல் சாக்கடையில் இறங்கியபின்னர் திமுக மற்றும் அதிமுகவுக்கு இடையேயான வித்தியாசம் இதுவே என ஆகிவிட்டது. இம்மாதிரி பார்த்தால் அவர்கள் எங்களுக்கு கொடுத்த பங்கு மிக சிறிது என்பதுடன் எக்கட்சியிலும் எங்களுக்கு முழுமையான அங்கீகாரம் கிடைக்கவில்லை. அவர்கள் எங்களை "தலித் கட்சி" என்ற கண்ணோட்டத்தில் மட்டுமே பார்க்கிறார்கள். இக்கண்ணோட்டம் மாற சிறிது காலம் ஆகலாம்.

***

பேரா யூகோ: அவர்களது ஓட்டு விடுதலை சிறுத்தைகளுக்கு விழுகிறதா? கடந்த தேர்தலை எடுத்துக்கொள்வோம். 2011ல் விடுதலை சிறுத்தைகள், திமுக, புதிய தமிழகம் எல்லாமே ஓரணியில் இருந்தன. வட மாவட்டங்களில் வன்னியர்கள் ஒன்று திமுகவில் இருக்கிறார்கள் அல்லது பாமகவில் இருக்கிறார்கள், தலித்துகள் விடுதலை சிறுத்தைகளில் இருக்கிறார்கள். மூன்று கட்சிகளை சேர்ந்தவர்களும் இதன் அடிப்படையில் வாக்களித்திருந்தால் நீங்கள் குறைந்தது 2 அல்லது 3 தொகுதியிலாவது வெற்றி பெற்றிருக்க வேண்டுமல்லவா?

சன்னா: ஆம்

பேரா யூகோ: ஆனால் நீங்கள் ஒரு தொகுதியில் கூட ஜெயிக்கவில்லை

சன்னா: ஓட்டு வங்கிகளை பற்றி பேசினால், குறிப்பாக 2011 என எடுத்துக்கொண்டால் பலரும் நினைப்பது என்னவெனில் பாமக ஒட்டுமொத்தமாக வன்னியர் கட்சி என

நினைக்கிறார்கள். ஆனால் வன்னியர்கள் அந்த அளவுக்கு ஒற்றுமையாக இருந்து பாமகவை ஆதரிக்கவில்லை. இது முக்கியம். வன்னியரில் இருவகை உண்டு. ஒன்று தமிழ் பேசும் வன்னியர். இன்னொன்று தெலுங்கு பேசும் வன்னியர். தமிழ் வன்னியர்க்ள் ராமதாசுடன் இருக்கிறார்கள். தெலுங்கு பேசும் வன்னியர்கள் தனியான அரசியல் சக்தியாக இருக்கிறார்கள். தெலுங்கு பேசும் அக்கினி குல வன்னியர்கள்- நாயுடுகள், ரெட்டியார்கள் இதர தெலுங்கு பேசும் சாதிகளுடன் இணைகிறார்களே ஒழிய ராமதாசின் தலைமையை ஏற்கவில்லை. இது ஒன்று. அடுத்து திமுகவில் உள்ள தெலுங்கு பேசும் வன்னியர்க்ளை எடுத்துக்கொண்டால், அதிகாரம் தெலுங்கு பேசும் வசதியான வன்னியர் வேட்பாளர்களிடையே உள்ளது. அதனால் தான் அவர்கள் அக்கட்சியில் இருக்கிறார்கள். 2011ல் தேமுதிக திமுகவின் தெலுங்கு வன்னியர் ஓட்டை பிரித்தது. அத்துடன் பாமகவின் வன்னியர் ஓட்டும் குன்றியது. இந்த சூழலில் தெலுங்கு பேச்ம் வன்னியர் விடுதலை சிறுத்தைகளுடன் சேரவேண்டும் என்ற அவசியம் இல்லையே? மேலும் பாமகவில் உள்ள தமிழ் பேசும் வன்னியரும் விடுதலை சிறுத்தைகளை முழுமையாக ஆதரிக்கும் வாய்ப்பு குறைவே. நேற்றுவரை அவர்களை எதிர்த்த ஒருவர் இன்று அவர்களுக்கு எதிராக நிற்கையில், அவரை அவர்களுக்கு சமமாக பார்க்கமுடியாமல் அவர்கள் தம் ஆதரவை அளிப்பதில்லை.

தலித்துகளை எடுத்துக்கொண்டால் ஓட்டுபோடுவது தம் கடமை என கருதுகிராார்களே ஒழிய தம் இனத்தை சேர்ந்த இன்னொரு தலித்துக்கு ஓட்டுபோடுவதே நேர்மை என அவர்கள் கருதுவதில்லை. அதனால் அவர்களது ஓட்டு பல கட்சியினரிடையே பிரிகிறது. தலித் ஓட்டு தலித் அல்லாதாருக்கு விழுகிறது. ஆனால் தலித் அல்லாதார் ஓட்டு தலித்துகளுக்கு விழுவதில்லை. இந்த பிண்ணனியிலேயே விடுதலை சிறுத்தைக்ள் பத்து தொகுதிகளில் அடைந்த தோல்வியை புரிந்து கொள்ள வேண்டும். வன்னியர் ஓட்டும், இடைநிலை சாதி ஓட்டும் விடுதலை சிறுத்தைகளுக்கு விழவில்லை. என்ன நடந்திருக்கவேன்டுமெனில் அக்கட்சி தலைவர்கள் தம் தொண்டர்களுக்கு சரியான பயிற்சி கொடுத்திருக்கவேண்டும் என்பதே. அப்படி நடந்திருந்தால் திமுக கூட்டணியின் தோல்வி தவிர்க்கபட்டிருக்கலாம்
பேரா யூகோ: நான் இதிலுள்ள உண்மையை ஒப்புகொள்கிறேன். ஆனால் அதே போன்ற பயிற்சியை விடுதலை சிறுத்தைகளும் கொடுக்கவேண்டும் என கருதுகிறேன். ஏனெனில்..

சன்னா: உண்மை. அம்மாதிரி பயிற்சிகள் தேவைபடுகின்றன

யூகோ: உதாரணத்துக்கு சோழவந்தான் தொகுதியில், கள அளவில் விடுதலை சிறுத்தைகள் கட்சித் தொண்டர்கள் அதிமுகவுக்காக பணியாற்றினார்கள். காரணம் கேட்டதற்கு அத்தொகுதியின் பாமக வேட்பாளர் பள்ளர் என்றும் அதிமுக வேட்பாளர் பறையர் என்பதால் தம் தொகுதியில் பறையருக்கு வாய்ப்பளிக்கவேண்டும் எனக் கருதுவதாகவும் கூறினார்கள். பலர் தம் கூட்டணி வேட்பாளரை ஆதரித்தாலும் மற்றவர்கள் எதிர்கட்சியான அதிமுகவையே ஆதரித்தார்கள்

சன்னா: நீங்கள் சொன்னதுபோல விடுதலை சிறுத்தைகள் கட்சி தொண்டர்களுக்கும் அப்பயிற்சி அவசியமாகிறது. சாதிய உணர்வு தலைதூக்குகையில் அனைத்து இடங்களிலும் இம்மாதிரி பிரச்சனைகள் எழுகின்றன. உள்ளூர் அரசியலையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும். உள்ளூர் அரசியல் பிரச்சனைகள் இருக்கையில் கட்சி தொண்டர்கள் எதிரணி வேட்பாளருக்கு சாதகமாக வேலைபார்க்கும் வாய்ப்புகள் அதிகம். நாம் இம்மாதிரி பயிற்சியை வருங்காலத்தில் கொடுக்கவேண்டும் என்பதையும், நம்மிடம் அப்பகுதியில் குறைகள் உள்ளன என்பதையும் மறக்க கூடாது. விடுதலை சிறுத்தைகளில் ஜாதி இல்லை என நாம் கூற முடியாது. அம்மாதிரி எதிர்பார்க்கவும் முடியாது என்பதால் விடுதலை சிறுத்தைகளிடமும் இவ்விஷயத்தில் மாற்றம் வரவேண்டும்

பேரா யூகோ: சரி..உங்கள் கட்சி இப்போது ஒரு அரசியல் கட்சியாகிவிட்டது. தலித் ஓட்டுக்களை மட்டுமே வைத்து எந்த தலித் கட்சியும் தேர்தலில் வெற்றி பெற முடியாது அல்லவா?

சன்னா: நிச்சயமாக முடியாது என உறுதியாக கூறலாம்

(திரு. சன்னா அவர்களின் நேர்காணல் தொடரும்..)




**செல்வன்**

holyape@gmail.com

## 37.

# வீணை

-- கவிஞர் ருத்ரா.



நரம்புகள்
காஷ்மீரிலிருந்து குமரிவரை
பின்னல் இட்டதில்
ஒரு வீணை செய்து
மீட்டுகின்றோம்.
பல மொழி
பல இனம்
பல மதம்
பல ராகங்கள் முழங்கினாலும்
நமக்கு கேட்பது
ஒரே வர்ண மெட்டு.

கல்வி எனும் ஆதார சுருதி
எங்கோ ஒரு மூலையில் இருக்கும்
மண்ணாங்கட்டியையும்
மாணிக்கக் கதிர் வீசச்செய்யும்.
ஒரு எருமை மாட்டை கொல்வதற்கா
அந்த வெற்றித்திருமகள்
பவனி வந்தாள்?
பள்ளிக்கூடங்கள்
வறுமையின் வெறும்
எலும்புகூடுகளாய்
இற்று விடாதிருக்க
இங்கே சீற்றம் கொண்டாள்.
லஞ்சமும் ஊழலும் தான்
அந்த எருமை மாட்டின் இரு கொம்புகள்
என்று அவள் புரிந்து கொண்டாள்.
இந்த
சுதந்திர தேவி சீற்றம் கொள்ளட்டும்.
கேவலம் சுண்டல் பொரி கூட
ஓட்டின் மின்னணு பொறிகளை
விலைக்கு வாங்கி விடும்
அவலங்கள் மீது
அவள் சூலம்
சீற்றம் கொள்ளட்டும்.
ஆம்!
சீற்றம் கொள்ளட்டும்.



**கவிஞர் ருத்ரா இ. பரமசிவன்**
ruthraasivan@gmail.com

38.

# தீபாவளி வாழ்த்து

-- கவிஞர் ருத்ரா.




எல்லோரும் வாழ வேண்டும்
எல்லாமும் பெற்று வாழவேண்டும்.
இதற்காக
இனிப்பு புத்தாடை பட்டாசுகளோடு
வாழ்த்துவோம்.
எந்த பண்டிகை என்றால் என்ன?
எந்த கடவுள் என்றால் என்ன?
மகிழ்ச்சியின் திளைப்பை
களிப்பின் உள் மலர்ச்சியை
எப்படி நுள்ளிப்பார்த்தாலும்
எப்படி கிள்ளிப்பார்த்தாலும்
ஒன்றாய் தானே இருக்கவேண்டும்.
மகிழ்ச்சியைக்கொண்டாடுவோம்.
மகிழ்ச்சியே இல்லாத மூலைகள்
எங்கே இருந்தாலும்

ஒரு துளி மகிழ்ச்சியாவது
அங்கே பட்டு
நனையவேண்டும்.
இதில் தனித்தனி வாய்க்கால்கள் வெட்டும்
அருளுரைகள் கூட
மொத்தக்கடலின் திவலைகளாக தெறிக்கட்டும்.
பள்ளிவாசல்
தேவாலயம்
கோவில்
எல்லாம் வெறும் இடங்கள்.
மகிழ்ச்சி வேண்டி மண்டியிடும்
மனங்களே
இங்கு எல்லாம்.
நாம் கொண்டாடுவோம்
எல்லா பண்டிகைகளையும்.
ஒருவர் பண்டிகை
மற்றவருக்கு வெறும் விடுமுறையாய்
கழிந்து போகும்
போலித்தன்மைகள்
கழன்று போகும் நாளே
பொன்னான நாள்.
எல்லாமதங்களும்
ஒரே மதமாய் ஆகும்போது
அப்போது தான்
நாம் அறிகிறோம்
மதங்கள் உரிந்து போன
மன வெளியை.
அந்த மகிழ்ச்சிக்கு
கடல்கள் துச்சம்.
கவலைகளுக்கும் அச்சம்
நெருங்குவதற்கு.
மகிழ்ச்சியை
எல்லா மண் தொட்டிகளிலும்
பதியம் இடுவோம்.

அந்த பூக்களுக்கு
அதன் மகரந்தங்களுக்கு
சுவர்கள் இல்லை.
கூரைகள் இல்லை.
அந்த மகிழ்ச்சியே மீண்டும் மீண்டும்
அந்த மானிடத்து ஒளியின்
மகரந்த சேர்க்கையாய்
மத்தாப்பூக்கள் சுடர்ந்திடட்டும்



**கவிஞர் ருத்ரா இ. பரமசிவன்**
ruthraasivan@gmail.com

39.

## அப்பாவின் பட்டுவேஷ்டி

-- ஷைலஜா.



அப்பாவின் பட்டுவேஷ்டிமீது
அண்ணனுக்கு ஒருகண்
தம்பிக்கு இரண்டு கண்
பெண்ணானஎனக்கும்
அதன் மீதான
பார்வையைக்கண்டு
அம்மா சிரிப்பாள்

அகலஜரிகை கரையிட்டு
சற்றே பழுப்புநிறமானாலும்
பளபளக்கும் பட்டுவேஷ்டியை

தாவணியாய் அணிந்துகொள்ள
தணியாத ஆசை இருந்தது
சுபநாட்களில்
கல்யாணப்பந்தலில்
அப்பாவின் பட்டுவேஷ்டி
அவரது மேனியில்
அமர்க்களமாய் ஜொலிக்கும்
திருபுவனம்பட்டாம்
திருமணத்தில் மாமனார் சீராம்
அருமையாய் அதைப்பேணுவார்
'ஆளழகா துப்படிக்காரா என்பதுபோல
செல்வநிலை அதிகமில்லாத என்னை
பட்டுவேஷ்டி பணக்காரனாக்குகிறது'
என்று சொல்லி சிரித்துக்கொள்வார்
கூட்டங்களில் அப்பாவின் கம்பீரத்தை
சட்டென அடையாளம்காட்டும்

அப்பாவால் வேஷ்டி அழகாகிறதா
வேஷ்டியால்அப்பா அழகாயிருக்கிறாரா
பட்டிமன்றக்கேள்விகள்
பட்டுவேஷ்டியைச்சுற்றியே
வந்துகொண்டிருக்கும்
ஒருநாளும் அதை
யார் தொடவும் அனுமதித்ததில்லை
பொக்கிஷமாய்ப்பேணி
பெட்டிக்குள் பத்திரப்படுத்துவார்
சந்தன சோப்பிட்டு
வேஷ்டிக்கு நோகாமல் துவைத்து
வெய்யில்மறைந்ததும்
நிழலில்காயவைத்து
நேசமுடன் பாதுகாப்பார்
பட்டுவேஷ்டியை
பத்துமாதக்குழந்தைபோலத்தான்
பெட்டியினின்றும் எடுப்பார்

மடித்த இடம் கத்தியின் கூர்மையாய்
வாளின்பளபளப்பாய்
முப்பதுவருஷமானாலும்
அழகாய் ஜொலிக்கும்
நாள்பட இருக்கவேண்டுமென
நான்கு வசம்புத்துண்டங்களை
பட்டுவேஷ்டிக்குப்
பக்கதில்போட்டிருப்பார்
எதிர்பாரா அப்பாவின் மரணத்தில்
நிலைகுலைந்து போய்விடவும்
பட்டுவேஷ்டியைப்பற்றியெல்லாம்
பலநாட்கள் நினைக்கவே இல்லை
அன்றுஅப்பாவின்
பெட்டியைத்திறந்தபொழுது
அதில் அந்த பட்டுவேஷ்டி இல்லை.

சின்னக்கவர் ஒன்று தென்படவும்
'திறந்துபார்த்தோம்
அதில்பட்டுவேஷ்டியை
விலைக்குபோட்ட ரசீதும்
இரண்டாயிரம் ரூபாயும் சில்லறையும்
'எனது மரண காரிய செலவுக்கு..'
என்ற அப்பாவின் கையெழுத்திட்ட
கடிதமும்இருந்தது.



**ஷைலஜா**
shylaja01@gmail.com

40.

## தேன் மின்னல்

-- கவிஞர் ருத்ரா.



நான் பார்க்கும் போது
படாரென்று சாத்துகிறாய்.
நான் விலகி நின்று
மீண்டும் உற்று பார்த்தபோதும்
கதவு சாத்தியே கிடக்கிறது.
நானும் வெகு நேரம்
நின்று பார்த்து
மீண்டும் பார்த்தாலும்
சாத்தியே கிடக்கிறது.
எப்போது திறப்பாய்?

வானத்தின்
இந்தக்கோடியிலிருந்து
அந்தக்கோடி வரைக்கும்
யாரோ "ஸிப்" வைத்து
தைத்து விட்டார்கள் போலும்.

கொஞ்சம் சிரியேன்
அப்போதாவது
வானம் வாய்திறந்து
அந்த பல்லாங்குழி சோவிகளை
கொட்டிக் கல கலக்குமே!

மொட்டை மாடியில்
நீங்கள் காயப்போட்ட
வடாம் பூராவற்றையும்
காக்காய் கொத்திக்கொண்டிருக்கிறதே
அதை விரட்டக்கூட
மொட்டை மாடிக்கு
வரமாட்டாயா?
ஏனெனில்
காக்காய் கொத்திக்கொண்டிருப்பது
என் இதயத்தை!
அதை கந்தலாக்கலாமா
கண்ணே?

ஏண்டி!
சன்னலைச்சாத்தி சாத்தி
வைக்கிறாய்?
மூச்சு முட்டுகிறது?
சரிம்மா.

இது தான் சமயம்.
சன்னலுக்கு ஓடுகிறேன்.
என்ன செய்வது?
அங்கே
அவள் அம்மா
மஞ்சள் கிழங்காய்
குங்குமப்பொட்டாய்
சன்னல் பூராவும்
சிவப்பாய் சுட்டுக்கொண்டிருந்தாள்.

சட்!
என்ன செய்வது
சலிப்புடன் விலகினேன்.
"க்ளுக்கென்று"
சிரிப்பொலி.
குறும்புக்காரி!
சன்னலின் நேர் மேலாய்
மொட்டை மாடியின்
விளிம்பிலிருந்து
எங்கள் சன்னலைப்பார்த்து
குமுக்குச் சிரிப்பை
சிந்திக்கொண்டிருந்தாள்.
ஆகா!
மறுபடியும் பாய்ந்தேன்
எங்கள் மொட்டை மாடிக்கு.
அங்கே மாடி
சுத்தமாய் திருப்பதிக்கு வேண்டி
மொட்டை அடிக்கப்பட்டிருந்தது.
மீண்டும் சன்னலுக்கு வந்தால்
அது சிறிது திறந்த நிலையில்
முக்கால் வாசிக்கும் மேல்
மூடியிருந்தது.
இடுக்கு வழியே
கண்களும்
புன்னகையுமாய் அவள்!
சன்னல் முழுதும் திறந்து
அந்த தேன் மின்னல்
எப்போது ஒழுகும்?



**கவிஞர் ருத்ரா இ. பரமசிவன்**
ruthraasivan@gmail.com

## 41.

# மண்டிக்கிடக்கும் நினைவுப்புதர்கள்

கண்ட கனவுகள்
கொண்ட நினைவுகள்
மண்டிக்கிடக்கும் நிகழ்வுப்புதர்கள்
மனமெனும் காட்டிடத்தே! {மலர்விழி}

மனப்புழுக்கத்துக்கு
உடல் வியர்க்கிறது
உடல் புழக்கத்துக்கு
மனம் அயர்கிறது
இரண்டையும் குழைத்தே
கட்டிய கட்டிடம் {தமிழ்த்தேனீ}

கட்டிய கட்டிடம்
பூட்டிய அறைகள்
புழங்காத உறவுகள்
படியாத பேரங்கள்
உரிமைச் சாளரங்கள்
உண்மை உணரா
உன்னதப் பாழ்வெளி {மலர்விழி}

பாழ்வெளியின் சூழ்வெளிகளால்
ஊழ்வலியின் சூழ் வலிகளால்
ஆழியும் புகுந்தே பாழ்பட்டே போனது
கோழிமேடும் குப்பைமேடும் {தமிழ்த்தேனீ}

குப்பைமேடும் கோபுரமும்
தப்பைத் தானுணர்ந்து
நட்டாத்தில் போனகதை நாடறிய
ஒப்புமோ நட் (ஷ்) டக்கணக்கு {மலர்விழி}

கணக்கெல்லாம் எழுதினாலும்
பிணக்குதான் தீரவில்லை
மக்களுக்கும் அரசுக்கும்
எக்கணக்கும் இல்லை நேர்மையாய் {தமிழ்த்தேனீ}

நேர்மையாய் நேரியதாய்
தார்மீகமாய் செய்யாததை
பார்மீது காட்டிடவே மண்மீது
பிராண்டியதோ பேய்மழையே!? {மலர்விழி}

பேய் மழையும் பேரிடராய்
ஆனதற்கு காரணமே
பாய்முதல் படுக்கை வரை
சுருட்டியதன் காரணமே
செத்துப் போன மனிதத்துக்கு
சொத்து சேர்க்கவே {தமிழ்த்தேனீ}

சொத்துச்சேர்க்கவேதான்
வெத்துவேட்டுகளைக்கூட்டிகிட்டு
மொத்துமொத்தாய் மொடாமொடாவாய்
கொத்துக்கொத்தாய் கொள்ளைக்கூட்டமாய்
ஏத்திவச்சிவினைதானே அரசியல் கட்சிகளால்
ஆனதுவே ஆனதுவே கபளீகரம்!? {மலர்விழி}

கபளீகரம் செய்ததெல்லாம் போதாதா
கடல் வழியே சுனாமியாய்
பூமிக்குள்ளிருந்து பூகம்பமாய்
இன்னும் தொடர்கிறீர் நடிப்பின் உச்சம்
அடுத்து ஆட்சியைப் பிடிக்க {தமிழ்த்தேனீ}

அடுத்து ஆட்சியைப் பிடிக்க
அரசியல்வாதிகள் போடுவர் திட்டம்
இவரது குட்டை அவர் உடைக்க
அவரது முகத்திரையை இவர் கிழிக்க

குப்பையைக் கிளறி கிளறி
தாங்கவியலாத முடை நாற்றம்
கிடைப்பதென்னவோ மக்களுக்கு
நிரந்தரமாக என்றுமே பட்டை நாமம் {தேமொழி}

பட்டையும் நாமமும் நெற்றியில் மட்டுமே
மொத்த உடலும் மனமும் குப்பைதான்
சட்டை செய்யாத மனிதரிவர்
குட்டையும் குளமும் ஆக்ரமித்தாலும்
வாக்கு வேட்டை மட்டுமே குறி
முடை நாறாமல் என்ன செய்யும் {தமிழ்த்தேனீ}

என்ன செய்யும் எப்படிச்செய்யும்
இன்னபிறயாரரிவார் காலமகள்
தின்னமாய் பதிலுரைப்பாள் அவருந்தான்
திருந்துவரோ மனதுள்ளும் மனிதராய்? {மலர்விழி}

மனிதராய்ப் பிறக்கவே
மாதவம் செய்தோமென்றார்
மனிதராய் வாழ்ந்திட
மா மாதவம் வேண்டுமன்றோ! {அன்பு ஜெயா}

மா மாதவத்தை மன்பதையில் ஈண்டு
மாமாதவம் என்றே மாறியுணர்ந்தார்
மாமாவேலைக்குப் பலர்வந்ததாலே
மா மாதவத்தோர் மறைத்தனர் நொந்து {மலர்விழி}

நொந்து போன மக்களுக்கு ஆதரவாய்
மா மா பெரும் சேவைக்கு
மனிதம் துணை வந்ததால்
பேரிடர் மா மதயானையும்
மறைந்தே நொந்ததே {தமிழ்த்தேனீ}

நொந்ததே என்று தளர்பவருக்கும்
வந்திடும் ஓர் நாள் புது வாழ்வு
கடந்ததை எண்ணிக் கலங்காது
இழந்ததை எண்ணிப் புலம்பாது
வருவதை எதிர்கொள்வோருக்கு
வாழ்வில் என்றுமே தாழ்வில்லை {தேமொழி}

தாழ்வில்லை என்றே உணர்ந்து
தளராது முயல்வோரே
தரமான தருணம் இது
தலைதூக்கி எழுந்து வாரும்
மனிதம் தலை தூக்கினால்
மற்றவை தலை கவிழும் {தமிழ்த்தேனீ}

கவிழும் தலை காசினியில் நிமிர்ந்திடவே
கங்கணம் கட்டி வந்திடும் உள்ளங்கள்
கணக்கின்றி உள்ளனவே காண்போம்,
கண்குளிர்வோம், கவலை அகற்றிடுவோம் {அன்பு ஜெயா}

அகற்றிடுவோம் குப்பை நினைவுகளை
கூடவே குப்பை மலைகளைகளையும்
நாடு செழிக்கட்டும் நாற்றம் ஒழியட்டும்
பீடு நடைபோடுவோம் காசினியிலே {தமிழ்த்தேனீ}

காசினியிலே கரங்கள் பலவுண்டு
மாசில்லா மனங்கொண்டு நெகிழ்ந்து
பாசிபடியா பளிங்கு உணர்வதுகொண்டு
வாசமலராய் வந்தாரே உதவிக்கரங்களாய் {மலர்விழி}

உதவிக் கரங்களாய் நிதமும் வாழ்ந்திடுவீர்
மதமான பேய்தனையே மன்பதையில் நீக்கிடுவீர்
இதமான இன்சொற்கள் என்றும் பேசிடுவீர்
எதுவுமில்லை இவ்வாறு வாழ்வதற்கு ஈடு! {மேகலா}

ஈடு இணையற்ற மானுடப் பிறவியிலே
தேடு நல்லோரின் நட்பினையே நீஎன்றும்
கூடு அறவோர்கள் அவைக்களம் தன்னிலே
ஓடாதோ தீமை உனைவிட்டு வெகுதூரம்?! {மேகலா}

வெகுதூரம் சென்றாலும் அருகினிலே நின்றாலும்
மிகுந்த அன்பினையே நம்மீது பொழிந்துநிற்கும்
அன்னை அவள்தானே நமக்கெல்லாம் ஆதாரம்
என்றும் அவளைநாம் போற்றிடுவோம் பொன்போலே! {மேகலா}

பொன்போலே மனமிருக்க பேராசை
செம்பு கலந்து கனமாக ஆக்கி
விற்று பொருளீட்டி சேர்த்து வைத்தால்
மண்ணாகும் கடலில் கலந்து {தமிழ்த்தேனீ}

கலந்து மகிழவே கண்கொண்டு போற்றவே
நொந்து நூலானார் காரணிகளானாரே
வெந்த மனவேக்காடுகள் வெருண்டோடியதே
வசந்தமெனவந்தாரைவருடிநிற்போம்வாஞ்சையாய் {மலர்விழி}

வாஞ்சையாய் வருடி நிற்க
நாம் தயார் வருடலை
பூஞ்சையாய் மனம் கொண்டோர்
ஏற்பரோ வாஞ்சையென்றே {தமிழ்த்தேனீ}

வாஞ்சையென்றே எண்ணி ஏமாறாதீர்
கொஞ்சமேனும் கருணையற்ற பிள்ளை
நெஞ்சமதில் அன்பின்றி துரத்தியதால்
பஞ்சைப் பராரியாய் அலையும் பெற்றோரே
நஞ்சு தோய்த்து அவர் உதிர்க்கும் இன்மொழியை
வாஞ்சையென்றே எண்ணி ஏமாறாதீர் {தேமொழி}

ஏமாறாதீர் வஞ்சப் புகழ்ச்சியினை
அள்ளித் தெளிப்போரிடம் ஏமாறாதீர்

அழ அழச் சொல்வோர் தமர்
அதிகமாய்ப் புகழ்வோர் அளிக்கும்
விஷப் போதை தலைக்கேறும்
ஆயினும் உயிர் குடிக்கும் {தமிழ்த்தேனீ}

உயிர் குடிக்கும் துணிவு பெற்றது
போலி மதவாதிகளின் கூட்டம்
கடவுள் எமக்கே உடைமை என்றே
கூசாது பொய்யுரைத்து போராட்டம்
மாந்தர் யாவரும் சமம் என்றாலோ
சகித்திடாது செய்வர் ஆர்ப்பாட்டம்
உண்மையை மறைத்து பழியுரைத்து
நன்றே நடத்திடுவர் பித்தலாட்டம் {தேமொழி}

பித்தலாட்டம் செய்கின்ற
எத்தருக்கே பித்தலாட்டம்
நன்கு வரும் மாந்தரெல்லாம்
சமம் என்றே வாய் வீச்சு
அதிகம் வரும் மேடைப்
பேச்சு வீரர்கள் கீழே இறங்கினால்
கடவுளுக்கும் மனிதனுக்கும்
பணம்தானே சமம்
எல்லாமே பணம் {தமிழ்த்தேனீ}

எல்லாமே பணம் எல்லாமே பணம்
பிச்சாண்டியை மதிப்பவருண்டோ
பெருமைமிகு பெரியகோவிலில்
சொக்கரும் மீனாளின் கருணை வேண்டி
சிறப்பு தரிசனம் செய்யச் சென்றால்
சொக்கருக்கும் வேண்டுமந்த பணம்
காசு பணம் துட்டு மணி மணி {தேமொழி}

மணிமணியாய் பிள்ளைகள்
பிணியற்ற பெருஞ்செல்வம்

துணிவான மனச்செல்வம்
கனிவான வாழ்க்கைத் துணை
அத்துணையும் துணையிருந்தால்
பணம் என்னடா பணம் பணம்
குணம்தானடா நிரந்தரம் {தமிழ்த்தேனீ}

நிரந்தரம் ஏதெனத்தேடித்தேடியே
பம்பரமாய்ச் சுற்றியே வந்திடினும்
தம்புராக்கொண்டே மீட்டியே அலைந்தாலும்
தம்பிரானருள் தேடிவரும் நல்லான்மாவிடத்தே {மலர்விழி}

மாவிடத்தே கைக்கொள்ளினும்
பூநாகமாயினும் பூவிடத்தே
உள் கொள்ளினும் ஆவிடத்தே
கொள்கின்ற பாலாயினும்
திரியும் தீயோர் கண்பட்டால் {தமிழ்த்தேனீ}

கண்பட்டால் வருந்தீங்கைக் காட்டிலுமே பிறர்மனந்தான்
புண்பட்டால் பெருந்தீங்கு வந்திடவே காண்கின்றோம்
பண்பாட்டால் நற்பண்பைப் பாங்கோடு காத்துநின்றால்
மண்வந்த பயனைத்தான் மானுடமும் எய்தாதோ? {மேகலா}

எய்தாதோ மானுடம் உய்யும்
இலக்கு தீயவை கண்டால்
விலக்கி மானுடம் வென்றிடவே
மனதை இளக்கி மனிதம்
போற்றினால் மண் வந்த பயன் {தமிழ்த்தேனீ}

பயனை நாடாது தொண்டு செயும் உள்ளத்தார்
தயவு பூமிக்குத் தாராளமாய்க் கிடைத்தால்
உலகம் உய்வடையும் மக்களும் உயர்வடைவர்
கலகம் ஒழிந்தேதான் குவலயமும் சிறந்தோங்கும்! {மேகலா}

சிறந்தோங்கும் என்றெண்ணி
சீர்மைப்படுத்தும் போதெல்லாம்
அறந்தாங்கி ஆன்மபலம் பெற்றே
பிறந்தோங்கி நிற்கும் மனிதம் {தமிழ்த்தேனீ}

மனிதம் மலர்ந்திடவே மதவெறியும் ஒழிந்திடவே
புனிதம் அடைந்துவிடும் நம்புவியும் ஓர்நாளில்
கனிபோல் நல்லவைகள் நம்முன் குவிந்திருக்க
இனியும் அல்லவையாம் காய்கவர்வ தெதற்காக? {மேகலா}

கவர் தெதற்காக பாடுபட்டு
உழைத்து சேர்த்த அடுத்தவர்
செல்வத்தை ஈடில்லா உயிரையும்
போக்கி கேடு விளைவிக்கும்
தீச்செயலாம் இழிவான பாவங்கள்
சேர்த்து மனசாட்சியியையும்
சேர்த்தே அழித்து நீதியின் முன்னால்
பதுங்கவா மாட்டியபின் கயவராய்க்
கூண்டில் நின்று தலைகுனிந்து
குற்றம் இழைத்தவராய்
வெதும்பவா மன்னிப்பு கேட்டு {தமிழ்த்தேனீ}

மன்னிப்பு கேட்பவன் மனிதனென்றால்
மன்னிப்பவன் மாநிலத்தில் மாமனிதன்
எண்ணிப் பார்த்தால் இப்புவியல்
கண்டிடலாம் மனவமைதி மாந்தர்களே {அன்பு ஜெயா}

மாந்தர்களே தவறிழைப்பார்
மன்னித்தால் மகேசனாகிறார்
கண்ணி வைக்கும் குணத்தோரே
எண்ணிக் குமைந்து மந்தராகிறார் {தமிழ்த்தேனீ}

எண்ணிக் குமைந்து மந்தராகியவரும்
பண்பினில் சிறந்தால் மாந்தராகிடுவார்

அன்பில் திளைத்துப் புனிதராகியே
மன்பதை காத்திடும் தன் மனச்செல்வம் {தேமொழி}

மனச்செல்வமே மிகுபெருமை என்றும்
தனச்செல்வமே செருக்குடைத்து ஞான்றும்
தினஞ்செல்லுமே ஊசலாட்டமாய்த் தோன்றும்
கனம்விலகுமே மாயைத்திரை {மலர்விழி}

மாயத்திரை விலகினாலே
மாயவனை அடைந்திடவே
மங்கலமாய் வழிபிறக்கும்
சங்கமமா குமான்மாவே {அன்பு ஜெயா}

ஆன்மாவே ஆனந்தங்காணும்
ஆன்மத்தேடலை ஆரம்பித்துவைக்கும்
ஆன்மநிவேதனமாய் ஆராய்ந்துணரும்
ஆன்மாவே தானாய் ஆடியடங்கும் {மலர்விழி}

ஆடியடங்கும் ஆன்மாதான்
அவனடியைச் சேர்ந்தபின்னே
நாடியே அனுபவிக்கும்
நாதனின் அருளைத்தான் {அன்பு ஜெயா}

அருளைத்தான் தேடியே அவன்தாள்
பணிந்தோர்க்கு அவன் கருணை
முழுவதுமாய் கிடைத்தே தீரும்
அவநம்பிக்கை தவிர் {தமிழ்த்தேனீ}

தவிர்ப்பன தள்ளி நாமும்
ஏற்பன ஏற்போம் எப்போதும்
சேர்ப்பன சேர்ப்போம் நிதமும்
பார்ப்பனவெல்லாம் பண்புடனாகட்டும் {மலர்விழி}

பண்புடனாகட்டும் என்று முடிவெடுத்து
நல்லன சேர்த்து அல்லவை தவிர்த்தாலே
பண்புடன்  ஆகும் முடிவிலே
நிச்சயம் அறம் பெருகும்                    {தமிழ்த்தேனீ}

பெருகும் தண்ணீரைத் தக்கவண்ணம் காத்திட்டால்
கருகும் பயிர்காத்து வேளாண்மை செய்திடலாம்
விரும்பி இப்பணியை அரசுந்தான் ஏற்றிட்டால்
அருகிடுமே பஞ்சமும் பசிப்பிணியும் மாநிலத்தே!      {மேகலா}

பசிப்பிணியும் மாநிலத்தே ஒழிந்திடுக
பல்லுயிரும் இன்புறவே நல்லறம் ஓங்கிடுக
பாரெல்லாம் அன்புநெறி தழைத்திடுக
பாங்குடனே சிறந்தென்றும் வாழ்ந்திடுக        {தேமொழி}

வாழ்கவே வளர்கவே மனிதநேயம்
வாழ்வாங்கு நம்மினம் வாழ்ந்திடவே
தாழ்கவே தருக்கரின் சூழ்ச்சிகள்
வாழ்கவே தமிழென்றும் நலமுடனே             {அன்பு ஜெயா}

நலமுடனே மாந்தரெலாம் வாழ்தல் வேண்டும்
பலகலைகள் பாரினிலே செழிக்க வேண்டும்
கலகங்கள் இல்லாத வையம் வேண்டும்
திலகமாய்த் தமிழதிலே திகழ வேண்டும்!            {மேகலா}

வேண்டும் என்றே வேண்டிக் கேட்போர்க்கு
விருப்பமானதை அளித்திடவே அவர் தகுதி
ஆராய்ந்து அதற்கேற்ப  அளிப்பவள்தான் சக்தி
ஆகவே பெண்களெல்லாம் சக்தி வடிவே             {தமிழ்த்தேனீ}

சக்தி வடிவென்றே பாடலெழுதுவார் ஒரு சிலர்
மறைப்போசைப் பாடலெழுதுவார் மறு சிலர்
பெண்ணுக்குப் பரிந்து பாடலெழுதினார்
இது பொல்லாத உலகம் புள்ள

இத புரியாட்டா வாழ்வே இல்ல
அடி அம்மாடி சின்ன பொண்ணு
நா சொல்லுறத கேளு நின்னு
என்றார் சொல்வித்தகர் தந்தை அன்று
பெண்ணை அவமதிக்கும் பாடலெழுதுகிறார்
அவர் வளர்த்த அருமை மகனார் இன்று
பீப் பீபீப் ... பீப் பீபீப் ... பீப் பீபீப் ...
இது பொல்லாத உலகம் புள்ள
இத புரியாட்டா வாழ்வே இல்ல
அடி அம்மாடி சின்ன பொண்ணு
நா சொல்லுறத கேளு நின்னு
பீப் பீபீப் ... பீப் பீபீப் ... பீப் பீபீப் ... {தேமொழி}

பீப்பீ என்றே நாதஸ்வரம் ஒலிக்க
கோப்பிலே கையெழுத்திட்டு
உறுதி செய்த திருமணம்
பதிவு அலுவலகத்துக்கு பக்கத்தில் கோயிலாம் {தமிழ்த்தேனீ}

கோயிலில்லா ஊரில் குடியிருந்தால்
கோலாகல மாய்மண முடிக்க
வாயிலேது பதிவு இல்லையேல்
வாழ்நாளில் மனமொத்தல் போதுமே! {அன்பு ஜெயா}

போதுமே என்று நினைத்தாலே
பொன்னாகும் வாழ்க்கை மீறுவோர்
வீழுவார் வஞ்சகர் வலையிலே
ஆழுவார் எப்போதும் துயரிலே {தமிழ்த்தேனீ}

துயரிலே உறுதியிழப்பார் நட்பாம்
பயிரிலே செழித்து எழுவார்
கயறிலே தொங்கிமாய நினைத்தாரும்
அயர்வினின்றும் மீள்வர் எழுந்து {மலர்விழி}

எழுந்து நடக்கும் குழந்தை கீழேயும்
விழும் விழுந்தாலும் மீண்டும் எழுந்து
ஓடும் இடறினாலும் எழும் திறமை
பெறும் அதுதானே வெற்றி {தமிழ்த்தேனீ}

வெற்றி கொண்டாலும் தோல்வியே கண்டாலும்
சற்றும் தங்குணத்தில் மாறாது நின்றிடலே
கற்றோர்க்கு அழகாகும் கவின்மிகு பண்பாகும்
சுற்றமாய் அவர்தம்மை இப்புவியும் சுற்றிநிற்கும்! {மேகலா}

நிற்கும் என்றும் நிற்கும் நிரந்தரமாய்
வெற்றி எப்போதும் நம்முடனே
கற்கும் கல்வியினால் பெறும்
வித்தையினால் நிற்கும் வெற்றி {தமிழ்த்தேனீ}

வெற்றியை அழைத்துவரும் அரிய முயற்சியினைப்
பற்றிக் கொண்டவர்தாம் பாரிலே உயர்ந்திடுவார்
புகழும் பதவியுமே அவர்வாசல் வந்துநிற்கும்
சகமும் அவர்சொல்லைத் தட்டாமல் கேட்டுநிற்கும் {மேகலா}

நிற்கும் போட்டியில் அனைவரும்
ஜெயித்தால் அதென்ன போட்டியா
அதற்கொரு பேட்டியா ஊடகம்
நினைத்தால் நிற்காததும் நிற்கும் {தமிழ்த்தேனீ}

நிற்கும் தானாய் நிற்கும் என்றே
அநியாயங்களைக் கண்டும் காணாமலும்
போனதால் வந்த வினை
அறம் பாடினால் நிச்சயம் நிற்கும் {தமிழ்த்தேனீ}

42.

# சேவலும் ஒரு துறவியும்

-செல்வன்.

பெர்னான்டோ லோபஸ்: உலகின் முதல் ராபின்சன் க்ருசோ

இந்த வரலாறு இந்தியாவில் துவங்குகிறது.

கிபி 1512ம் ஆண்டு. போர்ச்சுகீசியர் இந்தியாவில் நுழைந்து கொச்சியை தம் கட்டுபாட்டில் கொண்டு வந்திருந்தாலும் ஒரே துறைமுகத்தை நம்பியிருக்க முடியாது என சொல்லி மராட்டிய மண்ணில் ஆதிக்கம் செலுத்தி வந்த பிஜபூர் சுல்தான் ஆதிக்கத்தில் இருந்த கோவா எனும் ஊரை பிடித்தார்கள்.

இதனால் கோபம் அடைந்த சுல்தான் அதில்ஷா பவுலூத் கான் எனும் தளபதி தலைமையில் ஒரு படையை அனுப்பினார். பவுலூத் கானும் கோவா தலைநகர் பனாஜி அருகே உள்ள பனஸ்டாரிம் எனும் சிற்றூரை பிடித்து கோட்டையை கட்டினார். அதன்பின் "இத்தனை கஷ்டபட்டு கோட்டையை கட்டிவிட்டு போர் எதுக்கு? நாம் இந்த ஊருக்கு ராஜாவாகிடலாம்" என சொல்லி அங்கேயே உட்கார்ந்துவிட்டார்.

இதனால் மேலும் கோபமடைந்த சுல்தான் அதில்ஷா ரசூல்கான் எனும் தளபதி தலைமையில் இன்னொரு படையை அனுப்பினார். ரசூல்கான் "துரோகியை விட எதிரியே மேல்" என சொல்லி போர்ச்சுகிசிரியரிடம் "எங்களுக்கு பனஸ்டாரிமை பிடிக்க உதவுங்கள். உங்களுக்கு கோவாவை வைத்துகொள்ள அனுமதிக்கிறோம்" என பேரம் பேசி போர்ச்சுகீசியர் உதவியுடன் பவுலூத்கானை அடித்துவிரட்டி பனஸ்டாரிமை பிடித்தார்.

அதன்பின் உதவிக்கு வந்த போர்ச்சுகிசிய தளபதி பெர்னார்ன்டோ லூபாஸ் தலைமையிலான படை பனஸ்டாரிமில் தங்கியது. எதிர்பாராவிதமாக பெர்னார்டோ லூபாஸ் இஸ்லாமை தழுவ அதன்பின் போர்ச்சுகிசிய படை முழுக்க ரசூல்கான் தலைமையில் சேர்ந்து உள்ளூர் முஸ்லிம் பெண்களை மணந்து அதில் பலர் மதம் மாறியும் விட்டார்கள். இதன்பின் பெர்னார்டோ லூபஸ் உதவியுடன் ரசூல்கான் கோவா மேல் படை எடுத்தார். கோவாவில் படைகளே சுத்தமாக இல்லை எனும்

நிலையில், கோவா கோட்டை தடுமாறிக்கொண்டிருந்தது. உணவு சப்ளை துண்டிக்கபட்டு கோட்டை கடும் முற்றுகைக்கு ஆளானது.

இந்த சூழலில் கொச்சினில் இருந்த போர்ச்சுகிசிய தளபதி அல்பான்சோ ஆல்பர்கிகிக்கு தகவல் பறக்க அவர் கப்பலேறி கோவா வந்தார். அவரிடம் 30 காலாட்படை வீரர்களே இருந்தார்கள். ஆனால் ஏதோ மிகப்பெரும் படை வருகிறது என அஞ்சி ரசூல்கான் முற்றுகையை கைவிட்டுவிட்டு பனஸ்டாரிம் கோட்டைக்கு ஓடினார். மீதமிருந்த கோவா படைகளை அழைத்துகொண்டு பனஸ்டாரிம் கோட்டையை முற்றுகை இட்டார் அல்பான்சோ. ஆனால் கோட்டையை கைப்பற்றும் அளவு அவரிடம் படைபலம் இல்லை. "சரி நாளை காலை கோவாவுக்கு போய்விடலாம்" என அவர்கள் முடிவெடுக்கையில் வெள்ளைக்கொடியை ஏந்தி சரணடைய தூதனுப்பினார் ரசூல்கான். அவரிடம் மங்களூரில் இருந்து மிகப்பெரும் போர்ச்சுகிசிய படை வருவதாக தவறான தகவல் போயிருந்தது. சுல்தான் அதில்ஷாவிடன் உதவி கேட்டு அனுப்பியிருந்தபோதும் அது குறித்து எத்தகவலும் இல்லை. அதனால் சரண்டைய முடிவெடுத்தார் ரசூல்கான்.

"கோட்டையை ஒப்படைத்துவிட்டு, உங்களுக்கு உதவிய போர்ச்சுகிசிய துரோகிகளை ஒப்படைத்தால் ரசூல்கான் மற்றும் படைகளை எதுவும் செய்வதில்லை" என்றார் அல்பான்சோ

"அவர்கள் எங்களை நம்பி வந்தவர்கள். அவர்களை கொல்லமாட்டோம் என ஆணையிடுங்கள்" என்றார் ரசூல்கான்

"சரி" என வாக்குறுதி கொடுத்தார் அல்பான்சோ


கோட்டை, ஆயுதம், பீரங்கிகளை எல்லாம் ஒப்படைத்துவிட்டு ரசூல்கான் வெளியேறி பீஜாபூர் நோக்கி போகையில் வழியே சுல்தான் அதில்ஷா அனுப்பிய மிகப்பெரும் படை வந்தது. ஆனால் இனி என்ன பலன்? சரணடைந்த செய்தியை அறிந்து கோபம் கொன்ட பீஜாபூர் படை ரசூல்கானை பிடித்து பிஜாபூருக்கு இழுத்து சென்றது

அதன்பின் கோட்டையில் துரோகம் செய்த பெர்னார்டோ லூபஸையும் பிற போர்ச்சுகிசியரையும் பிடித்து வந்து விசாரணை செய்தார்கள். கொல்லதானே மாட்டோம்?சித்தரவதை செய்யலாம் அல்லவா என சொல்லி மிக, மிக கடுமையான சித்ரவதைகள் அவர்களுக்கு நிகழ்த்தாப்ட்டது. பெர்னார்டோ லோபஸை கட்டி வைத்து

மூக்கு, காது, ஒரு விரலை விட்டு இன்னொரு விரல் என வெட்டினார்கள். தலைமுடி மற்றும் தாடியை கடல் சிப்பிகளை வைத்து உரித்து எடுத்தார்கள். சித்ரவதை தாங்கமுடியாத போர்ச்சுகிசியர் பலரும் "எங்களை கொல்லுங்கள்" என கேட்டு உயிரை விட்டார்கள்.

ஆனால் பெர்னார்டோ லோபஸ் எப்படியோ சிதரவதைக்கு பின்னரும் உயிருடன் இருந்தார். வாக்குறுதிக்கு ஏற்ப அவர் கொல்லபடவில்லை. இதன்பின் போர்ச்சுகிசிய கப்பல் ஒன்றில் ஏறி போர்ச்சுக்கல் நோக்கி சென்றார் லோபஸ்.

நடுவே அட்லாண்டிக் கடலில் ஆப்பிரிக்காவுக்கு மேற்கே உள்ள செயின்ட் ஹெலெனா (300 ஆண்டுகள் கழித்து நெப்போலியன் கைதியாக வைக்கபட்டு இருந்த இடம்) எனும் தீவில் கப்பல் நின்றது. அப்போது அந்த தீவில் யாருமே இருக்கவில்லை. 1502ம் ஆண்டுதான் அந்த தீவு கண்டுபிடிக்கபட்டு இருந்தது.




போர்ச்சுக்கல் போக விரும்பாத பெர்னார்டோ லோபஸ் செயின்ட் ஹெலெனா தீவில் இறங்கி வாழத் துவங்கினார். அத்தீவில் அவர் மட்டுமே 10 ஆண்டுகளுக்கும் மேலாக ராபின்சன் க்ருசோ போல வாழ்ந்தார். ஊனமுற்ற கைகளை வைத்து எப்படி வேட்டையாடினார், வீடு கட்டினார் என்பதே பெரும் வியப்புகுரிய விஷயம். அவருக்கு துணையாக அந்த 10 ஆண்டுகளும் கப்பலில் இருந்து அவருடன் வந்த ஒரு சேவல் மட்டுமே இருந்தது.

இதனிடையே தீவில் அடிக்கடி வந்து போன கப்பல்களில் இருந்தவர்கள் பெர்னார்டோ லோபஸை ஒரு சாமியார் எனக் கருதினார்கள். இத்தனை துன்பத்துக்கு ஆளாகியும் ஒரு மனிதன் போராடி வாழமுடியும் என்பதற்கு அவர் உதாரணமாக கருதபட்டார். வயது ஆக, ஆக பெர்னார்டோ லோபஸுக்கு இப்போது போப்பிடம் மதம் மாறியதற்கு பாவமன்னிப்பு கேட்கவேண்டும் என்ற கடைசி ஆசை மட்டுமே

மீதமிருந்தது. அக்காலத்தில் மதம் மாறுவது பெரும்பாவமாக கருதபட்டு அதை மன்னிக்கும் அதிகாரம் போப்பிடம் மட்டுமே இருந்தது. போப்பும் அப்பாவத்தை ஈஸ்டர் திருநாள் அன்றுமட்டுமே மன்னிப்பார்.

அதனால் பயணிகள் சிலர் லோபஸை ரோமுக்கு அழைத்து சென்றார்கள். அவரது கதையை கேட்டு மனம் இறங்கிய போப் ஈஸ்டர் திருநாள் அன்று பொது இடத்தில் வைத்து பகிரங்கமாக அவரது பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்பட்டன என அறிவித்தார். அதன்பின் போர்ச்சுக்கல் மன்னருக்கு அத்தகவலை சொல்லி அனுப்பி அவரை தேசதுரோக குற்றத்துக்கு தண்டிக்கவேண்டாம் எனவும் லோபஸின் கடைசி ஆசைப்படி அவரை செயிண்ட் ஹெலெனா தீவில் வாழ அனுமதிக்கும்படியும் கடிதம் அனுப்பினார் போப்.

அதன்பின் செயிண்ட் ஹெலெனா சென்ற லோபஸ் அங்கே தனியாக 20 ஆண்டுகள் வசித்து உயிர்துறந்தார். அவர் இப்போது அத்தீவின் புனித துறவியாக கருதப்படுகிறார். அவர் நினைவிடம் சுற்றுலாதளமாகியுள்ளது.

படம்: சேவலுடன் செயின் ஹெலெனா தீவில் மூக்கு, கைவிரல்கள் இல்லாத பெர்னார்டோ லோபஸ்...... தபால் தலை



**செல்வன்**

holyape@gmail.com

**43.**

# நாளும் கோயிலும் (சிறுகதை)

-- நிர்மலா ராகவன்.



ஒனக்கு இப்போ `நாள்,' இல்லே?" தாயாரின் குரலில் கவலை தொனித்தது.

மகள் அலட்சியமாகக் கையை வீசினாள். "இப்போ என்ன அதுக்கு?"

"இல்லே, ஹம்சா. நாளைக்குக் கோயில்ல ஆடப்போறியே..," மீதியைச் சொல்லாமல் விட்டாள். "ஆமா, எந்தக் கோயில்லேன்னு சொன்னே?""எங்க கிளாஸ் நடக்கிற கோயில்லதான்!"

"காமாட்சி அம்மன் கோயில்!" என்று சொல்லிக்கொண்டாள் தாய், தனக்குள்.

ஹம்சா மேலே எதுவும் பேசவில்லை. பேசப் பிடிக்கவில்லை. ஒரு பாட்டை மனதிற்குள் பாடியபடி அங்கிருந்து நகர்ந்தாள். கை, தன்னையுமறியாமல், அபிநயம் பிடித்தது.

அப்போதைக்கு அம்மாவிடமிருந்து தப்பித்துப்போனால் போதும் என்றிருந்தது அவளுக்கு. மாடியிலிருந்த தனது அறையை நோக்கிப்போனாள்.

அதுவரை அடக்கி வைத்திருந்த ஆத்திரம் மேலெழுந்தது.

`தீட்டு'என்று இன்னும் எத்தனை காலத்திற்குத்தான் பெண்களை மட்டமாகவே நடத்தப்போகிறார்கள்?

ஆதிமனிதன் குகையில் வசித்த காலத்தில், காட்டு விலங்குகள் ரத்த வாடையை முகர்ந்து குகைக்குள் வந்துவிடுமே என்று பயந்து, அக்காலங்களில் பெண்களைத் தனியேவிலக்கிவைத்திருக்கலாம். இப்போது என்ன வந்தது!

பள்ளிக்கோ, அல்லது வேலைக்கோ வெளியே போகும் பெண்கள் வீட்டில் தனித்து விலக்கி வைக்கப்படுவது வெகுவாகக் குறைந்துவிட்டது. ஆனால், கோயில்களில் மட்டும் பழையவிதிமுறைகளை மாற்றாமல், கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள்!

சில கோயில்களில், `இவர்களெல்லாம் கோயிலுக்குள் நுழையக்கூடாது!' என்று ஒரு பெரிய பட்டியல் தயாரித்து, வெளியிலேயே எழுதி வைத்திருக்கிறார்கள்! மாத விலக்கு வந்த பெண்களும்,பெருநோய் வந்தவர்களும் ஒன்றா? கையில்லாத ரவிக்கை அணிபவர்களுக்கு மட்டும் பக்தி இருக்கக்கூடாதா?

அவளுடைய ஆத்திரத்திற்கு முட்டுக்கட்டை போடவேபோல் தொலைபேசி அழைத்தது.

ஹம்சாவுக்குச் சட்டென்று சிரிப்பு வந்தது. யாராவது ஒரு மாணவி, `டீச்சர்! இன்னிக்கு பரத்நாட்யம் க்ளாஸ் இருக்கா?' என்று கேட்பாள்! முதலில் வரவே யோசித்தவர்களுக்கு இப்போதுதான்எத்தனை ஆர்வம்! நினைத்துப்பார்க்கவே பெருமையாக இருந்தது அவளுக்கு.

பரதநாட்டியம் வசதிபடைத்தவர்களுக்கு மட்டுமே எட்டக்கூடிய ஓர் உயரம் என்ற எழுதப்படாத விதிமுறையை எதிர்த்து, ஹம்சா அந்த வகுப்பை ஆரம்பித்திருந்தாள்.

பெரிதாக இடம் எடுத்து நடத்த வழில்லை. குடிசைகளுக்குப் பதிலாக்க கட்டப்பட்ட அடுக்குமாடி வீடுகள் நிறைந்த அவ்விடத்தில் அவர்களுக்கென இருந்த ஒரு சிறு கோயில் பிரகாரம்தான்நாட்டிய வகுப்பு -- பூஜை இல்லாத நேரங்களில்.

அக்கம்பக்கத்திலிருந்த குடும்பங்களிலிருந்து மாணவிகள் வந்தார்கள் -- இலவசம் என்பதைக் கேள்விப்பட்டு. ஆனால், எதிலும் அவர்களுக்கு துடிப்போ, புதியதாக ஒன்றைக் கற்கும் ஆர்வமோஇருக்கவில்லை. எப்போதும் வாயில் விரல். நிமிர்ந்து நிற்கக்கூட தெம்போ, உத்வேகமோ இல்லாதவர்களாக இருந்தார்கள். எட்டு

வயதிலேயே கூனலா! இவர்களை எப்படி வழிக்குக்கொண்டுவருவது என்று அயர்ந்தே போனாள் ஹம்சா.

எப்போதோ அம்மா சொன்ன ஒன்று நினைவுக்கு வந்தது: `சின்னப்பிள்ளைங்களுக்குத் தாகமா இருந்தாலோ, பசியா இருந்தாலோ சொல்லத் தெரியாது. வாயிலே விரல் போட்டுப்பாங்க!'

தன்னுடைய தோழிகள் சிலருடன் கலந்தாலோசித்து, அவர்களுக்குச் சாப்பிட எதையாவது கொடுக்க ஏற்பாடு பண்ணினாள்.

`நாட்டியம் கற்றுக் கொள்கிறார்களோ, இல்லையோ, வயிறாரச் சாப்பிட்டுவிட்டாவது போகட்டுமே!' தான் பசியே அறியாது வளர்ந்திருந்ததில் சிறிது குற்ற உணர்வுகூட ஏற்பட்டது.

வெளியில் எங்கும் கிடைக்காத தோழமையும், சிரிப்பும், அறிவும் அங்கு கிடைப்பதை உணர்ந்தவர்களுக்குச் சில மாதங்களிலேயே உணவில் ஆர்வம் குறைந்துபோயிற்று.

ஆரம்பத்தில் எதையும், `எனக்கு? எனக்கு?' என்று பிடுங்கியவர்கள்கூட, `நீங்களும் சாப்பிடுங்க, டீச்சர்,' என்று உபசாரம் செய்யக் கற்றுக்கொண்டார்கள்.

சில நாட்கள், ஓரிரு பெண்கள் வகுப்புக்கு வராததன் காரணத்தை (`அக்கா சுத்தமில்லே!') யார்மூலமாவது சொல்லி அனுப்பியபோதுதான் அந்த யோசனை எழுந்தது ஹம்சாவுக்கு.

ஒங்க ஒடம்பைப்பத்தி ஒங்களுக்குத் தெரிஞ்சிருக்கணும். நீங்க தீட்டுன்னு நினைக்கிறது தப்பான உணவாலேயோ, ஆரோக்கியக் குறைவாலேயோ கிடையாது".

ஒரு பெண் கர்ப்பம் தரிக்கத் தயாராக இருக்கிறாள் என்பதைத்தான் உணர்த்துகிறது மாதாந்திர உதிரப்போக்கு. இயற்கையான ஒரு செயல்! அதற்கு ஆயிரம் தப்பு கண்டுபிடித்து.., என்றெல்லாம் பெண்கள் மருத்துவரான சுந்தரவல்லி அந்த வகுப்புக்கு வந்து விளக்கினாள்.

நம்ப உடம்பை, உயிரை, கடவுள் குடுத்ததுன்னு ஏத்துக்கறோம். இல்லியா? அவரோட செயலே தப்புங்கிறமாதிரி, இயற்கையா நடக்கிற இதுக்குக்காக பயந்துக்கிட்டு,

கோயிலுக்கு வராமஇருந்துடாதீங்க. எவ்வளவு கஷடப்பட்டு ஒங்களுக்கு டான்ஸ் கத்துக்குடுக்க வராங்க டீச்சர், தெரியுமா?" என்று சந்தடி சாக்கில், ஹம்சா படும்பாட்டையும் குறிப்பிட்டாள் சுந்தரவல்லி. தன்தோழியைப்பார்த்துக் கண்ண்டித்தாள்.

அப்பெண்களின் முகம் தெளிந்தது. தமக்காகப் பாடுபடும் இரு பெண்மணிகளையும் பார்த்து நட்புடன் சிரித்தார்கள்.

ஏன் இப்படி கூனிக்கிட்டு நடக்கறீங்க?" உரிமையுடன் அதட்டினாள் சுந்தரவல்லி.

ஒரு துணிச்சலான பெண் தங்கள் தர்மசங்கடமான நிலைமையை வெளிப்படுத்தினாள்: "எல்லாரும் எங்க ஒடம்பையே மொறைச்சுப் பாக்கறாங்க, டாக்டர்! வெக்கமா இருக்கு!" குரல்அழுகையாக வந்தது.

பிற மாணவிகளும் தலையை ஆட்டினார்கள். உதடுகள் பிதுங்கின

அலட்சியமாக் கையை வீசினாள், அந்த சிறப்பு விருந்தினர். "அதுக்கென்ன பண்றது? சாமி நமக்கு அப்படி அழகான ஒடம்பை நமக்குக் குடுத்திருக்கு!" என்று புன்சிரிப்புடன் கூறியவள், தன்இருகரங்களால் மூன்று வளைவுகளைக் காட்டினாள்.

எல்லாரும் நிம்மதியும், வெட்கமுமாகச் சிரிக்க, ஒரு பெண், "இரண்டுதானே, டாக்டர்?" என்று சிரிப்புடன் வினவ, டாக்டர் யோசிப்பதைப்போல் பாவனை காட்டினாள். "நீ சொல்றது சரி. இரண்டுவளைவுகள்தான்!"

சிரிப்பு பலத்தது. இப்போது எல்லாரும் நிமிர்ந்து உட்கார்ந்தார்கள்.

சில சமயம் ஆட முடியலே. வலிக்குது," என்று ஒரு பெண் சுட்டினாள்.

ஒங்கம்மாவை கருஞ்சீரகத்தை வறுத்துப் பொடி பண்ணி, மோரிலே கலக்கிக் குடுக்கச் சொல்லு. தினமும் குடிச்சா, கருப்பை வலுவாகும்".

சொல்லக்கூடாத அந்த வார்த்தையைக் கேட்டதும் எல்லாரும் வெட்கத்துடன் சிரித்தார்கள்.

அறிவுரை தொடர்ந்தது: “ரொம்ப வலிச்சா, வெந்நீர் ஒத்தடம் குடுக்கச்சொல்லு. இந்தமாதிரி சமயங்களிலே சுருண்டு படுக்காம, எக்சர்சைஸ் பண்ணணும். அது ரொம்ப முக்கியம்!”

அதன்பின், வீட்டில் பாட்டியோ, அம்மாவோ ஆட்சேபித்ததையும் மீறிக்கொண்டு, எந்த நாட்களிலும் கோயிலுக்கு வந்து நாட்டியம் கற்றுக்கொள்ளத் துணிந்தார்கள் அப்பெண்கள்.

நான்கு பேர் பார்க்க நாட்டியமாடும் தகுதி அவர்களுக்கு இருக்கிறது என்பதை உறுதிப்படுத்திக்கொண்ட ஹம்சா, சரஸ்வதி பூஜையன்று (அன்று தான்டாக்டர் சுந்தரவல்லியின் உபயம்)அவர்கள் ஆட ஏற்பாடு செய்திருந்தாள். மாணவிகளுடன், அவளும் ஆடவேண்டும் என்று கோயில் குருக்கள் விண்ணப்பித்திருந்தார்.

இப்போது அம்மா அவள் மனத்தைக் கலைத்துவிட்டாள்!

தொலைபேசியில் ரஞ்சனி பேசினாள், தயங்கித் தயங்கி. “டீச்சர்! எனக்கு இப்போ பீரியட். நான் ஆடலாமா?”

“தாராளமா! ஆனா, யார்கிட்டேயும் இதைப்பத்தி சொல்லிக்கிட்டிருக்க வேண்டாம், என்ன?”

ஒவ்வொரு வகுப்புக்கும் தவறாது வந்து, பெருமுயற்சியுடன் கற்ற கலை! இப்போது பல பேர் பார்க்க தன் திறமையை வெளிப்படுத்த ஒரு தருணம் வந்திருக்கிறது. அது நழுவி விடுமோஎன்ற கவலை இனி இல்லை!

“சரி, டீச்சர்!” என்ற சிறுமியின் குரலில் அலாதி நிம்மதி. “ரொம்ப பயந்துக்கிட்டிருந்தேன், டீச்சர் -- டீச்சர் என்ன சொல்வீங்களோன்னு!”

ஹம்சா சிரித்துக்கொண்டாள். “குளிச்சுட்டு வந்தா போதும். காமாட்சி புரிஞ்சுக்குவா!”

“யாரு, டீச்சர்?”

“காமாட்சி அம்மன்!”

“ஓ!” அப்பெண் புரிந்தவளாகச் சிரித்தாள்.

“தைரியமா ஆடு. அதான் முக்கியம். ஏதாவது மாத்தி, தப்பா ஆடினாலும் பரவாயில்லே. அடிச்சு விட்டுடணும். என்னைத் தவிர, யாருக்கும் அது தெரியப்போறதில்லே!” என்று, பல முறை வகுப்பில் சொன்னதையே திரும்பச் சொன்னாள் ஹம்சா. “காமாட்சி அம்மனும் நம்பளைமாதிரி ஒரு பொண்ணுதானே! கோவிச்சுக்க மாட்டா!” தனக்கே தைரியம்அளித்துக்கொள்வதைப்போல் இருந்தது .

கணினியில் பதிவு செய்திருந்த பாட்டை ஒலிக்கவிட்டாள்.

முகத்தில் புன்னகை படர, புடவைத்தலைப்பை இழுத்துச் சொருகிக்கொண்டாள். தரையைத் தொட்டுக் கும்பிட்டுவிட்டு, பயிற்சியில் இறங்கினாள் ஹம்சா. உடல் லேசானதுபோல் இருந்தது.




**நிர்மலா ராகவன்**
nirurag@gmail.com

**44.**

## தாம்பத்யம் (சிறுகதை)

-- ஜெயகாந்தன்.



தலைச்சுமைக்கார மருதமுத்துவுக்கும் ரஞ்சிதத்துக்கும் அவர்கள் தலைவிதிப்படி அன்று மாலை கலியாணம் நடந்தேறியது. அதாவது அரையணா கதம்பம், ஓரணா மஞ்சள் கயிறு, காலணா மஞ்சள், மூணு ரூபாய்க்கு ஒரு புடவை, இரண்டணாவுக்கு வளையல்-ஆக ஐந்து ரூபாய் செலவில் ரிக்க்ஷாக்கார-கூலிக்கார ஏழைக் கடவுளின் சந்நிதானத்தில் ரஞ்சிதத்தை மருதமுத்து கண்ணாலம் கட்டிக் கொண்டான்.

அந்த ஐந்து ருபாயைச் சேர்ப்பதற்கு அவன் ஒரு மாதம் முழுவதும் சிரமப்பட வேண்டியிருந்தது. தனக்குக் கிடைக்கும் கூலிக் காசில் தினந்தோறும் இரண்டணா மூன்றணாவாகச் சேர்த்தான். தன் கையிலிருந்தால் செலவாகி விடும் என்று பயந்து மூலைக்கடை சாயபுவிடம் கொடுத்துச் சேமித்தான். அதற்குள்தான் அந்த ரஞ்சிதத்துக்கு என்ன அவசரம். முதலில் மருதமுத்து கலியாணத்துக்கு ஒப்புக் கொள்ளவில்லை. அது அவசியம் இல்லையென்று கருதினான். அங்கு வாழ்ந்தவர்களின் வளமுறை-பூர்வீகமாகவே அல்ல - தற்காலிகமாக சந்தர்ப்பவசமாக அப்படித்தான்

ஆனால் அதற்குப் பட்டிக்காட்டுப் பெண்ணான ரஞ்சிதம் ஒப்பவில்லை. மேளதாளம் இல்லாட்டியும், கூறையும் தாலியுமாவது கட்டிக்க வேணாமா? சாமி முன்னாலே நின்று சத்தியம் செஞ்சுக்குவோம். இதுகூட இல்லாட்டி கட்டிக்கறத்துக்கும் 'சேத்துவெச்சிக்கிறதுக்கும்' என்னாமச்சான் வித்தியாசம்? என்று தர்க்கம் புரிய ஆரம்பித்தாள். மருதமுத்துவுக்கும் அவள் சொல்வது சரியென்று படவே ஒப்புக் கொண்டான். ரஞ்சிதத்துக்குத் தன் மச்சான் ஒப்புக் கொண்டதில் பரம சந்தோஷம். பாவம், அவளும்தான் யாருமற்ற அனாதையாக எத்தனை காலம் இருப்பது?

அவள் பட்டணத்துக்கு அனாதையாகவா வந்தாள்? அவள் அப்பன் பட்டணத்தில் கை வண்டி இழுத்துப் பிழைத்துக் கொண்டிருந்தபொழுது அவள்திண்டிவனத்தை அடுத்த முண்டியம்பாக்கத்தில் தன் தாயுடன் பயிர் வேலை செய்து கொண்டிருந்தாள். அவள் தாய் இறந்த செய்தி கேட்டுப் பட்டணத்திலிருந்து ஒரு வாரத்துக்குப் பின் வந்த அவள் தகப்பன் திரும்பிப் போகும்போது ரஞ்சிதத்தையும் தன்னுடன் அழைத்துச் சென்றான். பட்டணத்தில் தகப்பனும் மகளும் வாழ்க்கை நடத்த இருக்கவே இருந்தது பிளாட்பாரம். கந்தல் பாய், மண் சட்டிகள். கை வண்டி ஓட ஓட வாழ்க்கையும் நகர்ந்தது. ஒருநாள் அவனால் நகர முடியவில்லை.

அவன் நகராவிட்டால் நகரம் நகராமலா இருந்துவிடும்?. அது நகர்ந்தது

பிளாட்பாரத்தில் கிடக்கும் கூலிக்காரனின் சவத்தைத் திரும்பிக் கூடப் பார்க்காமல் அதுநகர்ந்தது.

நாகரிகம் நெளிந்துநகர்ந்துகொண்டிருந்த அந்த விதியில் நாலு பேர் தோள் மீது கடைசிப் பிரயாணத்தைத் தொடங்கி விட்ட அப்பனின் பிரிவைச் சகிக்க முடியாத அனாதை ரஞ்சிதம் புலம்பிப் புரண்டு கதறிக்கொண்டிருந்தாள்

"நான் அனாதை ஆயிட்டேனே" என்று கதறிக்கொண்டிருந்த ரஞ்சிதத்தின் செவிகளில் "அழாதே, நான் இருக்கிறேன்" என்ற கனிவுமிக்க ஒரு குரல் ஒலித்தது. ரஞ்சிதம் திகைத்தாள். திரும்பிப் பார்த்தபொழுது தன் மச்சான் மருதமுத்துநிற்பதைக் கண்டவுடன் கோவென்று கதறினாள். அவன் அவளைத் தேற்றினான்.

வரவர அவள் தன் அப்பனை நினைத்து அழுவதையே நிறுத்தி விட்டாள். அதற்குத்தான் அவன் அவசியம் இல்லாதபடி செய்து விட்டானே. அப்படி என்ன செய்தான்? ஒரு வார்த்தைதான் சொன்னான்.

'நீ எதுக்கும் கவலைப்படாதே. நான் உன்னைக் கண்ணாலம் கட்டிக்கிறேன். வீணா அழாதே," என்று அவன் ஆறுதல் சொன்னதும் அழுதுகொண்டிருந்த அவள் அவனை ஏறிட்டு நோக்கினாள். கலங்கிய விழிகள் பரவசத்தால் படபடத்தன. என் கண்ணான உன்னை நான் கண்ணாலம் கட்டிக்குவேன் என்று கூறி அவன் லேசாகச் சிரித்தான். அவள் உதடுகளில் மகிழ்ச்சி துடிதுடிக்க நாணத்தால் தலை குனிந்தாள்.

அதன் பிறகு தினந்தோறும் அவள்தான் அவனுக்குச் சோறு பொங்கிப் பரிமாறினாள். அவளும் அவனும் கண்ணாலம் கட்டிக் கொள்ளப் போகிறார்கள் என்று அடுத்த அடுப்புக்காரிகளெல்லாம் (அடுத்த வீட்டுக்காரர்கள் என்று சொன்னால் சரிவராது. பிளாட்பார வாசிகளின் குடும்பங்களைப் பிரித்துக் காட்டுவது அடுப்புகள்தான்), பேசிக் கொண்டார்கள்.

மருதமுத்து கொத்தவால் சாவடியில் தலைச்சுமைக் கூலி தினசரி கிடைக்கும் ஆறணா எட்டணா வருமானத்தில் இரண்டனா ஓரணா எப்படியோ மீதம் பிடித்துக்கொண்டு மிகுதியை ரஞ்சிதத்திடம் கொடுத்துவிடுவான். பகலெல்லாம் கூலி வேலை. மாலை நேரங்களில் அவளிடம் சிரித்துச் சிரித்துப் பேசுவதன் விளைவாய் இரவு நேரங்களில் அவன் மனம் அவளை எண்ணித் தவியாய்த் தவிக்கும் எதிர்கால இன்பத்திற்காக நிகழ் காலத்திலேயே துடியாய்த் துடிக்கும். ஆனால் ரஞ்சிதம் அதற்கெல்லாம் மசிபவள் அல்ல; ஏனென்றால் அவள் பட்டணத்திற்கு வந்து அதிக நாளாகிவிடவில்லை; இன்னும் பட்டிக்காட்டுத்தனம் இருந்தது.

'சாமி முன்னாடி நின்னு சத்தியம் பண்ணித் தாலி கட்டினாத்தான்" என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டாள். கடைசியில் எப்படியோ காசு சேர்ந்துவிட்டது.

சோறு விற்கும் கிழவி ஒருத்தி மருதமுத்துவையும் ரஞ்சிதத்தையும் பார்த்து மவராசியா வாழணும். என்று ஆசிர்வதித்தாள்.

என்ன மச்சான், கண்ணாலச் சாப்பாடு எப்போ?..." என்று பரிகாசம் பேசி மகிழ்ந்தான் அவன் சகாக்களில் ஒருவன். சிறுவர்கள் சிலர் அவனிடம் வெகுமானம் கேட்டனர்.

அவனும் சிரித்துக் கொண்டே இரண்டு மூன்று காலணாக்களை வெகுமானம் அளித்தான்.

லோன்ஸ்குயர்பார்க்கின் கம்பி வேலியின் ஓரமாக எழுந்தருளியிருக்கும் பிள்ளையாரின் புறாக் கூண்டு போன்ற மகா சன்னிதானத்தில் அவன் ஏற்றி வைத்த தரும விளக்கு ஜோதியாய், சுடராய், ஒளியாய், மஹா ஹோமமாய் எரிந்துகொண்டிருந்தது.

ஓரணாகடலை எண்ணெய் அல்லவா ஊற்றியிருக்கிறான்.

பார்க்குக்கு எதிரே மாதாகோயில் சுவர் ஓரமாகக் கட்டை வண்டி கைவண்டி, குப்பைத் தொட்டி முதலியவற்றின் இணைபிரியா ஒட்டுறவுடன்நிலைத்துவிட்ட அடுப்பில் மீன் குழம்புகொதித்துக் கொண்டிருந்தது. கஞ்சி மொடமொடக்கும் புதுப்புடவையின் விறைப்போடு கூடிய கொசுவத்தை மடக்கிக் கால்களுக்கிடையே செருகிக் கொண்டு குனிந்துநின்று குழம்பைத் துழாவிக் கொண்டிருந்த ரஞ்சிதத்தின் கைகளில் கலகலக்கும் கண்ணாடி வளையல்களிலும், கழுத்தில் தொங்கிய மஞ்சள் சரட்டிலும், மஞ்சள் பூசிய கன்னக் கதுப்பிலும், நெற்றியில் ஜொலித்த குங்குமப் பொட்டின் ஜிகினாத் துளிலும் அடுப்பில் கனன்ற தீ ஜுவாலை - நாற்புறமும் சுழன்று நெளிந்து குழம்புச் சட்டியின் அடிப்பாகத்தை நக்கி நிமிர்ந்த தீ நாக்குகளின் செவ்வொளி- படர்ந்துபட்டுப் பிரகாசித்தது.

அவள் அடுப்பை, கனன்று எரியும் கங்குகளைப் பார்த்தவண்ணம் நின்றிருந்தாள். அவள் கண்களில் கங்குகளின் பிம்பம் பிரதிபலித்தது. அவள் முகத்தில் புதிய, இதுவரை அவன் காணாத அனுபவிக்காத ஒரு அழகு, ஒரு தேஜஸ், ஒரு மயக்கம், ஒரு லாகிரி என்னவோ தோன்றியது. அவள் முகத்தையே பார்த்துக் கொண்டு அவளருகே குத்துக் காலிட்டு உட்கார்ந்திருந்தான் மருதை. அவன் இதழ்க்கடையில் சிரிப்பு சுழித்தது. கீழுதட்டை அமுக்கிப் பற்களால் கடித்தவாறு, புருவங்களை உயர்த்தி, முகத்தைச் சாய்த்து ஒரு கோணல் பார்வையோடு பெருமூச்செறிந்தான்.

"ஏ குட்டி கொஞ்சம் நெருப்பு எடு, ஒரு பீடியை எடுத்து வாயில் வைத்துக்கொண்டு கேட்டான்.

'ஐய. கூப்பிடறதைப் பாரு. குட்டியாமில்லே, குட்டி என்று முனகிக் கொண்டே தீ பற்றிய சுள்ளி ஒன்றை எடுத்து அவனிடம் நீட்டினாள். சுள்ளியை வாங்கும்போது அவள் கையையும் சேர்த்துப் பற்றிக்கொண்ட மருதமுத்து, அவள்கரங்களில் அடுக்கியிருந்த கண்ணாடி வளையல்களோடு விளையாடிக் கொண்டே கொஞ்சுகின்ற குரலில், "கண்ணாலம் கண்ணாலமின்னு கண்ணாலம் கட்டியாச்சு, இப்ப என்ன சொல்லுவியாம்," என்று குரலைத் தாழ்த்தி அவள் காதருகே குனிந்து ரகசியமாக என்னவோ கூறினான். அதைத் தொடர்ந்து கண்ணாடி வளையல்களோடு அவள் சிரிப்பும் சேர்ந்து கலகலக்க, "கையை வுடு மச்சான். அடுப்பிலே கொழம்புகொதிக்குது." என்று சிணுங்கிக் கொண்டே அவன் பிடியிலிருந்து கைகளை விடுவித்துக் கொண்டே ரஞ்சிதம் முன்றானையால் முகத்தை மூடி உள்ளூரச் சிரித்துக் கொண்டாள். அப்படி அவன் என்னதான் கேட்டானோ? அவளை வெட்கம் பிடுங்கித் தின்றது.

"ஊஹுஊம், சொன்னாத்தான்."

"இனிமே என்னை என்னா கேக்கறது?" என்று சொல்லிவிட்டு மறுபுறம் திரும்பி அடுப்பைக் கவனிக்க முனைந்தாள் ரஞ்சிதம். அவள் முதுகில் என்னமோநமைத்தது. உடல் முழுவதும் சிலிர்த்தது. சோறு சமைத்துக் குழம்பு காய்ச்சிப் புருஷனுக்கு விருந்து படைத்துவிட்டுத் தானும் சாப்பிட உட்கார்ந்தாள்- எல்லாம் நடுத்தெருவில்தான்! ரஞ்சி, நான் பார்க்கிலே அந்த மூலை பெஞ்சியிலே படுத்திருக்கேன்," என்று மற்றவர்கள் காதில் விழாதபடி சொல்லிவிட்டுச் சென்றான் மருதமுத்து

சோறும் குழம்பும் நன்றாகத்தான் இருந்தது என்றாலும் ரஞ்சிதத்திற்கு சோறு கொள்ளவில்லை.

மணி பத்துக்கு மேலாகிவிட்டது. பார்க்கிலுள்ள மூலை பெஞ்சில் மருதமுத்து புரண்டுப் புரண்டு படுத்துக் கொண்டிருந்தான். பெஞ்சுக்குக் கீழே கிழிந்த பாயும் பழைய போர்வையும் கிடந்தன. அவன் விரல்களுக்கிடையே பீடி நெருப்பு கனிந்துகொண்டிருந்தது. இன்னும் தெருவில் சந்தடி அடங்கவில்லை.

ரஞ்சிதம் தயங்கித் தயங்கி மெள்ள மெள்ள அசைந்து பார்க்குக்குள் நுழைந்தாள். அவனருகே தலைமாட்டில் அவனுக்குத் தெரியாமல் வந்துநின்றாள். தன் பின்னால் அவள் வந்துநிற்பதை அறிந்தும் அறியாதவன் போல் கண்களை மூடிக்கொண்டு படுத்திருந்தான் மருதமுத்து தான் துங்கிவிட்டதாக அவள் எண்ணிக் கொள்ளட்டும் என்று லேசாகக் குறட்டை விட்டான். ஆனால் அவன் கையில் புகைந்துகொண்டிருந்த பீடித்துண்டு அவனை அவளுக்குக் காட்டிக் கொடுத்துவிட்டது. அவளுக்குச் சிரிப்பு வந்தது. சிரிப்பை அடக்கிக் கொண்டு மௌனமாய் நின்றிருந்தாள். அவளுக்குக் கழுத்து நரம்புகளில் உள்ளூர என்னவோ உரசிக்கிளுகிளுத்து ஓடி உடல் முழுவதும் பரவுவதுபோல் இருந்தது. அவனுக்கும் அங்கு நிலவிய மௌனம் சிரிப்பை மூட்டியது. அவன் அடக்கிப் பார்த்தான். அவன் முகத்தில் சிரிப்பின் ரேகைகள் ஓடிப் பாய்ந்துகளுக்கென்று குரலும் வெடித்துவிட்டது. அவளும் சிரித்தாள். இருவரும் ஒருவரைப் பார்த்து ஒருவர் காரணமின்றியோ காரணத்தோடோ விழுந்து விழுந்து சிரித்தனர். சிரித்து ஓய்ந்த பின் ரஞ்சிதம் பெஞ்சின் மறுகோடியில் நாணிக்கோணி உட்கார்ந்தாள்.

"ரஞ்சி, வெத்தலை பாக்கு வெச்சிருக்கியா? குடு" அவள் வெற்றிலை மடித்துக் கொடுத்தாள். மருதமுத்து வெற்றிலையைச் சுவாரஸ்யமாக மென்று கொண்டே அவளருகில் உட்கார்ந்துகொண்டான்.

நல்ல நிலவு.

நிலாவெளிச்சம் அந்தக் காதலர்களுக்கு இன்பமளிக்க வில்லை; இடைஞ்சலாய் இருந்தது.

பெஞ்சின்மீது அமர்ந்திருந்த ரஞ்சிதத்தின் முகத்தில் ஓங்கி வளர்ந்த அரசமரக் கிளைகளின் ஊடே பாய்ந்து வந்த நிலவின் ஒளிக் கதிர்கள் விழுந்துகொண்டிருந்தன. அந்த ஒளியில் அவள் விழிகள் மின்னின. வெற்றிலைக் காவி படிந்த உதடுகளில் ஊறிப் படர்ந்த வெற்றிலைச் சாற்றின் மினுமினுப்புமருதமுத்துவின் உதடுகளை என்னவோ செய்தது. அவன் உதட்டைக் கடித்துக்கொண்டு அவளையே பார்த்தான். அவள் கழுத்திலே கிடந்த கருவ மணியும் மஞ்சள் கயிறும் முறுக்கிக் கொண்டு மார்பின் நடுவே தடுமாறி நெகிழ்ந்து கிடந்தது. நழுவிப் போன மேலாக்கினுடே, ரவிக்கையில்லாத கருங்காலிக் கடைசல் போன்ற தேகத்தின் வனப்பு மறைந்தும் மறையாமலும் மருதமுத்துவை மயக்கிற்று.

ரஞ்சி!

அவள் பெருமூச்சு விட்டாள்.

விம்மி மேலெழுந்து அவள் நெஞ்சம் புடைத்ததனால் நிலை குலைந்த மருதமுத்து அவளை, அவளுடைய வெற்றுடலை மார்புறத் தழுவிக் கொண்டான்.

"வுடு மச்சான்," என்று திமிறிக் கொண்டு தன்னைச் சரி செய்துகொண்டு நகர்ந்து உட்கார்ந்தாள் ரஞ்சி.

எதிரிலிருக்கும் முஸ்லிம் ரெஸ்டாரண்ட் இன்னும் மூடப்படாததை அப்பொழுதுதான் கவனித்தான் மருதமுத்து.

"சீச்சி. இந்தப் பார்க்ரொம்ப நாஸ்டியாப் போச்சு," என்று ஒரு வெள்ளை வேஷ்டிக்காரன் இவர்களைப் பார்த்தவாறே தம்மருகில் வந்தவரிடம் சொல்லிக்

கொண்டே நடந்தான். மருதமுத்துவின் உடல் நாணிக் கூசியது, ரஞ்சிதம் பரிதாபகரமாக விழித்தாள்.

"நம்ம ஊரிலேயே கண்ணாலம் கட்டிக்கிட்டிருந்தா? என்று சொல்ல வந்ததை முடிக்க முடியாமல் ரஞ்சியின் குரல் அடைத்தது.

அவனும் பெருமூச்சு விட்டான்.

"கஞ்சியில்லாட்டியும் நமக்குன்னு ஒரு குடிசையாச்சும் இருக்குமில்லே. பட்டினியோட ஒருத்தருக்கும் தெரியாம கவுரவமா படுத்துக்கெடக்கலாமில்லே. சீச்சி இது என்ன பொழைப்பு? தெருவிலே கண்ணாலம் கட்டிக்கினு தெருவிலே புள்ளை பெத்துக்கினு தெருவிலே செத்தும் போறது," என்று சலிப்புடன், வெறுப்புடன், துயரத்துடன், ஏமாற்றத்துடன், ஏக்கத்துடன் முனகிக் கொண்டாள் ரஞ்சி.

அவன் மௌனமாய் இருந்தான். சற்று நேரம் கழித்து ஒரு பெருமூச்சுடன் சொன்னான்.

"என்னாபண்றது ரஞ்சி?... அவுங்க அவுங்க தலையெழுத்துப்படிதா நடக்கும். ஊர்லே ஒலகத்திலே எவ்வளவோ பேரு கண்ணாலம் கட்டிக்கிறாங்க. பங்களா என்னா! காரு என்னா! அதிலாட்டிப் போனாலும் ஒரு சின்ன வீடு, ஒரு பஞ்சு மெத்தை - அதாவது இருக்கும். எல்லாத்துக்கும் குடுத்து வைக்கணும்  நம்ம விதி இப்படி," என்று வருத்தத்தோடு புலம்பினான்.
"என்னாமச்சான், இதுக்கா நீ கவலைப்படறே? நீ இருக்கிற வரைக்கும் எனக்கு ஒரு குறையும் இல்லே, காரும் பங்களாவும் வெச்சிருக்கிறவங்க கதையெல்லாம் தெரியாதுபோலிருக்கு. ஆம்படையான் பெண்டாட்டி விசயம் கச்சேரி வரைக்கும் சிரிக்குதே. நம்ம மாதிரி அவுங்களுக்கு ஒருத்தர் மேலே ஒருத்தருக்கு ஆசையிருக்குமா..?"

'இனிக்கும் இன்ப இரவே நீ வாவா...' என்று ஹோட்டல் ரேடியோ விரகத்தால் உருகிக் கொண்டிருந்தது. ஜன சந்தடி அடங்கிவிட்டது. ஹோட்டலில்கூட ஆள்நடமாட்டம் அதிகம் இல்லை.

மணி பன்னிரண்டு அடித்தது.

பிளாட்பாரத்தில் வாழும் மனிதர்களெல்லாம் உறங்கிக் கொண்டிருந்தனர். பனி மூட்டம் அவர்களின் மீது கவிந்து கொண்டிருந்தது. விறைக்கும் குளிரில் அழுக்குக் கந்தல்களினுள் அந்த ஜீவன்கள் முடங்கிக் கிடந்தன. பச்சைக் குழந்தைகள் தாயின் மார்பினுள்ளே மண்டிக் காந்தும் வெப்ப சுகத்தில் பம்மிக் கொண்டன. அவர்கள் தலைமாட்டில் சொறி நாய்களும், கிழட்டு மாடுகளும் அரைத் தூக்கத்துடன் காவல் காத்தன.

பார்க்கில் நிசப்தம் நிலவியது. மருதமுத்து பெஞ்சியிலிருந்து எழுந்து செடி மறைவில் விரித்திருந்த பழம்பாயில் படுத்துப் புரண்டு கொண்டிருந்த ரஞ்சிதத்தின் அருகே சென்று அமர்ந்தான். ரஞ்சி. தூங்கிட்டியா?"

'இல்லே..."

ஒனக்குக் குளிருதா?

'உம்'

இருவரும் மொடமொடக்கும் அவளுடைய புதிய சிவப்புப் புடவையால் போர்த்திக் கொண்டார்கள். போர்த்தியிருந்த புடவை மெள்ளமெள்ள அசைந்தது. "மச்சான்...." அழுவதுபோல் திணறியவாறே முனகினாள் ரஞ்சிதம்.

திடீரென அந்தத் தெருவிலிருந்து ஒரே வெளிச்சம் அவர்கள்மீது பாய்ந்தது

"ஐயோ..." என்று பதறினாள் ரஞ்சி.

"காருதான். போயிடும்." அவன் தோளில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டாள் ரஞ்சிதம் கார்சென்ற பிறகு, உலகத்தையே, தங்களையே மறந்திருந்த அவர்களின் அருகே காலடி ஓசைகளும் பேச்சுக் குரலும், சிரிப்பொலியும் கேட்டன.

மினர்வா தியேட்டரில் இரண்டாவது காட்சி முடிவடைந்து கும்பல் வீதியில் பெருகி வந்துகொண்டிருந்தது.

மருதமுத்து எழுந்து சென்று பெஞ்சின் மேல் படுத்துக் கொண்டான். ரஞ்சிதத்திற்கு அழுகையே வந்துவிட்டது.

மருதமுத்துவுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது யார்மீது ஆத்திரப்படுவது?

கும்பலில் ஒரு பகுதி முஸ்லிம் ரெஸ்டாரண்டிற்குள் படையெடுத்தது. வெகுநேரம் வரை சந்தடி அடங்கவில்லை.

மணி ஒன்று அடித்தது.

முஸ்லிம் ரெஸ்டாரெண்டில் ஆளரவமே இல்லை. பார்க் அருகே ஒரு ரிக்ஷாக்காரன் நின்றிருந்தான். அவனருகே ஒரு மஸ்லின் ஜிப்பாக்காரன். அப்புறம் என்ன சொல்றே?"

வா, சாமி. நல்ல ஸ்டூடன்ஸீங்கதான் பிராமின்ஸ் சார். வண்டியிலே ஏறு சார். போவும்போது பேசிக்குவோம்."

மஸ்லின் ஜிப்பாக்காரனை ஏற்றிக் கொண்டு நகர்ந்து பிராட்வேயிலிருந்து பிரியும் ஒரு சிறிய சந்தில் நுழைந்து விரைந்து மறைந்தது ரிக்ஷா .

தூ... இதுவும் ஒரு பிழைப்பா? கஸ்டப்பட்டு வண்டி வலிக்கிற அந்தக் கயிதைக்கு ஏன் இந்தப் பேமானிப் புத்தி? என்று காறி உமிழ்ந்தான் மருதமுத்து.

"என்ன மச்சான் திட்டறே?"

'ஊரும் ஒலகமும் இருக்கறதைப் பார்த்தா திட்டாமெ எப்படி இருக்கிறது? இன்னம் ஒனக்குத் துக்கம் வரல்லியா. உம். எப்படி வரும்" என்று தனக்குத் தானே பேசிக் கொண்டான் மருதமுத்து.

நிலவுமேகத்தில் மறைந்தது.

ஒளி மிக்க அந்த பூர்ணிமை இரவும் இருண்டது. முஸ்லிம் ரெஸ்டாரெண்டும் மூடப்பட்டது. மனித சந்தடியே அற்றுப் போயிற்று.

ஒரே அமைதி.

பார்க்கினுள் நெடிது வளர்ந்திருந்த அரசமரக் கிளைகளில் காகங்கள் சலசலத்தன விடிந்துவிட்டதுபோன்ற பிரமை போலும். சில காகங்கள் கரைந்தன. வெளிறிய இருளின் பிடிப்பில் ஊமைத்தனம் போல் நட்சத்திர ஒளி ஜாடை காட்டிற்று. நாய் ஒன்று எழுந்துநின்று உடலை வளைத்து முறித்துச் சடசடத்து உதறிக்கொண்டு அலுப்புத் தீர்ந்ததுபோல் எங்கோ நோக்கி வேகமாக ஓடியது.

மணி இரண்டு அடித்தது.

ரஞ்சி.

............

ரஞ்சி.

'உம்."

பெஞ்சு காலியாயிருந்தது. செடி மறைவில் இலையோ இருளோ அசைந்தது.
"டக். டக. டக்"

முதலில் அந்த ஓசையை அவர்கள் பொருட்படுத்தவில்லை.

"டக் டக். டக் டக்." ஓசை அவர்களைச் சமீபிக்கவே அவர்கள் சலனமின்றி ஒன்றிக் கிடந்தனர்.

'ஏய், யாரது? எழுந்து வாம்மே' என்ற போலீஸ்காரனின் முரட்டுக் குரல், வலுக்கட்டாயமாக-மிருகத்தனமான-மனித உணர்ச்சிகளிலிருந்து மனித நாகரிகத்தின் புதை குழிக்குஅவளிடமிருந்து அவனைப் பிய்த்தெறிந்தது.

அவன் உடல் பதை பதைக்க உதடுகள் துடிதுடிக்க எழுந்து வந்தான். அவள் செடி மறைவில் நின்று தனது புடவையைச் சுற்றிக் கொண்டாள்.

'வெளியே வாம்மே' என்று போலீஸ்காரன் அசூயையுடன் உறுமினான்.

"பயம்மா இருக்கே மச்சான்." என்று அந்தப் பட்டிக்காட்டு யுவதி பரிதாபகரமாகத் தன் கைபிடித்த கணவனிடம் குழறினாள். அவள் கண்களில் கண்ணீர் துளிர்த்தது.

"பயப்படாதே வா, ரஞ்சி" என்று அவள்கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு பார்க்கின் இரும்புக் கிராதியைத் தாண்டிக் குதித்து வெளியே வந்தான் மருதமுத்து விளக்குக் கம்பத்தடியில் போலீஸ்காரன்நின்றிருந்தான்.

"யார்ரா நீ?" என்று சிகரெட் புகையை அவன் முகத்தில் ஊதிவிட்டான் போலீஸ்காரன்.

"வந்து .. வந்து கூடைக்காரன், சாமி."

'ஏய், இப்படி வெளிச்சத்துக்கு வாம்மே' என்று அவளைக் கூப்பிட்டான் போலீஸ்காரன். அவள் பயந்து நடுங்கிய வண்ணம் விளக்கு வெளிச்சத்தில் வந்துநின்றாள். நெற்றித் திலகம் கலைந்து, கூந்தல் அவிழ்ந்து சிகையில் சூடிய கதம்பம் சிதைந்து சிதறிக் கிடந்தது.

"ஏம்மே. இங்கதான் இடமா? ஒம் பேரு என்னாம்மே?" என்று பாக்கெட்டிலிருந்த சிறு நோட்டுப் புத்தகத்தையும், பென்சிலையும் கையிலெடுத்தான் போலீஸ்காரன்.

அவள் ஒன்றும் புரியாமல் குழப்பத்துடன், "ரஞ்சிதம், சாமி" என்றாள்.

"சார். சார்." என்று ஏதோ சொல்ல வாயெடுத்தான் மருதமுத்து.

"நீ ஒண்னும் பயப்படாதே, இவதான் என்னைக் கூப்பிட்டான்னு ஸ்டேஷனுக்கு வந்து ரிப்போர்ட்டு குடுத்துடு. ஒன்னே விட்டுடுவோம்," என்றான் போலீஸ்காரன்.

ரஞ்சிதத்திற்கு விஷயம் விளங்கி விட்டது.

"நாங்கபுருஷன், பெஞ்சாதி சாமி." என்று பதறினாள் ரஞ்சிதம் .
போலீஸ்காரன் சிரித்தான். அவள் சொன்னதை அவன் நம்பவில்லை.

"சத்தியமாத்தான் சாமி. இந்தப் புள்ளையார் சாட்சியா நாங்க புருஷன் பெஞ்சாதிங்க சாமி. இதோ பாருங்க" என்று அவள் கழுத்தில் கிடந்த கயிற்றை வெளியே இழுத்துக் காண்பித்தான் மருதை.

சட்டத்தின் வேலிக்குள் நிற்கும் அந்தப் போலீஸ்காரனால் தலையை நிமிர்த்தி அந்த மஞ்சள் கயிற்றைக் காண முடியவில்லை. அவன் சட்டம் இருட்டைத் துருவி திருட்டைக் கண்டுபிடி என்றுதான் கற்றுக்கொடுத்திருக்கிறது. மனசைத் துருவி உணர்ச்சியைப் பார் என்று சொல்லிக் கொடுக்கவில்லை.

அவன் கண்டுபிடித்தது குற்றம். குற்றவாளியைக் கைதுசெய்ய வேண்டியது சட்டம். சட்டத்தின் வாரிசு போலீஸ்காரன். அவன் ஒழுக்கத்தின் பிரதிநிதியோ உண்மையின் தூதுவனோ அல்ல.

'உம், நட நட'. அதெல்லாம் ஸ்டேஷனிலே பேசிக்கலாம் என்று அவளைத் தள்ளினான்.

"ஐயா. ஐயா...' என்ற அந்தக் காதல் 'குற்றவாளி' ரஞ்சிதம் கெஞ்சினாள். தன் கணவனின் முகத்தை ஏக்கத்தோடு பார்த்தாள். அவன் தலையைக் குனிந்த வண்ணம் போலீஸ்காரனுடன் நடந்து கொண்டிருந்தான். அவளும் அவர்களைத் தொடர்ந்தாள்.

ஊரே அடங்கிய அந்த அமைதியான இரவில் அந்த நகரத்தின் பெரிய வீதியில் சட்டத்தின் ஹிருதயத் துடிப்புபோல் ஜீவனுடன் கம்பீரமாக போலீஸ்காரனின் பூட்ஸ்களின் சப்தம் டக் டக் என்று ஒலித்தது.
ரஞ்சிதத்திற்குத் தன் ஹிருதயத்தில் யாரோ மிதிப்பதுபோல் பக் பக் என்று நெஞ்சு துடித்தது.

எதன் மீதோ மிதித்து நசுக்கி நடந்துசெல்லும் சட்டத்தின் காலடியோசை.

அதே, டக். டாக். டாக். டக்.

******

# தமிழ் மரபு அறக்கட்டளையின் மின்னாக்க வெளியீடுகள்

**தமிழ் மரபு அறக்கட்டளை - விழியப் பதிவுகள்:**

மண்ணின் குரல்: அக்டோபர் 2015: இலங்கை தமிழ் நாட்டுக் கூத்து

மண்ணின் குரல்: அக்டோபர் 2015: திருநணா - பவானி சங்கமேஸ்வரர் ஆலயம்

கோலாட்டம் - தமிழர் பாரம்பரிய நடனம் - பாரீஸ் 2015

சீகன்பால்கின் தமிழ் ஆவணங்கள் - டாக்டர். டேனியல் ஜெயராஜ்

தமிழகத்திலிருந்து மலேசியா வரை...

***

**தமிழ் மரபு அறக்கட்டளை - மின்னூல்கள் வெளியீடுகள்:**

சுப்பிரமணிய சிவாவின் கட்டுரைகள்

திருக்குடந்தைத் தல வரலாறு

யதி ஆச்சாரம் - ஓலைச்சுவடி வெளியீடு

***

**தமிழ் மரபு அறக்கட்டளை - நாடார்குல மித்திரன் வெளியீடுகள்:**

நாடார்குல மித்திரன் - 1923 - மார்ச் மாதத்தின் 1 வது இதழ்

நாடார்குல மித்திரன் - 1923 - மார்ச் மாதத்தின் 2 வது இதழ்

நாடார்குல மித்திரன் - 1923 - மார்ச் மாதத்தின் 3 வது இதழ்

நாடார்குல மித்திரன் - 1923 - ஏப்ரல் மாதத்தின் 1 வது இதழ்

Tamil Heritage Foundation
தமிழ் மரபு அறக்கட்டளை

Electronic preservation of Tamil heritage materials
e-Book series
an international NGO initiative to digitize old Tamil books and palm leaf manuscripts
visit http://www.tamilheritage.org

தமிழ் ஓலைச்சுவடிகள், நூல் பாதுகாப்பு.

பாதுகாப்பற்ற நிலையில், மறுபதிப்பு காணாத பழைய நூல்கள், ஓலைச்சுவடிகள் போன்ற தமிழ் முதுசொம்களை மின்பதிப்பாக்கி தமிழ் வளத்தை நிரந்தரமாக்கும் ஒரு சர்வதேச தன்னார்வ முயற்சி.

மேலும் அறிய: http://www.tamilheritage.org

முதுசொம் முத்திரை
தமிழ்ப்பாதுகாப்பின் அக்கறை